

## பழந்தமிழர் நாகரிகச் சின்னம்

# அரிக்கமேடு



28



முனைவர் சு. தில்லைவனம்

Tamil Heritage Foundation International (THFi)

# பழந்தமிழர் நாகரிகச் சின்னம்

# அரிக்கமேடு

முனைவர் **சு.தில்லைவனம்**

பேராசிரியர் - தமிழ்த்துறை

காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்

புதுச்சேரி - 605 008.

**சிவசக்திப் பதிப்பகம்**

19, பாண்டியன் வீதி

சாந்தி நகர், இலாசுப்பேட்டை

**புதுச்சேரி - 605 008**

Tamil Heritage Foundation International (THFi)

**BIBLIOGRAPHICAL DATA**

| | | |
|---|---|---|
| Title of the Book | - | PAZHANDHAMIZHAR NAAGARIGAC CHINNAM ARIKAMEDU |
| | - | CIVILIZATION AND CULTURE OF ANCIENT TAMILS - ARIKAMEDU |
| Subject | - | HISTORY - ARCHAEOLOGY |
| Language | - | Tamil |
| Author | - | Dr. S. Thillaivanam |
| Copyright | - | Author |
| Publisher | - | T.Mangalam<br>Sivasakthi Pathippagam<br>19, Pandian Street, Shanthi Nagar,<br>Lawspet, Puducherry - 605 008<br>Cell: 99448 - 59158 |
| Date of Publication | - | JUNE, 2008 |
| Size of the Book | - | Demmy |
| Printing Type Used | - | 11 pt. |
| No.of Pages | - | 250 + VI = 256 |
| No. of Copies | - | 1200 |
| Price | - | Rs.250/- |
| Paper Used | - | 16 kg White |
| Laser Typeset | - | Thirumurai Vendhan Graphics<br>0413-2280912, Cell: 99943-98964. |
| Printer | - | Dheva Offset, Chennai-5 Ph: (044) 2858 9656 |

---

விற்பனை உரிமை - நன்மொழிப் பதிப்பகம்
41, கங்கை வீதி,
வசந்த் நகர், புதுச்சேரி - 605 003.

# முன்னுரை

ஐரோப்பியர் கற்பித்த அடிப்படையிலேயே நமது வரலாறு இதுகாறும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்துள்ளது. எந்த ஓர் அந்நிய நாட்டவரும் உள்நாட்டு வரலாற்றை முழுமையாகக் கணித்து எழுதிவிட முடியாது. ஒருவேளை வரலாற்றைத் தொகுத்தாலும் நாகரிகம், பண்பாட்டை முழுமையாக அவர்களால் வெளிக்கொணர இயலாது. அவ்வகையில் தமிழரது வரலாற்றைத் தமிழர் பார்வையில் எழுதும் முயற்சிகள் அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்றன. மனிதனது தொன்மையான தோற்றம் குமரிக்கண்டம் என்னும் கூற்றை ஒப்புக் கொண்டால் அவனது நாகரிகச் செழுமையும் பண்பாட்டுப் பெருமையும் தென்னிந்தியாவில் இருந்துதான் தொடங்கியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

சங்ககாலமும் சங்க இலக்கியமும் பண்டைத் தமிழரின் செவ்வியல் தன்மைகளைப் புலப்படுத்துகின்றன என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. இதற்கும் பன்னெடுங் காலத்திற்கு முன்பே பழந்தமிழர் உறுதி செய்யும் வகையில் நாகரிகச் செழுமை கொண்டவராக விளங்கியுள்ளனர் என்பதை உறுதி செய்யும் வகையில் தமிழகத்தில் நிகழ்த்தப்பட்ட பல தொல்பொருள் ஆய்வுகள் சான்றாதாரங்களை வழங்கியுள்ளன. அவற்றுள் மிகச்சிறந்த சான்று பன்னாட்டவரால் ஆய்வு செய்யப்பட்ட அரிக்கமேடு. கிரேக்க, ரோமானிய நாகரிகங்களுக்கு எவ்விதத்திலும் குறையாத நாகரிகத் தன்மை கொண்டவராகத் தமிழர்கள் வாழ்ந்து வந்த உண்மைகள் அரிக்கமேட்டின் வாயிலாகக் காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்கள் பழந்தமிழகத் துறைமுகங்களான கொற்கை, தொண்டி, முசிறி, காவிரிப்பூம்பட்டினம் முதலானவற்றைப் புகழ்ந்து பாடுகின்றன. ஆனால் இங்கெல்லாம் குறிப்பிடத்தக்க அளவில் தொல்பொருட்கள் கிடைக்கவில்லை. ஆனால் அயல்நாட்டவரால் பொதுகே என்றறியப்பட்ட அரிக்கமேட்டில் மட்டுமே இத்தகைய சான்றாதாரங்கள் நிறையக் கிடைக்கின்றன. அவற்றைச் சங்க இலக்கியத் தரவுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யும்போது பழந்தமிழரின் நாகரிகமும் பண்பாடும் தெளிவாகப் புலப்படுகின்றன. அந்த உண்மையை வெளிப்படுத்தும் நோக்கத்தில்தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

Tamil Heritage Foundation International (THFi)

பண்டைத்தமிழர் கிரேக்க ரோமானியரோடு கொண்டிருந்த வணிகத்தொடர்பை மட்டுமே இதுகாறும் பல தொல்பொருள் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதற்கும் அப்பாற்பட்டு அரசியல், சமயம், தொழில்நுட்பம் எனப் பலதரப்பட்ட நிலைகளில் தமிழர் - யவனர் கொண்டிருந்த தொடர்புகளை அரிக்கமேட்டில் கிடைத்த சான்றாதாரங்கள் வெளிப்படுத்தியுள்ளன. சங்ககாலத்தில் கிரேக்க ரோமானிய நாட்டவரால் பொதுகே என்று அழைக்கப்பட்ட பகுதிதான் இக்காலத்தில் அரிக்கமேடு என்று அழைக்கப்படுகின்றது.

புதுவை மாநிலம் அரியாங்குப்பம் கொம்யூனைச் சேர்ந்த அரிக்கமேடு 13.99 ஹெக்டேர் அளவுள்ள நிலப்பரப்பாகும். அரியாங்குப்பம் ஆற்றங்கரை ஓரமாக அமைந்துள்ள மேடான இப்பகுதியில் மாந்தோப்பும் தென்னந்தோப்பும் அமைந்துள்ளன. அண்மையில் இப்பகுதியைக் கையகப்படுத்திய புதுவை அரசு, பாதுகாப்பு அளிக்கும் வண்ணம் இரும்பு முள்வேலியிட்டு இந்திய அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளது.

இங்குத் தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இடங்கள் மிகச்சிலவே. இன்னும் பல இடங்கள் இப்பகுதியில் ஆய்வு செய்ய வேண்டி இருக்கின்றன.

எதிர்காலத்தில் இப்பகுதியில் முழுமையான அகழ்வாய்வை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, இப்பகுதியைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவும் இந்நூல் எழுதக் காரணங்களாக அமைந்தன. அரிக்கமேட்டை வாழும் அருங்காட்சியகமாகவும் சுற்றுலாத் தலமாகவும் மாற்றினால் அரிக்கமேடு மட்டுமன்று, புதுவையும் உலகளாவிய நிலைக்கு உயர்த்தப்படும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி

புதுச்சேரி

ஜூன் 2008

அன்புடன்

**சு.தில்லைவனம்**

# பொருளடக்கம்

**1. பண்டைத் தமிழர் - யவனர் பன்முகத் தொடர்புகள் 1-15**

தமிழகத்தின் தொன்மை- தமிழகம் ஆரியகம் பண்டைத்தமிழகம் பாகுபாடு- பண்டைத் தமிழர் கிரேக்கர் தொடர்புகள்- யவனர் வரலாற்றுக் குறிப்புக்கள்- யவனர் சொற்பொருள்- யவனக் குடியிருப்புக்கள்- அரசியல் உறவுகள்- அரிக்கமேடு யவன இருக்கை- தமிழர்- யவனர் பன்முகத் தொடர்புகள்.

**2. அரிக்கமேடு - இருப்பிடமும் இயற்கையமைப்பும் 16 - 31**

அரிக்கமேடு அமைவிடம்- அரியாங்குப்பத்தாறும் தேங்காய்த்திட்டும்- அயல்நாட்டார் பயணக்குறிப்புக்கள்- பொதுகே எம்போரியம்- பொதுகே- கபேரிக பொதுக்கம்- பொதுகே- அரிக்கமேடு பெயர்க்காரணம்- வீரை- வீராம்பட்டினம்- அரிக்கமேடு + வீராம்பட்டினம்=பொதுகே- அரிக்கமேட்டின் தொன்மை அரிக்கமேடும் சுற்றுக்கேணியும்- அரிக்கமேடு பிரமண்கோயில்.

**3. அரிக்கமேடு அகழ்வாய்வு வரலாறு 32 - 42**

தொடக்கக் கால ஆய்கள்- முறையான அகழ்வாய்வு- மார்ட்டிமர் வீலர்- வீலர் அகழ்வாய்வுச் சிறப்புகள்- பிரெஞ்சியர் அகழ்வாய்வுகள்- ஜே.எம்.கசால்- பீட்டர் பிரான்சிஸ்- விமலா பெக்லி- அரிக்கமேடு அகழ்வாய்வின் முக்கியத்துவம்

**4. அரிக்கமேடு தொல்பொருட் சின்னங்கள் - 43 - 82**

**கீழை மேலைத் தொடர்புகள்**

தொல்பொருள் ஆய்வு- அகழ்வாய்வின் இரு முறைகள் - தமிழக அகழ்வாய்வுகள்- அகழ்வாய்விடங்களின் கால வரலாறு- அரிக்கமேடு தொல்பொருட் சின்னங்கள்- மட்கலன்கள்- வெளிநாட்டில் வனையப்பட்டவை- அரிட்டைன்/சிஜிலிட்டா- ஆம்ஃபோரா சாடிகள்- ரௌலெடெட் மட்கலன்- சீன செலெடன் மட்கலன்- போலி மட்கலன்கள்- உள்நாட்டு மட்கலன்கள்- கூர்முனைச் சாடிகள்- களிமண் கூஜா- மட்கலக்கோப்பை பலவகை மட்கலன்கள்- பண்டசாலை- கழிவுநீர் வாய்க்கால்- சங்கு அணிகள்- மணிவகைகள்- மணி தயாரிப்பில் மூலப் பொருட்கள்- அரிக்கமேடு மணி ஆய்வு தயாரிப்பில் மூலப் பொருட்கள்- அரிக்கமேடு மணி ஆய்வு அரிக்கமேடு மணிவகைகள்- கண்ணாடிப் பொருட்கள்- நாணயங்கள்- உள்நாட்டு நாணயங்கள்- ரோமானிய நாணயங்கள்- சுடுமண் பொருட்கள்- சாயத் தொட்டிகள்- உறை கிணறுகள், ரோமானிய பாவை விளக்கு- ஏனைய தொல்பொருட் சின்னங்கள்.

**5. அரிக்கமேடு பன்னாட்டு வணிகத் துறைமுகம் 83 - 118**

வளி தொழில் ஆண்ட உரவோர் - கப்பல் நிறுத்தம்/ கலங்கரை விளக்கம்- வீரை முன்றுறை- பருவக் காற்றும் கடல் வழியும்- இருவழிப்போக்குவரத்து - கடல் வழி வணிகத் தொடர்பு- பண்டைய துறைமுகங்கள்- கப்பல் தங்குதளம்/ படகுத்துறை- உள்நாட்டு வணிகத் தொடர்பு- மேலைத் தொடர்புகள்- கீழைத் தொடர்புகள்- கடல் வணிகப்பாலம்- ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள்- வணிகக் குடியிருப்புக்கள்- ரோமானிய வணிகம் பெருக்கமும் சுருக்கமும்- வணிகக்குழுக்கள் வணிகச் சாத்து- வணிக ஒப்பந்தங்கள்.

Tamil Heritage Foundation International (THFi)

6. அரிக்கமேடு அகழ்வாய்வினால் அறியலாகும் பண்டைத் தமிழ்ச் சமுதாயம் 119 - 204

தொழில்நுட்ப அறிவு- தொழில் நுட்பத் திறன்- உணவுக்கலன்கள்- உணவு முறை- உடைகள்-ஆடைகளுக்கு வண்ணம் தோய்த்தல்- துணிசாயத் தொழிற்சாலை- குடியிருப்புக்கள்- அயல்நாட்டுக் குடியிருப்புக்கள்- உள்நாட்டுக் குடியிருப்புக்கள்- கட்டடக்கலை தொழில்நுட்பம்- தொழிலகங்கங்கள்- உலோகத் தொழிலங்கள்- மட்கலத் தொழில் நுட்பங்கள்- மட்கலத் தொழில் நுட்பப் பரிமாற்றம்- பயன்பாட்டுத் தொழில்நுட்பம்- தொழில் நுட்பக் கால நயம்- மட்கலப் புனைகள்- அணிமணிகள்- அணிநயத் தொழில்நுட்பம்- மணி உருவாக்கம் அன்றும் இன்றும்- தொழில் நுட்பத் தடைகள்- கூட்டுத் தொழில்நுட்பம்- உலகச் சந்தை நகரம்- பொருளாதார நிலை- கலைகள்- சுடுமண் பொருட்களில் சிற்பக்கலை- விளையாட்டு- பழக்க வழக்கங்கள்- வானியல் ஆய்வு- அரசியல்- மொழி- எழுத்தாணியும் எழுது முறையும்- அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள்- ஆண்பால் பெயர்கள்- குல, கோத்திரப் பெயர்கள்- பெண்பால் பெயர்கள்- அகராதிப் பெயர்கள்- எண்ணுப் பெயர்கள்- கீறல் குறியீடுகள்- வீரைப் புலவர்கள்- சமயம்- கீழை நாடுகளில் அரிக்கமேட்டின் செல்வாக்கு- வணிக வழிப்பரவும் பண்பாடு - பண்டைத் தமிழர் பண்பாட்டுச் செல்வாக்கு.

7. அரிக்கமேடு - சிதைவும் பாதுகாப்பும் 205 - 223

வராற்றில் வடக்கும் தெற்கும்- தொடர்ச்சியான குடியிருப்புக்கள்- ஆக்கிரமிப்பும் புறக்கணிப்பும்- அரிக்கமேடு சிதைவுகள்- இயற்கைச் சிதைவுகள்- மண்ணரிப்பும் வெள்ளப் பெருக்கும்- செயற்கைச் சிதைவுகள்-மீன்பிடித்துறைமுகம்- இயற்கைப் பாதுகாப்பு- செயற்கைப் பாதுகாப்பு- நீருக்கடியில் அகழ்வாய்வு -அகழ்வாய்வில் பல்துறைப் பங்கு- அரிக்கமேடு விழிப்புணர்ச்சி.

8. அரிக்கமேடு - சுற்றுலா மேம்பாடு 224 - 233

சுற்றுலாத்தலம்- இயற்கை சுற்றுச்சூழல் பாதுகாப்பு- புதிய துறைமுகம்- சுற்றுலா மேம்பாடு- சதுப்பு நிலக்காடுகள்- புதுவைப் பிச்சாவரம்- புதுவை அருங்காட்சியகம்- நினைவுச் சின்னம் சுற்றுலா மையம்- வாழும் அருங்காட்சியகம்- கலைப்பொருட்கள் பேணுதல்.

9. பின்னிணைப்புக்கள் 234 - 250

அ. அகழ்வாய்வுப் படங்கள்

ஆ. துணை நூற்பட்டியல்

# 1. பண்டைத் தமிழர்-யவனர் பன்முகத் தொடர்புகள்

ஒரு நாட்டின் அரசியலை மட்டுமே அறிந்து கொள்வது முழுமையான வரலாறு ஆகாது. சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும் கலை, சமயம், தொழில், மொழி, நாகரிகம் பண்பாடு ஆகியவற்றில் நாடு அடைந்துள்ள உயர்வு தாழ்வுகள் பற்றி மதிப்பிடும் முயற்சியும் வரலாற்றின் வரையறைக்குள் அடங்கும்.

'எண்ணிறந்த தத்துவ நூல்களைக் காட்டிலும் நன்கு எழுதப் பட்ட வரலாற்று நூலின் சில பக்கங்கள் ஒருவனுக்கு மனித இயல்பை எடுத்துக் காட்டுவதுடன் அவனை மகிழ்வுறுத்தவும் செய்யும்'[1] என்பர். மேலும் 'வரலாறு என்பது நிகழ்காலத்தின் தேவைகளுக்கும் நியமங்களுக்கும் இயையக் கடந்த காலத்தைப் பற்றி நாம் கொண்டுள்ள அறிவு என்பது புலனாகின்றது. அதாவது ஒவ்வொரு வரலாறும் அவ்வவ்வரலாறு எழுதப்பட்ட காலத்தில் கடந்த காலம் பற்றி எழுப்பப் பட்ட அன்றேல் எழும்பிய நிகழ்கால வினாக்களுக்குப் பதில் இறுப்பதாகவே அமைந்துள்ளது'[2] இவ்வகையில் நோக்கும்போது நிகழ்காலத் தேவையை நிறைவு செய்யவே வரலாறு எழுதப்படுவதாகக் கூறப்படுகின்றது.

வரலாறு கற்பது, படைப்பது என்பது அறிவு வளர்ச்சிக்கு மட்டுமன்று, ஆன்ம வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றது. அதனால்தான் பாரதியாரும் *"சரித்திரத் தேர்ச்சி கொள்"*[3] என்றார். வரலாற்றின் ஒரு பிரிவான அகழ்வாய்வு பண்டைய நாகரிகத்தின் பல்வேறு கூறுபாடுகளை வெளிக்கொணரும் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. இத்தகைய அகழ்வாய்வின் மூலம் வெளிப்படும் தொல்பொருட் சின்னங்களால்தான் வரலாறு சிறப்பாகத் துலக்கம் பெறும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**தமிழகத்தின் தொன்மை**

குமரிக்கடல் கொண்ட இலெமூரியாக் கண்டம்தான் மனிதன் தோன்றி வாழ்ந்த மிகப் பழைமையான நிலப்பகுதியாகும். 'உலகின் மிகப்

1.ந.ஜகதீசன் 1980:14 2.கா.சிவத்தம்பி 1998:192

3.பாரதியார் கவிதைகள் 1981:181 புதிய ஆத்திசூடி

Tamil Heritage Foundation International (THFi)

பழைமையான நிலப்பகுதி இலெமூரியாவே என்பதும், தமிழ்நூல்களில் கூறப்பட்ட குமரிக்கண்டம் அவ்விலெமூரியாகவோ அல்லது அதன் பகுதியாகவோ இருக்க வேண்டும் என்பதும் அவ்விலெமூரியாவுக்கே சிறப்பாகக் கூறப்படும் பாறை வகைகளும், செடி, கொடி, இனங்களும் ஊர்வன, பறப்பன, நடப்பனவையாகிய உயிரினங்களும் தமிழ்நாட்டில் இன்னும் உள்ளன என்பதும் உளங்கொளத்தக்கன[4] தமிழகத்தில் நிகழ்ந்த பல கடல்கோள்களுள் ஒன்றைச் சிலப்பதிகாரம்,

*பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள*[5]

எனக் குறிப்பிடுகின்றது. எஞ்சிய தமிழகந்தான் பல மாற்றங்களுடன் இன்று காட்சியளிக்கின்றது. கடல் மலிதிரை ஊர்ந்து மண்ணை வவ்வுகின்ற நிலை சங்ககாலந் தொட்டு இன்றுவரை நிகழ்ந்து வரும் நிலவியல் உண்மையாகும். தமிழகத்தின் தொன்மையைப் புலப்படுத்தும் பதிவுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. கடந்த பத்தாண்டுக் காலமாகத் தமிழகத்தின் தொன்மையை வெளிப்படுத்தும் வரலாற்று ஆவணங்களாகத் தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்கள், பாறை ஓவியங்கள், கீறல் குறியீடுகள், பெருங்கற் புதைவுகள், ஈமத்தாழிகள் ஆகியனவற்றைத் தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்து வருகின்றனர்.

பாறை மற்றும் குகை ஓவியங்கள் பற்றி ஆய்வு செய்யும் அமெரிக்காவின் மேற்கு மெக்சிகன் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆலன் ஜேகரில் (Alan Jagril) என்பவர் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாயார் முதல் பவானி சாகர் அணைக்கட்டு வரையிலான மலைச்சரிவுகளில் இத்தகைய ஓவியங்களைக் கண்டுபிடித்துள்ளார். ஓவியங்களில் வேட்டையாடுதல், வேட்டையாடப்பட்ட விலங்குகள், குழுநடனம், ஆட்சி செய்வோருக்கான பணிவிடைகள், வீட்டில் வளர்க்கப்படும் கால்நடைகள், யானை மற்றும் குதிரைப் படை வீரர்களின் உருவங்கள் ஆகியன காணப்படுகின்றன. வெள்ளை மற்றும் சிவப்பு நிறங்களில் சரிவான பாறைகளில் வரையப்பட்டுள்ள இந்த ஓவியங்களின் மூலம் இதுவரை வரலாறு தொடாத பழந்தமிழக மக்களைப் பற்றி அறிய முடிகின்றது.

இன்று தமிழகத்தில் காணப்படும் பெரும்பான்மையான மக்கள் தொடக்ககால மத்தியத்தரைப் பிரிவினர் என்பதில் ஐயமில்லை[6] கிழக்கு

4.கா.அப்பாத்துரை 1941:2. 5. சிலப் 11:19-20. 6.ந.சுப்ரமணியன் 1991 : 17.



மத்தியத்தரைப பகுதியிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகத்திற்கு வந்த மக்களே திராவிடர் ஆவார். திராவிட இனம் தமிழகத்தில் புதிய கற்கால அளவில் வந்தடைந்து பல்கிச் செழித்தது. ஆதிச்சநல்லூரர் அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தும் பண்டைத் தமிழரின் நாகரிகநிலை தொடக்ககால மத்தியத்தரைப் பகுதி நாகரிக வகையோடு ஒற்றுமையுடையதாய்க் காணப்படுகின்றது. திராவிடர் தென்னிந்தியாவில் குடியேறிய பின்பு, அவர்கட்கும் மத்தியத்தரைப் பகுதி மக்களுக்கும் தொடர்பு இருந்து கொண்டே வந்தது.

சாலமன் என்னும் யூதமன்னன் தன்நாட்டிற்கு வரவழைத்ததாகக் கூறப்படும் பலபொருட்கள் தமிழகத்திலிருந்து தான் யூதநாட்டிற்குச் சென்றுள்ளன. ஹீராஸ் பாதிரியார் கூறுவது போன்று தமிழ் பேசிய தென்னிந்திய மக்களுக்கும் பண்டைய சிந்துவெளிக் கலாச்சாரத்திற்கும் பண்பாட்டு, மொழித் தொடர்புகள் இருந்திருக்குமாயின் தென்னிந்தியாவின் திராவிடர் குடியேற்றம் வட இந்தியாவில் ஆரியர் குடியேற்றத்திற்கு 1000 ஆண்டுகளுக்கு முந்தியிருத்தல் வேண்டும்.[7] தொல்பொருளியல், மொழியியல், மானிடவியல் முதலான பலதுறைகளின் அடிப்படையில் நோக்கும்போது மத்தியக் கிழக்கிலிருந்து திராவிடமொழி பேசும் மக்கள் ஆரியருக்கு முன்பே தென்னிந்தியாவை அடைந்து அங்கு ஏற்கெனவே இலெமூரியாவில் இருந்து வந்த இலெமூரிய இனத்தோடு கலந்தனர். இலெமூரியா இனம் இரண்டறக் கலந்து பின்னர் திராவிட இனமாகவே ஆகிவிட்டது. கரூருக்கு அருகில் உள்ள புகளூரில் கிடைத்த தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்கள், பதிற்றுப்பத்து காட்டும் சேரமரபின் பரம்பரையைத் தெளிவு செய்யும் ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்க்கல்வெட்டுக்கள் இரண்டு, திருநெல்வேலி மாவட்டம், அய்யனார்குளம் கிராமத்தில் ராஜாப்பாறை, நிலாப்பாறை ஆகிய பகுதிகளில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.[8] இவற்றுள் ஒன்று, பெருங்கூற்றன் என்ற மன்னன் சமண முனிவர்கள் தங்குவதற்காகப் பள்ளிகள் அமைத்துக் கொடுத்தமை பற்றியது. இரண்டாவது கல்வெட்டு, அப்பள்ளிகள் எங்கெங்கே அமைக்கப்பட்டன என்பது பற்றிய குறிப்பாகும்.

இவை தவிரத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்படும் முதுமக்கள் தாழிகள், பெருங்கற்புதைவுகள் ஆகியன தமிழகத்தின் தொன்மையை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளாகும்.

7.மே.நூல்:29. 8.தினமலர் 22-12-2000:11

Tamil Heritage Foundation International (THFi)

இவை மட்டுமின்றி நடுகற்களும் தமிழகத்தின் தொன்மையைப் புலப்படுத்தவல்ல சான்றாகத் திகழ்கின்றன. இன்று தாழ்ந்த சாதியினர் என்று கருதப்படும் இருளன், மதுரைவீரன், கறுப்பன், நொண்டி முதலான தெய்வங்கள் நடுகல் வகுப்பைச் சார்ந்தவை என்று கருதலாம்.

*நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்*
*பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்*
*பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்*[9]
*பாலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி*
*மரல்வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொ*
*டணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்*
*தினிநட் டனரே கல்லும்*[10]

அக்காலத்தில் நடுகல் வழிபாட்டு முறை பெருவழக்காக இருந்தமையினாலேயே தொல்காப்பியரும் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் என்று இத்தகைய வழிபாட்டு முறையைப் பின்பற்றி இலக்கணம் வகுத்துள்ளார். இன்று தமிழ்நாட்டில் காணப்படும் ஐயனார் கோயில்கள், சிறுதெய்வ வழிபாட்டுத் தலங்கள், குலதெய்வக் கோயில்கள் முதலானவை நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சி பெற்ற தெய்வ வழிபாட்டுத் தலங்களாகும்.

**தமிழகம் - ஆரியகம்**

கே.என்.சிவராஜப் பிள்ளை கூறுவது போன்று அக்காலத்தில் தென்னாடு தமிழகம் என்றும் வடநாடு ஆரியகம் என்றும் அழைக்கப் பட்டிருக்கலாம்.[11] இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியில் வாழ்பவரைத் தமிழர் ஆரியர் என்றழைத்தனர். ஆரியகத்தைப் பெரிபுளுக நூலாசிரியர் ஆரியக்கா என்று குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. சங்ககாலத்திலேயே ஆரியக் கலப்பு தமிழகத்தில் நிகழத் தொடங்கிவிட்டது. குறிப்பாகச் சமய நெறிகளிலும் வழிபாடுகளிலும் சடங்குகளிலும் இவர்களது ஆதிக்கம் மெல்ல மெல்ல தலைதூக்கத் தொடங்கியது. இவர்களோடு சமண பௌத்தமும் தமிழகத்தில் ஊடுருவத் தொடங்கியது. பாணன் என்பானோடு மற்போர் புரிந்த ஆரியப் பொருநன் பற்றி அகநானூறு(386) கூறுகின்றது.

9.அகம் 8:8-10 10.புறம்-2.:1-4 11.க.வித்தியானந்தன் 2ஆம் பதிப்பு 2006:12



நாடோடிகளாக இடம்பெயர்ந்த ஆரியர் கழைக் கூத்தாடிகளாகத் தமிழகத்தில் ஊடுருவிய செய்தி பற்றிக் குறுந்தொகை(7) கூறுகின்றது.

**பண்டைத் தமிழகம் - பாகுபாடு**

பண்டைத் தமிழகம் வேந்தர் அடிப்படையில் சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று மூன்று பிரிவுகளாக ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. இன்றைய கேரளாதான் அன்றைய சேர நாடு. பண்டைய சேர நாட்டின் முக்கியக் கடற்கரைப் பட்டினங்களாவன நறவு, மாந்தை, தொண்டி, முசிறி, வஞ்சி, ஆகியனவாகும். சங்ககாலச் சோழரின் கடற்கரைப் பட்டினங்களாவன நாகைப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், காரைக்காடு ஆகியனவாகும். மேனாட்டு நூலாசிரியர்களும் சங்ககாலப் புலவர்களும் குறித்த சில நகரங்களைப் பிற்காலப் புலவர்கள் குறிப்பிடாமை கவனத்திற்குரியது. இவை எல்லாம் சங்ககாலத்தோடு சிறப்பிழந்து போயினமையும் களப்பிரர் ஆக்கிரமிப்பினால் சிதைக்கப்பட்டமையும் காரணமாகலாம். இவ்வகையில் இயற்கைப் பேரழிவுக்கு உள்ளான நகரங்களுள் அரிக்கமேடும் ஒன்று.

சோழவளநாடு பெரிய நிலப்பகுதியாக இருந்ததால் அதிலிருந்து தொண்டை மண்டலம் பிரிக்கப்பட்டுத் தொண்டை நாடு என்ற புதிய நாடு உதயமாயிற்று. அக்காலத்தில் சோழ இளவரசர்கள் தொண்டை மண்டலத்தின் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டிருந்தனர். பல்லவர் காலத்தில் தொண்டை மண்டலம் வடபெண்ணை ஆற்றுக்கும் தென் பெண்ணை ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்து வந்தது[12]. இன்றைய சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுச்சேரி, தென்னார்க்காடு மாவட்டம், வடஆர்க்காடு மாவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதே அன்றைய தொண்டை மண்டலப் பகுதியாகும். தொண்டை நாட்டின் துறைமுகப் பட்டினங்களாவன மயிலை, கடல்மல்லை, சோபட்மா (மரக்காணம்), பொதுகே (அரிக்கமேடு) ஆகியனவாகும்.

பண்டைய பாண்டிய நாடு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, குமரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். சிறந்த துறைமுகப் பட்டினங்களாவன. கொற்கை, தொண்டி, குமரி ஆகும். கேரளாவில் உள்ள முசிறி (கொடுங்களூர்), தமிழ்நாட்டில் உள்ள அழகன் குளம் (இராமநாதபுரம்), காவிரிப் பூம்பட்டினம், காரைக்காடு

12 க.தில்லைவனம் 1990:28

Tamil Heritage Foundation International (THFi)

(கடலூர் முதுநகர்) அரிக்கமேடு (புதுச்சேரி), வசவசமுத்திரம் (மாமல்லபுரம்) ஆகியவை சங்ககாலத்தில் ரோமானியரோடு தொடர்பு கொண்ட துறைமுகப் பட்டினங்களாகும்.

தமிழகத்தில் மிகவும் பழைமையான பகுதி தொண்டை மண்டலமாகும். பழங்காலத்தைச் சேர்ந்த ஓவியம், சிற்பம், கோயில்கள், ஈமத்தாழிகள் ஆகியன இப்பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தொண்டை மண்டலத்தில் உள்ள திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தை ஓட்டிய பகுதி தமிழகத்திலேயே மிகவும் பழைமையான பகுதியாகும். ஒரு லட்சம் ஆண்டுகட்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்தமைக்கான தொல்பொருட் சான்றுகள் இப்பகுதியில் கிடைத்துள்ளன. கற்காலத்தைச் சேர்ந்த பல கல்லாய்வுகள் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[13] இத்தகைய பழைமையான பகுதிகளுள் ஒன்றுதான் அரிக்கமேடு, வரலாற்றுக்கு உட்பட்டகாலத் தொல்பொருட் சின்னங்களும் (கி.மு. 1000 - கி.பி. 500) அரிக்கமேட்டில் கிடைப்பதால் தமிழக வரலாற்றில் அரிக்கமேடு அகழாய்வு சிறப்பிடம் பெறுகிறது.

### பண்டைத்தமிழர்- கிரேக்கர் தொடர்புகள்

திரைகடலோடித் திரவியம் தேட முற்பட்ட போதும், அரசியல் அடிப்படையில் அயல் நாடுகளோடு தொடர்புகொண்ட போதும் தமிழர் உலக நாடுகளோடு உறவுகொள்ளத் தொடங்கினர். தமிழில் சங்கத் தொகை நூல்கள் தோன்றியமை போன்று கிரேக்க மொழியிலும் பண்டைக் காலத்தில் ஆந்தாலஜி(Anthology) எனப்படும் தொகை நூல்கள் தொகுக்கப்பட்டன. கிரேக்க தொகை நூல் வரலாற்றிலும் அகம், புறம் என்னும் பாகுபாடு இருந்துள்ளது. இரண்டிலும் பழைய வாழ்வியல் நெறிகளும் நாகரிகங்களும் பொதிந்து கிடக்கின்றன.

தமிழர் அயல் நாட்டவரோடு தொடர்பு கொண்டதைப் போன்று அயல் நாட்டவரும் வணிகம், அரசியல், சமயம், ஆகியவற்றின் அடிப்படையில் தமிழரோடு தொடர்புகொள்ளத் தொடங்கினர். தமிழகத்தில் பல நாட்டவரும் வந்து தங்கியிருந்து வணிகம் புரிந்திருப்பினும், தமிழர் கிரேக்க - ரோமானியரோடு கொண்ட வணிகத் தொடர்பே இலக்கியங்கள் போற்றும் அளவிற்குச் சிறப்புடையாதாய் இருந்தது. 'கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்று விழித்தெழுவதற்குப்

13. தினமலர், 16-10-2000:8)



பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்தியாவும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தன'.[14] எகிப்தைக் கைப்பற்றிய கிரேக்கர்கள் பின்னர் அங்கிருந்து இந்தியாவுடன் தொடர்பு கொண்டனர்.

'ரோமானியருக்கு முன்பே தமிழகத்துடன் கிரேக்கர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். கிரேக்கப் பேரரசன் பிலடெல்பியாஸ் (கி. மு. 283 -246) காலத்திலேயே தமிழகத்திற்கும், கிரேக்கத்திற்கும் வணிகம் நடைபெற்று வந்ததைத் தக்க ஆதாரங்களுடன் சன்னாஸ் (Zannas) விளக்கியுள்ளார்'[15].

இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அரிக்கமேட்டில் மத்தியத் தரைக்கடல் நாடுகளைச் சேர்ந்த மட்கல ஓடுகள் (கி.மு. 200) கிடைத்துள்ளன. திரேசிலிருந்து வெளியிடப்பட்ட சில காசுகள் (கி.மு. 300) கரூரில் அமராவதி ஆற்றின் அருகே கிடைத்துள்ளன. ரோமானியருக்கு முன்பு கிரேக்கத்தில் ரிபப்ளிகன்(கி.மு. 2-ஆம் நூ.ஆ) காலந்தொட்டே தமிழகம் மேலை நாட்டோடு தொடர்பு கொண்டிருந்தது. இந்தியாவின் வடபகுதிக்குக் கிரேக்க மன்னர் அலெக்சாண்டர் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் வருகை புரிந்துள்ளார். அலெக்சாண்டர் நிலவழியாக வட இந்தியாவிற்கு வருகை புரிந்த அதே காலகட்டத்தில் கடல் வழியாக இந்தியாவின் தென்பகுதிக்கு வணிகம் புரிய கிரேக்கர்கள் வந்திருக்கக் கூடும்.

ரோமானியர் கி.மு. முதல் நூற்றாண்டில் கிரேக்கத்தைக் கைப்பற்றினர். கிரேக்கர் தென்னிந்தியாவுடன் தொடர்ச்சியாக நடத்திவந்த வணிகத்தை ரோமானியரும் தொடர்ந்தனர். கி.மு.3 அல்லது 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கக் காசுகள் தமிழகத்தில் புழங்கியிருக்க வேண்டும் என்றும் தங்க, வெள்ளி நகைகள் மீது ஆசைகொண்ட தமிழர்கள் அவற்றை உருக்கி அணிகலன்களாக மாற்றி அணிந்திருப்பர், அதனால்தான் அக்காசுகள் தமிழகத்தில் கிடைக்கவில்லை என்றும் இரா. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்[16].

### யவனர் - வரலாற்றுக் குறிப்புக்கள்

யவனரைப் பற்றிப் பலதரப்பட்ட தரவுகளாக இலக்கியம், புராணம், இதிகாசம், கல்வெட்டுக்கள் ஆகியன கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்களில் யவனர் குறித்துப் பத்து இடங்களில்

14. கே.கே.பிள்ளை 1970:48 15. நடன.காசிநாதன் 1995:24 16. மே.நூல் 1995:16

Tamil Heritage Foundation International (THFi)

குறிப்பிடப்பட்டுள்ளன. முல்லைப் பாட்டில்

*உடம்பின் உரைக்கும் உரையா நாவின்*
*படம்புகு மிலேச்சர் "*

என்று யவனர், மிலேச்சர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அரசரின் மெய்க்காவலராகவும் பணியாளராகவும் குறிப்பிடப்படும்போது இவர்கள் பெருவழக்காக மிலேச்சர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். வணிகர் நிலையில் குறிப்பிடும்போது யவனர் என்று[18] குறிப்பிடப்பட்டுள்ளனர். யவனர்களைப் பற்றிக் குறிப்பிடும் சில சங்கப்பாடல்கள் கி.மு.3 அல்லது 2ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

இவற்றிற்கு ஆதாரமாக இந்தியாவில் கிடைத்த ரோமன் ரிபப்ளிக்கன் காசுகளையும் அரிக்கமேட்டில் கிடைத்த ஆம்ஃபோரா பானை ஓடுகளையும் குறிப்பிடலாம். சங்க இலக்கியங்களில் யவனர்களைப் பற்றிக் குறிப்பிடும் பாடல்கள் கி,மு.3ஆம் நூற்றாண்டிலிருந்தே எழுதப்பட்டிருக்கலாம்.[19] மகாபாரதத்தில் கௌரவர்களின் இராசசூய யாகத்தில் கலந்துகொள்ள வந்த அரசர்களுள் ஒருவராக யவனர் குறிக்கப்பட்டுள்ளனர்.

பாலி இலக்கியத்தில் காபூலுக்கு அருகில் உள்ள அலெக்சாண்டிரியா மாகாணத்தில் யவனரைப் பற்றிய குறிப்புகள் இருந்ததாகச் செய்தியுள்ளது.[20] அசோகர் கல்வெட்டுக்களில் யவன நாடு பற்றியும் 'துசாஸ்பா' (Tusasbha) என்னும் யவன அரசன் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.[21] வடமொழி இலக்கணம் வகுத்த பாணினி யவன மக்களுள் பெண்பாலைக் குறிக்க 'யவனாணி' (Yavanani) என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.[22]

உத்திரப் பிரதேசத்தில் உள்ள மதுரா, உஜ்ஜையினி ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் யவனப் பெண்கள் அணிந்து கொள்ளும் 'கிளே புள்ளே'(Clay Bullae) எனப்படும் அணிகலன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, சிலஹரர்களின் (Silaharas) காலத்தில் மேற்காசியாவில் வாழ்ந்த ஒருசில இனத்தாரும், ஆரியருள் ஒருபிரிவினரும் 'யவனர்' என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

17.முல்:65-66 18.முல்:61பெரும்பாண:316,பதிற்.பதிகம்:2.,அகம்:57,149,நெடுநல்:101-102,புறம்:56
19.சு.வித்தியானந்தன்2004:16 20.Marie - Francoise Boussac Jean- Francois salles 1995:77 21. Ibid. 1995. 76
22.Ibid 1995:77



## யவனர் - சொற்பொருள்

சங்க இலக்கியங்களில் வழங்கப்பெறும் 'யவனர்' என்னும் சொல்லுக்குரிய பொருளைத் தெளிவுபடுத்துவது இன்றியமையாததாகும். யவன நாட்டிலிருந்தும் காம்போஜ நாட்டிலிருந்தும் இந்தியாவிற்கு வந்த மக்களை மிலேச்சர் என்றும் மிலேச்ச மொழி பேசுபவர் என்றும் முல்லைப்பாட்டு உரை குறிப்பிடுகின்றது.[23]

இவர்களைக் கி.மு. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்களாகப் பழங்கால இந்தியர் பாகுபாடு செய்துள்ளனர். யவனர், மிலேச்சர் என்னும் சொற்கள் பொதுவாக வெளிநாட்டினரைக் குறிக்கவே தமிழிலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், 'யவனர்'என்னும் சொல் சங்க காலத்துக்கு முன்புவரை கிரேக்கர், இந்தோ-கிரேக்கர், ரோமானியர் ஆகிய மூவரையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவும், சங்ககாலத்தில் ரோமானியரை மட்டுமே குறிக்கும் சிறப்புச் சொல்லாகவும் வழங்கப்பட்டுள்ளது.

'யோனா' (Yona) என்னும் பிராகிருத வார்த்தையிலிருந்தே 'யவன' என்னும் சொல் தோன்றியதென்றும், பழைய பாரசீக மொழியில் உள்ள யவன (Yavna) என்னும் சொல் பிராகிருதத்தின் 'யோனா' என்னும் சொல்லில் இருந்து வந்ததென்றும் கூறுவர்.[24] பாரசீக மொழியில் 'யவன்' என்னும் சொல் பழைய கிரேக்கரைக் (Ionian Greek) குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அயோனியன் (IONIAN) என்னும் பழைய கிரேக்க மொழிச் சொல்லே தமிழில் 'யவனர்' என்று வழங்கப்பட்டதாகக் கூறுவர்.[25]

முதலில் கிரேக்கரைக் குறித்து வந்த இச்சொல், பின்னர் ரோமானியருக்கும் உரித்தாகி, அதன்பின் மேற்கு ஆசியாவிலிருந்தும், மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்தும் தமிழகத்திற்கு வந்த அனைத்து வெளிநாட்டினரையும் குறிப்பதாகப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் கிரேக்கரையும் ரோமானியரையும் குறிக்கவே யவனர் என்னும் சொல்லாட்சி மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இருவருள்ளும் கிரேக்கரைப்

23.யவனர்:சோனகர்,துருக்கர்,மிலேச்சர்: இவர்கள் தொழில் வாயிற்காத்தல் - சிலப். உ.வே.சா.பதிப்பு1950:224 24. Marie-Francoise Boussac, Jeane Francois Salles 1995: 76
25. Marie-Francoise Boussac, Jeane Francois Salles 1995: 76

Tamil Heritage Foundation International (THFi)

பற்றிக் குறிப்பிடும் சங்கப் பாடல்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டிற்கு முற்பட்டனவென்றும் ரோமானியரைக் குறிக்கும் சங்கப்பாடல்கள் கி.மு. முதல் நூற்றாண்டிற்குப் பிற்பட்டனவென்றும் கொள்ளலாம். கி.மு. 100 முதல் கி.பி. 200 வரையிலான காலப்பகுதியில் ரோமானியர்கள் சங்கஇலக்கியம் குறிப்பிடும் யவனர்கள் என்னும் பெயரால் அரிக்கமேட்டில் இருக்கைகள் அமைத்து வணிகம் புரிந்து வந்துள்ளனர்.

**யவனக் குடியிருப்புக்கள்**

தென்னிந்தியாவின் மலபார் கடற்கரைப் பகுதியிலும் சோழமண்டலக் கரையிலும் வணிகம் புரிவதற்காக வந்த யவனர்கள் பல வணிகக் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு தங்கியிருந்த செய்தி பெரும்பாணாற்றுப்படை, நெடுநல் வாடை முதலான சங்க நூல்களில் காணப்படுகின்றது. காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவைப் பாடவந்த இளங்கோவடிகள் அங்கு நிறுவப் பட்டிருந்த யவனக் குடியிருப்புகள் பற்றிய செய்தியையும் பாடியுள்ளார். மதுரையைச் சுற்றிலும் நிறுவப்பட்டிருந்த புறஞ்சேரிகளுள் ரோமானியருடைய சேரியும் ஒன்றாம்.

சங்ககாலத்தில் சிறப்புப் பெற்றிருந்த முசிறி, தொண்டி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், பொதுகே முதலான தமிழகத் துறைமுகங்களில் யவன வணிகக் குடியிருப்புகள் நிறுவப் பட்டிருந்தன. முசிறி துறைமுகப் பட்டினத்தில் யவன வீரர்களின் பாதுாப்புக்காக மட்டும் 1200 யவன வீரர்கள் தங்கியிருந்தனர்.

புதுவையில் அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் வசவசமுத்திரம், இராமநாதபுர மாவட்டத்தில் அழகன்குளம், காவிரிப்பூம்பட்டினம், கேரளாவில் கொடுங்களூர், கரூர் முலான இடங்களில் எல்லாம் யவனக் குடியிருப்புக்கள் இருந்துள்ளமை அகழ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

நனந்தலை மருங்கின் வளங்கெழு முசிறியும் முட்டாச் சிறப்பின் காவிரிப்பூம் பட்டினமும் மகளிரின் எழிலன்ன தொல் தொண்டி துவன்றிருக்கையும் முத்துபடு பரப்பின் கொற்கையும் பொதுகேயும் பண்டைத்தமிழகத்தின் தலை சிறந்த துறைமுகங்களாகும். தமிழகத்தின் கீழை மேலைத் துறைமுகங்களில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகள் குறித்து



*அறியவும் பெரியவும் நெறிய ஈண்டி*

*வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு*[26]

என்று பட்டினப்பாலை பாடியுள்ளமையால் அறியலாம் தமிழகத்திலிருந்து கீழை மேலை நாடுகட்கு ஏற்றுமதியான பொருட்கள் ஒவ்வோராண்டும் கூடிக் கொண்டே சென்றது. கி.மு.200இல் தொடங்கிய தமிழக கிரேக்க-ரோமானிய வணிகம் கி.பி.300 வரை நடைபெற்றுள்ளது. கி.பி.3ஆம் நூ.ற்றாண்டிற்குப் பின் ரோமானிய நாணயங்கள் தமிழகத்தில் குறைவாகவே கிடைப்பதாலும் கடல்வணிகம் குறைந்துபோய் விட்டது என்று கூறலாம். களப்பிரர் ஆக்கிரமிப்பால் சிதைக்கப்பட்டிருந்த தமிழகம் அயல் நாட்டு வணிகத்தில் முழுமையாக ஈடுபட முடியாமற் போயிற்று. கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் மத்தியத் தரைக்கடல் நடுகளுக்கும் இடையே நடைபெற்ற வணிகத்தில் தமிழர்கள் பெரும்பங்கு வகித்துள்ளனர். கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின் மேலை நாடுகளுடன் தமிழக வணிகம் குறையத் தொடங்கியபோது கீழை நாடுகளுடன் அதன் வணிகம் பெருமளவில் விரிவடைந்தது. பல்லவர் கால வரலாற்றாதாரங்கள் இக்கூற்றை மெய்ப்பிக்கின்றன.

**அரசியல் உறவுகள்**

போரில் சிறந்த யவன நாட்டு வீரர்களைப் பாண்டிய நாட்டு மன்னர்கள் தம் படைப்பிரிவில் சேர்த்திருந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனையை யவன வீரர்கள் காவல் காத்து வந்தனர் என்னும் குறிப்பு சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. ஏனோர்க்கு அச்சமளிக்கும் விதத்தில் அமைந்திருந்த யவன வீரர்களின் உருவெளித் தோற்றத்தைப் பற்றிக் கூறும் முல்லைப் பாட்டு,

*மத்திகை வளைஇய மறித்துவீங்கு செறிவுடை*

*மெய்ப்பை புக்க வெருவரு தோற்றத்து*

*வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்* [27]

என்று வருணிக்கின்றது. யவன நாட்டிற்குத் தூதுவர்களாகத் தமிழர் சென்றமை பற்றியும் யவன நாட்டிலிருந்து தூதுவர்களாக வந்த யவனர்களைப் பற்றியும் சங்க இலக்கியம் சான்று பகர்ந்துள்ளது. ஜூலியஸ்சீசர் காலத்திலிருந்து இந்தியா-ரோம் நாடுகளிடையே நிலவி வந்த உறவு அரசியல் அடிப்படையிலும் தொடர்ந்துள்ளது. யவன

26.பட்டினப்:104-105 27.முல்லைப்.59-61

Tamil Heritage Foundation International (THFi)

வீரர்கள் தமிழகப் படைப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த செய்தியை முல்லைப்பாட்டு இயம்புகிறது. பிற நாட்டிலிருந்து சிறை பிடிக்கப்பட்ட யவன வீரர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கிய செய்தியைப் பதிற்றுப்பத்தின் பதிகம் புலப்படுத்தியுள்ளது.

*'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து*
*நெய்த்தலைப் பெய்து கையிற் கொளீஇ*
*அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு'* [28]

என்று பதிற்றுப்பத்தின் பதிகம் பாடுகின்றது. இச்சான்றுகள் யாவும் யவனருக்கும் தமிழருக்கும் இருந்து வந்த பண்டைய அரசியல் உறவுகளைப் புலப்படுத்தவல்லன.

இமயவரம்பன் என்னும் சேர மன்னனின் காலம் கி.மு.170 ஆகும். இக்கால கட்டத்தில்தான் 'மித்ரடேட்டஸ்' (கி.மு. 170-138) என்ற பார்த்திய அரசன் இந்தியாவின் வடமேற்கே இமயமலைப் பகுதியில் நுழைந்து பாக்டிரியா (இப்போதைய பால்க் - Balkh), தட்சசீலம் ஆகிய மலைநாடுகளைக் கைப்பற்றத் தொடங்கினான். பார்த்தியர் ஆட்சி மொழி கிரேக்கம் என்பதால் அவரை யவனர் எனல் பொருந்தும்[29] என்று குறிப்பிட்டிருப்பது இமய வரம்பனுக்கும் பார்த்திய (யவன) அரசனாகிய மித்ரடேட்டஸுக்கும் இடையில் நிகழ்ந்த போர்ச்செய்தியே ஆகும். ரோமானியப் பேரரசன் அகஸ்டசின் அரண்மனைக்குப் பாண்டியநாட்டுத் தூதுவர் இருவர் வந்ததாக ஸ்டிராபோ குறிப்பிட்டுள்ளார்.[30]

மேலும் தமிழருக்கும் ரோமானியருக்கும் இடையே நிலவிவந்த நெருக்கமான அரசியல் தொடர்பைப் புலப்படுத்தும் வகையில் ரோமானியப் பேரரசன் அகஸ்டசின் கோயில் ஒன்று முசிறியில் இருந்ததாக பெண்டின்ஜெரியன் அட்டவணை குறிப்பிட்டுள்ளது. ஆந்திராவில் கி. பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகார்ஜுன கொண்டாவில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் 'அபிரா' அரசன் வாசுசேனா என்னும் ஆந்திர மன்னன் மகா விஷ்ணுவிற்கு மரவுருவப் படிம விழாவினைக் கொண்டாடினான்.

இம்மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கி இவ்விழாவிற்குக் கொங்கணக் கடற்கரைப் பகுதியில் உள்ள சஞ்சய்தா நாட்டை ஆண்ட யவனராஜா வருகை புரிந்ததாகக் குறிப்பு காணப்படுகின்றது.[31]

28.பதிற்.2ஆம்பத்து :79 29.பசவலிங்கம்1984 :180 30.வரலாற்றுச்சுவடுகள்1980 :33



## அரிக்கமேடு- யவன இருக்கை

பல்வேறு நாட்டைச் சேர்ந்த வணிகர்களும் பொதுகே நகரில் வணிகம் புரிந்து வந்ததுள்ளனர். சில அயல்நாட்டு வணிகர்கள் அங்கு தங்கி, தற்காலிக வணிகக் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுள் யவன வணிகர்கள் கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியத் துறைமுகங்களில் வணிகக் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வணிகம் புரிந்து வந்துள்ளனர். பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலான நூல்கள் இத்தகைய யவன இருக்கைகளைப் பற்றி வர்ணிக்கின்றன. இத்தகைய வணிகக் குடியிருப்புக்களுடன் கூடிய துறைமுகங்களைத் தாலமி, எம்போரியம் என்று குறிப்பிட்டுள்ளார். எம்போரியம் என்றழைக்கப்படும் துறைமுகங்கட்கும் ஏனைய துறைமுகங்கட்கும் வேறுபாடு உண்டு.

எம்போரியம் என்பது உள்நாட்டு மன்னர்கள் வணிகத்தின் பொருட்டு, கிரேக்க - ரோமானியர்கட்கு அளிக்கப்பட்ட இடமாகும். இத்தகைய இடங்களில் உள்நாட்டு மன்னர்களோடு செய்து கொண்ட குறுகியகால ஒப்பந்தங்களின் அடிப்படையில் யவனர்கள் தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகளில் வணிகம் புரிந்து வந்துள்ளனர்.[32]

அத்தகைய இடங்களுள் குறிப்பிடத்தக்கவை கபேரிசு எம்போரியம் (காவிரிப்பூம்பட்டினம்), பொதுகே எம்போரியம்(அரிக்கமேடு) ஆகும். காவிரிப்பூம் பட்டினம் சோழரின் தலைநகராக விளங்கியமையால் பண்டைத் தமிழ்ப்புலவரின் பாடுபொருளாக அமைந்தது. பொதுகே துறைமுகத்துக்கு அத்தகையதொரு சிறப்பு இல்லாமையால் புலவர்களின் புகழ்மொழிகளுக்கு ஆட்படவில்லை.

காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் கொண்டு விட்டதால் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் சான்றாதாரங்கள் நமக்குக் கிடைத்தில. ஆனால் பொதுகே எனப்படும் அரிக்கமேட்டில் பழந்தமிழர் பயன்படுத்திய அனைத்துத் தொல்பொருள் சான்றாதாரங்களும் முழுமையாகக் கிடைத்துள்ளன. அவற்றின் துணைக்கொண்டு பண்டைத் தமிழரின் நாகரிகம், பண்பாடு முதலானவற்றை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

31.மே.நூல். 1995:94 32.சு.தில்லைவனம்1990:23

Tamil Heritage Foundation International (THFi)

**பண்டைத் தமிழர்- யவனர் பன்முகத் தொடர்புகள்**

மேலைக் கடற்கரையில் வணிகம் புரிந்த யவனர்களுள் ஒரு பிரிவினர் கொங்கணக் கடற்கரைப் பகுதியில் குறுநில மன்னராகவும் ஆட்சி புரிந்துள்ளனர். யவனத் தச்சரும் தண்டமிழ் வினைஞரும் ஒன்று கூடிக் காவிரிப்பூம்பட்டினத்தில் அழகிய மண்டபம் ஒன்று அமைத்த செய்தியை மணிமேகலையால்[33] வாயிலாக அறியலாம்.

தொடக்கத்தில் வணிக நோக்கிற்காக வந்லத யவனர்கள் (கிரேக்க ரோமனியர்கள்) தமிழகத்திலேயே தங்க நேரிட்டபோது அரசியல், கலை, தொழில், சிற்பம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தமிழரோடு நெருங்கிய தொடர்புகொள்ளத் தொடங்கினர். 'யவனர் போல் முயற்சி கொள்' என்றார் பாரதியார்[34].

யவனருடைய பல்துறைப்புலமை, பன்முகத்தொடர்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பாரதியார் இவ்வாறு கூறியுள்ளார். ஆந்திர மாநிலம் அல்லுரு கிராமத்தில் கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் நிவந்தம் அளிக்கப்பட்ட பல பொருட்களைப் பற்றிய பட்டியல் உள்ளது. அப்பட்டியலில் யவனரால் அவர் நாட்டில் செய்து இங்கே கொண்டுவரப்பட்ட மீன்வாய் அமைப்பு கொண்ட விளக்கு ஒன்றும் குறிக்கப்பட்டுள்ளது.[35]

இது தவிர பெரும்பாணாற்றுப் படையில்[36] யவன ஓதிம விளக்கு பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. இடைக்காலத் தமிழகத்தில் ரோமானிய நாட்டுக் கலைப் பொருட்களின் தாக்கத்தால் செய்யப்பட்ட பாவை விளக்குகள் பிற்காலத் தமிழகக் கோயில்களில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

முல்லைப்பாட்டு குறிப்பிடும் குறுநீர்க் கன்னல் கிரேக்கத்தில் குரோனிஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மெய்ப்பை புக்க வெருவரு தோற்றத்தோடு இருக்கும் யவன வீரர்கள் தமிழகப் படைப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பிற நாடுகளிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட யவன வீரர்கள் சித்திரவதைக்குள்ளான செய்தி பதிற்றுப்பத்தின் மூலம் அறியமுடிகின்றது. ரோமானியருக்கு முன்பே கிரேக்கர்கள்

33.மணிமே.19:108-109 34.பாரதியார்கவிதைகள்1981:201 35.Marie Bossaic 1995:81
36.பெரும்பா:316



தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தமைக்கான சான்றுகள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

யவனர் என்னும் சொல்லாட்சி சங்கஇலக்கியம் மற்றும் இரட்டைக் காப்பியங்களில் முதலில் கிரேக்கரைக் குறித்துப் பின்னர் ரோமானியருக்கு உரித்தாகி அதன் பின் மேற்காசியாவிலிருந்தும் மத்தியத்தரைக்கடல் நாடுகளிலிருந்தும் தமிழகத்திற்கு வந்த வெளிநாட்டினரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இலக்கிய, வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் நோக்கும்போது யவனர்கள் வணிகராக, படை வீரராக, தொழில் வினைஞராக, தூதுவராக, கொடையாளியாக, குறுநில மன்னராக, வரலாற்றைப் பதிவு செய்யும் பயணியராக என்று பல நிலைகளில் அரசியல், வணிகம், சமுதாயம், சமயம், பண்பாடு என்று பன்முகப் பரிமாணங்களில் தமிழரோடு உறவு கொண்டிருந்தமை புலனாகின்றது.

Tamil Heritage Foundation International (THFi)

# 2. அரிக்கமேடு- இருப்பிடமும் இயற்கையமைப்பும்

நில வரைவியல் படத்தில் தமிழகம் நில நடுக்கோட்டிற்கு வடக்கில் கிடைக்கோடுகள் எட்டிற்கும் பதினான்கிற்கும் இடையிலும் கிழக்குக் குத்துக்கோடுகள் எழுபத்தைந்துக்கும் எண்பதுக்கும் இடையிலும் அமைந்துள்ளது. நில அமைப்பால் தமிழகத்தின் சிறு பகுதியாகக் கருதப்படும் புதுச்சேரி பிரெஞ்சியரின் ஆட்சியால், இந்திய ஒன்றியப் பகுதிகளுள் (Union Territory of Puducherry) ஒன்றாக இருந்து வருகின்றது. ஆட்சியமைப்பால் புதுச்சேரிப் பகுதி பிரிந்து நின்றபோதிலும் மொழியமைப்பிலும், இயற்கையமைப்பிலும் சுற்றுப்புறச் சூழ்நிலையிலும் தமிழகத்தின் தென்னார்க்காடு மாவட்டத்தோடு இணைத்துப் பேசுமளவிற்கு ஒப்புமை உடையதாகக் காணப்படுகின்றது.

### அரிக்கமேடு- அமைவிடம்

நிலத்தின் தன்மை கருதி பாறைகளும் காடுகளும் நிறைந்த குறிஞ்சி, முல்லை நிலங்களை வன்புலம் என்றும் நீர் வரத்து கருதியும் நீரின் இருப்பு கருதியும் மருதம், நெய்தல் நிலங்களை மென்புலம் என்றும் பண்டைத் தமிழர் வழங்கியுள்ளனர்.

*வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்*
*மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந*[1]

என்னும் புறநானூறும் தமிழகத்தின் நானிலமும் இருபெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தமை பற்றிக் கூறும். அரிக்கமேட்டைப் பொறுத்தவரை மருதமும் நெய்தலும் கலந்த மென்புலமாகவே தொன்று தொட்டு நிலவி வருகின்றது.

நிலநடுக்கோட்டில் புதுச்சேரி (அரிக்கமேடு) $11^0$- 45' = $12^0$ டிகிரி வடக்கு அட்சரேகையிலும் $79^0$ டிகிரி- 37` = $70^0$ டிகிரி - 50' கிழக்குத் தீர்க்கரேகையிலும் அமைந்துள்ளது. புதுச்சேரியிலிருந்து கடலூர் செல்லும் சாலையில் ஐந்து கி.மீ. தொலைவில் அரியாங்குப்பம் உள்ளது. அரியாங்குப்பத்திலிருந்து வீராம்பட்டினம் செல்லும் சாலையில் காக்காயந்தோப்பு என்னும் சிற்றூரை ஒட்டி அரியாங்குப்பம்

1.புறம்.42:17-18



ஆற்றின் தெற்குக் கரையோரமாக இருபதடி உயரத்தில் அமைந்துள்ள மேடான பகுதியே அரிக்கமேடு என்று அழைக்கப்படுகின்றது.

13.99 ஹெக்டேர் அளவுள்ள நிலத்தை அரிக்கமேட்டுக்குரிய பகுதியாகப் புதுவை நில அளவியல் பதிவேட்டுத்துறை கணக்கிட்டுள்ளது.[2] அரிக்கமேட்டின் வடக்கே தேங்காய்த் திட்டும் தெற்கே காக்காயந்தோப்பும் கிழக்கே வீராம்பட்டினமும் மேற்கே அரியாங்குப்பமும் எல்லைப் பகுதிகளாக அமைந்துள்ளன. இப்பகுதியின் வெப்ப நிலை கோடையில் $17^0$ டிகிரி குறைந்த பட்ச அளவாகவும் $38^0$ டிகிரி உயர்ந்தபட்ச அளவாகவும் இருந்து வருகின்றது. புதுவைப் பகுதியில் ஓர் ஆண்டின் மழை அளவு 1174 மி. மீ. ஆகும்.

இப்பகுதியில் ஆற்றை ஒட்டி, தனியார் உடைமையாக இருந்துவரும் அடர்த்தியான தென்னை, சவுக்குத் தோப்புகளும் வேறு சில சதுப்புநிலத் தாவரங்களும் காணப்படுகின்றன. அரிக்கமேட்டின் பிற பகுதிகள் இப்போது மக்கள் வாழிடமாக இல்லாமல் விளைநிலமாகக் காட்சியளித்து வருகின்றன. இப்பகுதியில் தொடர்ந்து ஆண்டாண்டுக் காலமாகப் பயிர்த்தொழில் (புன்செய்) செய்து வரும் மக்கள் இந்நிலப்பகுதியை 'அரிப்புமேட்டுப் புஞ்சை' என்றழைத்து வருகின்றனர்[3] இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு காவிரிப்பூம் பட்டினத்திற்கு இணையான துறைமுகப் பட்டினமாகவும்.

*மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்*[4]

நகரமாகவும் விளங்கிய அரிக்கமேடு (பொதுவாக) இன்று விளைநிலமாகவும் மனைகளாகவும் மாறிவிட்டது.

### அரியாங்குப்பத்தாறும் தேங்காய்த்திட்டும்

அரியாங்குப்பம் ஆற்றிற்குக் கிளிஞ்சல் ஆறு, வராக நதி என்று வேறு பெயர்களும் உள்ளன. செஞ்சியாற்றின் (சங்கராபரணி ஆறு) கிளை நதியான அரியாங்குப்பத்தாறு முருங்கப்பாக்கம், அரியாங்குப்பம், தேங்காய்த் திட்டு ஆகிய பகுதிகளில் அகன்ற கழிமுகத்தை ஏற்படுத்தி விட்டு, வங்காள விரிகுடாக் கடலில் கலக்கின்றது. வில்லியனூர்

2.சு.தில்லைவனம் 1990 : 37 3.J.M.Casal, 1949:9 4.பட்டினப்:216-217

Tamil Heritage Foundation International (THFi)

வழியாகப் புதுவைப் பகுதியில் நுழையும் செஞ்சியாறு திருக்காஞ்சி அருகில் கிளிஞ்ச(ல்) குப்பம் என்னும் ஊரில் இரண்டாகப் பிரிகின்றது. ஒன்று அரியாங்குப்பத்தாறு எனவும் மற்றொன்று சுண்ணாம்பாறு எனவும் வழங்கப்படுகின்றன. அரியாங்குப்பத்தாறு தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரிய இருசாம்பாளையம் என்னும் சிற்றூரில் நுழைந்து முருங்கப்பாக்கம் பாலத்தின் வழியாக வந்து அரியாங்குப்பத்திற்கு வடக்கே மீண்டும் இருபிரிவுகளாகப் பிரிந்து அரிக்கமேட்டுப் பகுதியில் ஒன்றாக இணைந்து, தேங்காய்த்திட்டுப் பகுதியில் மறுபடியும் இருகிளைகளாகப் பிரிந்து அகன்ற கழிமுகத்தை ஏற்படுத்தி விட்டுக் கடலில் கலக்கின்றது.

அரியாங்குப்பத்தாறு இரண்டு கிளைகளாகப் பிரியாமல் இருந்த காலத்தில் தேங்காய்த்திட்டு என்னும் பெயர் ஏற்படவில்லை. பழங்காலத்தில் அரியாங்குப்பத்தாறு அரிக்கமேட்டின் இடப்புறத்தில் ஒரே பிரிவாகத்தான் ஓடிக் கடலில் கலந்து கொண்டிருந்தது. பின்னர் அரியாங்குப்பத்துக்கு அருகில் உள்ள ஆற்றின் கரையோரம் காலப்போக்கில் மண்மேட்டால் உயர்ந்திடவே மழைக் காலத்தில் அவ்வப்போது ஏற்பட்ட வெள்ளநீர் ஆற்றின் போக்கைத் திசைமாற்றி விட்டது. வெள்ளப் பெருக்கின் காரணமாக ஆற்றிலிருந்து புதிதாகத் தோன்றிய கிளை ஒரு திட்டை ஏற்படுத்தியது. நானூறு ஆண்டுகட்கு முன்பு தோன்றிய இத்திட்டைத்தான் 'தேங்காய்த் திட்டு' என்று மக்கள் அழைத்து வருகின்றனர். இத்திட்டுக்கு இடப்புறமுள்ள பழைய கிளை நதி ஆழமின்றி நீர்தேங்கி நிற்கும் கழிமுகப் பகுதியாகவே காட்சியளிக்கின்றது.

பிரெஞ்சிந்திய அரசின் வரைபடத்தில் அரியாங்குப்பத்தாறு கடலிலிருந்து உள்நாட்டுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டுகளில் தங்கள் நாட்டிலிருந்து கப்பல் மூலமாகக் கொண்டுவந்த சரக்குகளைப் பிரெஞ்சியர்கள் சிறு சிறு படகுகள் மூலம் அரியாங்குப்பம் ஆற்றின் வழியாக ஏற்றி இறக்கப் பயன்படுத்தியுள்ளனர்.[5] பிரெஞ்சியர்கள் புதுச்சேரியை ஆக்கிரமித்த காலகட்டத்தில், சுண்ணாம்பாறு அதிக ஆழமுடையதாகவும், அகலமானதாகவும் இருந்தது என்று பிரெஞ்சிந்தியாவின் முதல் ஆளுநர் பிரான்சுவா மார்த்தேன் தம் நினைவுக்குறிப்பில் குறித்துள்ளார்.[6] 'வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் (சுண்ணாம்பாறு ஆழம் குறைந்து) அரியாங்குப்பம் ஆறு

5. Pondicherry Gazetteer Vol-1.1982 : 792 6.புதுவைச் செய்திகள டிசம்பர்-1969: 19



ஆழமுடையதாகி இரண்டு கிளைகளாகப் பிரிந்து தேங்காய்த்திட்டு உருவாகியிருக்க வேண்டும்' என்கிறார் லெழாந்தீய் (Le Gentil)[7] மேற்கூறிய ஆதாரங்களின் அடிப்படையில் நோக்கும்போது அரியாங்குப்பத்தாற்றில் ஏற்பட்ட கிளைகளும், தேங்காய்த்திட்டுப் பகுதியும் கடந்த நானூறு ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களாகத்தான் இருக்க வேண்டும்.

## அயல்நாட்டார் பயணக்குறிப்புக்கள்

கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரமாகப் பயணம் செய்த கிரேக்கப் பயணியர் அக்காலத் தென்னிந்தியத் துறைமுகங்கள் பற்றியும் அங்குக் கிடைத்த வணிகப் பொருட்கள் பற்றியும் தங்களுடைய பயணக் குறிப்புக்களில் எழுதி வைத்துள்ளனர். கி.பி. முதல் நூற்றாண்டில் எகிப்தில் தங்கியிருந்த கிரேக்கக் கடற்பயணி ஒருவர் இந்தியத் துறைமுகங்கள் பற்றியும், அங்கிருந்து கிரேக்க-ரோமானிய நாட்டிற்கு ஏற்றுமதி இறக்குமதியான பொருட்களைப் பற்றியும் தொகுத்துக் கூறியுள்ள நூலே 'பெரிப்புளுசு' (The Periplus Mari Erythraei) என்பதாகும். இந்நூலில் சோழமண்டலக் கரையில் உள்ள துறைமுகங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "இந்தப் பிரதேசத்தின் (கிழக்குக் கடற்கரை) வணிகச்சந்தை கூடும் நகரங்களில் டிமிரிகாவிலிருந்தும், வடக்குத் துறைமுகங்களிலிருந்தும் வரும் கப்பல்கள் தங்குவதற்கு வசதியான இடங்களில் முதன்மைத்தானம் வகிப்பது 'காமரா', அதற்கடுத்தது 'பொதுகே', 'சோபட்மா' ஆகும். இவற்றில் அந்நாட்டுக் கப்பல்கள் டிமிரிகா வரையிலும் தங்குகின்றன" என்ற செய்தி இடம்பெற்றுள்ளது[8].

இதில் குறிப்பிடப்படும் 'டிமிரிகா' என்பது தமிழகம் என்பதன் திரிபாகும். 'காமரா' காவிரிபூம் பட்டினமாகவும், 'சோபட்மா' மரக்காணமாகவும் 'பொதுகே' அரிக்கமேடு என்றும் உய்த்துணரப்படுகின்றன. தாலமியும் தம் பயணக்குறிப்பில் 'மிளகு ஏற்றிச்செல்ல வரும் கப்பல்கள் வந்து தங்குமிடமாக உள்ள தமிழகத் துறைமுகங்களில் பொதுகேயும் ஒன்று' என்று கூறியுள்ளார்[9]. இப்போதைய அரிக்கமேடுதான் பண்டைக் காலத்தில் ரோமானியரால் 'பொதுகே' என்னும் பெயரில் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் உண்மையை இப்பகுதியில் அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர். பெரிப்ளுசு, தாலமி ஆகிய

7.சோ.முருகேசன் 1997:33 8.வி.எஸ்.வி.இராகவன் 1965 :284 9.மே.நூல்:83

Tamil Heritage Foundation International (THFi)

இரண்டு நூல்களின் கூற்றுக்களிலிருந்தும் சிறிதே மாறுபடும் வார்மிங்டன் (E. H.Warmington) என்னும் ஆய்வாளர் பொதுகே என்பதனைப் பொதுஸ் (Podus) என்று குறிப்பிட்டுள்ளார்[10].

**பொதுகே எம்போரியம்**

காவிரிப்பூம்பட்டினம், பொதுகே ஆகிய துறைமுகப் பட்டினங்கள் 'கபேரிஸ் எம்போரியம்' என்றும், 'பொதுகே எம்போரியம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காறு ஆராயத்தக்கது[11]. இங்கே 'எம்போரியம்' (தங்குமிடம்) என்னும் சொல் பாய்மரக்கலங்கள் வந்துத் தங்கிச் செல்லும் துறைமுகப் பட்டினம் என்னும் பொருளில் கையாளப் பட்டுள்ளது. தமிழகத்தின் ஏனைய துறைமுகங்களை அடைமொழியின்றிக் கூறிவிட்டு, காவிரிப்பூம்பட்டினம், பொதுகே ஆகியவற்றைக் குறிப்பிடும்போது மட்டும் 'எம்போரியம்' என்று தாலமி சுட்டுவதற்கு ஏதேனும் சிறப்புக் காரணம் இருக்க வேண்டும்.

ரோமாபுரி வணிகர்கள் அக்கால இந்தியாவில் பொருட்களைச் சேமித்து வைக்கும் பண்டசாலைக்கு 'எம்போரியம்' என்று பெயராகும். அங்கே தங்கி வணிகம் புரியும் ரோமானிய அதிகாரிகள் தங்கள் நாட்டிலிருந்து வரும் கட்டளைகளை ஏற்று நடந்தனர். எம்போரியம் என்பதற்குப் ஃபேக்டோரி (Factory) என்ற வேறு பெயரும் உண்டு. அதாவது பெரிய துறைமுகத்தில் இடம் பெற்றிருக்கும் ஐரோப்பிய வணிக நிறுவனம் இந்தியக் குறுநில மன்னரிடமிருந்து ஃபிர்மன் (Firman) என்ற வணிக ஒப்பந்தம் பெற்ற பிறகு அதற்கு அந்த ஊர் முழுவதிலும் செயற்பட உரிமை உண்டு என்கிறார் கப்ரியேல் துய்வால்[12]. மேலும் காவிரிப்பூம்பட்டினம், பொதுகே ஆகிய இரு துறைமுகங்களில் வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து தங்கித் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் இயற்கைத் துறைமுகங்களாகச் செயல்பட்டமையால் 'எம்போரியம்' என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பொதுகே (அரிக்கமேடு)- கபேரிஸ் (காவிரிப்பூம்பட்டினம்)**

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தைச் சங்க இலக்கியங்கள் சிறப்பாகவும் உயர்வாகவும் போற்றிப் புகழ்ந்துள்ளன. 'பொதுகே' என்னும் துறைமுகப் பட்டினத்தைப் பற்றிச் சங்க இலக்கியங்களில்

10 Mother India March-1970 184 11.வி.எஸ்.வி.இராகவன் 1965:84

12.ச.மதனகல்யாணி-மொ.பெ.ஆ.,1998:24



எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை. புகார் நகரம் சங்ককாலச் சோழரின் தலைநகரமாகச் செயல்பட்டமையால், கடியலூர் உருத்திரங் கண்ணனார் (பட்டினப்பாலை) உள்ளிட்ட புலவர்களால் போற்றப்பட்டுள்ளது. ஆனால் 'பொதுகே' நகரம் ஒரு முழுமையான வணிகத்தலமாகவும் துறைமுகமாகவும் மட்டுமே செயல்பட்டு வந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டு விட்டதால் அங்கு நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் சங்க இலக்கியக் காட்சிகளை மெய்மைப்படுத்தும் அளவிற்குப் போதுமான தொல்பொருட் சின்னங்கள் கிடைக்கவில்லை. ஆனால் 'பொதுகே' என்றழைக்கப்பட்ட அரிக்கமேட்டுப் பகுதியில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட அத்துறைமுகப் பட்டினத்தின் சிறப்புக்களை உலகுக்குப் பறை சாற்றிடும் வண்ணம் பற்பல வியக்கத்தக்க தொல்பொருட் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய சான்றாதாரங்களின் அடிப்படையில் நோக்கும்போது காவிரிப்பூம்பட்டினத்திற்கு இணையானதொரு துறைமுகப் பட்டினமாகவே 'பொதுகே' அக்காலத்தில் திகழ்ந்திருக்க வேண்டும். அரிக்கமேட்டிற்கு அருகில் உள்ள 'முருங்கைப் பாக்கம்' என்னும் ஊர்ப்பெயர் 'மருங்கைப் பாக்கம்' என்பதன் திரிபாக இருக்க வேண்டும். காவிரிப்பூம்பட்டினத்தின் அருகில் அமைந்திருந்த மருவூர்ப் பாக்கத்தைப் பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். அதேபோன்று 'பொதுகே' நகருக்கு அருகில் அமைந்திருந்த மருங்கைப் பாக்கம் (முருங்கைப் பாக்கம்) ஊரும் அங்காடிகள் நிறைந்ததாகச் சிறப்புடன் திகழ்ந்திருக்க வேண்டும்.

**பொதுக்கம்- பொதுகே**

கிரேக்க நாட்டுக் கடற்பயணியான தாலமி தென்னிந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரையோரத் துறைமுகப் பட்டினங்களை அவர்தம் உச்சரிப்பில் குறிப்பிடும் போது, திண்டிஸ் (தொண்டி), முசிறிஸ் (முசிறி), கொமாரி(குமரி), கொல்சாய் (கொற்கை) நகாமா (நாகப்பட்டினம்), காமரா (காவிரிப்பூம்பட்டினம்), பொதுகா (புதுச்சேரி), சோபட்மா (மரக்கானம்) என்றும் வழங்கியுள்ளார்[13]. இக்குறிப்பில் 'பொதுகா' வின் மூலவடிவம் எதுவென்று ஆராய்வது இன்றியமையாதது.

13.சு.தில்லைவனம்1988:19

Tamil Heritage Foundation International (THFi)

இக்காலத்தில் புதுச்சேரி அல்லது புதுவை என்று அழைக்கப்பட்டு வரும் பெயரின் மூலவடிவமே பண்டைக் காலத்தில் ரோமானியரால் பொதுகா அல்லது பொதுகே என்று உச்சரிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறுவர்.[14] புதுச்சேரி என்னும் பெயரின் மூலவடிவமே பொதுகே என்று பெரிப்ளுசு காலத்தில் மக்களால் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்பர் விமலா பெக்லி.[15] (The name 'Poduke' perhaps deriving from tamil 'Pudicheri' meaning new hamlet- The origin of the name of Pondicherry must have been in use at the time of periplus)[15]. ஆனால் 'பொதுகே' எவ்வாறு புதுச்சேரியானது என்பதற்கு யாதொரு விளக்கமும் அவர்கள் தரவில்லை.

இக்காலப் புதுச்சேரி கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு புதுவை அல்லது புதுச்சேரி என்று அழைக்கப்பட்டதற்கான ஆதாரம் வரலாற்றில் எங்கும் காணப்படவில்லை. பிரெஞ்சியரின் வருகைக்குச் சிறிதுகாலம் முன்புதான் இப்பகுதியில் மக்கள் குடியேறி வாழத் தொடங்கினர். மக்கள் புதிதாகக் குடியேறியதால் புதுச்சேரி என்றும் புதுச்சேரிமேடு என்றும் அழைக்கப்பட்டது. கி.பி. 1680 ஆம் ஆண்டில் ஹாப்சன்-ஜாப்சன் (Hobson - Jobson) என்பவரே முதன்முதலில் புதுச்சேரி என்னும் பெயரைப் புதிச்சேரி (Puddi - Cherry) என்னும் ஆங்கில உச்சரிப்போடு குறிப்பிட்டுள்ளார்[16]. கி.பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சியரின் ஆக்கிரமிப்புக்கு முன்பு புதுச்சேரிப் பகுதி எவ்விதச் சிறப்புமின்றிக் கடற்கரையோரச் சிற்றூராகவே இருந்து வந்திருக்கின்றது.

ஐராவதம் மகாதேவன் 'பொதுகே' என்பதைப் 'பொதிகை' என்னும் சொல்லோடு தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்[17]. மேலும் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 1012-1044) ஒழுகரையில் இருந்த சிவன் கோயில் 'அகத்தீசுவரம்' என்று அழைக்கப்பட்டதாகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது[18]. ஆதலால் முற்காலத்தில் அகத்தியர் இங்கு வந்து தங்கியிருந்ததாலேயே புதுச்சேரிக்கு 'அகத்தீசுவரம்' என்னும் பெயர் வழங்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. பழங்காலத்தில் மலைப்பாங்கான நிலமாக இருந்த ஒழுகரையும் கோரிமேட்டுப் பகுதிகளும் பிரெஞ்சியராட்சிக் காலத்தில் 'செம்மண் குன்று' என்றே அழைக்கப்பட்டன. எனவே அகத்தியரோடு கொண்ட

14.மு.த.வேலாயுதனார்,1972:ப.6 15. Vimala Begley 1998 : 2 16. Ancient India 1946 124

17.சு.தில்லைவனம்1988:16 18.ச.குப்புசாமி 1974:160



தொடர்பு காரணமாகவே புதுவைப்பகுதி அகத்தீசுவரம் என்றும் 'பொதிகை' என்றும் பெயர் பெற்றிருக்கலாம். பொதிகை என்னும் பெயரே கிரேக்கர்களால் 'பொதுகே' என்று உச்சரிக்கப்பட்டிருக்கலாம் என்று ஐராவதம் மகாதேவன் கூறுவது ஆராய்தற்குரியது.

ஏனெனில் பண்டைத்தமிழ் இலக்கியத்தில் (தென்) பொதிகை என்னும் சொல் தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள மலைப்பகுதியைக் குறிக்கும் சொல்லாட்சியாகவே வழங்கப்பட்டுள்ளது. தென்தமிழகத்தில் அம்பாசமுத்திரம் அருகில் உள்ள காரையாறு மலைப்பகுதியே முற்காலத்தில் பொதிகை மலையாக குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. எனவே பொதிகை என்பதைப் பொதுகே என்பதோடு தொட்புப்படுத்திக் காட்டுவது பொருந்தாது. ரோமானிய உச்சரிப்பான பொதுகே அல்லது பொதுகாவின் மூலவடிவம் எதுவென்று எண்ணிப் பார்க்கையில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'பொதுக்கம்' என்னும் சொல்லை இதனோடு ஒப்புமையுடையதாகத் தொடர்புபடுத்திக் காட்டலாம்.

*"புள்ளிக் கள்வன் புனல்சேர் பொதுக்கம்"*[19]

என்னும் பாடல் தொடரில் பொதுக்கம் என்பது நெய்தல் நிலத்தைச் சார்ந்த கடற்கரைப் பகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் தொடரில் குறிப்பிடப்படும் பொதுக்கம் என்னும் சொல்லுக்குத் தங்குமிடம் என்பது பொருளாகும். ரோமானியரும் பொதுகேயைக் கப்பல்கள் வந்து தங்கிச் செல்லும் துறைமுகமாகத்தான் குறிப்பிட்டுள்ளனர். 'சீனாவுக்கும், ரோமாபுரிக்கும் இடையே நடந்துவந்த பட்டுவணிகத்திற்காக வந்து செல்லும் கலங்களுக்குக் கிழக்கிந்தியத் துறைமுகங்கள் தங்கு தளமாக இருந்தன' என்ற கூற்றும்[20] இக்கருத்தை உறுதி செய்கின்றது. காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையில் பல சதுக்கங்கள் நிறுவப் பட்டிருந்தமையைச் சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியலாம். அதே போன்று பொதுக்கம் என்னும் சொல்லாட்சியும் கடற்கரையோரமாக அமைந்த இடப்பெயராகவே பழங்காலத்தில் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெயராக்க அடிப்படையிலும் பொதுக்கம், பொதுகே என்னும் இரண்டு சொற்களையும் தொடர்புபடுத்திக் காட்டலாம். பொதுக்கம் என்பதன் வேர்ச்சொல் 'பொதுக்கு' என்பதாகும். பொதுக்கு என்னும் வேர்ச்சொல்லுடன் 'அம்' விகுதி சேரும்போது பொதுக்கம் என்றாகும். உலகு - உலகம் என்று திரிந்து வழங்குவதைப் போன்று பொதுக்கு

19.கலித்:88:10 20.ச.மதனகல்யாணி 1998 : 37

Tamil Heritage Foundation International (THFi)

பொதுக்கம் என்று வழங்கப்பட்டிருக்கலாம். பொதுக்கம் என்பது ரோமானியர் உச்சரிப்பில் பொதுகே/பொதுகா என்று சொல்லப் பட்டிருக்கலாம். எனவே பொதுக்கே என்பதன் மூலவடிவமாகச் சங்க இலக்கியச் சொல்லான பொதுக்கம் என்னும் பெயரை ஏற்றுக்கொள்வதே பொருத்தமாகும்.

**அரிக்கமேடு பெயர்க்காரணம்**

அரிக்கமேடு பெயர்க்காரணம் பற்றிப் பல ஆய்வாளர்கள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். 'அரிக்கமேடு என்ற பெயர் ஏற்பட்டமை குறித்து விளக்கும்போது அருக்குமேடு (Mound of ruins) அல்லது அருகுமேடு (Mound on River bank) என்பதன் திரிபாகலாம்' என்று கே.ஆர். சீனிவாசன் குறிப்பிட்டுள்ளார்[21]. ஆற்றங்கரை அருகே அமைந்துள்ள மேடு என்னும் பொருளில் அரிக்கமேடு (அருகுமேடு) வழங்கப் பட்டிருக்கலாம் என்று அவர் கூறியுள்ளார். 'செஞ்சி ஆற்றின் கிளை நதியான அரியாங்குப்பத்தாறு என்னும் காயல் பெருக்கத்தால் (வெள்ளநீர்) அறுத்தோடியும் அணையப்பட்டும் உள்ள மேடு அருகுமேடு என்ற ஆயிற்று.. ஆற்றை அடுத்திருப்பது பற்றி அருகுமேடு எனப் பெயர்பெற்றது போலும்'[22]. கி.பி. 100-200 ஆம் ஆண்டிற்கு உட்பட்ட காலகட்டத்தில் இப்பகுதியில் நடைபெற்று வந்த புத்தர் வழிபாடு காரணமாக (அரிங்கன்-புத்தன்) இப்பகுதி அரிங்கன்மேடு என்று அழைக்கப்பட்டுப் பின்னர் காலப்போக்கில் அரிக்கமேடு என்றாயிற்று என்று கூறுவாரும் உளர்[23].

அரிக்கமேடு பெயர்க்காரணம் குறித்த மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் வெறும் சொல்லாய்வின் அடிப்படையில் நிகழ்த்தப் பட்டவையாகும். ஆனால் வரலாற்றுப் பின்புலத்தின் அடிப்படையில் நோக்கும்போது அரிக்கமேடு என்னும் பெயர் சமண சமயக் கடவுளான அருகனோடு தொடர்புடையது என்பது புலனாகும். அசோகரின் பாட்டனாராகிய சந்திரகுப்தர் காலத்திலேயே தென்னிந்தியாவில் சமணசமயம் பரவியிருந்தது. சமணசமய வழிபாட்டை நிலைநிறுத்தும் வகையில் சமணத் தீர்த்தங்கரரின் சிலையைத் தமிழகத்தில் பல இடங்களில் சமணர்கள் நிறுவினர். இவ்வகையில் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட அருகன் வழிபாட்டுத் தலங்கள் பலவற்றுள்

21.வாழ்வியல் கலைக்களஞ்சியம் (தொ-1) 1986 : ப .732 22. Mother India - March 1970 184

23.கலைக்களஞ்சியம் தொ-1 1954 : 188



அருகன்மேடு (அரிக்கமேடு) தலைசிறந்து விளங்கிற்று. அரிக்கமேட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சமணத் தீர்த்தங்கரரின் சிலை இக்கூற்றை உறுதிசெய்ய வல்லது[24].

சமணசமய ஆக்கிரமிப்பின் அடிப்படையில் களப்பிரர்களோடு தமிழகத்தில் நுழைந்த அருகன் வழிபாடு பொதுகே பகுதியில் நிலைபெற்றதால் பண்டைய பொதுகே என்னும் பெயர் மறைந்து இப்பகுதி அருகன்மேடு என்று அழைக்கப்படலாயிற்று. அருகன்மேடு என்னும் பெயரே காலப்போக்கில் மருவி அரிக்கமேடு (அருகன்மேடு > அருக்கன்மேடு > அரிக்கன்மேடு > அரிக்கமேடு) என்று வழங்கி வரலாயிற்று. கருக்கல் > கரிக்கல், அருவாயில்கால் > அரிவாக்கால், அறுகம்புல் > அறிம்பில்லு ஆகிய புதுவை வழக்காறுகள் இதற்கான சான்றுகளாக அமைந்து மொழியியல் பின்புலத்திலும் இக்கூற்றுக்கு வலிமை சேர்க்கின்றன.

**வீரை- வீராம்பட்டினம்**

வீராம்பட்டினத்தைப் பற்றி அவ்வூரில் வாழும் மக்களிடம் ஒரு செவிவழிச் செய்தி வழங்கி வருகின்றது. 'ஓர் அரசனின் கோட்டை அல்லது செல்வந்தனின் மாளிகை அங்கே இருந்ததாகவும் அவனது பெயர் வீரராகவன் என்றும் அதனாலேயே அவ்வூர் வீரப்பட்டினம் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது'[25]. ஆனால் இச்செய்திக்கு அடிப்படையாக எவ்விதமான வரலாற்றுச் சான்றுகளும் இல்லை. சங்க இலக்கியத்தில் வீரைவெளியனார்[26], வீரைவெளியன் தித்தனார்[27] ஆகிய இரண்டு புலவர்கட்கும் அடைமொழியாக உள்ள வீரையை வீராம்பட்டினம் என்னும் ஊர்ப்பெயரோடு தொடர்புபடுத்திக் காட்டலாம். இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடும் சங்க இலக்கியம்,

*அடுபோர் வேளிர் வீரை முன்துறை*[28]

என்று கூறியுள்ளது. இத்தொடரில் உள்ள முன்துறை வீராம்பட்டினத்தை ஒட்டி அரியாங்குப்பத்தாறு கடலில் கலக்குமிடத்தில் இருந்த படகுத்துறையாக இருக்கலாம். இந்த நீர்வழிப் படகுப் போக்குவரத்தைப் பயன்படுத்திச் சமணபௌத்தர்கள் சமயம் பரப்புவதற்காகவும் ரோமானியர் வணிகம் புரிவதற்காகவும் சங்ககால அரிக்கமேட்டுப் பகுதியில் குடியிருப்பை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

24.D.Janaki 2000:3 25.சோ.முருகேசன் 1997:32 26.புறம்:320 27.புறம்:108

28.அகம்-206:13

Tamil Heritage Foundation International (THFi)

வீராம்பட்டினத்தின் பழைய பெயராக 'வீரப்பட்டினம்' என்பதையே பி.எல். சாமி போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[29] அக்காலத்தில் வெளிநாடு சென்று வணிகம் புரிந்து வந்த வணிகக் குழுக்களின் கடற்கரை நகரங்களாக 'வீரப்பட்டினங்கள்' விளங்கின. வணிகக் குழுக்கள் தாங்கள் தங்கியிருந்த பகுதிகளில் சில ஊர்களை விலைகொடுத்து வாங்கி அவ்வூர்களுக்கு 'எறி வீரப்பட்டினம்' என்று பெயர் சூட்டித் தனியரசு நடத்துவது வழக்கமாக இருந்துள்ளது. பண்டைக் காலத்தில் தோன்றிய இத்தகைய வீரப்பட்டினங்களுள் ஒன்றுதான் இன்றைய வீராம்பட்டினம் என்று பி.எல். சாமி கருதுகின்றார்.

ஆனால் கல்வெட்டு அறிஞர் சு.குப்புசாமி, பி.எல். சாமியின் கருத்திற்குச் சற்றே மாறுபடுகின்றார். 'யவனர்கள் வணிகத்தின் பொருட்டுத் தமது படைகளின் உதவியுடன் தங்கி வாழ்ந்த வீரப்பட்டினமே வீராம்பட்டினமாகும்' என்று சு. குப்புசாமி குறிப்பிட்டுள்ளார்[30].நாகப்பட்டினம் > நாகை ஆனது போன்று வீரப்பட்டினம் > வீரை எனச் சங்ககாலத்தில் வழங்கி வந்திருக்க வேண்டும். சங்ககாலத்தில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரையிலும் 'வீரை' என்னும் பெயர் வழக்கில் இருந்து வந்துள்ளதை வரலாற்றின் மூலம் அறியலாம். முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட திருப்பாதிரிப் புலியூர் பாடலீசுவரர் கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுக்கள் வீரைத் தலைவன் பரசமயக் கோளரி மாமுனி என்னும் புலவர் பற்றியும் அவரியற்றிய நூல்கள் பற்றியும் கூறுகின்றன.[31] 1901-இல் புலவர் பொன்னுசாமிச் செட்டியார் இயற்றிய செங்கழு நீரம்மன் பதிகமும் இவ்வூரை 'வீரை' என்றே அழைக்கிறது.[32]

**அரிக்கமேடு+வீராம்பட்டினம்=பொதுகே**

சங்ககாலத்தில் ரோமனியரால் குறிப்பிடப்பட்ட 'பொதுகே' என்னும் பகுதி சிறிய இடமாக இருந்திருக்க இயலாது. பல்வேறு தொழிலகங்களையும், பண்டசாலைகளையும், குடியிருப்புக்களையும் உள்ளடக்கிய பெரிய நிலப்பகுதியாகவே பொதுகே திகழ்ந்திருக்க வேண்டும். அரியாங்குப்பத்தாற்றுக்கும், சுண்ணாம்பாற்றுக்கும் இடையில் உள்ள அருகன்மேடு, காக்காயந்தோப்பு, வீராம்பட்டினம்,

29. Revue Historique De Pondicherry Vol-11, 1973: 84

30. Revue Historique de Pondicherry Vol-10, 1972: 41- 42

31.மே.நூல்:42 32.தினமணிக்கதிர் 3-5-2001:5



சின்ன வீராம்பட்டினம் ஆகிய ஊர்கள் அடங்கிய பகுதியே 'பொதுகே' என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்றைய அரிக்கமேடும் அதைச் சார்ந்த பகுதிகளும்தான் பண்டைய காலத்தில் 'பொதுகே' என்றழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பி. இசட். பட்டாபிராமன் கூறும் கருத்து ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.[33] கி.மு.200 - கி.பி.200 வரையிலான காலப்பகுதியில் பொதுகே நகரம் செல்வச் செழுமையோடும் வணிக வளமையோடும் திகழ்ந்திருந்தது. இங்கு வாழ்ந்திருந்த மக்கள் உயர்ந்த பண்பாடும் கலையுணர்வும் நாகரிகச் சிறப்பும் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர்.

**அரிக்கமேட்டின் தொன்மை**

புதுச்சேரியின் பழைய பெயராக வேதபுரம் அல்லது வேதபுரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரியக் கலாச்சாரத்தை வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்குக் கொண்டுவந்து பரப்பிய வேத விற்பன்னர் அகத்திய மாமுனிவர் காசியிலிருந்து இராமேசுவரம் செல்லும் வழியில் வேதபுரியில் (புதுச்சேரி) தங்கி அங்கு எழுந்தருளியிருந்த சுயம்புலிங்கத்தை வழிபட்டார். இதன் காரணமாகவே புதுச்சேரியில் எழுந்தருளியிருந்த சிவலிங்கத்திற்கு அகத்தீசுவரர் என்னும் பெயர் ஏற்பட்டது. இப்போதைய ஜென்மராக்கினி மாதாக் கோயிலின் அருகிலுள்ள தோட்டத்தில் ஃபொஷே பாதிரியார் கண்டெடுத்த கல்வெட்டில் இக்கோயில் சிவலிங்கத்தின் பெயர் 'அகத்தீசுவரர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[34]. இதன் அடிப்படையிலேயே பண்டைய புதுச்சேரி 'அகத்தீசுவரம்' என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்த பல தொல்பொருட்சின்னங்கள் புதுவைப் பகுதிகளில் கிடைத்துள்ளன. சுற்றுக்கேணி, முத்தரையர் பாளையம், பாகூர், கோரிமேடு, ஊசுடு, ஆகிய ஊர்களில் இறந்தவரைப் புதைக்கும் ஈமத்தாழிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஈமத்தாழி தமிழரின் தொல் வழக்கம் சார்ந்தது.

*கொடிநுடங் கியானை நெடுமா வளவன்*
*தேவர் உலகம் எய்தினன் ஆதலின்*
*அன்னோர் கவிக்கும் கண்ணகன் தாழி*
*வனைதல் வேட்டனை யாயின்* [35]

33.P. Z.Pattabiraman, 1946: 21 34.சோ.முருகேசன்,2000:40 35.புறம் 228:10-13

Tamil Heritage Foundation International (THFi)

என்று சங்க இலக்கியத்திலும் ஈமத்தாழி பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. அரிக்கமேட்டிற்கு வடக்கே ஏழு கி.மீ. தொலைவில் உள்ள பாக்கமுடையான் பட்டில் வரலாற்றுக்கு முந்தையகால (கி.மு. 2-ஆம் நூற்றாண்டு) ஈமத்தாழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதில் கருங்கல்லில் செதுக்கிய கூரிய கோடரி ஒன்று காணப்பட்டது[36]. மேலும் முத்தரையர் பாளையத்தில் இதே காலத்தைச் சேர்ந்த ஈமத்தாழியும், மதுச்சாடியும், இரும்பு மற்றும் வெண்கலத்தாலான ஆயுதங்களும் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டின் வடபகுதி தென்பகுதியை விடச் சற்றுத் தாழ்வானது. இங்கு அகழ்வாய்வு செய்த மார்ட்டிமர் வீலர் வடபகுதியே முதன்முதலில் மக்கள் குடியேற்றம் நிகழ்ந்த பகுதி என்று கூறுகின்றார். இதற்கு மாறாகத் தென் பகுதியில் அகழ்வாய்வு மேற்கொண்ட ஜே.எம். கசால் தென்பகுதியே பழமையான குடியிருப்புக்கள் கொண்ட பகுதியாகும் என்று கூறுகின்றார்[37].

ஏனெனில் இப்பகுதியில்தான் பழைய இரும்புக் காலத்தைச் சேர்ந்த தொல்பொருட் சின்னங்கள், பெருங்கற்புதைவுக் காலப் பானை ஓடுகள் ஆகியன கிடைத்துள்ளன.

பழைய இரும்புக் காலத்தைச் சேர்ந்த கற்கோடரியும் தென்பகுதியில் கிடைத்துள்ளது. இதே போன்ற கற்கோடரி மங்கலம், பெரம்பை, கோரிமேடு போன்ற புதுவைப் பகுதிகளிலும் கிடைத்துள்ளது. சோரப்பட்டு பம்பை வாய்க்கால் பகுதியில் கற்கோடரியின் உடைந்த பாகங்கள் (பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்தவை) கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### அரிக்கமேடும் சுற்றுக்கேணியும்

புதுச்சேரிக்கு மேற்கே 30கி.மீ. தொலைவில் திருவக்கரை அருகில் உள்ள ஊரே சுற்றுக்கேணி ஆகும். இவ்வூர் இன்று சுத்துக்கேணி என்று அழைக்கப்படுகின்றது. கசால் அவர்களால் 1950-ஆம் ஆண்டில் சுற்றுக்கேணி பகுதியில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்த ஈமத்தாழியும் தொல்பொருட் சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஈமத்தாழியில் வட்டப் புனைவுகளுடன் கூடிய வெண்கல அடிப்பகுதி கொண்ட பாத்திரமும் திருகு வடிவிலான அழகிய குமிழும் தங்க முலாம் பூசப்பட்ட

36.சோ.முருகேசன் 2000:39 37. Vimala Begley 1998 : 12-13



நகைகளும் (நெக்லஸ்) இருந்தன. இவற்றின் காலம் கி.மு. 200[38]. இதே காலகட்டத்தைச் சேர்ந்த பெருங்கற்புதைவுகள் அரிக்கமேட்டிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முத்தரையர்ப் பாளையம் என்னும் ஊரிலும் கசால் அவர்களால் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முத்தரையர் பாளையத்தில் கண்டெடுக்கப்பட்ட ஈமப் பேழையில் போர்க் கருவிகளுடன் இரும்புப் பொருட்களும் சுடுமண் மணியும் சுடுமண் பொருட்களும் கிடைத்தன. சுற்றுக்கேணி அகழ்வாய்வில் பன்னிரெண்டு கால்களையுடைய தனித்தன்மை வாய்ந்த ஈமப் பேழை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. தொட்டி போன்ற நீண்ட ஈமப் பேழையினுள்ளே பெரிய மட்பானைகள் போன்ற ஈமத்தாழிகள் காணப்படுகின்றன[39]. இத்தாழிகளில் சுடுமண் பொருட்களும் வெண்கலப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

அரிக்கமேடு - சுற்றுக்கேணி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் இடைப்பட்ட தூரம் 30 கி.மீ. ஆகும். இரண்டு ஊர்களுமே செஞ்சியாற்றங்கரையில் அமைந்துள்ளன. சுற்றுக்கேணியில் கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட நெக்லஸ் போன்று அரிக்கமேட்டுப் பகுதியில் சற்றே புனைவுகள் செய்யப்பட்டதும் தங்க முலாம் பூசப்பட்டதுமான கழுத்தணியின் சிதைந்த பகுதிகள் விமலா பெக்லியின் அகழ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.மு. 50 - கி.பி. 25-க்கு உட்பட்ட பகுதியாகும்.[40] இரண்டு ஊர்களிலும் பழைய இரும்புக்காலப் பொருட்கள் அடங்கிய பெருங்கற் புதைவுகளும், ஈமத்தாழிகளும் கண்டெடுக்கப்பட்டமையால் இரண்டு ஊர்களுக்கும் இடையே வணிகப் பரிமாற்றம் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. அவ்வாறு பரிமாற்றம் நிகழ்ந்திருப்பது உண்மையெனில் சுற்றுக்கேணியில் கசாலால் கண்டறியப்பட்ட இறக்குமதி வகையைச் சேர்ந்த வெண்கலப் பாத்திரம் அரிக்கமேடு துறைமுகம் வழியாகத்தான் வந்திருக்க வேண்டும்.

### அரிக்கமேடு- பிரமன் கோயில்

சமண, பௌத்த சமயங்கள் கி.மு.3ஆம் நூ.ஆ. அல்லது அதற்குப் பின்னர்தான் தமிழகத்தில் பரவியிருக்க வேண்டும் என்பர். சங்ககாலத் தமிழகத்தில் சமண பௌத்த சமயங்கள் பரவத் தொடங்கி விட்டன என்பதற்குச் சங்கநூல்களிலேயே சான்றுகள் உள்ளன. மதுரை, காஞ்சி,

38. Vimala Begley, 1983: 464 39.சோ.முருகேசன்2000:145 40.Vimala Begley 1996 : 11-12

Tamil Heritage Foundation International (THFi)

காவிரிப் பூம்பட்டினம் முதலான நகரங்களில் சமண பௌத்தத் துறவிகள் தங்கியிருந்து தத்தம் சமய உண்மைகளைப் பரப்புவதற்குப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன. *பகட்டெருத்தின் பலசாலைத் தவப்பள்ளி* என்று பட்டினப்பாலை எருதுகள் கட்டப்பட்டிருந்த கொட்டில்களுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த சமண பௌத்தப் பள்ளிகளைப் பற்றிக் கூறுகின்றது. இதேபோன்று பொதுகே பகுதியிலும் சமண பௌத்தத் துறவிகளுக்குத் தவப்பள்ளிகள் அமைக்கப் பட்டிருந்த இடங்களே முறையே அருகன்மேடு என்றும் சாக்கியன்தோப்பு என்றும் அழைக்கப்பட்டிருந்தன.

அரியாங்குப்பத்திலிருந்து அரிக்கமேடு செல்லும் வழியில் காக்காயந் தோப்பு என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. காக்காயந்தோப்பு என்னும் ஊர்ப்பெயர்க் காரணம் குறித்து ஆராயும்போது சமய,வரலாறு தொடர்பான சில கருத்துக்கள் புலப்படுகின்றன. பழங்காலத்தில் இப்பகுதியில் நடைபெற்று வந்த புத்தர் வழிபாடு(சாக்கியன்- புத்தர்) காரணமாகவே இவ்வூருக்குச் சாக்கியன் தோப்பு என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று.[41] பிற்காலத்தில் பிரெஞ்சு மொழியில் காக்கியன் தோப்பு (Cakiyane Tope') என்ற பதியப் பெற்று பின்னர் பேச்சு வழக்கில் காக்காயந் தோப்பு என்று திரிபடைந்தது. காங்கேயன் தோப்பு என்பதே காக்காயந் தோப்பாகத் திரிபடைந்தது என்று கூறுவாரும் உளர். ஆனால் அக்கூற்று பொருந்தாது. அருகன் வழிபாடு காரணமாக அருகன்மேடு (அரிக்கமேடு) என்னும் பெயரும் சாக்கியன் வழிபாடு காரணமாகச் சாக்கியன் தோப்பு (காக்காயந்தோப்பு) என்னும் பெயரும் ஏற்பட்டது என்பதே ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட சமணத் தீர்த்தங்கரர் சிலையைக் காக்காயந்தோப்பில் நிறுவி அதன்மீது கீற்றுக் கொட்டகை ஒன்றை வேய்ந்து இந்து சமயக் கலப்புடன் பிரமன்கோயில் என்று அப்பகுதி மக்கள் வழிபட்டு வருகின்றனர். (பிரமன் என்பதற்கு சமண சமயக் கடவுளான அருகன் என்னும் பொருளும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது). இக்கோயிலைப் பற்றி அப்பகுதி மக்களிடையே செவிவழிச் செய்தியாக, கடன் கொடுத்த சாமிகோயில் என்னும் கதை ஒன்று வழங்கப்பட்டு வருகின்றது. இங்குள்ள சமணத் தீர்த்தங்கரர் சிலைக்கு முன்பாக அங்குக் கிடைத்த வேறு இரண்டு சிலைகளையும் (சாவடி மணியம் அழகப்ப முதலியாரும் அவருடைய மனைவியும்) நிறுவியுள்ளனர். கடன் கொடுத்தவர் சமணத் தீர்த்தங்கரர் என்றும்

41.புதுவைச் செய்திகள்-பிப்-மார்ச் 1969:23



கடன் பெற்றவர்கள் எதிரே சிலைகளாக உள்ள சாவடி மணியம் அழகப்ப முதலியாரும் அவருடைய மனைவியும் என்று கூறிவருகின்றனர்.[42] கடன் கொடுத்தவர் வீட்டிலிருந்து கொண்டு அவர்கள் இருவரையும் பணம் கேட்பதாகவும் அதற்கு எதிரில் இருக்கும் இருவரும் பணம் செலுத்த தவணை கேட்பதாகவும் அப்பகுதி மக்கள் கற்பனைச் சுவை கலந்து கதையாகக் கூறி மகிழ்கின்றனர். அருகன்மேடு என்று அப்பகுதிக்குப் பெயர் வழங்கப்பட்டு வந்தமைக்குரிய எச்சமாக இன்று இப்பகுதியில் இக்கோயில் ஒன்றுதான் நிலைத்த சான்றாகத் திகழ்ந்து வருகின்றது.

அரியாங்குப்பத்து ஆற்றில் ஏற்பட்ட கிளைகளும் அதனால் உண்டாகிய தேங்காய்த்திட்டுப் பகுதியும் கடந்த நானூறு ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களாகும். இயற்கைப் பேரழிவால் பொதுகே சிதைக்கப்பட்டபின் அப்பகுதியில் தோன்றிய சமணசமய வழிபாடு காரணமாக அருகன்மேடு என்னும் பெயர் ஏற்பட்டது. காலப்போக்கில் அருகன்மேடு > அரிக்கமேடு என்று பேச்சுவழக்கில் மாற்றம் அடைந்திருக்க வேண்டும்.

வீராம்பட்டினம் என்னும் ஊர்ப்பெயர் கல்வெட்டுத் தொடர்பான 'வீரப்பட்டினம்' என்பதனோடும் சங்க இலக்கிய நெய்தல் நில இடப்பெயரான 'வீரை' என்பதனோடும் தொடர்புகொண்ட பகுதியாகும். அரிக்கமேடு, காக்காயந்தோப்பு, வீராம்பட்டினம், சின்ன வீராம்பட்டினம், ஆகிய ஊர்கள் அடங்கிய பெரிய நிலப்பகுதியே பண்டைக் காலத்தில் 'பொதுக்கே' என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ரோமானியரால் குறிப்பிடப்படும் 'பொதுகே' என்பதன் மூல வடிவம் சங்க இலக்கியச் சொல்லான 'பொதுக்கம்' என்னும் இடப்பெயராக இருக்கவேண்டும். பொதுகே, கபேரிசு ஆகிய துறைமுகங்களின் தனித்தன்மைகள் காரணமாகவே அவற்றிற்கு 'எம்போரியம்' என்னும் அடைமொழியை அயல்நாட்டினர் பயன்படுத்தியுள்ளனர்.

42.புதுவைச்செய்திகள்-ஏப்பிரல் 1969:10

Tamil Heritage Foundation International (THFi)

# 3. அரிக்கமேடு

# அகழ்வாய்வு வரலாறு

கி.பி.1779-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை அரிக்கமேடு ஒரு பழைமையான வரலாற்றுப் பெட்டகம் என்னும் உண்மையை யாரும் அறிந்திருக்கவில்லை. கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரிக்கமேட்டுப் பகுதியில் செங்கல் சூளைத்தொழில் சிறுபான்மையாகவும் விவசாயம் பெரும்பான்மையாகவும் நடைபெற்று வந்தன. ஒரு முறை செங்கல் சூளைக்காகத் தோண்டப்பட்ட குழிகளில் சீனக் களிமண் சாடிகளின் உடைந்த ஓடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னரே அரிக்கமேடு, அகழ்வாய்வுக்கு உரிய பகுதி என்பது புலனாயிற்று.

**தொடக்க கால ஆய்வுகள்**

இப்பகுதியின் பழைமையான வரலாற்றுச் சிறப்பை முதன் முதலில் வெளி உலகுக்கு உணர்த்திய பெருமை லெழாந்தீய் (Le Gentil) என்னும் பிரெஞ்சுக்காரரையே சாரும். இவர் கி.பி.1769-ஆம் ஆண்டு வானவியல் ஆய்வுகளை மேற்கொள்ள பிரான்சிலிருந்து புதுச்சேரிக்கு வந்தவராவார். தம் ஆய்வுப் பணிகளுக்காக அரிக்கமேடு, வீராம்பட்டினம், காக்காயந்தோப்பு, தேங்காய்த்திட்டு ஆகிய ஊர்களுக்குச் சென்று பார்வையிட்டு வரலாற்றுச் செய்திகள் அனைத்தையும் தொகுத்தார். புதுவைப் பகுதியிலும் இந்தியாவின் பிற பகுதியிலும் தாம் சேகரித்த செய்திகளைத் தொகுத்து 'இந்தியக் கடற்செலவு' (Voyage dans les mers de l'Inde-1779) என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார். இந்நூலில் தம்முடைய அரிக்கமேட்டுப் பயணத்தின் போது அருகன்சிலை ஒன்றை அங்குக் கண்டதாகவும் பழைய புதுவை நகரம் இங்குதான் இருந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்[1].

லெழாந்தீய்க்குப் பின் ஒரு நூற்றாண்டுக்காலம் வரை அரிக்கமேட்டைப் பற்றி யாரும் அறிந்துகொள்ள அக்காலச் சூழல் இடம் தரவில்லை. கி.பி. 18-19 ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சியருக்கும் இடையே ஏற்பட்ட போர்

1.எ.்.ப்.சிரில் அந்தோணி, சு. தில்லைவனம்,1989:2



நெருக்கடி காரணமாக அரிக்கமேட்டின் வரலாற்றுச் சிறப்பை மக்கள் மறந்திருந்தனர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிஞ்ஞோ தெ பெயேன் (Pigneau de Be'haine) என்னும் பாதிரியார் அரிக்கமேட்டுப் பகுதியில் கிறித்தவ மடம் ஒன்றை அமைத்துக்கொண்டு சமூகப் பணிகளிலும் மதமாற்றப் பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அக்கிறித்தவ மடத்தின் கட்டடப் பகுதி சிதைவுக்குள்ளானது.

1937-ஆம் ஆண்டு அரிக்கமேட்டில் இடிந்த நிலையில் உள்ள கட்டடப்பகுதிகளைப் பார்வையிட வந்த புதுச்சேரி பிரெஞ்சுக் கல்லூரிப் பேராசிரியர் ழுவோ துய்ப்ராய் (Jouveau Dubreuil) அப்பகுதியின் மேற்பரப்பில் பழங்காலத்தைச் சேர்ந்த சில மட்பாண்ட ஓடுகள், மணிகள் ஆகியவற்றைச் சேகரித்தார் அப்பொருட்களின் தொன்மையை உணர்ந்த அவர் அரிக்கமேடு, அகழ்வாய்வு செய்வதற்கு உரிய இடம் என்று உறுதி செய்தார். தமக்குக் கிடைத்த அரிய தொல்பொருட்களின் அடிப்படையில் 'ரோமானியர் இருக்கை' (Ville Romaine) என்னும் தலைப்பில் 1938-ஆம் ஆண்டு லெ செமேர் (Le Semeur) என்னும் மாத இதழில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை வெளியிட்டு உலகின் பார்வையை அரிக்கமேட்டின் பக்கம் ஈர்த்தார்[2].

அரிக்கமேட்டில் தாம் சேகரித்த பொருட்களை ஆதாரமாகக்கொண்டு வியட்நாமில் உள்ள ஹனாய் கீழ்த்திசைக் கல்லூரிக்குத் துய்ப்ராய் கடிதம் ஒன்று எழுதினார். அக்கடிதத்தில் அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்வதற்கு தொல்பொருள் ஆய்வுத் துறை வல்லுநர் ஒருவரை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்[3]. 1939-ஆம் ஆண்டு 'கொலுபேவ்' என்பவர் அரிக்கமேட்டு ஆய்வுப்பணிக்காக வியட்நாமிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டார். அவர் அரிக்கமேட்டுப் பகுதியையும் அங்குக் கிடைத்த தொல்பொருட்களையும் ஆராய்ந்து அதன் வரலாற்றுத் தொன்மையைக் கண்டறிந்தார்.

அரிக்கமேட்டில் கிடைத்த பல தொல்பொருட்சின்னங்களுள் ரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் தலை பொறிக்கப்பட்ட கோமேதகப் பதக்கமும் (A Gem in Augustus Head) ஒருபுறம் யானை உருவமும் மற்றொரு புறம் சிங்க உருவமும் பொறிக்கப்பட்ட சதுர வடிவமுள்ள ரோமானியச் செப்பு நாணயமும் ஹனாய் அருங்காட்சியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

2.புதுவைச்செய்திகள்நவம்-1969:13 3.புதுவைச்செய்திகள் மே-1969 :19

Tamil Heritage Foundation International (THFi)

புதுவையின் வரலாற்றுத் தொன்மை மெல்லமெல்ல வெளியுலகுக்கு அறிமுகமாகும் சூழ்நிலையை உணர்ந்த அன்றைய (1911) புதுவை ஆளுநர் ஆல்பிரட் மார்த்தினோ (Alfred Martine) என்பவர் புதுவை மாநிலத்தின் வரலாறு தொகுக்கப்பட வேண்டும் என்னும் கருத்தில் 'பிரஞ்சிந்திய வரலாற்றுக் கழகம்' என்னும் பெயரில் ஒரு வரலாற்றுக் கழகத்தைத் தோற்றுவித்தார். இவ்வரலாற்றுக் கழகத்தில் மூவோ துய்ப்ராய் தனது இறுதிக்காலம் வரை உறுப்பினராக இருந்து புதுவையின் வரலாற்றை வெளிக்கொணர்வதில் பெரும்பங்கு ஆற்றியுள்ளார். 1911-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இக்கழகம் 1963-ஆம் ஆண்டு வரை பயனுள்ள பல வரலாற்றுப் பணிகளைச் செய்துள்ளது. இக்கழகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டு வந்த 'புதுவை வரலாற்றுச் செய்தி இதழ்' (Revue Historique de Pondiche'ry) புதுச்சேரியின் தொல்வரலாற்றை உலகறியச் செய்து வந்துள்ளது.

1940-ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகத் தலைவராய் இருந்த ஐயப்பன் தலைமையில் புதுவைப் பொதுப்பணித்துறைத் தலைவராயிருந்த ஆர்.சுய்ர்லோ (R. Suirleau) என்பவர் அரிக்கமேட்டில் அகழ்வாய்வுப் பணியை மேற்கொண்டார். இவ்வகழ்வாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு ஐயப்பன் இந்து நாளிதழில் கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டார். அவர் அக்கட்டுரையில் அரிக்கமேட்டைத் 'தென்னிந்தியாவின் தட்சசீலம்' என்று குறிப்பிட்டுள்ளார்[4].

பின்னர் 1941-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சுய்ர்லோ மீண்டும் அரிக்கமேட்டில் அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபடலானார். எல். ஃபொஷே (L. Faucheux) என்னும் பாதிரியாரும் இவ்வகழ்வாய்வுப் பணியில் அவருடன் இணைந்து செயல்பட்டார். அதன் பின் 1941-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியத் தொல்லியல் துறையின் தலைவராயிருந்த இராவ்பகதூர் தீட்சித், சென்னைப் புதைபொருள் ஆராய்ச்சித்துறைக் கண்காணிப்பாளர் ஆகிய இருவரும் அரிக்கமேட்டிற்கு வந்து அகழ்வாய்வுப் பணியை மேற்கொண்டனர்.

### முறையான அகழ்வாய்வு

1944-ஆம் ஆண்டு வரை அகழ்வாய்வுப் பணியில் ஈடுபட்டவர்கள் நிலையான ஓர் அகழ்வாய்வு நெறிமுறையைப் பின்பற்றாமல் தத்தமக்கு ஏற்றவாறு வெவ்வேறு விதமான வழிமுறைகளை வகுத்துக்கொண்டு செயல்பட்டு வந்தனர். அகழ்வாய்வுக் குழிகளில் (Trench) உள்ள மண்ணடுக்குகளை வரையறை செய்வதிலும் ஒரு ஆய்வாளருக்கும் மற்றொரு ஆய்வாளருக்கும் இடையே வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. இதனால் அகழ்வாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்களின் கால ஆராய்ச்சியில் முரண்பாடுகள் ஏற்பட்டன. 1945-ஆம் ஆண்டு ஆர். இ. மார்ட்டிமர் வீலர் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் ஈடுபட்டபோதுதான் இக்குறைகளை நீக்கும் வகையிலான அகழ்வாய்வுமுறை மேற்கொள்ளப்பட்டது.

4.புதுவைச்செய்திகள் மே-1969:19



### மார்ட்டிமர் வீலர் (R.E. Mortimer Wheeler)

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநராகத் திகழ்ந்த மார்ட்டிமர் வீலர் அரிக்கமேட்டின் வரலாற்றுத் தொன்மையை அறிந்து கொள்ள 1944-ஆம் ஆண்டு புதுவைக்கு வருகை புரிந்தார். அன்றைய புதுவை நகர நூலகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த (அரிக்கமேட்டு அகழ்வாய்வுகளில் கிடைத்த) தொல்பொருட் சின்னங்களைப் பார்வையிட்டார். அப்பொருட்களில் ரோமானிய நாட்டின் சாயல் படிந்திருப்பதை உணர்ந்த வீலர் மனநிறைவு அடையாதவராய் அரிக்கமேட்டில் முறையான, விரிவான அகழ்வாய்வை நடத்த விரும்பினார். அப்போதைய பிரெஞ்சிந்திய ஆளுநர் லூயி போன்வேன் (Louis Bonvin) அனுமதிபெற்று 1945-ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதங்கள் அரிக்கமேட்டில் தொடர்ச்சியாக அகழ்வாய்வுப் பணியில் ஈடுபட்டார்.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநர் மார்ட்டிமர் வீலர் தலைமையில் ஏ. கோஷ், கிருஷ்ணதேவா, எஸ்.சி. சந்திரா, எஸ்.ஆர். தாஸ், டி.பி. குகா, பி.பி. லால், பி.கே. தாப்பர் ஆகியோர் துணையுடன் அகழ்வாய்வுப் பணி தொடங்கப்பட்டது. சென்னைப் பல்கலைகழகத் தொல்லியல் துறையைச் சேர்ந்த 25 மாணவர்களும் இவ்வாய்வில் கலந்து கொண்டனர்.

இவ்வகழ்வாய்வில் நல்ல நிலையில் இருந்த பல தொல்பொருட்சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டன. இங்குக் கிடைத்த பொருட்கள் அனைத்திற்கும் 1, 2, 3,... என்று எண் கொடுத்து குறித்து வைத்துக் கொண்டனர். இம்முறை வைப்பு எந்தெந்த இடங்களில் எந்தெந்தப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன என்பதை எளிதில் அறிந்து கொள்வதற்குப் பயன்பட்டது.

Tamil Heritage Foundation International (THFi)

**வீலர் - அகழ்வாய்வுச் சிறப்புகள்**

மார்ட்டிமர் வீலருக்கு முந்தைய அகழ்வாய்வுகளில் மண்ணடுக்குகள் சரிவர வரையறை செய்யப்படாமை, அவற்றுடன் ஒப்பிட்டு அகழ்வாய்வுப் பொருட்களின் அளவுகள் குறிக்கப் பெறாமை, காலம் சரியாகக் கணிக்கப்படாமை முதலான பல தவறுகள் ஏற்பட்டு வந்தன. இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராக வீலர் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் புதிய பாணியில் அகழ்வாய்வு நெறிமுறைகளை மாற்றியமைத்தார். அரிக்கமேடு அகழ்வாய்வினையே இந்நெறிமுறைகளுக்கு முன் மாதிரியாக அவர் அமைத்துக் கொண்டார்.

சதுர வடிவமாகத் தோண்டப்பட்டு வந்த அகழ்வாய்வுக் குழிகள் அனைத்தும் செவ்வக வடிவில் குறிப்பிட்ட நீள அகலம் உடையனவாக மாற்றியமைக்கப்பட்டன. அகழ்வாய்க் குழிகளில் மண்ணடுக்குகளைத் தனியாகப் பகுக்கும் முறை, ஆய்வுக்குழியின் உள்ளேயே காணப்படும் தோண்டு குழிகளின் அமைப்புகளைக் கோடிட்டுக் காட்டுதல், ஆய்வில் கிடைக்கும் பொருட்களின் அளவை முறை, மண்ணடுக்குகள் வாரியாகத் தொல்பொருட் சின்னங்களைப் பிரித்து அவற்றின் காலத்தைக் கணிக்கும் முறை ஆகிய நெறிமுறைகள் அனைத்தையும் முதன் முதலில் அகழ்வாய்வுப்பணியில் புகுத்திய பெருமை மார்ட்டிமர் வீலரையே சாரும்[5].

மண்ணடுக்குகளின் தன்மைகளைப் பாகுபடுத்தி வரைபடம் தயாரிக்கும் வழக்கம் வீலரால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. மண்ணடுக்குகளின் காலம் அவற்றில் கிடைக்கும் தொல்பொருட்களின் காலத்தைப் பொறுத்தே உறுதி செய்யப்படுகின்றன.

அரிக்கமேடு அகழ்வாய்வில் கிடைத்த அரிட்டைன், ரௌலெட்டெட், ஆம்ஃபோரா, மட்கலன்கள் ஆகியவை கி.பி. முதாலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவை கிடைத்த மண்ணடுக்குகளும் அக்காலத்தைச் (கி.பி. முதல் நூற்றாண்டு) சேர்ந்தவையாகவே கணக்கிடப்பட்டுள்ளன.இத்தகைய வழிமுறைகள் அனைத்தும் வீலரால் அரிக்கமேட்டில் அறிமுகப்படுத்த பட்டவையாகும். பிற்காலத்தில் இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட பல அகழ்வாய்வுகளில் வீலரால் அரிக்கமேட்டில் அறிமுகப் படுத்தப்பட்ட நெறிமுறைகளே பின்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

5.ஏ.ஏகாம்பரநாதன் 1983:93



**பிரெஞ்சியர் அகழ்வாய்வுகள்**

1941-ஆம் ஆண்டு முதல் 1944-ஆம் ஆண்டு வரை பிரெஞ்சியர் நிகழ்த்திய ஆய்வுகள் அனைத்தும் அகழ்வாய்வு நெறிமுறைகளைப் பின்பற்றிச் செய்யப்படவில்லை. 1945-ஆம் ஆண்டில் வீலரால் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வின் முடிவுகள் அனைத்தும் இந்தியத் தொல்லியல் துறையின் அரையாண்டிதழில் வெளியிடப்பட்டன.[6] இதுவரை 1945-ஆம் ஆண்டுவரை வெளிவந்த அரிக்கமேடு அகழ்வாய்வு உண்மைகளை அடிப்படையாக வைத்துப் பிரெஞ்சிந்தியக் கலைக்கழகத்தில் பணியாற்றிய பி.இசட். பட்டாபிராமன் என்பவர் அரிக்கமேட்டின் தொன்மைச் சிறப்பை விளக்கும் வகையில் பிரெஞ்சுமொழியில் நூல் ஒன்றை வெளியிட்டார்[7]. ஜான் ஃபிலியோசா (Jhon Filliozat, 1947 & 49) வீராம்பட்டினம் அரிக்கமேடு பற்றிப் பிரெஞ்சு மொழியில் எழுதிய ஆய்வுகளும் பிரெஞ்சு ஆய்வாளர் இடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதன் பின்னரே பிரெஞ்சிந்தியாவின் கவனம் அரிக்கமேட்டின் பக்கம் முழுமையாகத் திரும்பியது.

வீலரால் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுப் பணிகளைப் போன்று முழுமையான அகழ்வாய்வு நெறிமுறைகளைப் பின்பற்றிப் பிரெஞ்சிந்திய அரசு ஆய்வு செய்ய எண்ணியது. இதன் அடிப்படையில்தான் ஜே.எம். கசால் என்னும் பிரெஞ்சு அகழ்வாய்வு வல்லுநர் ஒரு குழுவுடன் புதுவைக்கு வரவழைக்கப்பட்டார்.

**ஜெ.எம்.கசால் (J.M. Casal)**

1946-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அரிக்கமேடு அகழ்வாய்விற்கான தொடக்கப்பணிகள் ஹென்றி மார்ஷல் (Hendri Marchael) என்பவரின் முயற்சியில் தொடங்கப்பட்டன. பின்னர் 1947-ஆம் ஆண்டு ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் இரண்டு இடங்களில் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாய்வில் கசாலும் அவரது துணைவியார் ஜெனெவியேவ் கசாலும், இந்தியத் தொல்லியல் துறையைச் சார்ந்த பி. கே. தாப்பரும் இணைந்து பணியாற்றினர். அதன் பின்னர் 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஆய்வுகளில் கசால், ஜெனெவியேவ் கசால் ஆகியோருடன் பிரெஞ்சுக் கல்லூரி மாணவர்களான சுப்ரமணியன்,

6. Ancient India-Bulletine of the Archaeological Survey of India, No:2 July-1946

7. Les Fouilles d'Arikamedu (Podouke), Biobliothque Colonial, Pondichery 1946

Tamil Heritage Foundation International (THFi)

பியேர் அந்துவான் ஆகியோரும் இணைந்து செயலாற்றினர். 1947-48 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இவ்வாய்வுப் பணிகளில் வீலர் கையாண்ட மண்ணடுக்கு ஆய்வு நெறிமுறைகளையே கசாலும் பின்பற்றினார். மிகுதியான தொல்பொருட் சின்னங்கள் இவருடைய அகழ்வாய்வில் கிடைத்தாலும் அதில் தேர்வு செய்து சிலவற்றை மட்டுமே தம்முடைய ஆய்வுத் தொகுதிகளாகப் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டுள்ளார்[8].

வீலருடைய அகழ்வாய்வு முடிவுகள் பலராலும் வரவேற்கப்பட்டு மேற்கோள்களாகவும் எடுத்துக் காட்டப்பட்ட அளவிற்குக் கசாலின் அகழ்வாய்வு முடிவுகள் எடுத்தாளப் பெறவில்லை. அரிக்கமேட்டில் கிடைத்த தொல்பொருட் சின்னங்களின் அடிப்படையில் காலத்தை வரையறை செய்யும் வீலர், கி.மு.200 - கி.பி. 200 வரையுள்ள காலப்பகுதி என்று குறிப்பிடுகின்றார். ஆனால் கசாலோ அரிக்கமேட்டின் தொன்மையைக் கி.மு. 250 - கி.பி. 200 என்று வரையறுத்துள்ளார். அரிக்கமேட்டில் யவனக் குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதற்கு முன்பே மத்தியத்தரைக்கடல் நாடுகளுடன் அரிக்கமேடு தொடர்பு கொண்டிருந்தமைக்கான பல சான்றுகள் (Pre Roman Phases) கசாலின் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இத்தகைய சான்றுகள் வீலருடைய ஆய்வில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பழைய நகரம், புதிய நகரம் என்று இரண்டு நகரங்கள் அரிக்கமேட்டில் இருந்திருக்க வேண்டும் என்று கசால் கருதுகின்றார்[9].

அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்ட ஆய்விடங்கள் முழு நகருக்கும் உரியன அல்ல, நகரின் புறப்பகுதி மட்டுமே. நகரின் மையப்பகுதி ஏதோ ஓரிடத்தில் இருந்திருக்க வேண்டும். ஆற்றங்கரை ஓரமாகத் தொடங்கும் பழைய நகரத்தின் வடபகுதி தெற்கு நோக்கி மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றுப் புதிய நகரத்துடன் இணைந்துள்ளது. இவற்றுள் பழைய நகரம் மீனவர் குடியிருப்பாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்த பழைய நகரத்தின் தொடர்ச்சியாகவே புதிய நகரம் உருவாகி இருக்கவேண்டும். பழைய நகரம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் புதிய நகரம் கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோற்றம் பெற்றிருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளன.[10]

அரிக்கமேட்டின் காலவரையறை ஏனைய தென்னிந்திய அகழ்வாய்வுப் பணிகட்கு மட்டுமின்றி 1948-ஆம் ஆண்டு ஒரிசா

8. Casal-1949,Casal & Casal -1956 9.J.M. Casal, 1949 : 31 10.சோ.முருகேசன்2000:115



தலைநகர் புவனேஷ்வரில் நடைபெற்ற அகழ்வாய்வுப் பணிக்கும் அடிப்படையாக அமைந்துள்ளதாக அகழ்வாய்வறிஞர் கசால் குறிப்பிட்டுள்ளார்[11]. அரிக்கமேட்டு அகழ்வாய்வுக்குப் பின்னர் (1950) புதுவையின் பிற பகுதிகளான சுற்றுக்கேணி, முத்தரையர் பாளையம், ஊசுட்டேரி ஆகிய இடங்களிலும் அகழ்வாய்வுகள் நிகழ்த்தி வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய பல தொல்பொருட் சின்னங்களைக் கசால் வெளிப்படுத்தியுள்ளார்.

**பீட்டர் பிரான்சிஸ்** (Jr. Peter Francis)

பழங்கால மணிவகைகளை ஆய்வு செய்வதற்காக வேண்டியே இக்காலத்தில் ஓர் அமைப்பு[12] இயங்கி வருகின்றது. இவ்வமைப்பு ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் (நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில்) கிடைத்த பழங்கால மணிவகைகளைச் சேகரித்து அவற்றின் அமைப்பு, நிறம், வடிவம், காலம் ஆகியவற்றைக் கண்டறியும் வகையில் வேதியியல் பகுப்பாய்வை (Chemical Analysis) நிகழ்த்தி வருகின்றது. இவ்வமைப்பு புதுவை அருங்காட்சியக ஒத்துழைப்புடன் அரிக்கமேட்டில் நிகழ்ந்த அகழ்வாய்வில் கிடைத்த இருநூற்றுக்கும் மேற்பட்ட மணிவகைகளைப் பகுப்பாய்வு முறையில் இனம்பிரித்துக் காட்டியுள்ளது.

மணி ஆராய்ச்சியில் தேர்ச்சிபெற்ற பீட்டர் பிரான்சிஸ் (Jr. Peter Francis) 1986-ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் ஒரு குழுவினரோடு அரிக்கமேடு வந்து மணி அகழ்வாய்வு மட்டும் நிகழ்த்தியுள்ளார். இவர்தம் அகழ்வாய்வு முடிவுகளைப் புதுவை அருங்காட்சியகம் ஆங்கில மொழியில் நூலாக வெளியிட்டுள்ளது.[13] கி.பி. முதல் நூற்றாண்டில் அரிக்கமேட்டில் செய்யப்பட்ட மணி வகைகளைப் போன்றே இக்காலத்தில் (ஆந்திரமாநிலம் - பாப்பநாயுடு பேட்டையிலும்) கண்ணாடி மணிகள் செய்யப்பட்டு வருகின்றன என்னும் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் இ. மரியானா ஸ்டெர்ன் (E. Marianne Stern) ஓர் ஒப்பாய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்[14]. இக்கட்டுரை அரிக்கமேடு மணி வகைகளைப் பற்றிப் பல புதிய விளக்கங்களை வெளிப்படுத்தியுள்ளது.

11.மே.நூல்:31 12. IPMDGBP- Indo Pacific Monochrome Drawn Glass Beads Project

13. Jr. Peter Francis(1987) Beads Emporium 14. E. Marianne Stern 1987: P. 348

Tamil Heritage Foundation International (THFi)

### விமலா பெக்லி (Vimala Begley)

1950-ஆம் ஆண்டு முதல் 1982-ஆம் ஆண்டு வரை பல உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் அரிக்கமேட்டுப் பகுதியை வந்து பார்வையிட்டுச் சென்றனரே ஒழிய யாரும் அகழ்வாய்வு செய்ய முன்வரவில்லை. இக்காலகட்டத்தில் ஐராவதம் மகாதேவன் அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள் மற்றும் கீறல் குறிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதிய கட்டுரைகளும்[15], பீட்டர் பிரான்சிஸ் எழுதிய அரிக்கமேடு மணிவகைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் (Peter Francis 1976-80) உலக வரலாற்றறிஞர்களின் பார்வையை அரிக்கமேட்டின் பக்கம் திருப்பின.

அதன்பின் 1983-ஆம் ஆண்டில் (அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணியாற்றிய) விமலா பெக்லி (Vimala Begley) அரிக்கமேட்டிற்கு வந்து அகழ்வாய்வு நிகழ்த்தினார். தம்முடைய அகழ்வாய்வுப் பணியில் கிடைத்த புதிய சான்றுகளின் அடிப்படையில் விமலா பெக்லி கட்டுரை ஒன்று எழுதினார்.

அக்கட்டுரையில் 'வீலர், கசால் ஆகியோரின் அகழ்வாய்வு முடிவுகளை மேற்கோள் காட்டி அரிக்கமேடு அகழ்வாய்வு புதிய கண்ணோட்டத்துடன் உலகளாவிய நோக்கில் மீண்டும் நிகழ்த்தப்பட வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியுள்ளார்'[16]. அக்காலத்தில் அரிக்கமேட்டைப் போன்று இந்தியாவின் வேறு சில இடங்களிலும் ரௌலெட்டெட் பானை வகைகள் வனையப்பட்டும் புனைவுகள் செய்யப்பட்டும் வந்திருக்கின்றன. அதே போன்று இன்றும் சில இடங்களில் ரௌலெட்டெட் பானை வகைகள் வனையப்படும் முறையைச் சுட்டிக்காட்டி ஒப்பீட்டாய்வு நோக்கில் 1986-ஆம் ஆண்டில் விமலா பெக்லி எழுதிய கட்டுரையும் அரிக்கமேட்டை உலகளாவிய பார்வைக்கு உட்படுத்தியது[17].

அரிக்கமேட்டில் கிடைத்த ரௌலெட்டெட் மட்கலன்களின் தனித்தன்மையையும் தொழில் நுணுக்கங்களையும் புலப்படுத்தும் வகையில் அகழ்வாய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி 1988-ஆம் ஆண்டு விமலா பெக்லி மற்றொரு ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் ரௌலெட்டெட் பானை வகைகளைப் பற்றிய வீலர்,

15. I. Mahadevan 1970,1971,&1973 16. Vimala Begley 1983 : 87

17. Vimala Begley 1986 : 47



கசால் கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கூடுதலாகச் சில புதிய உண்மைகளைச் சுட்டிக்காட்டி உள்ளார்[18]. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் (1989-92) அரிக்கமேட்டில் அகழ்வாய்வை நடத்தியவர் விமலா பெக்லி. 1990-ஆம் ஆண்டில் இவரோடு இவ்வாய்வுப் பணியில் ஸ்டீவன் இ. சைட் போத்தம் (Steven E. Side Botham), எலிஸபெத் (Elizabeth) ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் உதவியுடன் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வுத்துறையினரும் மாணவர்களும் இவ்வகழ்வாய்வில் பங்கெடுத்துக் கொண்டனர்.

மிகப் பெரிய அளவில் நடைபெற்ற இவ்வாய்விற்குப் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் நிதியுதவி அளித்தது. அரிக்கமேட்டில் கிடைத்த புதிய கண்டுபிடிப்புகளை அடியொற்றிக் கட்டுரை ஒன்றை விமலா பெக்லி எழுதியுள்ளார்[19]. கடைச்சங்க காலத்தில் அரிக்கமேடு மிகச்சிறந்த துறைமுக நகராக விளங்கி இருக்க வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில் விமலா பெக்லி தமது அரிக்கமேட்டு ஆய்வு முடிவுகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.[20]

### அரிக்கமேடு அகழ்வாய்வின் முக்கியத்துவம்

வட இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள சிந்து நதிக் கரையில் 1921-22 ஆம் ஆண்டுகளில் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வு முடிவுகள் இந்திய வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தின. அதே போன்று தென்னிந்தியாவில் அரியாங்குப்பதது ஆற்றங் கரையில் 1941-1992 வரை நடைபெற்ற அரிக்கமேட்டு அகழ்வாய்வு முடிவுகள் புதுச்சேரி வரலாற்றிலும், தென்னிந்திய வரலாற்றிலும் பல அரிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன.

**அவ்வுண்மைகளாவன:**

1. தென்னிந்தியாவில் அடுத்தடுத்து உருவாகிய நாகரிக மாற்றங்களையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும், அவை நடைபெற்ற காலகட்டங்களையும் அரிக்கமேட்டு அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

18. Vimala Begley 1988 : 427 19. Vimala Begley 1993

20. Vimala Begley (1996 ). Ancient Port of Arikamedu

Tamil Heritage Foundation International (THFi)

2. மைசூரிலிருந்து ஐதராபாத் வரை நடைபெற்ற அனைத்து அகழ்வாய்வுகளிலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்கள், மட்கலன்கள் ஆகியவற்றின் காலப் பாகுபாட்டை உறுதிசெய்ய அரிக்கமேட்டு அகழ்வாய்வுகள் உதவுகின்றன.

3. ஒரிசாவில் நடைபெற்ற அகழ்வாய்வின்போது பல்வேறு காலகட்டங்களைச் சார்ந்த மண்ணடுக்குகளின் காலத்தைத் தெளிவு செய்வதற்கு அரிக்கமேட்டு அகழ்வாய்வு நெறிமுறைகள் துணைபுரிந்தன.

4. சங்ககால மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக் கூறுகளையும் அவர்கள் ரோமானியரோடு கொண்ட தொடர்புகளையும் மெய்ப்பிப்பதற்கான தொல்பொருட் சின்னங்களின் கருவூலமாக அரிக்கமேடு விளங்குகின்றது.

5. பிற்கால வரலாற்றாய்வாளருக்குத் தொல்பொருட் சின்னங்களின் காலத்தைத் துல்லியமாக நிர்ணயம் செய்வதற்குரிய முன் மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் அரிக்கமேட்டு அகழ்வாய்வு அமைந்துள்ளது.வட இந்தியாவில் நிகழ்த்தப்பட்ட மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாய்வு போன்று தென்னிந்தியாவில் அரிக்கமேடு அகழ்வாய்வு முக்கியத்துவம் வாய்ந்தது. அரிக்கமேட்டின் வடபகுதி, தென்பகுதி ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் வீலருடைய முடிவுகளிலிருந்து கசாலின் முடிவுகள் சிற்சில இடங்களில் முரண்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட பெருங்கற்புதைவுக் காலச் சான்றுகளும் வரலாற்றுக்கு உட்பட்டகாலத் தொல்பொருட் சின்னங்களும் அரிக்கமேட்டில் கிடைப்பதால் தமிழக வரலாற்றில் அரிக்கமேடு அகழ்வாய்வு சிறப்பிடம் பெறுகின்றது. தென்னிந்தியாவில் தலைசிறந்து விளங்கிய துறைமுகங்களுள் அரிக்கமேடு மிகவும் தொன்மையானது என்னும் உண்மையை விமலா பெக்லி தமது அகழ்வாய்வின் மூலம் உறுதிப் படுத்தியுள்ளார்.

# 4. அரிக்கமேடு - தொல்பொருட் சின்னங்கள் கீழை மேலைத் தொடர்புகள்

ஒரு குறிப்பிட்டகாலச் சமுதாய மக்களின் நாகரிகம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, வணிகப் பெருக்கம், கலைநயம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை அவர்கள் விட்டுச்சென்ற பொருட்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடியும். அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த தொல்பொருட் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழரின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்யலாம். அவ்வகையில் அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட் சின்னங்களான, பானை ஓடுகள், சுடுமண் பொருட்கள், மணிவகைகள், வளையல்கள், சாயத் தொட்டிகள், பண்டசாலை, தந்தப் பொருட்கள், யவனநாட்டு மதுச்சாடிகள், பாவை விளக்குகள், உறை கிணறுகள், முதுமக்கள் தாழி முதலான பொருட்களின் துணைக்கொண்டு பழந்தமிழரின் கீழை, மேலைத் தொடர்புகளை அறிந்து கொள்ளலாம்.

**தொல் பொருள் ஆய்வு**

'ஆர்க்கியாலஜி ' (Archaeology) என்னும் கிரேக்கச் சொல் தமிழில் தொல்பொருள் ஆய்வு என வழங்கப்படுகின்றது. இச்சொல் (archaios- ancient ; logos- science) பழங்காலத்தைப் பற்றி ஆராயும் அறிவியல் என்னும் பொருள் தரும். தொல்பொருளியல் என்பது ஒருவகையில் அறிவியலாகவும் மற்றொரு வகையில் கலையாகவும் விளங்குகின்றது. வரலாற்று ஏடுகள் தொடமுடியாத அல்லது எட்டிப்பிடிக்க இயலாத காலத்தைத் தொல்பொருள் ஆய்வால் தொட்டுக் காட்டமுடியும். ஓரிடம் தொல்பொருள் ஆய்விற்கு உட்பட்ட பகுதி என்று அறிந்து கொள்வதற்குச் சில வழிமுறைகளும் கருவிகளும் உள்ளன. அவையாவன,

1. தொல்பொருள் ஆய்வாளர் அப்பகுதியில் மேற்கொள்ளும் சுற்றுப்பயணம்.
2. பண்டைய இலக்கியங்களில் அப்பகுதியைப் பற்றிக் காணப்படும் குறிப்புக்கள்.

Tamil Heritage Foundation International (THFi)

3. அப்பகுதிகளில் வாழும் மக்கள் தரும் செய்திகள் மற்றும் செவிவழிக்கதைகள்.

4. அவ்விடத்தைப் பற்றி வெளிநாட்டுப் பயணிகள் எழுதி வைத்துள்ள வரலாற்றுக் குறிப்புக்கள்.

5. மழையினாலும் மண்ணரிப்பினாலும் வெள்ளப் பெருக்கினாலும் பூமியின் மேற்பரப்பு தெரிவிக்கும் சில மறைமுகக் குறிப்புக்கள்.

6. தொல்பொருள் ஆய்விற்கென்று உருவாக்கப்பட்ட புரோட்டான் மேக்னெட்டோ மீட்டர் (Proton Magneto meter) என்னும் நவீன கருவிகள் வழி அறியலாகும் சில அறிகுறிகள்.

இவை அனைத்தின் மூலமாகவும் தொல்பொருள் ஆய்வாளர்கள் அரிக்கமேட்டில் அகழ்வாய்வு நிகழ்த்திப் பல அரிய தொல்லியல் பொருட்களையும் உண்மைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

**அகழ்வாய்வின் இரு முறைகள்**

ஓரிடத்தில் எப்போதிலிருந்து மக்கள் வாழத்தொடங்கினர், எத்தகைய பண்பாட்டைக் கொண்டு விளங்கினர் என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் அகழ்வாய்வின் மூலம் விடைகள் கூற இயலும். இத்தகைய அகழ்வாய்வில் இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1.பரவலாகத் (கிடைமட்டம்) தோண்டும் முறை- (Horizontal Excavation) மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய குடியிருப்புப் பகுதி அகழ்வுகள் இம்முறையைப் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளன.

2.ஆழத் (நிலைமட்டம்) தோண்டும் முறை-(Vertical excavation) பூமியின் மேற்பரப்பிலிருந்து கன்னிமண் வரை சில நெறிமுறைகளைப் பின்பற்றி ஆழத் தோண்டிச் செல்லும் முறை.

இவ்விரண்டு முறைகளுள் இரண்டாவதாக உள்ள ஆழத்தோண்டும் முறையே அரிக்கமேட்டில் மேற்கொள்ளப்பட்டது. ஆழத்தோண்டும் முறையால்தான் தொல்பொருட் சின்னங்களின் உண்மையான காலத்தைத் தெளிவாக வரையறுக்க இயலும். இவ்வாறு அகழும்போது பல்வேறு காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள் வெவ்வேறு மண்ணடுக்குகளில் கிடைப்பதுண்டு. மண்ணடுக்குகளில் எவையெவை எந்தெந்தக் கால வரம்பிற்கு உட்பட்டவை என்பதை வரையறுத்துக் கொள்ளப் பேருதவியாக இருப்பன காசுகளும் பானை ஓடுகளுமே ஆகும். மண்ணடுக்குகளில் கீழிருந்து மேல் நோக்கியே தொல்பொருட்களின் தொன்மை கணக்கிடப்படும். அதாவது கீழுள்ள மண்ணடுக்குகளே மிகவும் பழைமையான காலத்தைச் சேர்ந்தவையாகும்.



**தமிழக அகழ்வாய்வுகள்**

அரிக்கமேட்டில் ஆய்வு(1945) நிகழ்த்தப்பட்ட பின்பு, தமிழகத்திலும் புதுவையிலும் பல இடங்களில் அகழ்வாய்வுகள் நிகழ்த்தப்பட்டன. அவை சுற்றுக்கேணி (புதுச்சேரி), அத்திராம்பாக்கம், குடியம், சானூர், குன்றத்தூர், அமிர்தமங்கலம், வசவசமுத்திரம், காஞ்சிபுரம் (செங்கல்பட்டு மாவட்டம்), செங்கமேடு, காரைக்காடு (தென்னார்க்காடு மாவட்டம்), திருக்காம்புலியூர், அழகரை, உறையூர், கரூர், (திருச்சி மாவட்டம்), பையம்பள்ளி (வடஆர்க்காடு மாவட்டம்), காவிரிப்பூம்பட்டினம் (தஞ்சை மாவட்டம்) கொற்கை, ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி மாவட்டம்), அழகன் குளம் (இராமநாதபுர மாவட்டம்) என்பனவாகும். இவற்றுள் முதன் முதலில் அகழ்வாய்வு நிகழ்த்தப்பட்ட இடம் அரிக்கமேடு என்பது குறிப்பிடத்தக்கது.

**அகழ்வாய்விடங்களில் கால வரலாறு**

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் நடைபெறும் அகழ்வாய்வுகளிலிருந்து கிடைக்கும் பொருட்கள் விரிவான வரலாற்றிற்குப் புதிய சான்றுகளாகத் திகழ்வதோடு மட்டுமின்றி அக்கால வாழ்க்கை முறையினை அறிய உதவும் காலக் கண்ணாடியாகவும் விளங்குகின்றன.

அவ்வகையில் அகழ்வாய்வு செய்யப்படும் இடங்களில் கண்டெடுக்கப்படும் பொருட்களின் பழைமையைக் கொண்டே அந்த இடத்தின் கால வரலாறும் கணிக்கப்படுகின்றது. தமிழகத்தில் அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்களை நான்கு வகையான காலப்பகுப்புக்குள் அடக்கிக் காட்டுகின்றார் தொல்பொருள் ஆய்வாளர்[1] அவை,

1.சா.குருமூர்த்தி 1974:21-22

Tamil Heritage Foundation International (THFi)

1. பழங் கற்காலம் (அத்திராம்பாக்கம், குடியம்)
2. புதிய கற்காலம் (பையம்பள்ளி).
3. பெருங்கற் புதைவுக் காலம் (சானூர், குன்றத்தூர், அமிர்தமங்கலம், அரிக்கமேடு, சுற்றுக்கேணி).

4. வரலாற்றுக் காலம் / சங்க காலம் (அரிக்கமேடு, செங்கமேடு, திருக்காம்புலியூர், அழகரை, உறையூர், கரூர், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவசமுத்திரம், காஞ்சிபுரம், அழகன்குளம், காரைக்காடு) என்பனவாகும்.

**அரிக்கமேடு தொல்பொருட் சின்னங்கள்**

1941-முதல் 1992 வரை அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு மட்கலன்கள், மணிவகைகள், அணிகலன்கள், கண்ணாடிப் பொருட்கள், நாணயங்கள், குடியிருப்புப் பகுதிகள் உறைகிணறுகள், சாயத்தொட்டிகள், சுடுமண் விளையாட்டுப் பொருட்கள், விளக்குகள் முதலியன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை தவிர விமலா பெக்லி தலைமையில் 1991-92ஆம் ஆண்டுகளில் அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்களாவன சங்கு வளைகள், காதணிகள், மணிகள் - இவற்றின் வீணான துண்டுகள், துணிகளுக்கு ஓவியம், வண்ணம் தீட்டப் பயன்படுத்தப்படும் கூரிய எலும்புக் குச்சி, தேக்கு மரத்தாலான சீப்பு, சுடுமண்ணால் செய்யப்பட்ட விலங்கு உருவங்கள், சிகைக்காய் வைத்துக்கொள்ளும் கோப்பையின் துண்டு (கி.பி. முதல் நூற்றாண்டு), நீள்சதுர வடிவிலான படிகத் தட்டு, நீலக்கண்ணாடிக் கோப்பைத் துண்டு (மத்தியத்தரைக்கடல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது), வடிதட்டு, தங்கச் சங்கிலி (கழுத்தணி), ஓவியம் வரையப்பட்ட கிரா:.பிடி பானை ஓடுகள் தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், முதலாம் இராசராசன் காலத்தில் (கி.பி. 10-ஆம் நூ.ஆ) வெளியிடப்பட்ட செப்புக்காசு, வெவ்வேறு வடிவத்திலான ஆம்போரா சாடியின் கைப்பிடிகள் ஆகியன ஆகும். வெவ்வேறு காலகட்டத்தைச் சார்ந்த இப்பொருட்கள் மூலம் பண்டைய பொதுகே நகர மக்களின் சமூக வாழ்வியல் கூறுகளை அறிய முடிகின்றது.



**மட்கலன்கள்**

மட்பாண்டங்கள் பழங்கால மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமையால் அகழ்வாய்வுகளில் அவை முக்கிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. பொதுவாகப் புதிய கற்காலத்திலிருந்தே மக்களிடம் மட்பாண்டங்கள் செய்யும் வழக்கம் ஏற்பட்டது. அக்காலத்தில் பெரிதும் சாம்பல் நிற மட்கலன்கள் பயன்படுத்தப்பட்டன. உலோகக் காலத்தில் சிவப்பு நிறப் பானைகளும் பழுப்பு நிற மட்பாண்டங்களும் பல வண்ணம் தீட்டப்பட்ட மட்கலன்களும் புழக்கத்தில் இருந்தன. இவை தவிர, பெருங்கற் புதைவுகளிலும் ஈமத்தாழியின் உள்ளேயும் வெவ்வேறு விதமான அமைப்புகள் கொண்ட மட்கலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பே பானை வனையும் தொழில் நுட்பத்தை அரிக்கமேட்டு மக்கள் அறிந்திருந்தனர். சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் 'முதுமக்கள் தாழி' உட்படப் பல மட்பாண்ட வகைகளை அக்கால மக்கள் வனைந்துள்ளனர் என்பதற்கு அரிக்கமேட்டு அகழ்வாய்வில் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்துள்ள மட்கலன்களை இரண்டு வகைகளாகப் பகுக்கலாம். அவை,

1. உள்நாட்டிலேயே வனையப்பட்டவை.
2. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை.

என்பனவாகும். இவை இரண்டைத் தவிர வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்கல வகையைப் போன்று போலியாக உள்நாட்டில் வனையப்பட்டவை என்று மற்றொரு வகையும் உண்டு.

**வெளிநாட்டில் வனையப்பட்டவை**

அரிக்கமேட்டில் வெவ்வேறு விதமான மட்கலன்கள் (வெளிநாட்டைச் சேர்ந்தவை) வெவ்வேறு விதமான மண்ணடுக்குகளில் காணக் கிடைக்கின்றன. அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை:

1. அரிட்டைன் / சிஜிலிட்டா கலன் (Arretine / Sigilltta ware).
2. ஆம்:.போரா சாடி (Amphorae Jar).

Tamil Heritage Foundation International (THFi)

3. ரௌலெட்டெட் கலன் (Rouletted Ware).

4. சீன செலெடன் கலன் (Chinesh Celedon Ware)

ஆகியன. இவற்றுள் சீன நாட்டைச் சேர்ந்த செலெடன் கலனைத் தவிர ஏனையவை மத்தியத்தரைக்கடல் நாடுகளிலிருந்து ரோமானியரால் அரிக்கமேட்டிற்குக் கொண்டு வரப்பட்டவையாகும். இவை தவிர, இறக்குமதியான சிஜிலிட்டாத் தட்டு, கோப்பைகள், செராமிக் விளக்குகள், நறுமணத் தைலம் கொணர்ந்த சீசாக்கள், கண்ணாடிக் கோப்பைகள், இரத்தினக் கற்கள் ஆகியன விமலா பெக்லியின் அகழ்வாய்வில் (1991-92) கிடைத்துள்ளன.

**அரிட்டைன் / சிஜிலிட்டா கலன்கள்**

பண்டைக் காலத்தில் இத்தாலி நாட்டில்தான் இத்தகைய பானைகள் வனையப்பட்டன. இத்தாலி நாட்டில் ‘அரிட்டியம்’ என்றழைக்கப்பட்ட இடத்தில் முதன் முதலாக வனையப்பட்டதால் இவ்வகை மட்பாண்டங்களுக்கு ‘அரிட்டைன்’ என்னும் பெயர் ஏற்பட்டது. அக்காலத்திய அரிட்டியம் இப்போது ‘அரேசோ’ (Arezzo) என்று அழைக்கப் படுகின்றது. பண்டைக் காலத்தில் அரிட்டைன் மட்கலன்கள் அரிட்டியத்தில் மட்டுமின்றி இத்தாலியில் உள்ள புட்டோலி, மொடினா, ரெமினி ஆகிய பிற பகுதிகளிலும் செய்யப்பட்டுள்ளன[2].

இளஞ்சிவப்பு நிறமுடைய இத்தகைய மட்கலன்கள் மிக நுண்மையான மணல், களிமண் ஆகியன கலந்து மிகவும் மென்மையாக, கவனத்துடன் வனையப்பட்ட மெருகுடன் காட்சியளிக்கின்றன. மென்மையான மஞ்சள் கலந்த சிவப்பு நிறமுள்ள அரிட்டைன் மட்கலன்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இந்தியாவிலேயே அரிக்கமேட்டில் மட்டும்தான் அரிட்டைன் வகையைச் சேர்ந்த மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இவை கி.பி.20 முதல் கி.பி.50 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை என்று கணிக்கப்பட்டுள்ளன. இத்தாலியில் கி.பி. 50-க்குப் பின்னர் அரிட்டைன் வகைக் கலன்கள் வனையப் படவில்லை. ஆதலால் அதற்குப் பிறகு இவை இத்தாலியிலிருந்து பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க முடியாது என்று வீலர் கருதுகிறார்[3]. இறக்குமதி செய்யப்பட்ட இத்தகைய மட்கலன்களின் அடிப்படையில்தான் அரிக்கமேட்டின் வணிகக் காலம் கணிக்கப் படுகின்றது. வீலர், கசால் அகழ்வாய்வுகளில்

2.ஏ.ஏகாம்பரநாதன் 1983:133 3. Wheeler R.E. M. 1946 : 35



இத்தகைய அரிட்டைன் வகைக்கலன்கள், முத்திரைப் பெயர்கள் பொறிக்கப்பட்ட நிலையில் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விமலா பெக்லி, ரிச்சர்ட் டேனியல், தெ பூமா, உள்ளிட்ட பிற்கால ஆய்வாளர்கள், அரிட்டைன் போன்ற வகையைச் சிஜிலிட்டா கலன் என்றே குறிப்பிடுகின்றனர். சிவப்பு நிறமுள்ள சிஜிலிட்டா வகையைச் சேர்ந்த இத்தகைய மட்கலன்கள் அரிக்கமேட்டில் தங்கி வணிகம் புரிந்து வந்துள்ள ரோமானியரால் அவர்களது சொந்தப் பயன்பாட்டிற்காகக் கொண்டுவரப்பட்டவை. ஏனென்றால் இவை அனைத்திலும் பல்வேறு முத்திரைப் பெயர்கள் காணப்படுகின்றன.

இம்முத்திரைகளும் அவற்றிலுள்ள பெயர்களும் அரிட்டைன் தயாரிப்பில் ஈடுபட்ட இத்தாலியக் குடும்ப உறுப்பினருடையதாய் இருக்க வேண்டும். அல்லது அங்கு இயங்கி வந்த தொழிலகங்களின் பெயர்களாகவும் இருக்கலாம். அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட சிஜிலிட்டா கலன்கள் இத்தாலியின் அரேசோ பகுதியில் மட்டுமே செய்யப்பட்டிருக்க வேண்டிய கட்டாயமில்லை. இத்தாலி நாட்டிலுள்ள வெவ்வேறு தொழிலகங்களிலும் அவை வனையப் பட்டிருக்கலாம்[4].

அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்த சிஜிலிட்டா கலன்களில் இத்தாலியின் அரேசோவில் தயாரானது போன்ற எந்த முத்திரையும் காணப்படவில்லை. அவை தயாரான இடங்களாவன,

| முத்திரை | தயாரான இடங்கள் (இத்தாலி) |
|---|---|
| ITTA | LYON/ La Muette. |
| RVFIO | Pozzuoli |
| EVHOD | Pisa. |
| CAMVR (i) | Central Italy |
| VIBIE (ni) | Central Italy |

என்பனவாகும்[5]. இவற்றின் காலம் கி.மு. 10-இலிருந்து கி.பி. 30-க்குள் இருக்க வேண்டும்.அரிட்டைன், ரௌலெட்டெட் வகைகளை விடத் சற்றே தடிமனாகவும் இளஞ்சிவப்பு நிறத்தில் வழவழப்பாகவும் அலங்காரப் புனைவுகள் கொண்டதுமான மட்கல வகையே சிஜிலிட்டா எனப்படும். இது இத்தாலி நாட்டில் செய்யப்பட்டு, இங்கே இறக்குமதி

4. Vimala Begley, 1996 : 21 5. Vimala Begley, 1992 : 148

Tamil Heritage Foundation International (THFi)

செய்யப்பட்டதாதலால் 'இத்தாலிய சிஜிலிட்டா' என்றும் அழைக்கப்படும். இதன் ஒருவகையே அரிட்டைன் என்பதாகும். அலங்காரப் புனைவு, பெயர்முத்திரை, அச்சுப்புனைவுகள் ஆகியவற்றுடன் கூடிய திருகுப்பிடி கொண்ட சிஜிலிட்டா கலன்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன.

வடக்கு ஐரோப்பா நாடுகளில் கி.மு. 10 - கி.பி.20-க்குள் இத்தகைய மட்கலன்கள் தயாரிக்கப்பட்டு, அரிக்கமேட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். முத்திரையுடன் கூடிய சிஜிலிட்டா கலன்கள் டைபீரியஸ் காலத்தைச் (கி.பி. 20) சேர்ந்தவையாகும். இவையனைத்தும் ஒரே கப்பல் பயணத்தின் போது அரிக்கமேட்டிற்கு வந்தவையாகும். அரிக்கமேட்டின் காலம் சிஜிலிட்டா, ஆம்போரா ஆகிய வெளிநாட்டு மட்கலன்களின் காலத்தைப் பொறுத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. இவற்றின் காலம் மாறுதலுக்கு உட்பட்டால் அரிக்கமேட்டின் தொன்மைக் காலமும் மாறுதலுக்கு உள்ளாகும். இப்பொருட்கள் எப்போது அரிக்கமேட்டிற்கு வந்தனவென்றும் ரோமானியர் எவ்வளவு காலம் இவற்றைப் பயன்படுத்தினர் என்பதும் தோராயமாகத்தான் கணிக்கப்படுகின்றது.

நன்கலன் (Fine ware) வகையைச் சேர்ந்த சிஜிலிட்டா கலன்கள் 1989-92 ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சிஜிலிட்டா போன்றே வனையப்பட்ட போலியான ஓடுகள் சில கிடைத்துள்ளன. இருப்பினும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த எட்டு ஓடுகளும் கண்டறியப்பட்டுள்ளன[6]. இவற்றுள் ஐந்து தட்டு ஓடுகளும் மூன்று கிண்ண ஓடுகளும் அடங்கும். மிகவும் விலை உயர்ந்த, தரமுள்ள அலங்காரப் புனைவுகளுடன் வனையப்பட்ட இக்கலன்களைச் சமுதாயத்தில் செல்வாக்குள்ள வசதி படைத்தவர்கள் பயன்படுத்தி இருக்கலாம். இவற்றின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

**ஆம்போரா சாடிகள்** (Amphorae Jars)

பழங்காலத்தில் மத்தியத்தரைக்கடல் நாடுகளில் மது (Wine), ஆலிவ் எண்ணெய் (Olive Oil), கருவாட்டுக் குழம்பு (Garum Sauce) ஆகியவற்றைச் சேமித்து வைப்பதற்கும் பாதுகாப்பாக வெளிநாடுகட்குக் கொண்டுசெல்வதற்கும் பயன்படுத்தப்பட்டவையே ஆம்போரா சாடிகள்

6. Vimala Begley, 1996 : 352



ஆகும். ஆம்போரா சாடிகளும் ரோமானியரால்தான் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இந்தச் சாடிகள் யாவும் மென்மையான களிமண்ணால் வனையப்பட்டு, பழுப்பு நிறத்திலும் இளஞ்சிவப்பு நிறத்திலும் காணப்படுகின்றன. இவற்றின் மேற்பகுதி சக்கரத்தால் வனையப்பட்டு அடிப்பகுதி கைகளால் செய்யப்பட்டு ஒரு கெட்டியான மண் பூச்சின் மூலமாக இரண்டு பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன. உட்புறம் புசோலோனா (Pozzoloana) என்னும் ஒருவகைப் பூச்சுடன் காணப்படுகின்றது.

ஆம்போரா சாடிகள் அடிப்பகுதியில் கூர்மையாகவும் வாய்ப்பகுதியில் முடி உடையனவாகவும் கழுத்துப் பகுதியில் இருபுறமும் கைப்பிடிகள் கொண்டனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு பக்கங்களிலும் கைப்பிடிகள் இருப்பதால் இவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்வதற்கும் கூர்மையான அடிப்பகுதி இருப்பதால் தரையில் ஊன்றி வைப்பதற்கும் வசதியாக இருந்தது. இத்தகைய சாடிகள் முதன் முதலில் ஏஜியன் கடலில் (Aegean Sea) உள்ள கிரேக்கத் தீவான 'கோஸ்' (Kos) என்னும் இடத்தில் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் செய்யப்பட்டன.

அதன்பின்னர் ரோமானியர்கள் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இவற்றைப் பார்த்து ஆம்போரா (வகை) மதுச்சாடிகளைச் செய்துள்ளனர். ரோமானியரை அடுத்து ஸ்பேனி நாட்டவரும் கி. மு. 100-ஆம் ஆண்டில் இத்தகைய சாடிகளைச் செய்தள்ளனர்.

அரிக்கமேட்டில் மட்டுமின்றித் தமிழகத்தில் வசவசமுத்திரம், காஞ்சிபுரம், அழகன்குளம், ஆகிய இடங்களிலும் ஆம்ஃபோரா சாடி ஓடுகள் கிடைத்துள்ளன. வடஇந்தியாவில் தட்ச சீலத்திலும் (Taxila) இறக்குமதி செய்யப்பட்ட ஆம்ஃபோரா சாடிகள் கிடைத்திருப்பதாக வீலர் குறிப்பிட்டுள்ளார்[7]. அரிக்கமேட்டில் வீலருடைய அகழ்வாய்வில் 116ஆம்ஃபோரா சாடிஓடுகளும் பிரெஞ்சியர்(பொஷே, கசால்) அகழ்வாய்வில் 77 ஆம்போரா சாடிஓடுகளும் கிடைத்துள்ளன. இவற்றுள் பல ஓடுகள் புதுவை, தில்லி, சென்னை, பாரிசு, இலண்டன், ஹனாய் ஆகிய இடங்களில் உள்ள அருங்காட்சியகத்தில் இருக்கின்றன. ரோமாபுரியிலிருந்து தமிழகத்திற்கு மது கொண்டுவரப் பயன்படுத்தப்பட்ட ஆம்ஃபோரா சாடிகளை விமலா பெக்லி மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார்[8]. அவை,

7. Wheeler R.E. M. 1946 : 41 8. Vimala Begley 1996 : 318

Tamil Heritage Foundation International (THFi)

1. கோன் (Khon) (கி. மு. 200)
2. நீடியன (Knidian) (கி. மு. 100)
3. ரோடியன் (Rhodian) (கி. மு. 100)

என்பனவாகும். இத்தகைய ஆம்ஃபோரா சாடிகள் தயாரிக்கப்பட்ட கால வரையறையைக் கருத்தில் கொண்டு இவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வகை ஆம்ஃபோரா சாடிகள் எல்லாம் புசோலோனா சிமெண்டால் முத்திரையிடப்பட்டு அடைக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியத் தரைக்கடல் நாட்டு மட்கலன்களுள் அரிட்டைன் / சிஜிலிட்டா வகையைக் காட்டிலும் ஆம்ஃபோரா, ரௌலெட்டெட் வகைகள் காலத்தால் சற்று முந்தியவையாகக் கருதப்படுகின்றன. அரிக்கமேட்டு அகழ்வாய்வில் அரிட்டைன் பானை ஓடுகள் கிடைத்த மண்ணடுக்களுக்குக் கீழே உள்ள மண்ணடுக்குகளில் ஆம்ஃபோரா, ரௌலெட்டெட் ஓடுகள் கிடைத்திருப்பதை அடிப்படையாகக்கொண்டு இவை காலத்தால் முந்தியவை என்று கணக்கிடப்பட்டுள்ளன.

ஆம்ஃபோரா சாடிகள் கி.மு. 100-லிருந்து கி.பி. 100-வரையிலான காலப்பகுதியில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். கி.பி. 100-க்குப் பிறகு செய்யப்பட்ட ஆம்ஃபோரா சாடிகள் அரிக்கமேட்டில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ரௌலெட்டெட் மட்கலன் (Rouletted Ware)**

மத்தியத்தரைக்கடல் நாடுகளில் செய்யப்பட்டு வந்த பல்வேறு விதமான பானை ஒப்பனைகளில் ரௌலெட்டெட் என்பதும் ஒன்றாகும். ரௌலெட்டெட் மட்கலன்கள் மென்மையான களிமண்ணால் நுட்பமாகவும் நேர்த்தியாகவும் வனையப்பட்டுள்ளன. இவற்றைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட களிமண் இந்தியாவில் எவ்விடத்திலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரிக்கமேட்டில் கிடைத்த இத்தகைய மட்கலன்கள் உருக்கு நிறத்திலும் சாம்பல் நிறத்திலும் இருக்கின்றன. ரௌலெட்டெட் வகையைச் சேர்ந்த சில வட்டில்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இம்மட்கலன்களின் உட்பகுதியில் புள்ளிகளால் ஆன ஒப்பனைகள் வட்டமாகவும் முக்கோணமாகவும் புனையப்பட்டுள்ளன. அழகுக்காவும் கலையுணர்வுக்காகவும் செய்யப்படும் இத்தகைய ஒப்பனையைத்தான் 'ரௌலெட்டெட்' என்று



கூறுகின்றனர். இதன் அடிப்படையில்தான் இவற்றிற்கு 'ரௌலெட்டெட் கலன்கள்' என்ற பெயர் ஏற்பட்டது.

தமிழகத்தில் இத்தகைய மட்கலன்கள் உறையூர், காஞ்சிபுரம், கொற்கை, வசவசமுத்திரம், செங்கமேடு, காரைக்காடு, கரூர், அழகன்குளம், ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. இலங்கையிலும் இந்தியாவிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் ரௌலெட்டெட் கலன்கள் கிடைத்துள்ளன. இந்தியாவின் கங்கைச் சமவெளியான 'ராஜ்காட்' (Rajghat), 'அயோத்தியா' (Ayodhya) ஆகிய பகுதிகளிலும் மகாராட்டிர மாநிலத்தில் 'நாசிக்'(Nasik), 'நெவேசா' (Nevasa) ஆகிய பகுதிகளிலும் ரௌலெட்டெட் ஓடுகள் கிடைத்துள்ளன.

இருப்பினும் தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையிலும் வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளின் முகத்துவாரப் பகுதிகளிலும்தான் இவ்வகை மட்கல ஓடுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. தொல்பொருள் ஆய்வாளர்களில் பலர் ரௌலெட்டெட் வகையில் அமைந்த தொழில் நுட்பத்திறன் மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டாலும் அதன் மூலவடிவம் எந்தப் பகுதியிலிருந்து இறக்குமதி ஆயிற்று என்பதை யாரும் தெளிவு படுத்தவில்லை. வரலாற்று ஆய்வாளர்கள் 'கறுஞ்சாம்பல் வண்ணம் கொண்டதும் வட்டப் புனைவுகள் வரையப்பட்டதும் வழவழப்பான நல்ல தன்மை கொண்டதுமான ரௌலெட்டெட் கலன்கள் ரோமன் வகை என்றும் மெல்லிய, கறுப்பு வண்ணம் கொண்டதும் சொரசொரப்பானதும் சிறிது கரடு முரடான தன்மை கொண்டதுமான ரௌலெட்டெட் கலன்கள் ரோமானிய வகையிலிருந்து பெறப்பட்ட இந்திய வகை' என்றும் கூறுகின்றனர்[9].

அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட ரௌலெட்டெட் கலன்கள் ஒரு குறிப்பிட்ட வகையில் மட்டும் ஒப்பனை செய்யப்பட்ட ஒரே பானை வகை என்பது குறிப்பிடத்தக்கது. இறக்குமதி செய்யப்பட்ட கலன்களில் புனையப்பட்டுள்ள ஒப்பனைகளும், வளைவுகளும் அரிக்கமேட்டு வகையைக் காட்டிலும் ஒழுங்குடையனவாகவும், அழகுடையனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, இருவகை ரௌலெட்டெட் கலன்களின் வடிவமைப்பிலும் பல மாற்றங்கள் இருப்பதை உணர முடிகின்றது. தென்னிந்தியாவில் உறையூர், காரைக்காடு, அழகன்குளம் ஆகிய இடங்களில் ரௌலெட்டெட் கலன்கள் காணப்பட்டாலும்,

9 Vimala Begley 1986: 49

Tamil Heritage Foundation International (THFi)

அரிக்கமேட்டில் கிடைத்த ரௌலெட்டெட் வகைதான் காலத்தால் மிகவும் பழைமையானது.

அரிக்கமேட்டில் வீலரின் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட ரௌலெட்டெட் வகையின் காலம் கி.மு. 200-க்கும் கி.மு. 100-க்கும் இடைப்பட்ட பகுதியாகும். இதே காலகட்டத்தில் கி.மு. 200-இன் பிற்பகுதியிலும் கி.மு. 100-இன் முற்பகுதியிலும் சிரியா நாட்டில் இத்தகைய களிமண் கலன்கள் தயாரிக்கப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கறுப்பு நிறமுள்ள இத்தகைய கலன்களுக்குக் கீழ்த்திசைக் களிமண்கலன் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. இத்தகைய களிமண் கலன்களும் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அரிட்டைன் போன்று சிவப்பு வண்ணத்தில் மெருகேற்றப்பட்ட வட்டப் புனைவுகளுடன் வழவழப்பான முறையில் வனையப்பட்ட (சிவப்பு) ரௌலெட்டெட் கலன்கள் கிடைத்துள்ளன. வடிவத்தில் அரிட்டைனில் இருந்து சற்றே மாறுபட்டுக் காணப்படும் இவற்றில் பெயருடன் கூடிய முத்திரை எதுவும் இல்லை. இவற்றுடன் ரோமானியப் பேரரசன் வேலன்டியனியன் (Valaentinian) காலத்தில் (கி.பி. 375) வெளியிடப்பட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன.[10] எனவே எப்படிப் பார்த்தாலும் அரிக்கமேட்டில் கிடைத்த அரிட்டைன் காலத்திற்குப் பின்புதான் இத்தகைய சிவப்புநிற ரௌலெட்டெட் கலன்கள் வனையப்பட்டிருத்தல் வேண்டும்.

**சீன செலெடன் மட்கலன் (Chinesh Celedon Ware)**

கிறித்தவ ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே இந்தியாவுடன் சீன நாடு கொண்டிருந்த தொடர்பினை அந்நாட்டவர்கள் எழுதி வைத்துள்ள பயணக் குறிப்புக்கள் வாயிலாக அறியலாம். புத்தமதக் கொள்கைகளை அறிந்து கொள்வதற்காகச் சீனாவில் இருந்து இந்தியா வந்த யுவான்சுவாங், பாஹியான் முதலாம் சீனப்பயணியர் தமிழகத்திற்கும் வந்து சென்றுள்ளனர். தமிழ்நாடு பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் காஞ்சிபுரம் சீனாவுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தது.

பிற்காலச்சோழர் காலத்திலும் வணிகர்கள், தூதுவர்கள் சீன நாட்டுக்குச் சென்றதை வரலாற்றுக் குறிப்புக்கள் வாயிலாக அறியமுடிகின்றது. கொற்கை, கங்கைகொண்ட சோழபுரம்,

10. Vimala Begley 1992 : 128



தரங்கம்பாடி, பெரியபட்டினம், அரிக்கமேடு முதலான இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் கி.பி 10 - 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனநாட்டுப் பீங்கான் ஓடுகளும் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன.

சீன நாட்டுடன் தமிழகம் கொண்டிருந்த தொடர்பினை உறுதிப்படுத்தும் வகையில் திகழ்பவை அரிக்கமேட்டில் கிடைத்த சீன செலெடன் மட்கலன்களாகும். இவற்றுடன் இடைக்காலத்தைச் சேர்ந்த சீனக் களிமண் சாடிகளும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. சிறிய வடிவிலான வழவழப்பான வெள்ளைநிறக் கோப்பையில் நீலநிறம் தீட்டப்பட்டுள்ள, மிகப் பிற்காலத்தைச் சேர்ந்த சீனக் கோப்பை ஒன்று விமலா பெக்லியின் ஆய்வில் கிடைத்துள்ளது[11].

இத்தகைய சீனக் களிமண் கலன்கள் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 10-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் சீனாவில் இருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். அரிக்கமேட்டைத் தவிர செலெடன் வகையைச் சேர்ந்த சீன மட்கலன்கள் இந்தியாவின் சிந்து நதிக் கரையிலுள்ள 'பிராமிநாயாத்' என்னுமிடத்திலும் தாமிரவருணி நதிக்கரையில் உள்ள காயல் என்னுமிடத்திலும் கிடைத்துள்ளன.

**போலி மட்கலன்கள்**

சங்க காலத்தில் ரோமானிய நாட்டிற்கும் தமிழகத்திற்கும் அரசியல், வணிகம் ஆகியவற்றின் அடிப்படையில் நெருங்கிய தொடர்பு இருந்தமையால் அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்கல வகைகளைப் பார்த்துத் தமிழகக் குயவர்கள் அம்மாதிரியான போலிகளை உள்நாட்டில் வனைந்துள்ளனர். தமிழகத்தில் மட்டுமின்றிக் குஜராத், மகாராட்டிரக் கடற்கரைப் பகுதிகள் சிலவற்றிலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான கலன்களைப் பார்த்து வனையப்பட்ட உள்நாட்டு செராமிக் வகையிலான கலன்கள் கிடைத்துள்ளன. இந்தியரின் வெளிநாட்டு மோகம் பழைமை வாய்ந்தது என்பதற்கு இவை சான்றுகளாகத் திகழ்கின்றன.

வீலர், அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுத்த அரிட்டைன் கலன்களுள் சில உள்நாட்டில் வனையப்பட்டவையாகும். குறிப்பாகச் சுவஸ்திக் வடிவ முத்திரையுடன் கூடிய அரிட்டைன் மட்கலன் உள்நாட்டு

11. Vimala Begley 1996 : 128

Tamil Heritage Foundation International (THFi)

வகையைச் சார்ந்தது என்று விமலா பெக்லி கூறியுள்ளார்[12]. போலியான ரௌலெட்டெட், சிஜிலிட்டா கலன்கள் வனையப்பட்ட தொழிலகத்திலேயே இவையும் வனையப்பட்டிருக்க வேண்டும். ரோமானிய சிஜிலிட்டா போன்று செய்யப்பட்ட இரண்டு கிண்ணங்கள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன.

கறுப்பும் சாம்பலும் கலந்த வண்ணத்துடன் வட்ட வடிவமான அடிநிலையுடன் கூடிய இத்தகைய மட்கலன்கள் ரோமானியத் தொழில்நுட்பத்துடன் அரிக்கமேட்டிலோ அல்லது அதைச் சார்ந்த பகுதியிலோ செய்யப்பட்டிருக்க வேண்டும். அரிக்கமேட்டில் கிடைத்த போலி அரிட்டைன் போன்று கொடுமணல், வசவசமுத்திரம், கரூர், கொற்கை, அழகன்குளம், உறையூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ளூரில் வனையப்பட்ட சிவப்பு நிற அரிட்டைன் போலிகளும் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டிலும் காஞ்சிபுரத்திலும் ரோமானிய ஆம்போராவைப் போன்று உள்நாட்டில் செய்யப்பட்ட இளஞ்சிவப்பு நிறமுள்ள கூர்முனைச் சாடிகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. கழுத்து, கைப்பிடி இல்லாத இத்தகைய சாடிகளின் உடற்பகுதி ஆம்போராவைப் போன்று காணப்பட்டாலும் கீழுள்ள கூர்முனைப் பகுதியையும் மேலேயுள்ள அகன்ற பகுதியையும் நோக்கும்போது கிரேக்க அல்லது ஹெலனிய முறையில் (Greek / Helenistic Amphoras) காணப்படுவதால் கிரேக்க ஆம்போராவைப் பார்த்து இத்தகைய கூர்முனைச் சாடிகளை உள்நாட்டுக் குயவர்கள் செய்திருக்க வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டில் இவை உள்நாட்டு மதுவகை அல்லது கள் தேக்கி வைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அரிக்கமேடு, உறையூர், காரைக்காடு ஆகிய இடங்களில் கிடைத்த மட்கலன்கள் சிலவற்றில் ரௌலெட்டெட் முறையில் உள்நாட்டில் வனையப்பட்ட ஒப்பனைகள் காணப்படுகின்றன. இவற்றுள் சில ரோமானிய ரௌலெட்டெட் வடிவமைப்பினையும் ஒப்பனையையும் ஒத்திருக்கின்றன. உள்நாட்டில் செய்யப்பட்ட இத்தகைய மட்கல ஓடுகள் வழவழப்பின்றியும் வித்தியாசமான களிமண்ணைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. வீலரால் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட சில ரௌலெட்டெட் பானை ஓடுகள் (எண் : 10, 18, 141) வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்தால் உள்நாட்டில் வனையப் பட்டவையாகும்.[13] இவை ரோமானிய வகையைக் காட்டிலும் காலத்தால் சற்றுப் பிற்பட்டவையாகும்.

12. Vimala Begley 1992 : 146 13. Vimala Begley 1983 : 470



பழங்கால மரபை அடியொற்றி இந்தியாவில் இன்றைக்கும் ரௌலெட்டெட் பானை வகைகள் செய்யப்பட்டு வருவது வியப்புக்குரிய ஒன்று., உத்திரப் பிரதேசத்தில் லக்னோவுக்கு அருகில் 18 கி.மீ. தொலைவில் உள்ள பீஜனாவூர் (Bijanaur) என்னுமிடத்தில் இக்காலத்திலும் இவ்வகைக் கலன்களைச் செய்து விற்று வருகின்றனர். மேலும் ஒரிசா மாநிலம், கட்டாக் என்னுமிடத்தில் இமாம்அலி (Imam Ali) என்பவர் இன்றும் ரௌலெட்டெட் பானை வகையை வனைந்து வருகின்றார்.[14] அரிக்கமேட்டு ரௌலெட்டெட் வகைகளோடு இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டு வகைப் பானைகளிலும் மெல்லிய உலோகத் தகடுகளால் புள்ளிக்கோலம் (ஒப்பனை) குத்தி அழகுபடுத்தப் பட்டுள்ளமை புலனாகும்.

கி.மு. 500-ஆம் ஆண்டிற்கு முன்பே தென்னிந்தியர் மட்கலத் தொழிலில் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆனால் கலை நயத்துடன் கூடிய ரோமானியத் தொழில் நுட்பம் கி.மு. 200-ஆம் ஆண்டில்தான் தென்னிந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கி.மு. 100-ஆம் ஆண்டைச் சேர்ந்த ரௌலெட்டெட் மட்கலத்தில் (ஆந்திரா-சாலிகுண்டம்) பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன.[15] மேலும் தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிசா ஆகிய கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் ரௌலெட்டெட் போலிகள் மிகுதியாகக் கிடைப்பதைக் கருத்தில்கொண்டு இவை ரோமானியரின் செல்வாக்கால் உள்நாட்டிலேயே வனையப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். எனவேதான், அரிக்கமேட்டு ரௌலெட்டெட் கலன்கள் (போலிகள்) உள்நாட்டில் செய்யப்பட்ட 'மாதிரி ரௌலெட்டெட்' (Model Rouletted) ஆகும் என்று விமலா பெக்லி தமது அகழ்வாய்வின் மூலம் உறுதிப் படுத்துகின்றார்.[16]

### உள்நாட்டு மட்கலன்கள்

உள்நாட்டு மட்பாண்டங்களைப் பெரும்பாலும் அவற்றின் வண்ணங்களின் அடிப்படையில்தான் தொல்பொருள் ஆய்வாளர்கள் பாகுபாடு செய்துள்ளனர். அவையாவன,

1. கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Black & Red Ware)
2. இரசட் கலவையும் வண்ணமும் பூசப்பட்ட மட்பாண்டங்கள் (Russet Coated and Painted Ware)

14. சு. தில்லைவனம் 1990:76 15. Vimala Begley 1992 : 127 16. Vimala Begley 1996 : 440

Tamil Heritage Foundation International (THFi)

3. கறுப்பு நிற மட்பாண்டங்கள் (All Black Ware)
4. பழுப்பு நிற மட்பாண்டங்கள் (Brown Ware)
5. சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Red Ware)

என்பனவாகும். இத்தகைய மட்பாண்டங்களும் அவற்றின் சிதைவுகளும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இவற்றுள் சாம்பல் நிற மட்கலன்கள் பழங்கால மண்ணடுக்குகளில் கிடைப்பதால் அவை மிகவும் தொன்மையானவை என்று கருதப்படுகின்றன. கறுப்பு, சாம்பல் வண்ண மட்கலன்களும், கறுப்பு-சிவப்பு வண்ண மட்கலன்களும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இவை தவிர, சிவப்பு நிற மட்கலன்கள் எல்லாப் பண்பாட்டுக் காலப் படிவங்களில் கிடைத்தாலும் பழங்கால மண்படிவங்களில் குறைவாகவே காணப்படுகின்றன.

மட்கலன்களை வடிவம், செய்பொருள், காலம், கலையமைப்பு, வரலாற்றுப் பதிவு ஆகிய ஐந்து நிலைகளில் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. அரிக்கமேட்டில் புதையுண்ட ஓடுகள் இவை ஐந்தையும் உள்ளடக்கிய பலதரப்பட்ட தரவுகளாக விளங்குகின்றன. மட்பாண்டங்களை அவற்றின் செய்முறை மற்றும் தன்மைகளின் அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிப்பர். அவை,

1. நன்கலன் (Fine Ware)
2. வன்கலன் (Coarse Ware)

என்பனவாகும். இவற்றுள் வன்கல வகையே காலத்தால் முற்பட்டது. சொரசொரப்பாகவும் கரடுமுரடாகவும் விளங்கும் இவை கி.மு. முதல் நூற்றாண்டினவாக அரிக்கமேட்டில் கிடைக்கின்றன. நன்கலன்கள் நன்கு குழைத்து, மிருதுவான களிமண்ணால் வனையப்பட்டு மிதமான சூட்டில் வேக வைக்கப் பட்டவையாகும். இவை பல தொழிலகங்களில் செய்யப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய நன்கலனில் ரௌலெட்டெட் புனைவுகளுடன் கூடிய தட்டு ஒன்றும், கோப்பை ஒன்றும், சாடிகள் பலவும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன.

**கூர்முனைச் சாடிகள் (Conical Jars)**

அடிப்பகுதி வட்டமான கூர்முனையுடனும் மேற்பகுதி அகன்று உயர்ந்து சற்றே சிறுத்து அதன் நடுவில் சிறிய துளையுடன் காணப்படும் சாடிகளுக்குக் கூர்முனைச் சாடிகள் என்று பெயர். இத்தகைய



சாடிகளின் மேற்புறத்தில் மூடியோ அடைப்பானோ கிடைக்காததால் எவ்வாறு அதன் உள்ளே திரவத்தை நிரப்பினார்கள் என்றும் எவ்வாறு வெளியேற்றினார்கள் என்றும் அறிய முடியவில்லை. கூர்முனைச் சாடிகள் அனைத்தும் மிதமான களிமண்ணைக் கொண்டு கைகளால் செய்யப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவற்றின் வெளிப்பகுதி வழவழப்பாகவும் உட்பகுதி சொரசொரப்பாகவும் உள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்ததைப் போன்ற கூர்முனைச் சாடிகள் காரைக்காடு, வசவசமுத்திரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. காலத்தைத் தெளிவாகக் காட்டும் தொல்பொருட் சின்னங்களுள் கூர்முனைச் சாடியும் ஒன்று. இவை கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

**களி மண் கூஜா (சேமச் செப்பு)**

களிமண்ணால் செய்யப்பட்ட கூஜா ஒன்று அரிக்கமேட்டு அகழ்வாய்வில் முழுமையான வடிவில் கிடைத்துள்ளது. ஆப்பிரிக்கா கண்டத்தில் அல்ஜீரியா, துய்னிசி, மொராக்கோ ஆகிய நாடுகளிலும் இவ்வகைக் களிமண் கூஜாக்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை வெப்பமண்டல நாடுகளாகையால் களிமண்ணால் செய்யப்பட்ட கூஜாக்களில் குளிர்ந்த நீரைச் சேமித்து வைத்துக் கொண்டு பருகுகின்றார்கள். இவ்வகைப் பாண்டங்களில் சிறப்புப் பெற்றது அல்கரசா (Alcorazas) என்னும் மட்பாண்டமாகும்.[17] அல்கரசா வகைப் பாண்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் அரிக்கமேட்டுக் களிமண் கூஜா அமைந்துள்ளது. சங்ககால மக்கள் பனிக்காலப் பருவத்தில் வெந்நீரை அதன் வெப்பநிலை மாறாமல் சேமித்து வைத்து, பருகப் பயன்படுத்தி வந்த கலமான 'சேமச் செப்பு'[18] பற்றிய கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

அரிக்கமேட்டின் வடபகுதியில் தண்ணீர்ச் சாடிகளாகவோ மதுச் சாடிகளாகவோ பயன்படுத்தப்பட்ட பல சாடி ஓடுகளும் அவற்றிலிருந்து நீர் வெளியேற்ற வைக்கப் பட்டிருந்த துருத்தி (Spouts with Water Jars) போன்ற அமைப்புகளும் விமலா பெக்லி அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. புனைவு செய்யப்பட்ட துருத்திகளுடன் கூடிய அரிக்கமேட்டு நீர்ச்சாடிகள் போன்றே கங்கைகொண்ட சோழபுரத்திலும் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) கிடைத்துள்ளன. அரிக்கமேட்டிற்குத் தெற்கே 12 கி.மீ. தொலைவில் உள்ள மணப்பட்டு கிராமத்தில் மேற்பரப்பில்

17.புதுவைச்செய்திகள் ஜூன்-1969:15 18.குறுந்.227:5

Tamil Heritage Foundation International (THFi)

சேகரிக்கப்பட்ட பானை ஓடுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இடைக்காலத்தைச் சேர்ந்த (கி.பி. 10 - 11ஆம் நூற்றாண்டு) இவற்றின் உட்புறம் சொரசொரப்பாக இருப்பதன் பொருட்டுச் சிறுசிறு புள்ளியிடப் பட்டவையாகக் (கீரை கடையும் சட்டி போன்று) கிடைத்துள்ளன. புனையப்படாத தன்மையில் வனையப்பட்ட இவ்வகை (மருத்துவ) மட்கலன்கள் பச்சிலை அரைப்பதற்காகவோ பொடி செய்வதற்காகவோ பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.[19] அரிக்கமேடு தவிர மணப்பட்டு, காரைக்காடு, அழகன்குளம் ஆகிய இடங்களிலும் இவை கிடைத்துள்ளன.

### மட்கலக் கோப்பை

வட்டமான கோடுகள் வரையப்பட்ட இரண்டு கற்றைக் கோடுகளுக்கிடையே மீன், பறவை போன்ற உருவ அச்சுக்கள் பதிக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டு, உட்புறம் வழவழப்பாகக் காட்சி தரும் கோப்பை ஒன்று அரிக்கமேட்டில் விமலா பெக்லியின் அகழ்வாய்வில் கிடைத்துள்ளது. வெளிப்புறத்தில் எவ்வித அலங்காரமும் இன்றிச் சொரசொரப்பாகக் கறுப்பு நிறத்தில் காணப்படும் இவை கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று கணிக்கப்பட்டுள்ளது.[20] ஆந்திராவில் சந்திரகே துர்க்கிலும் தமிழ்நாட்டில் அழகன்குளத்திலும் இத்தகைய அலங்காரப் புனைவுகளுடன் கூடிய மட்கலக் கோப்பைகள் கிடைத்துள்ளன. காஞ்சிபுர அகழ்வாய்வில் மது / கள் குடிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ள அடிநிலையுடன் கூடிய இரண்டு மண் கோப்பைகள் (Pedestel Cups) கிடைத்துள்ளன. இவை இக்காலக் கண்ணாடி மதுக்கோப்பை போன்று காட்சியளித்தல் குறிப்பிடத்தக்கது.

### பல்வகை மட்கலன்கள்

அரிக்கமேட்டில் கிடைத்துள்ள உள்நாட்டு மட்கலன்கள் பல வடிவங்களில் வனையப்பட்டுள்ளன. குழல் வடிவிலான குடுவை, வட்டில்கள், அகல வாயுள்ள பாண்டங்கள், குமிழ் வடிவிலான சிறிய பானைகள், சிறுகுவளைகள், சட்டிகள், கிண்ணிவாய்மூக்குப் பானைகள் என்று அக்கால மக்களின் இரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப வனையப்பட்டுள்ளன. சில பானைகள் கொள்ளளவைக் கணக்கிடுவதற்கு ஏற்ப வனையப் பட்டுள்ளன. சில மட்பாண்டங்கள் பளபளப்பாகச்

19. Vimala Begley 1996:202    20. Vimala Begley 1996: 257



சாந்து பூசியதுபோல் காணப்படுகின்றன. இத்தகைய இனத்தில் ஒன்று கூட முழுமையாகக் கிடைக்கவில்லை.

சாடிகளுக்கு மட்டுமின்றிப் பலதரப்பட்ட பாத்திரங்களுக்கும் மட்கல மூடிகள் செய்யப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த சில மூடிஓடுகளில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் தெளிவில்லாமல் காணப்படுகின்றன. சிறு சிறு துளையிடப்பட்ட வடிதட்டுகளும், நுண்ணிய கண்கள் அமைக்கப்பட்ட சல்லடைகளும், நடுத்தர, பெரிய துளைகளுடன் கூடிய மட்கலத் தட்டுக்களும் வெவ்வேறு பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. வீலர், கசால் அகழ்வாய்வில் கைப்பிடியுடன் கூடிய கலன்கள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. சமைப்பதற்கும் பரிமாறுவதற்கும் பயன்படுத்தப்பட்ட இத்தகைய பாத்திரங்கள் வெளிநாட்டுக் கலன்களின் செல்வாக்கால் உள்நாட்டில் வனையப்பட்டவையாகும்.

### பண்டசாலை (கட்டடப்) பகுதிகள்

அரிக்கமேட்டு அகழ்வாய்வுகள் வெளிப்படுத்திய கட்டடப்பகுதிகளுள் முதன்மையானது பண்டசாலை (Ware house) ஆகும். அரிக்கமேட்டின் வடபகுதியில் நடைபெற்ற அகழ்வாய்வில்தான் பண்டசாலையின் சுவர்கள் வெளிக்கொணரப்பட்டன. செவ்வக வடிவம் கொண்ட இப்பண்டசாலை 45மீ. நீளமும் 11மீ. அகலமும் உடையதாகும். இக்கட்டடத்தின் வடபகுதியில் 18மீட்டர் நீளமுள்ள மற்றொரு பொருட்கிடங்கு காணப்படுகின்றது. இக்கட்டடப் பகுதிகள் மிகவும் அகலமான சுவர்களால் கட்டப்பட்டுள்ளன. சதுர வடிவம் உள்ள வலுவான பெரிய செங்கற்களால் இச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. (இத்தகைய செங்கற்களுள் சில இன்றும் புதுவை அருங்காட்சியகத்தில் காட்சிப்பொருளாக வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன).

பண்டசாலைச் சுவர்கள் ஆற்றங்கரையை நோக்கிய நிலையில் கட்டடப்பட்டுள்ளன. கசால் மேற்கொண்ட தென்பகுதி அகழ்வாய்வில் அரியாங்குப்பத்து ஆற்றின் கிழக்குப் பக்கமாக 27 மீட்டர் நீளமுள்ள சுவர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[21] இச்சுவர் செயற்கை நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டுசெல்லும் வாய்க்காலின் வெளிப்புறச் சுவராகக் கருதப்படுகின்றது. இவ்வாய்க்கால் சுடுமண் உறைகிணற்றில் சென்று முடிவடைகின்றது. எனவே இந் நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர்

21. சு. தில்லைவனம், 1990:106

Tamil Heritage Foundation International (THFi)

கொண்டுவரும் வாய்க்காலாக இது பயன்படுத்தப் பட்டிருக்கலாம். வீலரால் அகழ்வாய்வு செய்த அரிக்கமேட்டின் வடபகுதியில் மிகுதியான பானை ஓடுகளும் சுடுமண் பொருட்களும் கிடைத்துள்ளன. எனவே இப்பகுதி இன்றியமையாத பண்டசாலையாக அல்லது வணிக வளாகமாக இருந்திருக்க வேண்டும்.[22] இப்பகுதியை மேலும் அகழ்வாய்வு செய்தால் முழுமையான பண்டசாலைப் பகுதிகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

**கழிவுநீர் வாய்க்கால்**

பண்டசாலையை ஒட்டியும் துணிகட்குச் சாயம் தோய்க்கும் தொழிலகத்தை ஒட்டியும் கழிவு நீர் செல்ல சிறு சிறு (சாக்கடை) வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல சிறிய சாக்கடை வாய்க்கால்கள் எல்லாம் பெரிய கழிவுநீர்க் கால்வாயில் கலக்கும் வண்ணம் கட்டப்பட்டிருப்பது இவற்றின் தனிச்சிறப்பாகும். நிலத்தின் மட்டத்திற்கேற்பக் கழிவுநீர் செல்லும் கால்வாயின் வாட்டம் சாய்வாகவும் பொறியியலார் வியக்கும்படியும் அமைக்கப் பட்டுள்ளது. சாக்கடை வழியானது 38 செ.மீ. அகலமும் 45 செ.மீ உயரமும் உடையதாகக் கட்டப்பட்டுள்ளது. வாய்க்காலின் பக்கவாட்டில் சிதைந்த செங்கற்களும் நயப்பான களிமண்ணும் சேர்ந்து காணப்படுவதால் நீள்சதுரச் செங்கற்களால் களிமண் சாந்துகொண்டு இவற்றை அமைத்திருக்க வேண்டும்.

'சிந்து சமவெளி நாகரிகத்தின் வெளிப்பாடான மொகஞ்சதாரோவில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் அமைப்புகளைப் போன்றே அரிக்கமேட்டிலும் ஒழுங்கான அளவுக்கு உட்பட்ட சாக்கடை வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன' என்று கிதார் நாத்பூரி தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.[23] அரிக்கமேட்டு அகழ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட சாக்கடை வாய்க்கால்களுள் மிகவும் தொன்மையாகவும் நீளமாகவும் அமைந்துள்ளது 4.5மீ. பக்க அளவுள்ள வாய்க்காலே ஆகும்.

**சங்கு அணிகள்**

புனைவு செய்யப்பட்ட சங்கு ஓடுகள் அரிக்கமேட்டில் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. வீலர் அகழ்வாய்வில் புனைவு செய்யப்படாத சங்கு வளைகள், மணிகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

22 Vimala Begley 1988 : 440 23.புதுவைச் செய்திகள் அக்-1969:15



புதுவை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சங்கு மணிகள் உண்மையில் சிதைந்துபோன கண்ணாடி மணிகள் ஆகும். பெரிய அளவிலான கிளிஞ்சல், சங்கு ஆகியவற்றை அறுத்து அவற்றை வட்டமாக்கிச் சங்கு வளைகள் செய்துள்ளனர். அறுக்கப்பட்ட இத்தகைய கிளிஞ்சல் துண்டுகளும் வீணான உதிரிகளும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

வீணான உதிரிகளுடன் கலந்து சில சங்குகள் முழுமையாகக் கிடைத்துள்ளன. ஆனால் அவை கடற்பாசியினால் துளைக்கப்பட்டு, தேன்கூடு போன்று ஆகிவிட்டதால் அவற்றைப் பயன்படுத்தவில்லை. சில மெல்லிய வகைச் சங்குகளைச் சிறு சிறு துண்டுகளாக அறுத்துக் காதணியாகவோ கைப்பிடியாகவோ செய்து பயன்படுத்தியுள்ளமை தெரியவருகின்றது.

பிறை வடிவில் அறுக்கப்பட்ட மெல்லிய சங்கு வளையுடன் மூங்கிலை இணைத்துக் கைப்பிடிகள் செய்துள்ளனர். சங்குகள், கிளிஞ்சல்களை அறுக்கப் பயன்படும் 'இரும்பு அரம்' ஒன்றும் விமலா பெக்லி அகழ்வாய்வில் கிடைத்துள்ளது.[24] பிறைவடிவிலான இத்தகைய இரும்பு அரம் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மூங்கில் பிடிகளைக் கொண்டுள்ளது. காதணியாகவோ, அலங்காரப் பொருளாகவோ பயன்படுத்தும் வகையில் சில சங்கு ஓடுகள் பிறைவடிவில் அறுக்கப்பட்டு முனைப்பகுதிகளில் துளையிடப்பட்டுள்ளன. புதுவை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்க பட்டுள்ள சங்குவளைகளும் மணிகளும் வீலருடைய அகழ்வாய்வில் கண்டெடுக்கப் பட்டனவாகும்.

**மணி வகைகள்**

அரிக்கமேட்டுப் பகுதியில் அகழ்வாய்வு நடத்துவதற்கு அங்குக் கிடைத்த பழங்கால மணிகளே மூலக்காரணமாக அமைந்தன. அரிக்கமேட்டு அகழ்வாய்வுப் பகுதியின் வடக்கில் உள்ள தென்னந் தோப்பில்தான் மிகுதியான அளவிற்கு மணிகள் கிடைத்துள்ளன. கி.மு. 1000-ஆவது ஆண்டிலேயே வட இந்தியாவில் கண்ணாடி மணிகள் தயாரிக்கப் பட்டதற்கான சான்றுகள் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. மணி உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் தென்னிந்தியாவின் தலைசிறந்த இடங்கள் அரிக்கமேடு மற்றும் பிரம்மகிரி ஆகியன. காரைக்காடு, அழகன்குளம், கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், கொடுமணல் ஆகிய

24.Vimala Begley 1996 : 394

Tamil Heritage Foundation International (THFi)

ஊர்களும் பண்டைக்கால மணித்தொழிலில் முன்னணி இடம்பெற்றுள்ளன. காரைக்காட்டில் கண்ணாடி மற்றும் உலோகம் உருக்கப் பயன்படுத்தப்படும் சுடுமண் குழாய், தடிமனான மட்கலன், உருக்கியபின் எஞ்சும் கசடுகளும் கிடைத்துள்ளன. சிறிய உள்ளீடு உள்ள கண்ணாடி மணிகளும் மற்றும் அவற்றின் தொழில்நுட்பமும் அரிக்கமேட்டிலிருந்து கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியா நாடுகளுக்குப் பரவியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[25]

### மணி தயாரிப்பில் மூலப் பொருட்கள்

உலகிலேயே மணிதயாரிப்புத் தொழிலில் மிகவும் பழைமையான (கி.மு. 1400) இடம் எகிப்து நாட்டில் உள்ள அமர்னா (Amarna) என்பதாகும். வரலாற்றுக்கு முட்பட்ட காலத்தில் கண்ணாடி மணி தயாரிப்புக்கான மூலப் பொருட்கள் கி.மு. முதல் நூற்றாண்டில் எகிப்து நாட்டிலிருந்துதான் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று பெரிப்புளுசு நூல் குறிப்பிட்டுள்ளது[26]. இந்தியாவில் முதன் முதலாக எகிப்து நாட்டிலிருந்து அரிக்கமேட்டிற்கு இறக்குமதியான நீலக்கல் (மணி) கிடைத்துள்ளது.

இவை போன்ற மணிவகைகள் கி.மு. 3000-ஆம் ஆண்டிற்கு முன்பே எகிப்திலிருந்து மெசபடோமியா, மொகஞ்சதாரோ ஆகிய பகுதிகளுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ரோமானியர் வருகைக்கு முன்பே அரிக்கமேட்டில் மணிகள் செய்யும் தொழில் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது. சீனா போன்ற வெளிநாடுகளிலிருந்து மணித் தயாரிப்பிற்கான மூலப் பொருட்களைத் தருவித்து, உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு அரிக்கமேட்டில் மணிகள் உற்பத்தி செய்து ஏற்றுமதி செதுய்துள்ளனர்.

### அரிக்கமேடு மணி ஆய்வு

வீலர், கசால் ஆகியோரின் அகழ்வாய்வில் மணிவகைகள் கிடைத்திருப்பினும் அவர்கள் அதில் மிகுந்த கவனம் செலுத்தவில்லை. பீட்டர் பிரான்சிஸ் 1986-ஆம் ஆண்டில் மணி ஆய்வில் தேர்ச்சிபெற்ற ஒரு குழுவினருடன் அரிக்கமேட்டிற்கு வந்து அகழ்வாய்வு நடத்தினார். அரிக்கமேட்டுப் பகுதியில் பதினைந்து இடங்களில் மிகப் பெரிய அளவில் நிகழ்த்தப்பட்ட இவ்வகழ்வாய்வில் 40 கிலோ எடையுள்ள

25. D. Janaki 2000 : 9   26. E. Marianne Stern 1987 : 347



40,000 மணிகள் கிடைத்துள்ளன. இம்மணிகளை அவற்றின் தரத்திற்கும் நிறத்திற்கும் ஏற்ப இருநூற்றுக்கும் மேற்பட்ட மணி வகைகளாகப் பாகுபாடு செய்து கணக்கிட்டுள்ளனர்.

கண்ணாடி மணிகளில் மட்டும் ஆறு மி.மீ நீளமுள்ள 4244 சிறிய, பளபளப்பான கண்ணாடி மணிகள் (Mono Chrome Glass Beads) இங்குக் கிடைத்துள்ளன. இக்கண்ணாடி மணிகளின் காலத்தை மதிப்பீடு செய்த பீட்டர் பிரான்சிஸ் கி.மு. 300-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1700-ஆம் ஆண்டுவரை என்று வரையறை செய்துள்ளார்.[27] பண்டைக்காலத்தைச் சேர்ந்த இத்தகைய மணிகள் அரிக்கமேடு தவிர இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும் இலங்கை (மாந்தை - Mantai), தாய்லாந்து (Khlong Thom-Takuapa), வியட்நாம் (Oceo), இந்தோனேஷியா (Palembang), மலேசியா(Shangai-Mas) ஆகிய நாடுகளிலும் அரிக்கமேட்டின் தொழில் நுட்பத்துடன் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

### அரிக்கமேடு மணி வகைகள்

சங்கு, கண்ணாடி, எலும்பு, தங்கம், இரத்தினக்கற்கள், போலி புஷ்பராகக் கற்கள், பளபளப்பான பாறைப் படிகக் கற்கள், சுடுமண் ஆகிய பொருட்களில் தயாரான மணிவகைகளும் அவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இவை தவிர பளிங்கு, சூதுபவழம் (Carnelian), இரவாய்க் கெம்புக்கல், கோமேதகப் படிகக்கல் (Onyx), செவ்வந்திக்கல், நெருப்புக்கல், குருவிந்தக்கல், பால்நிறப் படிகக்கல் ஆகியவற்றாலும் மணிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மணிவகைகளுள் முற்றுப்பெறாத கலைநயமும் தொழில்நுணுக்கமும் கொண்ட கற்களும் மணிகளும் கிடைத்திருப்பதால் முற்காலத்தில் மணி உருவாக்கும் தொழிலகமும் அரிக்கமேட்டில் இயங்கி வந்திருக்க வேண்டும். இக்கூற்றை உறுதி செய்யும் வண்ணம் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் மணிகளைத் துளையிடுவதற்குரிய கருவியும் சாணை தீட்டும் கல்லும் கிடைத்துள்ளன.[28]

கோமேதகக் குமிழ்மணி (Onyx Beads), கோமேதக உருள்மணி (Sardonyx Beads) வகைகள் அரிக்கமேட்டில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட வில்லை. இங்கே நடைபெற்ற அகழ்வாய்வில் சில கோமேதக மணிவகைகள் மட்டும் கிடைத்துள்ளன. மிகச் சிறந்த வேலைப்பாடு கொண்டதும் மெல்லியதுமான பல நிற அடுக்குள்ள

27. Jr. Peter Francis 1987 : 10   28. சு.தில்லைவனம் 1990:93

Tamil Heritage Foundation International (THFi)

கோமேதகக் கிண்ணம் (Onyx Cup) ஒன்றின் ஓடு கிடைத்துள்ளது. இவ்வோட்டின் பளபளப்பும் கறுப்பு - வெள்ளை வண்ணமும் மேலும் இதனை அழகு படுத்தியுள்ளன. கோமேதகத்தால் செய்யப்பட்ட இத்தகைய கிண்ண வகைகள் அக்காலத்தில் ரோமானிய நாட்டில் மிகவும் போற்றப்பட்டுள்ளன.

இரத்தின (Beryl) மணிவகைகளைப் பொறுத்தமட்டில் கோயம்புத்தூர் பகுதிதான் (கொடுமணல்) பழங்காலத்தில் மிகவும் புகழ்பெற்றிருந்தது. 1985-ஆம் ஆண்டு கோவையருகே உள்ள வெள்ளலூரில் (Vellalore) கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய நாட்டுத் தங்க நகை ஒன்றும், ரோமானிய தினாரி அடங்கிய புதையல் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[29] சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை ஆகியோர் காலத்தில் கொடுமணல் மணித் தொழிலுக்குச் சிறப்பு பெற்ற ஊராக இருந்துள்ளமை பற்றிச் சங்க இலக்கியம் குறிப்பிட்டுள்ளது.[30] அதே போன்று இரத்தினக் கல்லுக்குப் பெயர்பெற்ற (கொடுமணல் அருகில் உள்ள) பாடியூர் பற்றித் தாலமி குறிப்பிட்டுள்ளார்.

அரிக்கமேட்டில் இரத்தினங்களைப் போன்று தோற்றமளிக்கும் போலி இரத்தினமும் போலி புஷ்பராகமும் பளபளப்பான கற்களால் (Semi-Precious Stones) செய்யப்பட்டுள்ளன. கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் சுற்றுப் பயணம் புரிந்து வந்த பிளினி (Pliny) பலவகைக் கற்களில் மணி தயாரித்து வந்த தொழில் பற்றிக் கூறும்போது, 'இந்திய மக்கள் தம்முடைய மணி தயாரிப்புத் தொழிலின்போது படிகக் கற்களுக்கு வண்ணம் ஏற்றுவதிலும் பளபளப்பான கற்களில் போலி இரத்தினங்களை உருவாக்குவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்' என்று கூறுகின்றார்.[31] அரிக்கமேட்டுக் கண்ணாடி மணிகளுள் சில ஒளியை ஊடுருவ விடாதனவாகவும் (Opaque) சில ஒளியை ஊடுருவச் செய்வனவாகவும் (Translucent) அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

அரிக்கமேட்டில் கிடைத்த கண்ணாடி மணி வகைகளுள் மடிப்பு மணிகள் (Folded Beads) தனித் தொழில்நுணுக்கம் உடையனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய மடிப்பு மணிகள் இந்தியாவில் மட்டுமின்றி மத்தியத் தரைக்கடலின் கிழக்குப்பகுதி, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்துள்ள கண்ணாடி மடிப்பு மணிகள் முற்காலத்தில் எங்ஙனம் செய்யப்பட்டன என்பது மேலும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

29. Vimala Begley 1992 : 7 30.பதிற்.64:1.,74:5 31. Jr. Peter Francis, 1987 : 10



ஊடுருவிப் பார்க்க இயலாத மங்கிய நிறமுடைய கண்ணாடி மணிகள் கோளம், உருளை, நீள் உருளை, கோழி முட்டை, கூம்பு, இரட்டைக் கூம்பு, தட்டையான சதுரம் மற்றும் செவ்வகம் போன்ற வடிவங்கள் கொண்டவையாக விளங்குகின்றன. சில மணிகள் கழுத்தமைப்பு (Collar Beads) கொண்டவையாக உள்ளன. ஒரு சில மணிகளில் நீள வாட்டத்திலும் வேறு சில மணிகளில் குறுக்கு வாட்டத்திலும் வரிக்கோடுகள் போடப்பட்டுள்ளன.

**கண்ணாடிப் பொருட்கள்**

சங்க இலக்கியத்தில் குயவர்கள் கலம் செய்கோ என்றும் வேட்கோ என்றும்[32] என்று அழைக்கப்பட்டுள்ளனர். இத்தொழிலில் இவர்களுடைய சிறுவர்களும் இவர்களுக்கு ஒத்துழைப்பு அளித்துள்ளனர். சங்ககாலத்தில் கண்ணாடிப் பத்திரங்களை மக்கள் பயன்படுத்தியதாகச் சங்க இலக்கியத்தில் எங்கும் குறிப்புகள் காணப்படவில்லை. ஆனால் முகம் பார்க்கும் ஆடி பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன. கோலம் புனையும் மகளிர் தங்கள் செயற்கை அழகைப் பார்ப்பதற்காகக் கண்ணாடியைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை நிழல் காண் மண்டிலம் என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.

*நிழல் காண் மண்டிலம் நோக்கி*
*அழல்புனை அவிர்இழை திருத்துவாள் குறிப்பும்*[33]

கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவை போல என்று குறுந்தொகையும் குறிப்பிடுகின்றது.

கண்ணாடி மணி வகைகளைப் போன்று கண்ணாடிப் பாத்திரங்கள் / சீசாக்கள் மிகுதியான அளவில் அரிக்கமேட்டில் கிடைக்கவில்லை. எகிப்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரேபிய வாசனைத் திரவம் நிரப்பப்பட்ட நீலவண்ணக் கண்ணாடிச் சீசாக்கள் /குப்பிகள் அரிக்கமேட்டிலும் சாதவாகனப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு தவிர தொண்டி, முசிறி, அழகன்குளம், வசவசமுத்திரம் ஆகிய இடங்களில் கண்ணாடியின் மூலப்பொருட்கள் கிடைத்துள்ளன. முசிறி, தொண்டியிலிருந்து பாலக்காட்டுக் கணவாய் வழியாக ரோமானியக் காசுகள் சோழமண்டலக் கரைக்குக் கொண்டு வரப்பட்டதைப் போன்று கண்ணாடிப் பொருட்களும் அதன் மூலப்பொருட்களும் அரிக்கமேட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

32.புறம்.228:1,32:3 33.பரி 21:23-24

Tamil Heritage Foundation International (THFi)

செங்கடல் துறைமுகமான லெகோஸ் லைமென் (Leukos limen) பகுதியில் சிறியதும் பெரியதுமான கண்ணாடித் தொழிற்சாலைகள் கி.மு. முதல் நூற்றாண்டில் இயங்கி வந்துள்ளன.[34] இங்கிருந்து சிறந்த தொழில் நுணுக்கத்துடன் கூடிய கண்ணாடிப் பொருட்கள் தெற்கு அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் அரிக்கமேட்டிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் இறக்குமதி செய்யப்பட்ட உயர்தரக் கண்ணாடிப் பொருட்கள் கிடைத்துள்ளன. மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெறும் கண்ணாடியால் செய்யப்பட்ட பளிக்கறை பற்றிய குறிப்பும் ஈண்டு எண்ணிப் பார்க்கத்தக்கது.

கி.மு.2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனக்குறிப்பு ஒன்று காஞ்சிபுரத்திலிருந்து ஏற்றுமதியான கண்ணாடிப் பொருட்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.[35] எகிப்திலிருந்தும் அரேபியாவின் 'மூசா' (Mouza)விலிருந்தும் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இறக்குமதியான வண்ணக் கண்ணாடிகள் மற்றும் அதன் மூலப்பொருட்கள் வசவசமுத்திரம் அரிக்கமேட்டுப் பகுதிகளுக்குக் கொண்டுவரப்பட்டு மணிகளாகவும் பொருட்களாகவும் வடிவமைக்கப்பட்டுப் பின்பு சீனாவிற்கு ஏற்றுமதி ஆகியுள்ளன.

குழைவான களிமண்ணால் செய்யப்பட்ட சீசா ஒன்றும் அரக்கு வண்ணக் கண்ணாடியால் குமிழ்வடிவில் செய்யப்பட்ட சீசா ஒன்றும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன.[36] இறக்குமதி வகையைச் சேர்ந்த இவற்றை ரோமானியர் வாசனைத் திரவம் அல்லது தைலவகை கொண்டுவரப் பயன்படுத்தியிருக்கலாம். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இத்தாலியின் மத்திய அல்லது வடக்குப் பகுதியில் இவை செய்யப்பட்டிருக்கலாம். இத்தாலியிலிருந்து களிமண் சீசாக்கள் கி.பி. முதல் நூற்றாண்டிலும் கண்ணாடிச் சீசாக்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம்.

வீலருடைய அகழ்வாய்வில் கிடைத்த உடைந்த கண்ணாடிக் கோப்பையின் நான்கு துண்டுகள் புதுவை அருங்காட்சியகத்தில் உள்ளன. வெளிப்புறத்தில் விளிம்புகளுடன் கூடிய வளைவுகளும் உட்புறத்தில் வட்டமாகப் புனையப்பட்ட இரண்டு கோடுகளும் கொண்ட இக்கண்ணாடிக் கோப்பைத் துண்டுகள், மஞ்சள் கலந்த அரக்கு வண்ணத்தில் உள்ளன. இறக்குமதி வகையைச் சேர்ந்த இக்கோப்பை கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. மேற்கு

34. Vimala Begley 1992 : 2   35. Ibid : 117   36. Vimala Begley 1996 : 367



ஐரோப்பாவைச் சேர்ந்த நீலநிறக் கண்ணாடிப் பாத்திரத்தின் உடைந்த துண்டு ஒன்றும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. இத்துண்டின் உட்புறம் இரண்டு வளைந்த கோடுகள் பதிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று அரிட்டைன் காலத்திற்கு முந்திய கண்ணாடிக் கோப்பையின் துண்டு ஒன்றும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. இது கி.மு.200க்கும் - கி.மு.100-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது.

மேற்கூறப்பட்ட மூன்று வகையான கண்ணாடிப் பாத்திரங்களைத் தவிர வேறு கண்ணாடிப் பாத்திரங்கள் அரிக்கமேட்டில் மட்டுமின்றித் தென்னிந்தியாவிலும் கிடைக்கவில்லை. சங்ககாலப் பாண்டிய மன்னர்கள் தங்கக் கோப்பைகளில் யவன மதுவை அருந்தினரே ஒழிய கண்ணாடிக் கோப்பையில் அன்று. மேலும் சங்க இலக்கியங்களில் பொற்கலன்கள் பற்றிய குறிப்புகள் உள்ளனவே தவிர, கண்ணாடிப் பாத்திரங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. எனவே தமிழர்கள் உண்கலன்களாகக் கண்ணாடிப் பாத்திரங்களைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. இக்கண்ணாடிப் பாத்திரங்கள் யாவும் அரிக்கமேட்டில் வணிகம் புரிந்த ரோமானிய வணிகர்கள் (அரிட்டைன் வகை போன்று) தமது சொந்தப் பயன்பாட்டிற்கென்றே கொண்டு வந்திருக்க வேண்டுமேயொழிய வணிக நோக்கத்திற்காக அல்ல என்பது தெளிவு.

**நாணயங்கள்**

ஒரு நாட்டின் பண்டைய வரலாறு ஆட்சிமுறை, கலையுணர்வு, நாகரிகம், பண்பாடு, பொருளியல் நிலை முதலானவற்றை அறிந்து கொள்வதற்கு நாணயங்களும் பேருதவி புரிகின்றன. பண்டமாற்று முறையிலிருந்து மனிதன் நாணயச் செலாவணி முறைக்கு மாறியது நாகரிகத்தின் வளர்ச்சியாகும். நாணயங்கள் நடைமுறைக்கு வரும் முன்பு 'கொரி' (Cauris) என்னும் பலகறைகளை (சோழிகள்) நாணயங்களுக்குப் பதிலாகப் பண்டைத் தமிழர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நாணயங்கள் செய்வதற்கு வெள்ளியும் செம்பும் பயன்படுத்தப்பட்டன. கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்தில் நாணயத் தயாரிப்பில் தங்கமும் செம்பும் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் நாணயங்கள் அச்சடிக்கும் தொழிற்சாலை இயங்கி வந்துள்ளமை அகழ்வாய்வின் மூலம் வெளிப்பட்டுள்ளது.[37] முத்திரைக் காசுகள் செய்வதற்கான இரு மண்வார்ப்புகள் காஞ்சிபுரத்தில்

37.நடன காசிநாதன் 1995:2

Tamil Heritage Foundation International (THFi)

கண்டெடுக்கப்பட்டுள்ளன. இரு வார்ப்புகளும் சாம்பல் நிறத்தில் காணப்படுகின்றன.

தொடக்ககாலத்தில் இந்தியாவில் முத்திரைக் காசுகள்தான் வெளியிடப்பட்டன. இவற்றில் எழுத்துக்கள் இல்லை. மரங்கள் போன்ற இயற்கை உருவங்களே பொறிக்கப் பட்டிருந்தன. தமிழகத்தில் முத்திரைக் காசுகள் நெல்லை முதல் சென்னை வரை பல இடங்களில் கிடைத்துள்ளன. கோவை, தருமபுரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் இவை மிகுதியாகக் கிடைக்கின்றன. இம்முத்திரைக் காசுகள்தான் வடமொழி இலக்கியங்களில் குறிக்கப்படும் 'புராண' என்னும் காசு வகையாகும் என்று கருதுவர்.[38] இவை மகத நாட்டை ஆட்சி செய்த நந்த, மௌரிய வம்சத்தினரால் வெளியிடப் பட்டவையாகும். கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நந்த, மௌரிய அரச வம்சம் பற்றிச் சங்க இலக்கியம் பாடியுள்ளது. எனவே இப்பாடல்களைப் பாடிய மாமூலனாரும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருத இடமுண்டு.

**உள்நாட்டு நாணயங்கள்**

சங்ககாலத்தில் முத்திரைக் காசுகள் உலோகத் தகடு அதன்மீது முத்திரை பதிக்கும் முறையில் மட்டுமல்லாது வார்ப்பு முறையிலும் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய சுடுமண் வார்ப்புக் கூடுகள் மதுரா, சிசுபால்கர், கொண்டாவூர் ஆகிய இடங்களிலும் கிடைத்திருக்கின்றன. 1962ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் மத்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் மேற்கொண்ட அகழ்வாய்வில் முத்திரைக் காசுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட இரண்டு வார்ப்புகள் (Terracotta Coin Moulds) கண்டெடுக்கப்பட்டுள்ளன.[39] இவற்றுள் ஒரு வார்ப்புக் கூட்டில் ஒரே சமயத்தில் நான்கு காசுகள் தயாரிக்கக் கூடிய வசதி உள்ளது. இவற்றின் உள்ளே காளை, சூரியன் ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. இவை கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் காணப்பெறும் திரும்பிய (Reverse) முத்திரை நிலையில் உள்ள உருவங்களாகும்.

'தமிழகம் அப்போது (கி.பி. 70) காசு அச்சடிக்கும் தொழில் நுணுக்கத்தை மிகுதியாக அறிந்திருக்கவில்லை'[40] என்னும் கூற்று பொருந்தாது. ஏனெனில் பண்டைக்காலத் தமிழகத்தில் சோழருக்குச் சமமாகப் பாண்டியரும் சேரரும் தத்தமது அரசியல் இலச்சினைகளுடன்

38.மே.நூல்:13. 39.நடன காசிநாதன் 2003:13-14 40. P.T. Srinivasa Iyangar 1989 305



சதுர வடிவிலான செப்புக் காசுகளை வெளியிட்டுள்ளனர். கொல்லிப்பொறை, மாக்கோதை, குட்டுவன் கோதை ஆகியோர் வெளியிட்ட காசுகள் கரூரில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றில் வில், அம்பு ஆகிய இலச்சினைகள் காணப்படுகின்றன. மதுரையில் கிடைத்த சதுர வடிவிலான செப்புக்காசில் இரட்டை மீன்களுடன் கூடிய இலச்சினையும் 'பெருவழுதி' என்று தமிழ்ப்பிராமியில் எழுதப்பட்ட எழுத்துக்களும் காணப்படுகின்றன.[41] தென்பெண்ணை ஆற்றங்கரையிலிருந்து சங்ககாலத்தைச் சேர்ந்த சதுர வடிவிலான செப்புக் காசுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் ஒருபக்கம் குதிரையின் உருவமும் மறுபக்கம் ஆற்றில் மீன் நீந்துவது போன்ற உருவங்களும் காணப்படுகின்றன. இக்காசுகள் திருக்கோவலூர்ப் பகுதியை ஆண்ட மலையமான்கள் வெளியிட்டவை.

பூம்புகாரில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் நிகழ்த்திய அகழ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்ட படகுத்துறையின் மீதிருந்து, சங்ககாலச் சோழருடைய காசு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்காசில் முன்பக்கம் யானையின் உருவமும் பின்பக்கம் புலி தனது வலதுகாலைத் தூக்கிய நிலையில் உள்ள உருவமும் காணப்படுகின்றன.[42] அரிக்கமேட்டிலும் இதே போன்ற புலி காலைத் தூக்கிய நிலையில் உள்ள உருவம் பொறிக்கப்பட்ட காசு கண்டெடுக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அழகன்குளத்தில் நிகழ்த்திய அகழ்வாய்வில் சங்ககாலப் பாண்டியர் காசுகள் கிடைத்துள்ளன. சதுர வடிவிலான இச்செப்புக்காசில் முன்பக்கம் யானை மற்றும் எண் மங்கலச் சின்னங்களும் பின்பக்கம் மீன் உருவமும் உள்ளன. இவை கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் வெளியிடப் பட்டவையாகும்.

கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் சங்ககாலச் சோழரால் வெளியிடப்பட்ட செப்புக்காசு அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. இச் செப்புக்காசின் ஒருபக்கத்தில் யானையும் குதிரையும் இடப்புறம் பார்த்துக் கொண்டிருக்க, 'ஸ்ரீவத்சா' (SriVatsa) குறியீடும் வெண்கொற்றக் குடையின் அடிப்பாகமும் தெரிகின்றன. மறுபுறம் சோழரின் இலச்சினையான புலியின் உருவம் முன்பக்க வலக்காலும், வாலும் உயர்த்திய நிலையில் காணப்படுகின்றது. 1962-ஆம் ஆண்டு காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற அகழ்வாய்வில் அரிக்கமேட்டில் கிடைத்தவை போன்ற செப்புக்காசுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

41.நடன காசிநாதன் 2003:20 42.மே.நூல்:21

Tamil Heritage Foundation International (THFi)

1985-ஆம் ஆண்டு இரா. கிருஷ்ணமூர்த்தி கரூரில் கிடைத்ததாகப் பழங்கால நாணயங்கள் அடங்கிய படங்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.[43] அப்பட்டியலில் இடம்பெற்றிருந்த செப்புக்காசுகள் பல அரிக்க மேட்டில் கிடைத்த (சங்ககாலச் சோழர்) செப்பு நாணயம் போன்று காட்சியளிக்கின்றன. ஆனால் இவை இரண்டிலும் ஒரு சிறிய வேறுபாடு காணப்படுகின்றது. கரூரில் கிடைத்த செப்புக்காசில் தேருடன் கூடிய குதிரை காணப்படுகின்றது. அரிக்கமேடு நாணயத்தில் தேர் இல்லை, குதிரையின் முன்பகுதி மட்டுமே காணப்படுகின்றது.

இவற்றை நோக்கும்போது சோழருடைய காசு, சேரநாட்டுப் பகுதியான கரூரிலும் செலாவணி ஆகிவந்த உண்மை வெளிப்படுகின்றது. வீலருடைய அகழ்வாய்வில் முதலாம் இராசராசன் காலத்திய (கி.பி. 985-1017) இரண்டு சோழ நாணயங்கள் கிடைத்துள்ளன.

இங்குக் கிடைத்த சோழ நாணயங்கள், கோழிக்காசுகள் ஆகியவற்றை நோக்கும்போது அரிக்கமேடு கி.பி. 10 - 12-ஆம் நூற்றாண்டு வரையில் வளர்ச்சியடைந்த சோழநாட்டுத் துறைமுகங்களுள் ஒன்றாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்ற உண்மை புலனாகின்றது.

**ரோமானிய நாணயங்கள்**

தமிழகத்தில் கோவை, தஞ்சை, மதுரை, சென்னை, தென்னார்க்காடு மாவட்டங்களில் ரோமானியக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள ரோமானியக் காசுகள் தங்கம்,வெள்ளி, செப்பு ஆகிய உலோகங்களில் செய்யப்பட்டவையே. காவிரிப் பூம்பட்டினத்தில் மட்டும் ஒரேஒரு ஈயக்காசு கிடைத்துள்ளது. இருப்பினும் வெள்ளிக் காசுகள்தான் அதிகமாகக் கிடைத்துள்ளன. தென்னாட்டில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய நாணயங்களுள் டைபீரியஸ் (Tiberius), கலிகுலா (Calicula), நீரோ(Nero) ஆகியோர் காலத்திற்குரியன பல. வெஸ்பேனியன் (Vesbenian), டைட்டடஸ் (Titus) ஆகிய மன்னரால் வெளியிடப்பட்ட நாணயங்கள் சில இந்தியா முழுவதும் கண்டெடுக்கப்பட்டன. தொமிசியன் (Domitian), நேவா(Nerva), திரேஜன் (Trajan), ஹாட்ரியன்(Hadrian), கொமொடஸ் (Commodus) காலத்து நாணயங்கள் சில கிடைத்துள்ளன. இம்மன்னர்கள் யாவரும் கி.பி. முதலாம் இரண்டாம் நுற்றாண்டுகளில் வாழ்ந்தவராவர்.

43. Vimala Begley 1996 : 391



சோழமண்டலக் கரையோரம் நெல்லூரிலிருந்து கடலூர் வரையுள்ள பகுதிகளில் ரோமானிய நாணயங்கள் (தங்கம், வெள்ளி, செப்பு) கிடைத்துள்ளன என்று சர். வல்டேர் எலியட் குறிப்பிட்டுள்ளார் (44. வரலாற்றுச் சுவடுகள் (தொ-1) 1980 : 36). தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலம் சந்திரவல்லி என்னும் ஊரிலும் கேரளாவில் எய்யல், கோட்டயம், கும்பளம், பாலக்காட்டுப் பகுதிகளிலும் தமிழ்நாட்டில் கோவை, தஞ்சை, சென்னை, மதுரை, தென்னார்க்காடு மாவட்டம் ஆகிய பகுதிகளிலும் ரோமானியக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் யாவும் ரோமாபுரியை ஆண்ட அகஸ்டஸ், டைபீரியஸ், கிளாடியஸ், மார்க்ஸ், அரிலஸ், பியாடோஷியஸ், டொமிட்டன், டியோடிஷியஸ், டியோக்கிளாடியஸ் ஆகிய மன்னர்கள் காலத்தனவாகும். இவை கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் வெளியிடப்பட்டவை என்று கணிக்கப்பட்டுள்ளன.

கரூரில் ஒரு குடத்தில் ஐந்நூறு வெள்ளிக்காசுகள் அடங்கிய புதையல் கிடைத்துள்ளது.[44] இவை அனைத்தும் முத்திரைப் பதிக்கப்பட்ட பழமையான காசுகள் ஆகும். தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் அருகிலுள்ள 'சொரையப்பட்டு' என்னும் கிராமத்தில் நூறு தங்கக் காசுகளும் சில அணிகலன்களும் அடங்கிய புதையல் கிடைத்துள்ளது.[45] இப்புதையலில் உள்ள காசுகள் அனைத்தும் நிரோச்சர் (கி.பி. 54-68), ஹாரியன்சி (கி.பி. 117-128), ஆஸ்போசியஸ் (கி.பி. 138-161) ஆகிய ரோமானிய மன்னர்கள் காலத்தனவாகும்.

அழகன்குள அகழ்வாய்வில் கிடைத்த மூன்று ரோமானியக் காசுகளில் ஒன்று இரண்டாம் 'வாலன்டைன்' காலத்தது என்றும் மற்றொன்று 'டியோடிஷியஸ்' காலத்தது என்றும் மூன்றாவது 'ஆர்க்கேடியஸ்' காலத்தது என்றும் கண்டறியப்பட்டுள்ளன. இவை மூன்றும் கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியைச் சேர்ந்தவையாகும். இவை தவிரக் (கி.மு. 69-ஆம் ஆண்டினவாகக்) கிரேக்க நாட்டு ரிபப்ளிக்கனைச் சேர்ந்த பல்பஸ் என்பவர் வெளியிட்ட வெள்ளிக்காசு ஒன்று கிருஷ்ணகிரியில் கிடைத்துள்ளது.. தஞ்சை மாவட்டத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனக்காசுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

ரோமானியப் பேரரசன் முதலாம் கான்ஸ்டன்டைன் (கி.பி. 306-323) உருவம் பொறிக்கப்பட்ட செப்புக்காசு ஒன்று அரிக்கமேட்டு

44.ப.பசவலிங்கம் 1984:166 45.நடன காசிநாதன் 1995:23

Tamil Heritage Foundation International (THFi)

மேற்பரப்பு மண்ணில் கிடைத்துள்ளது.[46] அரியாங்குப்பம் அங்காடியில் தனியார் ஒருவரால் விற்கப்பட்ட இக்காசை நாணயச் சேகரிப்பாளர் அசோக்குமார் என்பவர் வாங்கியுள்ளார். இந்நாணயத்தின் ஒருபுறம் கான்ஸ்டன்டைன் மன்னனின் தலைப்பகுதியும் மறுபுறம் நின்ற நிலையில் உள்ள சூரியக் கடவுளின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. துளையிடப்பட்ட நிலையில் காணப்படுவதால் இக்காசு நகையணியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். பிற்காலச் சோழர்கால நாணயங்கள் அரிக்கமேட்டின் மேற்பரப்பு மணற்பகுதியில் மிகுதியாகக் கண்டெடுக்கப்பட்டு புதுவை அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்தவையாக ரோமானிய நாணயங்களின் நிழற்படங்கள் புதுவை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அரிக்கமேட்டில் இதுவரை (1945-1993) நடைபெற்ற அகழ்வாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள ரோமானியக் காசுகளையும் இங்கிருந்து மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கு ஏற்றுமதியான வணிகப் பொருட்களையும் நோக்கும் போது தமிழகத்தில் ரேமானியக் காசுகள் கரன்சியாகவும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது என்னும் உண்மை புலனாகும். சில காசுகளின் தலைப்பகுதியில் வெட்டு அல்லது துளை காணப்படும். அத்தகைய காசுகள் மட்டும் கரன்சியாகப் பயன்படுத்தப் படாமல் அணிகலன்களுக்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். கி.மு. 3.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கக் காசுகள் தமிழகத்தில் கிடைத்திருக்கக் கூடும். தங்க வெள்ளி நகைகளின் மீது மோகங் கொண்ட தமிழர்கள் அவற்றை உருக்கி நகைகளாக மாற்றி அணிந்திருப்பர். ஆதலால் தான் அக்காசுகள் தமிழகத்தில் மிகுதியாகக் கிடைக்கவில்லை.

**சுடுமண் பொருட்கள் (Terracottas)**

அரிக்கமேட்டில் நடைபெற்ற பல அகழ்வாய்வுகளில் பல சுடுமண் பொருட்கள் (Terracottas) கண்டெடுக்கப்பட்டுள்ளன. சாதாரண களிமண்ணால் செய்யப்பட்ட இவை கரிபடியாமல் களிமண்ணின் தன்மை தெரியும்படி மிதமான சூட்டில் வேக வைக்கப்பட்டுள்ளன.

*சுடுமண் ஓங்கிய நெடுநிலை மாடம்*[47]

46. Vimala Begley 1996 : 6    47.சிலப்5:105



என்று சுடுமண்ணின் பயன்பாடு குறித்த கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. அரிக்கமேட்டில் கிடைத்த சுடுமண் பொருட்களில் கணேசர், தலையில் கங்கையும் நாகமும் உடைய சிவன் சிலை, ஒரு நடனப்பெண்ணின் சிலை, சமணத் தீர்த்தங்கரரின் உருவம் தலையில்லாத சில பொம்மைகள் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சிவபெருமான் தலைப்பகுதியின் சிலைமட்டும் நுட்பமான கலையம்சத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. உயர்ந்திருக்கும் சடைமுடியில் சுருண்ட பாம்பு ஒரு புறம் அமைந்திருக்க, மற்றொரு புறத்தில் சந்திரனின் பிறைவடிவம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் கண்கள் பாதி மூடிய தியான நிலையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.

சுடுமண் உருவங்களுள் சிறப்புடன் திகழும் சிலையாக ஒரு பெண்ணின் உருவத்தைக் குறிப்பிடலாம். இவ்வுருவம் ஒரு கையைத் தாழவிட்டுக்கொண்டு மற்றொரு கையால் கூடை ஒன்றை இடையில் அணைத்துக் கொண்டிருப்பதாகச் செய்யப்பட்டுள்ளது. சேலையணிந்த இவ்வுருவத்தின் தலைப்பகுதி முழுமையாகக் கிடைக்கவில்லை. சேலையின் மடிப்புகள் சிலையில் நன்கு வடிவமைக்கப் பட்டுள்ளன. இச்சிலையின் ஒருகை பக்கவாட்டில் தொங்கவிடப்பட்டுள்ளது. கவர்ச்சியான கழுத்தணியும் இடையணியும் இதனை மேலும் அழகுபடுத்துகின்றன.

சுடுமண்ணால் செய்யப்பட்ட, குழந்தைகள் விளையாடும் விளையாட்டுப் பொருட்கள் பல அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. சிறிய வடிவிலான சட்டி. பானைகள், யானை, குதிரை, மேல் மூடிகள், தட்டுகள் ஆகியன கிடைத்துள்ளன. ஒற்றைத்திரி போடும் அகல்விளக்கு ஒன்றும் இவ்வகழ்வாய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. ஒன்றோடு ஒன்று பொருத்தி வைப்பதற்கேற்ற விதத்தில் செய்யப்பட்ட சுடுமண் கூரை ஓடுகளும் இங்குக் கிடைத்துள்ளன. சுடுமண்ணால் செய்யப்பட்ட தொங்கு அணி, மோதிரம், வளையல்கள் ஆகியன தவிர, சிறுவர்கள் விளையாடி மகிழும் வண்டிச் சக்கரங்கள், பகடைக் காய்கள் ஆகியனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விளையாட்டுப் பொம்மைகளாகப் பயன்படுத்தப் பட்டுள்ள சுடுமண் பொருட்கள் கைகளாலேயே செய்யப்பட்டுள்ளன.

கடவுளர் திருமேனிகள் வழிபாட்டு உருவங்களாக ஆக்கப்பட்ட பொழுது அச்சுக்களின் மூலம் பெருமளவில் உருவாக்கப்பட்டன. ஒற்றை

Tamil Heritage Foundation International (THFi)

அச்சுக்களில் உருவாக்கப்பட்ட சுடுமண் பொம்மைகளும் இரட்டை அல்லது இருபக்க அச்சுக்களின் மூலம் உருவாக்கப்பட்ட உருவங்களும் அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இச்சுடுமண் உருவங்களே பிற்காலத்திய கற்சிலைகளுக்கும் செப்புத் திருமேனிகளுக்கும் முன்னோடிகளாக விளங்கின எனலாம்.

*நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்*

*கோழி யெறிந்த கொடுங்காற் கணங்குழை*[48]

என்று சங்க இலக்கியம், மகளிர் காதில் அணிந்து கொள்ளும் கணங்குழை பற்றிப் பாடியுள்ளது. இத்தகைய கணங்குழைகள் அரிக்கமேட்டில் சுடுமண் காதணிகளாகக் காட்சியளிக்கின்றன. சுடுமண் காதணிகள் தவிர மீன் எலும்பினால் வடிவமைக்கப்பட்ட காதணிகளும் கசால் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. சிறுவர் சிறுமியர்களுக்காகச் செய்தளித்த விளையாட்டுப் பொருட்களாகத்தான் இக்காதணிகள் விளங்கியிருத்தல் வேண்டும். அல்லது சுடுமண் பொம்மைகளுக்கு அழகு பார்ப்பதற்காகவும் இத்தகைய காதணிகள் செய்யப் பட்டிருக்கலாம்.

**சாயத் தொட்டிகள்**

பண்டைக்காலத்தில் துணி உற்பத்தியில் உறையூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், மயிலாப்பூர், கூறைநாடு (தஞ்சை) ஆகிய ஊர்கள் சிறந்து விளங்கியுள்ளன. மிக மெல்லிய பாலாவி போன்ற துணிகளைத் தமிழக மகளிர் விரும்பி அணிந்து மகிழ்ந்தனர் என்று பட்டினப்பாலை பாடுகின்றது. உறையூரில் நெய்யப்பட்ட மெல்லிய துணி வகைகளைத் தமிழரிடமிருந்து ரோமானியர் வாங்கிச் சென்றுள்ளனர் என்று ரோமானியப் பயணியர் குறிப்பிட்டுள்ளர்.[49]

ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த இத்துணி வகைகளுக்குப் பல்வேறு விதமான வண்ணச்சாயம் ஏற்றப்படும் தொழில் அரிக்கமேட்டில் நடந்து வந்திருக்கின்றது. இதனை உறுதி செய்யும் வகையில் வீலர், கசால், விமலா பெக்லி ஆகிய மூவரின் அகழ்வாய்வுகளிலும் சாயத்தொட்டிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. சுடுமண்ணால் செய்யப்பட்ட நூல் நூற்கும் தக்களியும் இங்கே கிடைத்துள்ளதால் துணிநெய்யும் தொழிலும் அரிக்கமேட்டில் நடைபெற்று வந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

48.பட்டினப்27-28 49. Vimala Begley 1992 : 130.



உள்நாட்டில் நெய்யப்பட்ட துணிவகைகள் அரிக்கமேட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, சாயம் தோய்க்கப்பட்டபின் அவை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அரிக்கமேட்டைப் போலவே எகிப்து நாட்டின் நைல் சமவெளிப் பகுதியில் கி.பி. முதல் நூற்றாண்டில் பல துணித் தொழிலகங்கள் இயங்கி வந்துள்ளன.

எகிப்து துணிகள் செங்கடல் துறைமுகப் பகுதிக்குக் (Abu Sha'ar) கொண்டுவரப்பட்டுச் சாயம் தோய்க்கப்பட்டுப் பின்னர் தெற்கு அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.[50]

வீலரின் அரிக்கமேடு வடபகுதி அகழ்வாய்வில் கண்டறியப்பட்ட யவனக் குடியிருப்புக்களுக்கு அருகில் உள்ள கட்டடப்பகுதிகள், இரண்டு சாயத்தொட்டிகள் ஆகியவை துணித்தொழிலகத்தை உறுதிப் படுத்துவனவாய் உள்ளன.

இச்சாயத் தொட்டிகள் ஒவ்வொன்றும் 3மீ. அகலமும் 4மீ. நீளமும் உடையனவாகக் காணப்படுகின்றன.[51] ஒரு தொட்டியின் தென்பகுதி அறையின் சுவருடன் இணைக்கப் பட்டுள்ளது. மற்றொரு தொட்டியின் தென்பகுதியில் நீண்ட முற்றம் ஒன்று காணப்படுகின்றது. இத்தொட்டிகள் இரண்டும் பெரிய செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. சாயத் தொட்டிகளில் நீர் வந்து விழுவதற்கு இரண்டு கால்வாய்ப் புழைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு சாயத்தொட்டியின் வெளிப்புறத்தில் உள்ள முற்றத்தின் சுற்றுச்சுவர் ஒன்றில் கதவு நிலைகள் பதிக்கப்பட்டதற்கான அடையாளக் குழிகள் காணப்படுகின்றன. சேற்றுக்கலவை பூசப்பட்டு நீர் வெளிப்புறம் கசியாத அளவிற்குச் சாயத் தொட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும் தன்மை பழங்காலக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சாயத் தொட்டிகளை ஒட்டிப் பெரிய திடல் போன்ற கட்டடச் சிதைவுகள் காணப்படுவதால் அவை பெரும்பாலும் துணி உலர்த்தப் படுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட திடலாக இருக்கலாம். கசாலின் அகழ்வாய்வில் அளவில் சற்றே குறைவாக உள்ள இரண்டு சாயத்தொட்டிகள் கண்டறியப்பட்டுள்ளன.[52]

செங்கற்களால் கட்டப்பட்டுள்ள இத்தொட்டிகள் பிற்காலத்தில் பழுதுபார்க்கப்பட்டு நீர் ஒழுகாமல் இருக்க உட்புறத்தில் கலவைப்பூச்சு பூசப்பட்டுள்ளன.

50 Vimala Begley 1996 : 28 51. Wheeler R.E.M. 1946 : 27. 52.சோ.முருகேசன் 1997:64

Tamil Heritage Foundation International (THFi)

**உறை கிணறுகள்**

கடற்கரையை ஒட்டிய நெய்தல் நிலப்பகுதியில் வாழும் மக்கள் குடிநீருக்காக உறைகிணற்றை (Ring Well) அமைத்துக்கொள்ளும் வழக்கம் சங்க காலத்தில் இருந்திருக்கின்றது. உறைகிணறுகள் அமைக்கப்பட்ட பகுதியில் மக்கள் சேர்ந்துவாழும் இடத்தை 'உறைகிணற்றுப் புறஞ்சேரி' என்று அழைக்கும் முறை சங்ககாலத்தில் இருந்து வந்துள்ளது. இத்தகைய உறைகிணற்றுப் புறஞ்சேரி ஒன்று காவிரிப்பூம்பட்டினக் கடற்கரைப் பகுதியில் இருந்தமையைப் பட்டினப்பாலை குறிப்பிட்டுள்ளது.[53]

அரிக்கமேட்டில் வீலரின் அகழ்வாய்வை விட கசாலின் அகழ்வாய்வில்தான் மிகுதியான அளவிற்கு உறைகிணறுகள் கிடைத்துள்ளன. சுடுமண்ணால் ஆகிய இத்தகைய உறைகள் கைகளால் செய்யப்பட்டவையே. வெளிப்புறத்தைச் சுற்றிலும் செங்கற்கள் அடுக்கப்பட்டிருப்பதால் உறைகிணறுகள் சிதைந்து விடாமல் உறுதியாகத் திகழ்கின்றன. கல்லை அடுக்கிக் கிணற்றுச்சுவர் கட்டியிருந்த தொழில் நுட்பம் பற்றி, *கல்லுறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல்*[54] என்னும் புறப்பாடல் குறிப்பிடுகின்றது.

உறைகிணறுகள் சொரசொரப்பான மண்ணால் செய்து சுடப்பட்டு துண்டு, துண்டு உறைகளால் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வுறைகள் ஒவ்வொன்றும் ஆழமான அடித்தளத்தின் பள்ளத்திலிருந்து ஒன்றன் மேல் ஒன்றாக மேல்பரப்பு வரை அடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கீழுள்ள உறைகள் குறுகியும் மேலே வரவர அகன்றும் காணப்படுகின்றன. இவ்வுறைகிணறுகளுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. இவை சுடுகல் கட்டடமுறை வருவதற்கு மிக முற்பட்ட காலத்தில் அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும் என்று கசால் குறிப்பிட்டுள்ளார்.[55] ஏனெனில் சிதைந்துபோன சாயத்தொட்டிக்குக் கீழே இவ்வுறை கிணறுகள் மிகவும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்தனவாகக் காணப்படுகின்றன. வெளிப்புறத்தைச் சுற்றிலும் செங்கற்கள் அடுக்கப் பட்டிருப்பதால் (Brick Floor) உறைகிணறுகள் சிதைந்துவிடாமல் உறுதியாகத் திகழ்கின்றன.

உறைகிணறுகள் இறக்கப்பட்டிருந்த உறை ஒவ்வொன்றும் (Wheeler Excavation) 50 செ.மீ. உயரமும் ஒரு மீட்டர் 40 செ.மீ. குறுக்களவும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன.

53.பட்டினப்:76 54.புறம்331:1 55.சோ.முருகேசன்1997:76



சுடுமண்ணால் ஆகிய உறைகள் கைகளால் செய்யப்பட்டவையே. விமலா பெக்லியின் அகழ்வாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட 15உறைகள் (சுற்றளவு 0.88மீ) ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்டிருந்த கிணறு கண்டறியப்பட்டுள்ளது.[56] 0. 31மீ உயரமும், .04மீ தடிமனும் கொண்டவையாக விளங்கும் உறைகளால் அடுக்கப்பட்ட இவ்வுறைகிணறு கி.பி. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலே கூறப்பட்டது போல் அரிக்கமேட்டில் நடைபெற்று வந்த பலதரப்பட்ட தொழிலகங்களுக்காக ஆற்றிலிருந்து வாய்க்கால் வழியாக நீரைக் கொண்டுவந்து உறைகிணற்றில் தேக்கி வைத்துப் பயன்படுத்தி வந்துள்ளனர். வீலருடைய அகழ்வாய்வில் கண்டறியப்பட்ட இரண்டு உறைகிணறுகளில் ஒன்று கழிவு நீர் தேக்கி வைக்கும் தொட்டியாகப் (Soak-fit) பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.[57]

**ரோமானியப் பாவை விளக்கு**

சங்ககாலத்தில் ரோமானிய நாட்டிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்ட பாவை விளக்குகள் காவிரிப்பூம்பட்டின அரண்மனையையும் மதுரை அரண்மனையையும் அழகு செய்த காட்சியைச் சங்க இலக்கியங்கள் விவரித்துள்ளன. யவனர்களால் செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்ட ஓதிம விளக்கு (அன்ன விளக்கு), பாவை விளக்கு போன்றவை அக்காலத் தமிழகத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தன.[58] கால்களை உடைய விளக்கு பாண்டில் விளக்கு[59] என்று குறிப்பிடப் பட்டுள்ளது நந்தா விளக்கு பற்றி வர்ணிக்கும் பட்டினப்பாலை

கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்[60]

என்று குறிப்பிடுகின்றது. மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனையில் யவன நாட்டுப் பாவைவிளக்குகள் நிறுவப்பட்டிருந்த காட்சி, '*யவனர் இயற்றிய வினைமாண் பாவை கையேந் தையகல் நிரைநெய் சொரிந்து பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெறி*'[61] என்று கூறப்படுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பிற்காலத்தில் தமிழகக் கோயில்களில் பாவை விளக்குகள் அமைப்பதற்கு இத்தகைய யவன நாட்டுப் பாவை விளக்குகளே முன்மாதிரிகளாகத் திகழ்ந்துள்ளன.

56. Vimala Begley 1996 : 75 57. Wheeler R.E.M. 1946 : 24 58.பெரும்பாண்316-319
59.நெடுநல்:175 60.பட்டி:246-247 61.நெடுநல்.101-103

Tamil Heritage Foundation International (THFi)

கி.மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தாலி நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் இரண்டு அச்சுக்களில் வடிவமைக்கப்பட்ட ரோமானிய விளக்குகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய விளக்கு ஏற்றுமதி ரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் காலத்திற்குப் பின் மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்குப் பரவியது. அதன் பின் எகிப்திலும் நைல் நதியின் கரையோரப் பகுதியிலும் இத்தகைய விளக்குகள் செய்யப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்ட விளக்குகளின் உடைந்த துண்டுகள் மூன்று அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.[62] இவை தவிர கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட, திருகு விளக்கின் துண்டுகளும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. கி.பி. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட அச்சு வகையிலான சிவப்பு நிறமுள்ள எண்ணெய் ஊற்றுவதற்காக நடுவில் அகழப்பட்ட உள்ளீடு உடைய விளக்குகளும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. யவனர் தங்கள் மரக்கலக் கூம்பில் ஓதிம விளக்கிடுதல் வழக்கம் என்பதை,

*வேள்வி யந்தணர் அருங்கட னிறுத்த*
*வேள்வித் தூணத் தசைஇ யவனர்*
*ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட*
*வைகுறு மீனின் பையத் தோன்றும்*
*நீர்ப்பெயற் றெல்லை போகி*[63]

எனச் சங்க இலக்கியம் உறுதிப்படுத்தியுள்ளது.

கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டுகளிலும் தமிழகத்தில் யவனரின் பாவை விளக்குகள் வழக்கத்தில் இருந்து வந்த உண்மையை ‘யவனப் பாவை யணிவிளக்கு’[64] என்னும் கூற்றால் உணரலாம். சங்ககால மக்கள் பயன்படுத்தி வந்த ‘பாண்டில் விளக்கு’ (தெருவில் எரியும் விளக்கு) பற்றி,

*வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு தெருவில்*
*சொரிசுரை கவரு நெய்வழி புராலின்*
*பாண்டில் விளக்கு பரூஉச்சுடர் அழல*[65]

என்று விவரிக்கப்பட்டுள்ளது. இவ்விளக்குகள் சேலம் மாவட்டத்திலும் வடஆர்க்காடு மாவட்டத்திலும் இக்காலத்து மண்ணெண்ணெய் விளக்குகள் வருவதற்கு முன்பு வழக்கத்தில் இருந்தன. மூங்கில்களை உயரமாக நட்டு, அவற்றின் தலையை மூன்று வரிச்சல்களாகப் பகுத்து

62.Vimala Begley 1996 : 366 63.பெரும்.316-319 64.பெருங்.1,47:174-175) 65.பதிற்.47:5-7



அவற்றினிடையே மட்பாண்டிலைச் செறித்து, பருத்த திரியிட்டு எண்ணெய் பெய்து எரிப்பர்[66]

இக்காலக் குத்துவிளக்கின் மேற்புறம் போன்று வடிவமைக்கப்பட்ட நான்கு திரி, ஐந்து திரி, ஏழு திரி அமைப்புள்ள மண் விளக்குகள் (Ceramic Lamps) அரிக்கமேட்டின் மேற்பரப்பில் கிடைத்துள்ளன. சிவப்பு நிறத்தில் காணப்படும் இவ்விளக்குகள் புதுவை அருங்காட்சியகம், அரவிந்தர் ஆசிரம நூலகம் ஆகிய இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட தொழில்நுட்பமும் முக்கியத்துவமும் வாய்ந்த இத்தகைய விளக்குகள் பிற்காலச் சோழர் ஆட்சிக்கு உட்பட்ட கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை ஆகிய பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இவ்விளக்குகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டவையாகும். இதன் அடிப்படையில் நோக்கும்போது கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலும் அரிக்கமேட்டில் தொடர்ச்சியான குடியிருப்புக்கள் இருந்திருக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வரலாம்.

**ஏனைய தொல்பொருட் சின்னங்கள்**

கசாலின் அகழ்வாய்வில் (1947-48) மூன்றரையடி உயரமுள்ளதும் மிகவும் தடிமனானதுமான முதுமக்கள் தாழி ஒன்று அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அரிக்கமேட்டில் கிடைத்த முதுமக்கள்தாழி அப்பகுதியின் தொன்மையைப் பறை சாற்றும் உறுதியான சான்றாக விளங்குகின்றது. பண்டைக் காலத்தில் பல தோல்பொருட்களும் அரிக்கமேட்டில் உற்பத்தி செய்யப்பட்டு அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகியுள்ளன. இரும்புப் பொருட்களில் ஒரு மோதிரம், கத்தி, ஆணிகள் ஆகியவையும், அம்மிக்கற்களும் குழவிக்கற்களும் கிடைத்துள்ளன. தாமிரத்தால் செய்யப்பட்ட கிலுகிலுப்பை ஒன்றும் இங்குக் கண்டெடுக்கப் பட்டுள்ளது. சங்ககாலச் சிறார்கள் கிலுகிலுப்பை வைத்துக்கொண்டு விளையாடிய காட்சி,

*உளரியர் ஐம்பால் உமட்டியர் ஈன்ற*
*கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்*[67]

என்று சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது.

மரத்தாலான பொருட்களில் உட்புறம் குடையப்பட்ட ஒரு மரத்துண்டும் பெரிய மரச்சுத்தி ஒன்றும் கிடைத்துள்ளன. அரிட்டைன் பானைவகைக் காலத்திற்கு (கி.பி. 50) முந்தைய, மட்கிய நிலையில்

66.பதிற்.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை-1958 :217 67.சிறுபாண்.:60-61

Tamil Heritage Foundation International (THFi)

உள்ள கயிறு வகைகளும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்த தந்தத்தால் செய்யப்பட்ட கலைப் பொருட்களும் தந்தப் பிடியும் அக்கால மக்களின் செல்வச் செழுமையையும் கலையுணர்ச்சியையும் புலப்படுத்தவல்லன. இங்குக் கிடைத்த தொல்பொருட் சின்னங்களை அடிப்படையாக வைத்து நோக்கும்போது பழம்பெரும் பொதுகே நகரில் வாழ்ந்திருந்த மக்கள் நாகரிகம், பண்பாடு உள்ளவராகவும் ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளில் நுண்ணுணர்வு பெற்றவராகவும் திகழ்ந்திருந்தனர் என்று கூறலாம்.

தமிழகத்திற்கு முன்னோடியாகப் புதுச்சேரியில் முதன்முதலில் அகழ்வாய்வு நிகழ்த்தப்பட்ட இடம் அரிக்கமேடு ஆகும். கி.மு. 100 முதல் கி.பி. 1100 வரையிலான காலப்பகுதிக்கு உட்பட்ட தொல்பொருட் சின்னங்கள் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்தியாவிலேயே அரிக்கமேட்டில் மட்டும்தான் ரோமானிய சிஜிலிட்டா வகையைச் சேர்ந்த கலன்கள் கிடைத்துள்ளன. வெளிநாட்டு அமைப்பில் உள்நாட்டில் வனையப்பட்ட அரிட்டைன் ஆம்ஃபோரா, ரௌலெட்டெட் வகைக் கலன்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. அரிக்கமேடு மணிவகைகளும் அவை செய்யப்பட்ட தொழில் நுட்பமும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. சங்ககால மக்கள் கண்ணாடிப் பாத்திரங்களைப் பயன்படுத்தவில்லை, அரிக்கமேட்டில் கிடைத்த கண்ணாடிப் பாத்திரங்கள் ரோமானியர்கள் தம் சொந்தப் பயன்பாட்டிற்காகக் கொண்டுவந்தவை ஆகும்.

# 5. அரிக்கமேடு- பன்னாட்டு வணிகத் துறைமுகம்

கப்பல் கட்டும் தொழில் சங்ககாலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் இருந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழர்கள் கப்பல் கட்டும் தொழிலை மரபு வழியாகவே செய்து வந்துள்ளனர். தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் கீழ்வாலை என்னும் ஊரில் அமைந்துள்ள பாறை ஓவியங்கள் பழந்தமிழர்களின் கடல்சார் அறிவினைக் காட்டவல்லது. கி.மு.500ஆம் ஆண்டிற்கு முற்பட்ட இத்தகைய பாறை ஓவியங்களில் படகில் நான்கு பேர் பயணம் செல்வது போன்று வரையப்பட்டுள்ளது. படகை உந்தித் தள்ளும் தண்டு என்னும் கருவியும் இவ்வோவியத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது. படகு கவிழாமல் இருக்க அதன் பக்கவாட்டில் தாங்குகட்டை பொருத்தப்பட்டுள்ளது. இது அக்கால மக்களின் கப்பல் கட்டும் தொழிலை வெளிப்படுத்துவதற்கு மிகச்சிறந்த சான்றாகும். தமிழகத்திற்கும் கிரேக்கத்திற்கும் இடையே 5000 கல் தொலைவு கடற்பயணத்தைச் சமாளிக்கும் விதத்தில் அக்காலக் கப்பல்கள் மிகவும் வலுவாக அமைக்கப்பட்டிருந்தன.

### வளிதொழில் ஆண்ட உரவோர்

பண்டைத் தமிழர் கலன்களைச் சமைத்ததோடு கடலில் நீண்டதூரம் செலுத்தவல்ல திறன்களையும் படைத்தவர்களாக விளங்கியுள்ளனர் என்பதைப்

*நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*
*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!* [1]

என்னும் தொடர் புலப்படுத்துகின்றது. இவ்வாறு நீண்டதூரம் கடற்பயணம் மேற்கொள்வோரைப் *பெருநீரோச்சுநர்* எனக் கூறுவர். சங்ககாலத் தமிழகத்தில் மூன்று வகையான கலங்களைத் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளர். அவை,

1. கடற்கரையோரமாகப் போக்குவரத்தில் ஈடுபட்ட சிறிய நாட்டு மரக்கலங்கள்,

1. புறம்66:1-2

Tamil Heritage Foundation International (THFi)

2. கடற்கரை ஓரமாகப் பயணிக்கும் ஓரளவு பெரிய அளவுள்ள சங்கரா என்னும் மரக்கலங்கள்,

3. நீண்டதூரம் செல்லக் கூடிய கொலாண்டியா என்னும் பெரிய வகை மரக்கலங்கள்

என்பனவாகும். சோழ நாட்டுத் துறைமுகங்களில் கரையோரமாகத் தமரிகா (தமிழகம் - Damirica) வரையில் செல்லும் கப்பல்கள் உள்ளன. மேலும் மரங்களைப் பிணைத்துச் செய்யப்பட்ட சங்கரா (Sangara) என்னும் கப்பல்களும் அங்கு உள்ளன. கிரிசி (Chryse) என்னும் ஊருக்கும் கங்கை நதிக்கும் செல்லும் கப்பல்கள் கொலண்டியா(Colondia) எனப்பட்டன. கொலண்டியா என்னும் கப்பல்கள் பெரிய உருவத்தைக் கொண்டவை, என்று பழந்தமிழ் நாட்டுக் கலங்களைப் பற்றிப் பெரிபுளூச நூல் கூறுகின்றது.[2] வங்கம், நாவாய் என்பன மிகப் பெரிய மரக்கலங்களாகும். இவை தவிர அம்பி, ஓடம், ஓங்கல், கலம். திமில், தொள்ளை. தோணி, கரிசல், பாதை, மிதவை, பலாரி, புணை, வங்கம், வள்ளம், பொறி ஆகியனவும் மரக்கலங்களுக்கு இணையான சொற்களாகப் பழந்தமிழில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### கப்பல் நிறுத்தம் / கலங்கரை விளக்கம்

துறைமுகங்களில் செங்கற்களாலும் காரையாலும் கட்டி எழுப்பப்பட்ட உயர்ந்த கலங்கரை விளக்குகள் இருந்தன. கப்பல்களைத் துறைமுகங்களின் திசை நோக்கி அழைக்கும் முறையில் இங்கே இராக்காலங்களில் பேரொளி விளக்கமுடைய விளக்குகளை நிறுவி எரியச் செய்தனர்.

*இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி*
*உரவுநீர் அழுவத்து ஓடு கலங்கரையும்*
*துறைபிறக் கொழியப் போகி*[3]

என்னும் தொடர் கப்பல் நிறுத்தமாகிய கலங்கரை விளக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. கடலில் மூழ்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் பெரிய கப்பல்கள் நிற்கும் கடற்தளங்களை அமெரிக்க செயற்கைக் கோள் மூலம் அண்மையில் படம் பிடித்துள்ளனர்.[4] கடற்செலவிலும் கப்பல் கட்டுமானத்திலும் வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தமிழர் முன்னோடியாகத் திகழ்ந்ததோடு மட்டுமின்றி கடலில் நீண்டதூரம்

2.பா.ஜெயக்குமார்2001:211 3.பெரும்பாண்:350-351 4.சா.கிருட்டினமூர்த்தி 2005(தொ-2):244)



சென்று வணிகம் புரிந்து வரவும் கடற்போர் நிகழ்த்திடவும் பேராற்றல் பெற்றவராக விளங்கியுள்ளமை விழுப்புரம் மாவட்டம் கீழ்வாலை பாறை ஓவியங்கள் மூலமாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன.[5] இதுதவிர, கப்பல் கட்டுமான வேலையும் தமிழகக் கடற்கரைத் துறைமுகங்களில் நடைபெற்று வந்தமையைக் காவிரிப்பூம்பட்டின அகழ்வாய்வின் மூலம் அறியலாம்.

### வீரை முன்துறை

சங்கத்தமிழர் சிறப்பான கலங்களைச் சமைப்பதில் வல்லவராகவும் கிழக்கு மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் துறைமுகங்களை அமைத்துக் கொண்டு அயல்நாட்டினருடன் வணிகம் புரிவதில் வல்லுநராகவும் விளங்கியுள்ளனர். மரக்காணத்திலிருந்து மாமல்லபுரம் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலை இன்றும் நெய்தல் நிலத்தின் சுவடுகளைத் தாங்கி நிற்கும் இயற்கை எழிலார்ந்த சாலையாகும். கானலும் கழிவெளியும் கலந்த இப்பகுதி சங்ககாலத்தில் எயிற்பட்டினம் என்று அழைக்கப்பட்டது. எயிற்பட்டினம் துறைமுகமாக விளங்கியதை சிறுபாணாற்றுப்படை குறிப்பிட்டுள்ளது. இதனை மாமல்லபுரத் துறைமுகத்தின் முன்னோடியாக வரலாற்று அறிஞர்கள் கருதுவர். கழிவெளியும் உப்பங்கழிகளும் நிறைந்த இப்பகுதியை மரக்காணமாகக் கருதுவதே பொருத்தமாகும். சங்ககாலத்தில் வெளிநாட்டுப் பயணியரால் சோபட்டினம் (சோபட்மா) என்று அழைக்கப்பட்ட பகுதியையே சிறுபாணாற்றுப் படை எயிற்பட்டினம் என்று குறிப்பிடுகின்றது. எயிற்பட்டினத் துறைமுக வணிகம் குறித்துச் சிறுபாணாற்றுப்படை வழி[6] அறியலாம்.

சங்க இலக்கியங்கள் துறைமுகங்களைக் குறிப்பிடும்போது முன்துறை, பெருந்துறை என்னும் சொற்றொடர்களால் குறிப்பிடுகின்றன. இவற்றைக் *கொற்கையம் பெருந்துறை*[7], *புகார் முன்துறை*[8], *வீரை முன்துறை*[9] தொண்டி முன்துறை என்னும் சங்க இலக்கியத் தொடர்களால் அறியலாம். பெருந்துறை என்பது ஆறு கடலோடு கலக்கும் முகத்துவாரத்தின் அருகில் அமைக்கப் பட்டிருக்கும் பெரிய துறையாகும். ஆறு கடலோடு கலக்கும் முகத்துவாரத்தில் கடலலையின் சீற்றம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஆற்றின் உள்ளே வந்து சரக்குகளை இறக்குவதற்கு வசதியாக அமைக்கப்பட்ட துறைமுகமே

5.மே.நூல்:247 6.சிறுபா.154-155 7.அகம்130:12 8.பட்டி173 9.அகம் 206:13

Tamil Heritage Foundation International (THFi)

முன்துறை எனப்படும். மரக்கலங்கள் கடலில் இருந்து ஆற்றின் உள்ளே வரும் திறத்தைக்,

*கூம்பொடு மீம்பாய் களையாது*
*புகார் புகுந்த பெருங்கலம்*[10]

என்று புறநானூறு சுட்டுகின்றது. பெருந்துறைக்கு இயலாது கடலிலேயே தங்கும் மரக்கலப் பொருட்களை ஏற்றவும் இறக்கவும் சிறிய படகுகள் பயன்படுத்தப்பட்டன என்பதைக்,

*கலிச் சும்மைய கரை கலக்குந்து*
*கலம் தந்த பொற்பரிசம்,*
*கழித்தோணியான் கரை சேர்க்குந்து*[11]

என்னும் பாடல் தொடர்களால் அறியலாம். அரியாங்குப்பம் ஆற்றின் கரையோரமாக அமைந்திருக்கும் அரிக்கமேடுதான் அகநானூறு குறிப்பிடும் (அக்கால) வீரை முன்றுறையாக இருந்தது. இக்கூற்றை உறுதிப்படுத்தும் வண்ணம் அரியாங்குப்பம் ஆற்றங்கரை ஓரமாக உள்ள அரிக்கமேட்டில் சிறிய படகுகள் வந்து நிறுத்துவதற்கு ஏற்ற முன்துறை என்னும் படகுத்துறை அகழ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டு உள்ளது.

அயல்நாட்டார் தமிழகத்துக்கு வந்து வணிகம் செய்வதற்கு முன்பே தமிழர்கள் கீழ்த்திசை நாடுகட்கும் மேற்றிசை நாடுகட்கும் வணிகம் புரிவதற்காகச் சென்றுள்ளனர். வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இந்தியாவின் கிழக்கு-மேற்குத் துறைமுகங்கள் மேலை நாட்டுத் துறைமுகங்களோடு தொடர்பு கொண்டிருந்தன. பண்டைத் தமிழகத்தில் காவிரிப் பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி ஆகிய துறைமுகங்கள் பன்னாட்டு வணிக மையங்களாகச் செயல்பட்டு வந்தமையை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இத்துறைமுகங்கள் அனைத்தும் சங்ககாலம் வரை சிறப்புப் பெற்றவையாகக் கருதப்பட்டன. ஆனால் 'பொதுகே' என்றழைக்கப்பட்ட அரிக்கமேடோ கி.மு. 2-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரையிலும் பன்னாட்டு வணிகத் துறைமுகமாகச் செயல்பட்டு வந்தமைக்கான அகழ்வாய்வுச் சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

10.புறம்30:11 11.புறம் 343:3-5



**பருவக்காற்றும் கடல் வழியும்**

சங்ககாலத் தமிழர்கள் 'வளிதொழில் அறிந்து வங்கம் செலுத்தும் ஆற்றல்' பெற்றிருந்தமையால் அவ்வக்காலத்தில் வீசும் பருவக் காற்றிற்கேற்பத் தங்கள் பயணத் திட்டத்தை வகுத்துக்கொண்டு கடற்செலவு செய்து வணிகம் புரிந்து வந்துள்ளனர். இவ்வுண்மையை இலக்கியங்கள் மட்டுமல்ல அகழ்வாய்வுகளும் உறுதி செய்கின்றன. வீலருடைய அகழ்வாய்வுப் பணியில் (கி.பி. 1946) கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் 180 செ.மீ. நீளமுள்ள கம்பம் ஒன்று குறிப்பிடத்தக்கது.[12] இக்கம்பத்தின் முனையில் மரத்தால் செய்யப்பட்ட பூண் ஒன்று பொருத்தப் பட்டுள்ளது. மரக்கலத்தின் கூம்பு வடிவமாகவே இக்கம்பம் காட்சியளிக்கின்றது. மேலும் பற்பல விதமாகக் கடையப்பட்ட மரத்துண்டுகள் பனை, தென்னை மரத்தால் செய்யப்பட்ட அலகுகள்(துடுப்புகள்) இரும்பு வளையங்கள் முதலியனவும் கிடைத்துள்ளன. இவற்றை எல்லாம் நோக்கும்போது அரிக்கமேட்டிலேயே மரக்கலம் கட்டும் தொழிலும் நடைபெற்று வந்திருக்கலாம் என்று கருத வாய்ப்பிருக்கின்றது.

தாங்களே உருவாக்கிய மரக்கலங்களில் தமிழர்கள் அயல்நாட்டுக்குச் சென்று வணிகம் புரிந்து வந்துள்ள செய்தியைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பாடியுள்ளன. கி.மு. முதல் நூற்றாண்டுக்கு முன்பு வரையில் ரோமாபுரி வணிகம் தமிழகத்தில் பெருமளவு விரிவடையவில்லை. இதற்குக் காரணம் இக்கால வரம்புக்கு முற்பட்ட ரோமானிய நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்கவில்லை என்பது காரணமன்று, அக்காலத்தில் இந்தியாவிற்கு வருவதற்கு முறையான கடல்வழியை ரோமானியர் அறிந்திருக்கவில்லை என்பதேயாகும். முதன்முதலில் ஹிப்பாலஸ் என்னும் ரோமானியர்தான் கி.மு. முதல் நூற்றாண்டில் ரோமானிய நாட்டிலிருந்து (செங்கடல் துறை முகத்திலிருந்து) இந்தியா வருவதற்குப் பருவக்காற்று (வடமேற்குப் பருவக் காற்று) அனுகூலமாய் வீசும் காரணத்தைக் கண்டறிந்தார்.[13] இந்த வடமேற்குப் பருவக்காற்றின் பயனை அறிவதற்கு முன்பு செங்கடல் துறைமுகத்திலிருந்து புறப்படும் ரோமானியர் கரையோரமாகவே சிறுசிறு படகுகளில் ஊர்ந்து சேரநாட்டுத் துறைமுகங்களை அடைவர். இதன் பின்னரே தமிழகத்தோடு ரோமனியரின் கடல் வழி வணிகத்தொடர்பு விரைவாகவும், மிகுதியாகவும் ஏற்பட்டது.

12.சு.தில்லைவனம் 1990 : 116 13.கே.கே.பிள்ளை1972:19

Tamil Heritage Foundation International (THFi)

ரோமானியப் பேரரசன் கி.மு. 30-ஆம் ஆண்டு எகிப்தை வென்று அதன்மீது தன்னாட்சியை நிலை நாட்டினான். இதனால் ரோமானியருக்கும் தமிழருக்கும் நேரடியான வணிகத் தொடர்பு (செங்கடல் வழியாக) ஏற்பட்டது. அதன் பின்பு கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கித் தமிழகத்திற்கும் ரோமாபுரிக்கும் நடைபெற்று வந்த கடல்வழி வணிகத்தைப் பற்றி அகஸ்டஸ் மன்னனின் சமகாலத்தவரான 'ஸ்டிராபோ' என்னும் வரலற்றாசிரியர் தமது நூலில் பல அரிய குறிப்புக்களைத் தந்துள்ளார். 'தாரூய்ஸ்' என்னும் பாரசீக மன்னன் சிந்துநதிக் கணவாயைக் கையகப் படுத்தியபோது வட இந்தியப் பகுதிகள் சிலவற்றைத் தன்னாட்டோடு இணைத்துக் கொண்டு அரசாளத் தொடங்கினான். அச்சமயம் இந்திய நாட்டு வணிகப் பொருட்கள் பாரசீகத்திற்கும் எகிப்திற்கும் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் அங்கிருந்து கிரேக்கத்திற்கும் ரோமாபுரிக்கும் எடுத்துச் செல்லப்பட்டன.

### இருவழிப் போக்குவரத்து

பண்டைத் தமிழகத்து வணிகர்கள் உள்நாட்டு வணிகத்திற்கு நில வழியையும், அயல்நாட்டு வணிகத்திற்குக் கடல் வழியையும் பயன்படுத்தி வந்துள்ளனர். நிலவழிப் பயணம் காட்டாறு, மலைகள், அயல்நாடு கடந்து செல்லல் ஆகியவற்றின் குறுக்கீடுகள் நிறைந்தவை மட்டுமல்ல, ஆறலைக் கள்வர்களால் அலைக்கழிக்கப்பட்டு நிரந்தரமில்லாத பயணமாகி விடும் அவலமும் இருந்தது. எனவே அயல்நாட்டு வணிகர்கள் மட்டுமின்றி, உள்நாட்டு வணிகர்களும் நீர்வழியையே மிகுதியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். புதிய கற்காலத்திலிருந்தே நீர்வழிப் போக்குவரத்திற்கான சான்றுகள் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.

வரலாற்றுக்கு முற்பட்ட கால வட இந்தியாவில் ஆற்று வழிகளும், மௌரியப் பேரரசு ஏற்படுத்திய சாலைகளுமே பிரதான உள்நாட்டு வழிகளாகும். அக்காலத்தில் மௌரியர் அமைத்த பிரதான ராஜபாட்டை, தட்சசீலம்-பாடலிபுத்திரம் இடையே அமைக்கப்பட்டது என்று கிரேக்கச் சான்றுகள் குறிப்பிட்டுள்ளன.[14] கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வர அரசியல் ரீதியாக ஒரு வழித்தடத்தையும் வணிக ரீதியாக மற்றொரு வழித்தடத்தையும் பின்பற்றியுள்ளனர். கிரேக்க மன்னர் அலெக்சாண்டர் கி.மு.4ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வடபகுதிக்கு நிலம் வழியாகப் படையெடுத்து வரும்போது, கடல் வழியாகத் தென்னியாவிற்குக் கிரேக்க

14. D.Janaki 2000 : 11



வணிகர்கள் வந்தனர். கி.மு. முதல் நூற்றாண்டில் கிரீசைக் கைப்பற்றிய ரோமானியர், கிரேக்கர் தென்னிந்தியாவோடு கொண்டிருந்த கடல்வழி வணிகத்தையே பின்பற்றத் தொடங்கினர்.

இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கடல் மார்க்கமாக முசிறி வந்த கிரேக்க வணிகர்கள் அங்கிருந்து தரை மார்க்கமாகப் பாலக்காட்டுக் கணவாயைக் கடந்து கரூர் வந்துள்ளனர்.[15] மேற்கு வங்காளத்தில் சந்திரகேதுர்க், தம்லுக் ஆகிய இடங்களிலும் தமிழகத்தில் அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், அழகன்குளம், பெரியபட்டினம் ஆகிய இடங்களிலும் தயாரிக்கப்பட்ட ரௌலெட்டெட் கலன்கள் கங்கை, கிருஷ்ணா, கோதாவரி, காவிரி ஆகிய ஆறுகளில் பயணம் செய்து உள்நாட்டில் பல இடங்களுக்குப் பரவின.திருச்சூர் அருங்காட்சியகத்தில் உள்ள சில ரௌலெட்டெட் கலன்களும், முத்திரை இடப்பட்ட கோப்பைகளும் வீலரால் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டவை போன்றவை[16] அரிக்கமேட்டில் தயாரான இவை உள்நாட்டுப் பயன்பாட்டிற்குக் கரூர், பாலக்காடு வழியாக மலபார் கடற்கரைக்கு நிலவழியாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்.

ரோமனியர்கள் கடல் வழியாகவும் நிலவழியாகவும் இந்தியாவிற்குள் பரவியிருந்தனர். கி.மு. 200 – 100 ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலகட்டத்தில் நிலவழியாக இந்தியாவின் வடமேற்கு மாநிலங்களில் பரவிய ரோமானியர் தங்கள் வெளிநாட்டு வணிக வளர்ச்சிக்காக மட்டுமின்றிப் புத்தசமய வளர்ச்சிக்காகவும் நன்கொடைகள் வழங்கியுள்ளனர். கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் குப்தர்கள் காலத்தில் தென்னிந்தியாவில் பரவலாக இருந்த ரோமானிய வணிகம் தரை மார்க்கமாக வட மாநிலங்களுக்கும் விரிவடையத் தொடங்கியது. மத்தியத் தரைக்கடல் நாடுகளின் சந்தையில் தமிழக வணிகப் பொருட்களுக்கு ஏராளமான தேவை ஏற்பட்டிருந்ததாலும் பருவக்காற்றின் சாதகத்தாலும் சங்ககாலத் தமிழகத்தில் ரோமானிய வணிகம் செழிப்புற்று இருந்தது.

பண்டைத் தமிழர்கள் மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்குத் தம் பொருட்களைத் தாமே நேரடியாக ஏற்றிச் சென்று வணிகம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அலெக்சாண்டர் காலத்திற்கு முன்பு (கி.மு. 356 - 323) தமிழக வணிகர்கள் பாபிலோனியாவைக்

15.தினமலர் 6-11-2000 : 4 16. Vimala Begley 1996 : 25

Tamil Heritage Foundation International (THFi)

கடந்து அப்பால் செல்லவில்லை. செங்கடல் துறைமுகம் வரையில் தமிழர்கள் ஏற்றிச் சென்ற சரக்குகளை, பினீசியரும் கால்டேயரும் பெற்றுக்கொண்டு அவற்றை மத்தியத்தரை நாடுகளுக்கு எடுத்துச்சென்று விலையாக்கினர். அதன் பின்பு எகிப்தியரும் கிரேக்கரும் இவ்வணிகத்தை மேற்கொண்டனர். கி.பி. முதல் நூற்றாண்டில் கடல் வழி கண்ட பிறகு கிரேக்கரும் ரோமானியரும் தமிழகத்திற்கு வந்து நேரடிக் கொள்முதல் வணிகத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

### கடல் வழி வணிகத் தொடர்பு

இந்தியாவிலிருந்து மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கு ஏற்றுமதியான பொருட்கள் அனைத்தும் கடல்வழி வணிகத்தின் மூலமாகவே அனுப்பப்பட்டுள்ளன. அதேபோன்று மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதியான பொருட்களும் கடல் வழி வணிகத்தின் மூலமாகவே வந்துள்ளன. வணிகக் குழுக்கள் மட்டுமின்றித் தனி வணிகரும் கடல்வழி வணிகத்திலேயே மிகுதியும் ஈடுபட்டுள்ளனர். பருவக்காற்றின் அனுகூலத்தால் பயணம் விரைவாகவும் எளிதாகவும் இருப்பது மட்டுமின்றிச் செலவு குறைந்தும் இருப்பதால் கடல்வழி வணிகத்தையே பண்டைத்தமிழர் பெரிதும் விரும்பியுள்ளனர்.

சங்ககாலத் தமிழகம் கிரேக்கம், சாவகம், ஈழம், காழகம், சீனா ஆகிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தமையைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களின் வாயிலாக அறியலாம். வங்காள விரிகுடா, பாரசீக வளைகுடா, செங்கடல், மத்தியத்தரைக்கடல், சீனக்கடல் ஆகியவற்றோடு சோழமண்டலக் கரையின் துறைமுகங்கள் தொடர்பு கொண்டிருந்தன. வரலாற்றுக் காலத்திற்கு முன்பே மத்தியத்தரைக்கடல் நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த தமிழகம் கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கித்தான் சீனாவுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது.

சீனாவிலிருந்து மலபார் துறைமுகங்களுக்குக் கப்பல்கள் வருகை தந்த வழியைப் பற்றிக் குறிப்பிடும் மார்க்கோபோலோ, 'சீனத்துறைமுகம் சௌ சௌ (Chou Chou) விலிருந்து புறப்படும் மரக்கலங்கள் முதலில் கொச்சின் சீனா, சுமத்திரா வழியாகப் பர்மாவின் மார்டபன் துறைமுகத்தை வந்தடையும் பின்னர் இங்கே சரக்குகள் வேறு



கலங்களுக்கு மாற்றப்பட்டு அந்தமான்-நிகோபர் தீவுகள், இலங்கை வழியாகக் கொல்லம் (மலபார்) துறைமுகத்தை வந்தடையும்'[17] என்று கூறியுள்ளார். மலபார் துறைமுகத்திற்கு வருமுன்பே சோழ மண்டலக் கரையிலுள்ள 'பொதுகே' (அரிக்கமேடு) துறைமுகத்திற்கும் சீனக்கலங்கள் வருகை புரிந்துள்ளதை அரிக்கமேட்டில் கிடைத்த சீன செலடன் கலன்கள் உறுதி செய்துள்ளன.

இத்தாலி மற்றும் கிரேக்க நாட்டிலிருந்து புறப்படும் வணிகர்கள் எகிப்திலுள்ள 'அலெக்சாண்டிரியா' துறைமுகத்தை அடைந்து அங்கிருந்து நைல் நதி ஓரமாகப் பயணம் செய்து ஒட்டகங்களிலும், கழுதைகளிலும் வணிகப் பொதிகளை ஏற்றிக்கொண்டு, பாலைவனத்தைக் கடந்து வந்து, செங்கடல் துறைமுகங்களான மியோஸ் ஹார்மஸ் (Myos-Hormuz) பெர்னிகே (Bernike) ஆகிய இடங்களை அடைவர். இவர்களது வணிகப் பயணத்தைக் குறிப்பிடும் ஸ்டிராபோ 'ரோமாபுரியிலிருந்து புறப்படும் வணிகர்கள் அலெக்சாண்டிரியா வணிகர்களுடன் கலந்து, நைல்நதிச் சமவெளி வழியாகப் பயணம் செய்து, செங்கடல், அரேபியா வளைகுடா ஆகியவற்றைக் கடந்து இந்தியாவின் மேற்குக் கரையை ரோமானிய நாவாய்களில் அடைந்தனர்'[18] என்று கூறியுள்ளார்.

பெரிப்புளுசு காலத்தில் ரோமானியர் கடல் மார்க்கத்தில் இரண்டு வழிகளில் தென்னிந்தியாவிற்கு வந்துள்ளனர். எகிப்தியத் துறைமுகங்களில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு செங்கடலின் கீழ்முகமாகப் பயணம் செய்து, அரேபியத் துறைமுகமான மூசா (Mouza)வைக் கடந்து பாபல் ஜலசந்தியைக் (Babel-Mandeep) கடந்து அரேபியாவின் தெற்குத் துறைமுகமான கானே (Kane) வில் தங்கி அங்கிருந்து இரண்டு வழித் தடங்களில் இந்தியாவை அடைந்துள்ளனர்.

**முதல்வழித்தடம்** - கானேவிலிருந்து புறப்படும் வணிகர்களுள் ஒரு குழுவினர் அரபிக்கடலில் பயணம் செய்து இந்தியாவின் வடமேற்குக் கரையிலுள்ள (குஜராத்) பாரிகாசா (Bary Gaza) துறைமுகத்தை அடைந்துள்ளனர்.

**இரண்டாவது வழித்தடம்** - மற்றொரு வணிகக் குழுவினர் இந்தியாவின் தென்மேற்குக் கரையான மலபார் பகுதியை அடைந்து அங்கிருந்து கடல் வழியாகக் குமரி முனையைக் கடந்து அரிக்கமேட்டை அடைந்துள்ளனர். இவ் வணிகக்குழு கானேவிலிருந்து புறப்படுவதற்குப்

17 Wheeler R.E.M. 1946 : 92   18 Marie-Francoise Boussac & Jean Francoise Balles 1995 : 83

Tamil Heritage Foundation International (THFi)

பதிலாகச் சில சமயங்களில் சோமாலியாவின் குவார்ட.்.புய் முனை (Quardafui Capé) யிலிருந்து புறப்பட்டு, மலபாரின் முசிறித் துறைமுகத்தையும் அடைந்துள்ளது.

இப்பயணங்கள் வடமேற்குப் பருவக்காற்று, சாதகமாக வீசும் பருவ காலங்களில் நிகழும். எகிப்திலிருந்து இந்தியாவிற்குப் புறப்படும் பயணம் ஜூலையில் தொடங்கும். இந்தியாவிலிருந்து எகிப்திற்குச் செல்லும் பயணம் கோடையில் தொடங்கும். இப்பயணத்தின் போது அலெக்சாண்டிரியாவிலிருந்து முசிறித் துறைமுகத்திற்குச் செங்கடல் வழியாக வந்துசேர மூன்று மாதங்களாகும். செங்கடலில் பாபல் ஜலசந்திக்கு வடக்கேயுள்ள 'ஓகெலிஸ்' (Okelis) துறைமுகத்திலிருந்து பருவக்காற்றின் சாதகத்தில் புறப்பட்டு முசிறித் துறைமுகத்தை வந்தடைய நாற்பது நாட்கள் ஆகும் என்கிறார் பிளினி.[19] மலபார் கரைக்கு வந்து சேரும் ரோமானியர் உள்நாட்டு நகரங்களுடன் நிலவழியாவும், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய சோழ மண்டலத் துறைமுகங்களுடன் கடல்வழியாகவும் தொடர்பு கொண்டுள்ளனர். தமிழகத்தில் ரோமானிய வணிகத்தின் செல்வாக்குப் பற்றிக் குறிப்பிடும்போது பி.எல். குப்தா (P.L. Gupta) 'கி.மு. முதல் நூற்றாண்டில் தொடங்கிய ரோமானிய வணிகத் தொடர்பு தொண்டி, முசிறி என்று மலபார் கடற்கரையில் தொடங்கி, பின்னர் கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் போன்ற கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்கும் பரவியிருக்க வேண்டும்'[20] என்று கூறியுள்ளார். மலபார் கடற்கரைப் பகுதியில் மிகுதியாகக் கிடைக்கும் ரோமானிய நாணயங்கள் அரிக்கமேடு பகுதி நோக்கி வரவரக் குறைந்து கொண்டே வரும் தன்மையும் இக்கூற்றை உறுதி செய்கின்றது.

**பண்டைய துறைமுகங்கள்**

அலெக்சாண்டிரியாவிலிருந்து புறப்படும் ரோமானியர்கள் அரிக்கமேடு வரும்வரை இடையில் பல துறைமுகங்களில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு பயணம் செய்துள்ளனர். பண்டைய காலத்தில் சிறந்து விளங்கிய செங்கடல் துறைமுகங்களாவன- மியோஸ் ஹார்மஸ், அபுஷார், லெகோஸ் லைமென், பெர்னிகே ஆகியனவாகும். அரபு நாடுகளை ஒட்டிய பகுதிகளில் கானே, அரேபியா .்.பெலிக்ஸ், குவார்ட.்.புய் ஆகியன பெரிய துறைமுகங்களாக இருந்தன. அதே போன்று இந்தியாவின் மேற்கே அரபிக்கடலில் இருந்த அக்காலத்

19. Vimala Begley 1992 : 122 20 Vimala Begley 1983 : 481



துறைமுகங்கள் பாரிகாசா(Bary gaza), சுபாரகா (Suparaka), தொண்டி (Tondis), முசிறி (Muciri), நெல்சிந்தா (Nelcynda) ஆகியனவாகும். தென்னிந்தியாவின் சோழமண்டலக் கரைத் துறைமுகங்கள் கொற்கை, அழகன்குளம், காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு ஆகியனவாகும்.

முசிறி, அரிக்கமேடு ஆகிய துறைமுகங்கள் கப்பல்கள் வந்து தங்கும் தளமாக மட்டுமின்றி, பெரிய கப்பல்களிலிருந்து சரக்குகளைப் படகுகளுக்கு மாற்றி, சிறிய துறைமுகங்களுக்கும், ஆறுகள் வழியாக உள்நாட்டிற்கும் எடுத்துச் செல்லும் வசதிகளும் பெற்றிருந்தன. அரபிக் கடலில் முசிறித் துறைமுகத்தை அடையும் ரோமானியர் கலங்கள் சுள்ளியம் பேரியாற்றில் புகுந்து உள்நாட்டை அடைந்ததாக எருக்காட்டூர் தாயங்கண்ணனார்,

*சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க*
*யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளங்கெழு முசிறி*[21]

என்று பாடியுள்ளார். யவன மரக்கலங்கள்முசிறித்துறை முகத்திற்குக் கொண்டுவரும் பொற் பரிசத்தைக் கழித்தோணிகளில் ஏற்றிக் கரை சேர்க்கும் தன்மையது என்று பரணர்[22] பாடியுள்ளார். பண்டைத் தமிழகத்தில் முசிறித் துறைமுகம் கடல் பகுதியிலிருந்து சற்று உள்ளே தள்ளியிருந்ததால் வணிகப் பண்டங்களின் போக்குவரத்து சிறிய படகுகளின் மூலமாகவே நடைபெற்று வந்துள்ளது. பரணர் தரும் செய்தியை உறுதிப்படுத்தும் வண்ணம் பிளினியும் (கி.பி. 23-79) கண்டு எழுதியுள்ளார்.[23]

அரிக்கமேடு துறைமுகமும் முசிறித் துறைமுகம் போன்றதே! சுள்ளியம் பேரியாற்றின் வழியாக ரோமானியர் முசிறித் துறைமுகத்தை அடைந்தது போன்று யவனர் அரியாங்குப்பத்தாற்றின் வழியாக அரிக்கமேட்டை அடைந்துள்ளனர். ஆற்றின் கரையை ஒட்டியுள்ள துறைமுகங்களே பெரும்பாலும் அக்காலத்தில் சிறந்து விளங்கி வந்துள்ளன. உள்நாட்டுச் சரக்குப் போக்குவரத்திற்கு ஆறுகள் பயன்படுத்தப் பட்டமையும் இதற்கு ஒரு காரணமாகும். அரிக்கமேடு (அரியாங்குப்பத்தாறு), காவிரிப்பூம்பட்டினம் (காவிரியாறு), முசிறி (பேரியாறு) ஆகியன இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

21. அகம். 149:9-13 22. புறம். 343:3-10 23. ப. பசவலிங்கம் 1984:117

Tamil Heritage Foundation International (THFi)

எகிப்து நாட்டின் செங்கடல் பகுதியில் உள்ள ஹார்மஸ் (Hormuz) துறைமுகத்திலிருந்து இந்தியா நோக்கி நூற்றிருபது கலங்கள் பாய் விரித்தோடியதைத் தாம் நேரில் பார்த்ததாக வரலாற்றறிஞர் ஸ்டிராபோ குறிப்பிட்டுள்ளார்.[24] ஆசியத் துணைக் கண்டத்தில் அலெக்சாண்டரின் படையெடுப்புக்குப் பின்னர்தான் இந்தியாவிற்கும் ரோமானிய நாட்டிற்கும் இடையே வணிக உறவுகள் அதிகமாகவும் அதேசமயம் நெருக்கமாகவும் வளர்ந்து வந்துள்ளன. மத்தியத் தரைக்கடல் நாடுகளுடன் இந்தியா கொண்ட வணிகத் தொடர்பில் மௌரியர்கட்கு அடுத்த நிலையில் தமிழர்களே சிறப்புடன் விளங்கினர்.

சங்க இலக்கியம் குறிப்பிடும் முசிறிப்பட்டினம் இடைக்காலக் கல்வெட்டில் 'முயிறிக்காடு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[25] இன்று முசிறிப்பகுதி கொடுங்களூர் அல்லது கிரங்கனூர் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகின்றது. 1945-46 ஆம் ஆண்டுகளில் கொடுங்களூரில் உள்ள 'சேரமான் பறம்பு' என்னுமிடத்தில் அகழ்வாய்வு நிகழ்த்தப்பட்டது. பழைய முசிறித் துறைமுகத்தைக் கடல் கொண்டு விட்டதால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்பொருட்கள் இப்பகுதியில் கிடைத்துள்ளன. பழைய காவிரிப்பூம்பட்டினத் துறைமுகமும் கடலுக்குள் மூழ்கிவிட்டது. கடற்கரையிலிருந்து சற்று உள்ளடங்கி இருப்பதால் அரிக்கமேட்டுப் பகுதி கடல் கோளுக்குத் தப்பியது.

### கப்பல் தங்கு தளம்/ படகுத் துறை

அரிக்கமேட்டில் கிடைத்த பல ஆம்∴போரா ஓடுகளில் புசோலோனா சிமெண்டுடன் (Pozzolana Cement) கூடிய கலவை காணப்படுகின்றது. ரோமானியரால் ஒயின், ஆலிவ் எண்ணெய், கருவாட்டுக் குழம்பு ஆகியன கொண்டுவரப் பயன்படுத்தப் பட்ட ஆம்∴போரா சாடிகள் உடைந்த பின்பு கப்பல் தங்குதளமோ படகுத் துறையோ அமைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உடைந்த ஆம்போரா சாடி ஓடுகளுடன், நீர்க்கசிவு எதிர்ப்புக் கலவையான (Water Resistant) புசோலோனா சிமெண்டும் சேர்த்துக் கலந்து படகுத் துறைகள் அமைக்கப்பட்டிருக்கலாம்.[26] உறுதியான பிடிப்பும், நீரில் கரையாத தன்மையும் கொண்டவையாக இவை காணப்படுகின்றன. ரோமானிய நாட்டிலிருந்து இங்கே கொண்டுவரப்பட்ட சாடிகளை உடைத்தே இத்தகைய தங்குதளத்தை அமைத்திருக்கலாம். பதினைந்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் புசோலோனோ சிமெண்டுடன் கூடிய உடைந்த ஆம்போரா ஓடுகள் அரிக்கமேட்டில் விமலா பெக்லியால் (1991-1992) கண்டெடுக்கப் பட்டுள்ளன.

24.கே.கே.பிள்ளை1972:53 25. Vimala Begley 1992 : 122 26. Vimala Begley 1996 : 318



கப்பல்களைப் பழுதுபார்க்கவும், படகுத் துறைகளைச் சீரமைக்கவும் புசோலோனோ கலவை மத்தியத்தரைக்கடல் நாடுகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. மத்தியத் தரைக்கடல் நாடான இத்தாலியில் உள்ள கோசா (Cosa) துறைமுகத்தில் இத்தகைய புசோலோனோ சிமெண்ட் கலவையில் ஆம்∴போரா சாடி ஓடுகளில் அமைக்கப்பட்ட பழங்காலப் படகுத்துறை ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.[27] எனவே, ரோமானியர்கள் தங்கள் கப்பல் அல்லது படகுகள் வந்து தங்குவதற்கு ஏற்ற வசதியான தளமாக இத்தகைய படகுத்துறையை அரிக்கமேட்டில் அரியாங்குப்பத்தாற்றின் கரையோரமாக அமைத்திருக்கலாம்.

சோழமண்டலக் கடற்கரையை அடைந்த யவனக் கலங்கள் கடற்கரை ஓரமாக நங்கூரம் பாய்ச்சிவிட்டு அங்கிருந்து படகுகளில் பொருட்களை ஏற்றிக்கொண்டு அரியாங்குப்பத்தாற்றின் வழியாக அரிக்கமேட்டை அடைந்து வணிகம் புரிந்து வந்துள்ளனர். ஆம்∴போரா சாடிக்ளின் காலம் கி.மு.100 - கி.பி.100-க்கும் இடைப்பட்ட பகுதியாதலால் இக்காலகட்டத்தில்தான் அரிக்கமேட்டில் ரோமானியரின் படகுத்துறையும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அரிக்கமேட்டின் வடபகுதியில் ஒரே இடத்தில் ஆம்∴போரா சாடிஓடுகள் மிகுதியாகக் காணப்படுவதால் அவ்விடத்தில்தான் படகுத் துறையும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பண்டைய சேரத் துறைமுகமான முசிறியை (கொடுங்களூர்) ஒட்டி அமைந்துள்ள பட்டணம் (Pattanam) பகுதியில் அண்மையில் அகழ்வாய்வு நடத்தப்பட்டது. சங்ககாலத்தைச் சேர்ந்த பல அரிய தொல்பொருட் சின்னங்கள் இங்குக் கண்டெடுக்கப்பட்டன. கொடுங்களூருக்கு 8கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூர் பேரியாற்றங்கரையில் அமந்துள்ளது. ரோமானியக் குடியிருப்புக்களுடன் கூடிய கட்டடப் பகுதிகள், ஆம்போரா சாடிகள், பல்வகை மணிகள், கண்ணாடிக் கோப்பைத் துண்டுகள், ரௌலெட்டெட் பானைகள் முதலானவை கண்டெடுக்கப்பட்டன. இவற்றுடன் படகுத்துறை ஒன்றும் 6மீ நீளமுள்ள படகும் நீண்ட துடுப்பு ஒன்றும் படகுகளை வரிசையாக நிறுத்துவதற்கான கட்டுத் தறிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[28] இங்குள்ள படகுத்துறை அரிக்கமேட்டில் உள்ளதைப் போன்றே கப்பலிலிருந்து சரக்குகளை ஆற்றின் வழியாகப் படகில் கொண்டுவந்து

27. Ibid : 110 28. Chemmozhi - Vol.2 No.1 Oct-Dec 2007 : 27

Tamil Heritage Foundation International (THFi)

எகிப்து நாட்டின் செங்கடல் பகுதியில் உள்ள ஹார்மஸ் (Hormuz) துறைமுகத்திலிருந்து இந்தியா நோக்கி நூற்றிருபது கலங்கள் பாய் விரித்தோடியதைத் தாம் நேரில் பார்த்ததாக வரலாற்றறிஞர் ஸ்டிராபோ குறிப்பிட்டுள்ளார்.[24] ஆசியத் துணைக் கண்டத்தில் அலெக்சாண்டரின் படையெடுப்புக்குப் பின்னர்தான் இந்தியாவிற்கும் ரோமானிய நாட்டிற்கும் இடையே வணிக உறவுகள் அதிகமாகவும் அதேசமயம் நெருக்கமாகவும் வளர்ந்து வந்துள்ளன. மத்தியத் தரைக்கடல் நாடுகளுடன் இந்தியா கொண்ட வணிகத் தொடர்பில் மௌரியர்கட்கு அடுத்த நிலையில் தமிழர்களே சிறப்புடன் விளங்கினர்.

சங்க இலக்கியம் குறிப்பிடும் முசிறிப்பட்டினம் இடைக்காலக் கல்வெட்டில் 'முயிறிக்காடு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[25] இன்று முசிறிப்பகுதி கொடுங்களூர் அல்லது கிரங்கனூர் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகின்றது. 1945-46 ஆம் ஆண்டுகளில் கொடுங்களூரில் உள்ள 'சேரமான் பறம்பு' என்னுமிடத்தில் அகழ்வாய்வு நிகழ்த்தப்பட்டது. பழைய முசிறித் துறைமுகத்தைக் கடல் கொண்டு விட்டதால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்பொருட்கள் இப்பகுதியில் கிடைத்துள்ளன. பழைய காவிரிப்பூம்பட்டினத் துறைமுகமும் கடலுக்குள் மூழ்கிவிட்டது. கடற்கரையிலிருந்து சற்று உள்ளடங்கி இருப்பதால் அரிக்கமேட்டுப் பகுதி கடல் கோளுக்குத் தப்பியது.

### கப்பல் தங்கு தளம்/ படகுத் துறை

அரிக்கமேட்டில் கிடைத்த பல ஆம்ஃபோரா ஓடுகளில் புசோலோனா சிமெண்டுடன் (Pozzolana Cement) கூடிய கலவை காணப்படுகின்றது. ரோமானியரால் ஒயின், ஆலிவ் எண்ணெய், கருவாட்டுக் குழம்பு ஆகியன கொண்டுவரப் பயன்படுத்தப் பட்ட ஆம்ஃபோரா சாடிகள் உடைந்த பின்பு கப்பல் தங்குதளமோ படகுத் துறையோ அமைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உடைந்த ஆம்போரா சாடி ஓடுகளுடன், நீர்க்கசிவு எதிர்ப்புக் கலவையான (Water Resistant) புசோலோனா சிமெண்டும் சேர்த்துக் கலந்து படகுத் துறைகள் அமைக்கப்பட்டிருக்கலாம்.[26] உறுதியான பிடிப்பும், நீரில் கரையாத தன்மையும் கொண்டவையாக இவை காணப்படுகின்றன. ரோமானிய நாட்டிலிருந்து இங்கே கொண்டுவரப்பட்ட சாடிகளை உடைத்தே இத்தகைய தங்குதளத்தை அமைத்திருக்கலாம். பதினைந்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் புசோலோனோ சிமெண்டுடன் கூடிய

24. கே.கே.பிள்ளை 1972:53 25. Vimala Begley 1992 : 122 26. Vimala Begley 1996 : 318

Tamil Heritage Foundation International (THFi)



உடைந்த ஆம்போரா ஓடுகள் அரிக்கமேட்டில் விமலா பெக்லியால் (1991-1992) கண்டெடுக்கப் பட்டுள்ளன.

கப்பல்களைப் பழுதுபார்க்கவும், படகுத் துறைகளைச் சீரமைக்கவும் புசோலோனோ கலவை மத்தியத்தரைக்கடல் நாடுகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. மத்தியத் தரைக்கடல் நாடான இத்தாலியில் உள்ள கோசா (Cosa) துறைமுகத்தில் இத்தகைய புசோலோனோ சிமெண்ட் கலவையில் ஆம்ஃபோரா சாடி ஓடுகளில் அமைக்கப்பட்ட பழங்காலப் படகுத்துறை ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.[27] எனவே, ரோமானியர்கள் தங்கள் கப்பல் அல்லது படகுகள் வந்து தங்குவதற்கு ஏற்ற வசதியான தளமாக இத்தகைய படகுத்துறையை அரிக்கமேட்டில் அரியாங்குப்பத்தாற்றின் கரையோரமாக அமைத்திருக்கலாம்.

சோழமண்டலக் கடற்கரையை அடைந்த யவனக் கலங்கள் கடற்கரை ஓரமாக நங்கூரம் பாய்ச்சிவிட்டு அங்கிருந்து படகுகளில் பொருட்களை ஏற்றிக்கொண்டு அரியாங்குப்பத்தாற்றின் வழியாக அரிக்கமேட்டை அடைந்து வணிகம் புரிந்து வந்துள்ளனர். ஆம்ஃபோரா சாடிக்ளின் காலம் கி.மு.100 - கி.பி.100-க்கும் இடைப்பட்ட பகுதியாதலால் இக்காலகட்டத்தில்தான் அரிக்கமேட்டில் ரோமானியரின் படகுத்துறையும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அரிக்கமேட்டின் வடபகுதியில் ஒரே இடத்தில் ஆம்ஃபோரா சாடிஓடுகள் மிகுதியாகக் காணப்படுவதால் அவ்விடத்தில்தான் படகுத் துறையும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பண்டைய சேரத் துறைமுகமான முசிறியை (கொடுங்களூர்) ஒட்டி அமைந்துள்ள பட்டணம் (Pattanam) பகுதியில் அண்மையில் அகழ்வாய்வு நடத்தப்பட்டது. சங்ககாலத்தைச் சேர்ந்த பல அரிய தொல்பொருட் சின்னங்கள் இங்குக் கண்டெடுக்கப்பட்டன. கொடுங்களூருக்கு 8கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூர் பேரியாற்றங்கரையில் அமந்துள்ளது. ரோமானியக் குடியிருப்புக்களுடன் கூடிய கட்டடப் பகுதிகள், ஆம்போரா சாடிகள், பல்வகை மணிகள், கண்ணாடிக் கோப்பைத் துண்டுகள், ரௌலெட்டெட் பானைகள் முதலானவை கண்டெடுக்கப்பட்டன. இவற்றுடன் படகுத்துறை ஒன்றும் 6மீ நீளமுள்ள படகும் நீண்ட துடுப்பு ஒன்றும் படகுகளை வரிசையாக நிறுத்துவதற்கான கட்டுத் தறிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[28] இங்குள்ள படகுத்துறை அரிக்கமேட்டில் உள்ளதைப் போன்றே கப்பலிலிருந்து சரக்குகளை ஆற்றின் வழியாகப் படகில் கொண்டுவந்து

27. Ibid : 110 28. Chemmozhi - Vol.2 No.1 Oct-Dec 2007 : 27

கரையில் இறக்குவதற்காக அமைக்கப்பட்ட தங்குதளமாகவே காணப்படுகின்றது.

## உள்நாட்டு வணிகத் தொடர்பு

வணிகம் என்பது ஒரே இடத்திலிருந்து விற்பது, எடுத்துச் சென்று விற்பது என இரு வகைப்படும். அரிக்கமேட்டைப் பொறுத்தவரை இரண்டு வகையிலும் வணிகம் நடைபெற்று வந்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருளை அரிக்கமேட்டில் பண்டசாலைகள் அமைத்து அவற்றில் தேக்கிவைத்து உள்நாட்டு வணிகர்கட்கு விற்று வந்துள்ளனர். உள்நாட்டு வணிகர்கள் அவற்றை வாங்கிப் பல ஊர்களுக்கும் எடுத்துச் சென்று விற்றுள்ளனர். உள்நாட்டு வணிகப் போக்குவரத்திற்கு ஆறுகள் பெரிதும் பயன்படவில்லை. ஆனால் உள்நாட்டிலிருந்து வணிகப் பொருட்களைக் கடற்கரைக்கு ஆற்றின் வழியாக எடுத்துச் செல்ல புணை, பரிசல், ஓடம், அம்பி, திமில், ஆகிய சிறு கலங்கள் பயன்பட்டன.

அரிக்கமேட்டை அடைந்த ரோமானியப் பொருட்கள் அங்கிருந்து வடக்கே வசவசமுத்திரம் வழியாகவும் தெற்கே அழகன்குளம் வழியாகவும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பாண்டியரின் துறைமுகப் பட்டினமாகிய அழகன்குளத்திலிருந்து வைகை ஆறு வழியாக மதுரைக்குப் பண்டங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. அரிக்கமேட்டிலிருந்து உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் தரைவழிப் போக்குவரத்து அடிப்படையிலேயே நிகழ்வுற்றது. அரிக்கமேட்டிலிருந்து மேல்சாத்தமங்கலம், கோட்டைமேடு, சோரப்பட்டு, சுற்றுக்கேணி, திருவக்கரை ஆகிய இடங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததை அகழ்வாய்வு முடிவுகள் அறிவிக்கின்றன.

புதுச்சேரிக்குத் தென்மேற்கில் உள்ள வில்லியனூரிலிருந்து ஏம்பலம் செல்லும் தார்ச்சாலையில் சாத்தமங்கலம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரில் 1983 ஆம் ஆண்டு பிப்பிரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாதங்கள், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அகழ்வாய்வு செய்தனர்.[29] இவ்வாய்வில் அரிக்கமேட்டில் கிடைத்ததைப் போன்று கறுப்பு-சிவப்புப் பானை ஓடுகள் வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள், இறக்குமதி வகையைச் சேர்ந்த ரௌலெட்டெட் கலன்கள், ஆம்..

29.ந.வேங்கடேசன் 1990:147



போரா சாடிகள், மூடிகள், பெருங்கற்புதைவுக் கால மட்கலன்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. செஞ்சியாற்றிலிருந்து சற்று உள்ளடங்கியுள்ள இவ்வூருக்கு அரிக்கமேட்டிலிருந்து தரை வழியாகவே உள்நாட்டு வணிகர்கள் பொருட்களைக் கொண்டுவந்திருக்க வேண்டும். புராணசிங்க பாளையம் என்னும் ஊருக்கு அருகில் உள்ள கோட்டைமேடு, சோரப்பட்டு ஆகிய இரு இடங்களும் தொல்பொருள் ஆய்வுக்குட்பட்ட பகுதிகளாகும்.

கோட்டைமேடு பகுதியை ஒட்டி, பம்பை வாய்க்கால் தென்பெண்ணை ஆற்றிலிருந்து சிறிய ஓடையாகப் பிரிந்து, 8 கி.மீ. தூரம் ஓடிப் பின்பு செஞ்சியாற்றில் கலக்கிறது. கோட்டைமேடு பகுதியில் 1999-ஆம் ஆண்டு தொல்பொருள் ஆய்வாளர் பி. இரவிச்சந்திரன் அகழ்வாய்வு மேற்கொண்டார்.[30] இவ்வாய்வில் கி.பி. முதல்-இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆம்..போரா சாடிகள், மூடிகள், ரௌலெட்டெட் கலன்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரிக்கமேட்டுத் தொல்பொருட் சின்னங்களைப் போன்றே அமைந்துள்ளன. கி.பி. முதல் நூற்றாண்டில் அரிக்கமேட்டிற்கும் கோட்டைமேட்டிற்கும் இடையே நடைபெற்ற தரைவழிப் போக்குவரத்தில் இவற்றை அரிக்கமேட்டிலிருந்து கோட்டைமேடு, சுற்றுக்கேணி ஆகிய இடங்கட்கு உள்நாட்டு வணிகர்கள் கொண்டு சென்றிருக்க வேண்டும்.

இந்தப் போக்குவரத்து செஞ்சியாற்றின் வழியாக நடந்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் கோட்டைமேடு வழியாக ஓடிவரும் பம்பை வாய்க்கால் பெண்ணை யாற்றிலிருந்து செஞ்சியாற்றுக்கு மழைக் காலங்களிலும், வெள்ளப் பெருக்கிலும் நீரைமுகந்து வரும் ஓடையாக இருந்திருக்கின்றதே ஒழிய நிரந்தர நீர்வழிப் போக்குவரத்தாகப் பயன்படவில்லை. அதே போன்று சுற்றுக்கேணி, திருவக்கரைப் பகுதிகளில் பூமியினுள்ளே புதையுண்டிருக்கும் கல்மரப் படிவம் (Geological Archaean Formation) அப்பகுதியில் ஓடிவரும் செஞ்சியாற்றின் படகுவழிப் போக்குவரத்தை அனுமதிக்கவில்லை. மேலும் பண்டங்களை உள்நாட்டில் தேவைப்பட்ட இடங்களுக்கு ஏற்றிச்சென்று விற்பனை செய்ய, படகுகளை விட வண்டிகளே மிகுந்த வசதியான போக்குவரத்துச் சாதனங்களாகும். எனவே இத்தகைய காரணங்களால் உள்நாட்டு வணிகப் போக்குவரத்து, தரைவழி மூலமாகவே நடைபெற்று வந்தது என்பது தெளிவாகின்றது.

30. P. Ravichandirane 2001:3

Tamil Heritage Foundation International (THFi)

உள்நாட்டு வணிகத்தில் கரையோரங்களிலும் ஆற்றின் குறுக்கேயும் பண்டங்களை ஏற்றிச் சென்ற ஓடம் ப..றி எனப்படும் சிறு மரக்கலங்களில் அம்பி, தோணி முதலானவையும் இருந்தன. பெருங்கடலிலே ஓடும் கலம் நாவாய் என்றும் வங்கம் என்றும் அழைக்கப்பட்டது. பெரிய மரக்கலங்கள் (நாவாய்கள்) வெளிநாட்டிலிருந்து கொணர்ந்த பொருட்கள் கழிகளில் இயங்கும் தோணிகளால் கரை சேர்க்கப்படும். கரை சேர்க்கப்பட்ட பொருட்கள் உள்நாட்டிற்குக் கொண்டுசெல்ல சாலைகளையும் ஆறு முதலான நீர்வழிகளும் பயன்படுத்தப்பட்டன. சாலை வழியாக வணிகப் பொருட்களைக் கொண்டுசெல்ல வண்டிகளும் கழுதைகளும் எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்று முறையே பெருவழக்காயிருந்தது. நெல்லை அளவாக வைத்தே ஏனைய பொருட்களை மதிப்பிட்டனர்.[31]

உப்புவணிகர்கள் வண்டிகள் வரிசையாகச் செல்வதை உமணர் ஒழுகை என்பர்.[32] உமணர் உப்பு விற்றுவிட்டு ஊர் திரும்பும் பொழுது அவரோடு வந்த பொருட்களில் குரங்கும் கூடவே வந்து உமணர்தம் சிறுவரோடு கிலி கிலி ஆடும்[33] என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. சங்ககால வணிகர்கள் *புண்ணியம் முட்டா தண்ணிழல் வாழ்க்கை வாழ்ந்தவர்* என்று போற்றப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த தெருவின் அழகைக் கூறும் பரிபாடல்

*------- --------- ஆங்கு ஒருசார்*
*உண்ணுவ, பூசுவ, பூண்ப, உடுப்பவை*
*மண்ணுவ, மணி, பொன் மலைய கடல்*
*பண்ணியம், மாசு அறு பயந்தரு கருகப்*
*புண்ணிய வணிகர் புனை மறுகு ஒருசார்*[34]

என்று வர்ணிக்கின்றது. நகரங்களில் கடைத் தெருக்கள் எனப்படும் நாளங்காடி அல்லங்காடிகளில் நிலையாகப் பொருட்களைத் தேக்கிக் கொண்டு விற்பனை செய்த வணிகர் ஒருவகையினர், துறைமுக நகரங்களில் பெரிய பண்ட சாலைகளை அமைத்துக்கொண்டு பெரிய அளவில் நீர் நில வணிகம் செய்த வணிகர் பிறிதொரு வகையினர் ஆவர். கடைத் தெருக்களில் பல்வேறு பண்டங்களின் பெயர்களைக் குறிக்கும் கொடிகள் அடையாளமாகப் பறக்க விடப்பட்டிருக்கும். இத்தகைய கடைத் தெருவை ஆவணம் என்றழைத்தனர். ஆவணத்தில்

31.பதிற்: 4(நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்) 32.சிறுபாண்:55
33.சிறுபாண்:55-62 34.பரிபாடல் 1:22-25



மக்களைக் கவர்வதற்காகப் பல்வேறு வெறியாட்டு விழாக்களும் களியாட்டங்களும் நடைபெறும்.

### மேலைத் தொடர்புகள்

கி.பி. முதல் நூற்றாண்டில் கிரேக்கக் கடற்பயணி இந்தியாவிற்கு வருகை புரிந்தபோது இந்தியத் துறைமுகங்கள் வணிக நோக்கில் வளர்ச்சி பெற்று, பெர்சியா, அரேபியா, ஆப்பிரிக்கா, மற்றும் செங்கடல் துறைமுகங்களோடு தொடர்பு கொண்டிருந்தமையைக் குறித்துள்ளார்.[35] அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்புக்குப் பின்னரே இந்திய வணிகப் பொருட்கள் கிரேக்க நாட்டிற்கு மிகுதியாக எடுத்துச் செல்லப்பட்டன. அதற்குப்பின் கிரேக்க நாட்டிலிருந்து பல வணிகப் பொருட்கள் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டன. ரோமானியர் இந்தியாவிற்கு வருமுன்பே இந்தியர்கள் ரோமானிய நாட்டிற்குச் செல்லும் கடல்வழியை உணர்ந்தவர்களாய் இருந்திருக்கின்றனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே வட இந்தியாவிற்கும், ரோமானிய நாட்டிற்கும் நிலவழி வணிகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் தென்னிந்தியாவிற்கும் ரோமாபுரிக்கும் இடையே ஏற்பட்ட வணிகத்தொடர்பு கடல் வழியிலேயே என்பதை உறுதிசெய்யும் அகழ்வாய்வுச் சான்றுகள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன.[36] கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2 ஆம் நூற்றாண்டுவரை செங்கடல் துறைமுகப் பகுதிகளில் மிகுதியான கப்பல் போக்குவரத்து நடைபெற்று வந்துள்ளது. இன்றிருப்பது போன்று, பழங்காலத்தில் மத்தியத் தரைக் கடலும் செங்கடலும் சூயஸ்கால்வாய் மூலம் இணைக்கப் பட்டிருக்கவில்லை.

இரண்டு கடல்களுக்கும் இடையே சூயஸ் புவிச்சந்திப்பு 160 கி.மீ. தூரத்திற்குத் தடையாக இருந்தது. ஆகவே, தமிழக வணிகர்கள் தங்கள் சரக்குகளைச் செங்கடல் துறைமுகங்கள் வரை ஏற்றிச் சென்று அங்கே இறக்கி நிலவழியாக எகிப்தைக் கடந்து, பின்னர் அலெக்சாண்டிரியா துறைமுகத்தை அடைந்து அங்கிருந்து மீண்டும் கடல் வழியாகக் கிரேக்க, ரோம் நாடுகளுக்கு அனுப்பி வைத்தனர். கி.பி. 1689 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் தோண்டப்பட்ட பின் செங்கடல் துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் நேரடியாக மத்தியத்தரைக் கடலை அடைந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றன.

35 R.C. Majumdar 1971:3 36. Vimala Begley 1992 : 6

Tamil Heritage Foundation International (THFi)

கி.பி. முதல் நூற்றாண்டில் இத்தகைய வசதி இல்லாத காரணத்தால் இத்தாலியிலிருந்து புறப்படும் ரோமானிய வணிகர்கள் முதலில் எகிப்தின் அலெக்சாண்டிரியா துறைமுகத்தை அடைவர். பின்னர் அங்கிருந்து ட்ராஜன் கால்வாய் (Trajan Canal) வழியாகச் செங்கடல் துறைமுகமான கிளைஸ்மாவை(Clysma) அடைவர். (இக்கால்வாய் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது). அல்லது மாற்று வழியாகப் பாபிலோனியாவிலிருந்து ஒட்டகம். பொதிகழுதைகள் மூலமாக வணிகப் பொருட்களைச் சுமந்துகொண்டு பாலைவனத்தைக் கடந்து வந்து மியோஸ் ஹார்மஸ் அல்லது பெர்னிகே துறைமுகத்தை அடைந்து அதன்பின்பு செங்கடல் வழியாக இந்தியா வந்துள்ளனர்.

அரிக்கமேடு அகழ்வாய்வாளர்களிடையே ரோமானியரின் அரிக்கமேட்டுப் பயணம் குறித்து முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. ரோமானிய எகிப்திலிருந்து தமிழகம் வரும் கப்பல்கள் நேரடியாக அரிக்கமேட்டுக்கு வருவதில்லை. அவை அரபிக்கடலில் உள்ள முசிறித் துறைமுகத்திற்கே வருகின்றன. பின்னர் அங்கிருந்து 'சங்கரா' (Sangara) அல்லது 'சம்கடா' (Samghada) என்றழைக்கப்படும் சிறிய கப்பல்கள் அல்லது நாவாய்கள் ரோமானியப் பொருட்களை ஏற்றிக் கொண்டு அரிக்கமேடு வந்து இறக்கிவிட்டு, கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களான அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை ஆகியவற்றில் கிடைக்கும் பொருட்களை ஏற்றிச் சென்றுள்ளன என்கிறார் விமலா பெக்லி.[37]

மேலும் தமிழகக் குறு வணிகர்கள் பலர் கிழக்குக் கடற்கரையிலிருந்து புறப்பட்டுச் சேரநாட்டு முசிறித் துறைமுகத்தை அடைந்து, சிறு படகுகளில் தாங்கள் ஏற்றிச்சென்ற பொருட்களைப் பண்டமாற்று அடிப்படையில் ரோமானியரிடம் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ரோமானியப் பொருட்களை மாற்றி வந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக்கூற்று பொருந்தாது. ஏனெனில் வாணிகம் சார்ந்த ரோமானியர் குடியிருப்புக்கள் 'யவன இருக்கைகள்' என்ற பெயரில் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்துள்ளன.

'எம்போரியம்' என்ற பெயரில் பொதுகேயில் (ஒப்பந்த)வணிக அடிப்படையில் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். அது மட்டுமின்றி, வீலர் தம்முடைய அகழ்வாய்வு முடிவுகளில் 'அரிக்கமேடு ரோமானியரின் நிரந்தரக் குடியிருப்பாக

37. Vimala Begley 1992: 10



இருத்தலின் இங்கேயே நேரடியாக வந்து வணிகம் புரிந்திருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.[38] எனவே, எம்போரியம் என்றழைக்கப்பட்ட சில முக்கியத் துறைமுகங்களுக்கு ரோமானியக் கப்பல்கள் நேரடியாக வந்து வணிகத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

**கீழைத் தொடர்புகள்**

இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும் அரிக்கமேடு நேரடி வணிகத்தில் ஈடுபட்டிருந்தமைக்கான அகழ்வாய்வுச் சான்றுகள் கிடைத்துள்ளன. இந்தோனேசியா, செம்பிரான், பாலி ஆகிய இடங்களில் கிடைத்துள்ள ரௌலெட்டெட் பானை ஓடுகள் தென்னிந்தியச் சாயலுடன் காணப்படுகின்றன. இவை கி.மு.100 அல்லது கி.பி.100-ஆம் ஆண்டைச் சேர்ந்தவையாகக் கணிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியா, பாலி, அரிக்கமேடு, காரைக்காடு ஆகிய இடங்களில் கிடைத்துள்ள ரௌலெட்டெட் கலன்கள் ஒரேமாதிரியான தொழில் நுட்பத்தையும், மூலப் பொருட்களையும் கொண்டு செய்யப்பட்டுள்ளன.[39]

இச்சான்றுகளின் அடிப்படையில் நோக்கும்போது தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் அரிக்கமேட்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு, வணிகப் பரிமாற்றம் ஆகியன இருந்திருப்பவை உறுதியாகின்றன. அரபு நாட்டவரும் தமிழ் நாட்டிற்கு வந்து வணிகம் புரிந்துள்ளமையைப் பதிற்றுப்பத்து மூலம் அறியலாம். அக்கால முசிறியில் இருந்த சந்தையை அரேபியர் பந்தர் (Pandhar) என்றே அழைத்துள்ளனர். பந்தர் என்னும் சொல் அரபு மொழியில் கடைவீதியைக் குறிக்கும்.

இறக்குமதி வகையைச் சேர்ந்த சில ரௌலெட்டெட் கோப்பைகள் அரிக்கமேடு, அழகன்குளம், காரைக்காடு, சந்திரகே துர்க் (ஆந்திரா), கந்தரோடை, அனுராதபுரம் (இலங்கை) ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் வட்டப் புனைவுகளின் இடையே கோழி முட்டை வடிவிலும் வட்டமாகவும் மீன், பறவை போன்ற வடிவங்கள் பதித்த அச்சுகொண்டு உருவங்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவ்வுருவங்கள் இவற்றை வனைந்த குயவராலேயே மிகவும் நுட்பமாகப் பதிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியா, பாலி ஆகிய தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் இவை போன்ற கலன்கள் கிடைத்திருப்பதால் அரிக்கமேட்டுடன் இந்நாடுகள் கொண்ட வணிகத்தொடர்பும் தொழில்நுட்பத் தொடர்பும் புலனாகின்றன.

38.Wheeler R.E.M. 1946 : 150 39. Vimala Begley 1996 : 25

Tamil Heritage Foundation International (THFi)

இவைதவிர இடைக்காலத்தைச் சேர்ந்த (கி.பி.9-10-ஆம் நூ.ஆ) ரௌலெட்டெட் கலன்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. பல்லவர் காலத்திலும் பிற்காலச்சோழர் காலத்திலும் தமிழகம் கடாரத்தோடு கொண்ட தொடர்பினைத் தமிழக வரலாறு குறிப்பிட்டுள்ளது.39 எனவே கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை அரிக்கமேடு கீழை மேலை நாடுகளுடன் தொடர்புகொண்ட பன்னாட்டு வணிகத் துறைமுகமாகச் செயல்பட்டு வந்த உண்மை புலனாகின்றது.

**கடல் வணிகப்பாலம் (வணிக மையம்)**

கிரேக்க நாட்டு மரக்கலங்கள் சீன நாட்டிற்குச் செல்லும் வழியில் தென்னிந்தியாவில் கிழக்கு மேற்குத் துறைமுகங்களில் தங்கி வணிக உறவுகளை ஏற்படுத்திச் சென்றுள்ளன. அதேபோன்று சீனாவிலிருந்து அரேபியாவிற்கும் மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கும் இடையே செல்லும் வணிகக் கப்பல்கள் தங்கள் நீண்ட கடல் பயணத்திற்கு நடுவே இளைப்பாறிச் செல்லும் துறைமுகமாக அரிக்கமேடு விளங்கி வந்துள்ளது. 'கொலோந்தியா (Kolondia) என்ற மிகப்பெரிய சரக்குக்கப்பல் இந்தியாவில் காவிரிப்பூம்பட்டினம், பொதுகே, சோபட்மா ஆகிய துறைமுகங்களிலிருந்து புறப்பட்டு மலேசியாவிற்குச் சரக்குகளை ஏற்றிச் சென்றது என்றும் சீனாவிலிருந்து ரோமாபுரிக்குச் செங்கடல் நோக்கிச் செல்லும் சரக்குக் கப்பல்கள் பொதுகேயில் வந்து தங்கிச் சென்றன' என்றும் பெரிப்புளுசு நூல் குறிப்பிட்டுள்ளது.[40]

கிழக்காசிய நாடுகளுக்கும் ரோமாபுரிக்கும் இடையே நடைபெற்று வந்த கடல்வழி வணிகப் போக்குவரத்தில் தமிழ் வணிகர்கள் (இடைத்தரகர்களாகப்) பெரும் பங்கு வகித்து வந்துள்ளனர். சீனம், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து பண்டங்களைக் கொள்முதல் செய்து வந்த தமிழ் வணிகர்கள் அவற்றை நல்ல விலைக்கு மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்துள்ளனர். இவ்வகையில் நோக்கும்போது பண்டைக் காலத்தில் கீழை மேலை நாடுகளிடையே நடைபெற்று வந்த வணிகப் பயணங்களின் தென்னிந்தியத் துறைமுகங்கள் இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு வந்துள்ளன.

மேலைநாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த வணிகத்தொடர்பு கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பின் குறையத் தொடங்கியது. அதன்பின் கீழை நாடுகளுடன் தமிழர்கள் தம் வணிக உறவை வலுப்படுத்திக்

39.கே.கே.பிள்ளை1972:59 40.சோ.முருகேசன்2000:10



கொண்டனர். கீழை-மேலை நாடுகளுக்கிடையே நடைபெற்று வந்த வணிகப் போக்குவரத்தில் மைய நிலையமாகச் செயல்பட்டு வந்த அரிக்கமேடு துறைமுகம் பல்வேறு வணிகப் பொருட்களை விநியோகம் செய்யும் நிறுவனமாகவும் செயல்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து அரிக்கமேட்டில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இலங்கை மற்றும் இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிகளுக்கு இங்கிருந்துதான் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழர் ரோமானியர் வணிகத்தொடர்பு அரிக்கமேடு அகழ்வாய்வின் மூலம் உறுதிப்படுத்தப் படுவதுடன் வணிக உறவுக்கான காலத்தை வரையறை செய்யவும் துணைபுரிந்துள்ளது.

**ஏற்றுமதி - இறக்குமதிப் பொருட்கள்**

முட்டாச் சிறப்பின் காவிரிப்பூம்பட்டினமும் யவனர் தந்த வினைமாண் நன்கலம் வந்து செல்லும் வளங்கெழு முசிறியும் மகளிரின் அழகுக்கு உவமையாகப் புனைந்துரைக்கப்படும் தொண்டியும் முத்துபடு பரப்பின் கொற்கை முன்றுறையும் பண்டைத் தமிழரின் சிறந்த துறைமுகங்களாக விளங்கியமை பற்றி இலக்கியங்கள் விவரிக்கின்றன.

தமிழகத்திலிருந்து பல பொருட்கள் கீழை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகியுள்ளன. அதே போன்று அயல்நாடுகளிலிருந்து பல பொருட்கள் தமிழகத்திற்கு இறக்குமதி ஆகியுள்ளன.பட்டினப்பாலை, காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையில் ஏற்றுமதி இறக்குமதி வாயிலாகக் குவிந்து கிடக்கும் பொருட்களைப் பட்டியலிட்டுக் காட்டும்போது,

*'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்*
*கங்கை வாரியும் காவிரிப் பயனும்*
*ஈழத் துணவும் காழகத் தாக்கமும்*
*அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி*
*வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு'*[41]

41.பட்டினப்.:185-191

Tamil Heritage Foundation International (THFi)

என்று பதிவு செய்துள்ளது. ஒரு நாட்டின் சமநிலையான பொருளாதாரத்திற்கு ஏற்றுமதி-இறக்குமதி மிகவும் இன்றியமையாத் தேவையாக விளங்குகின்றது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து அரிக்கமேட்டில் நிகழ்ந்து வந்த வணிகப் போக்குவரத்து இதற்கு ஆதரமாகத் திகழ்கின்றது.

தமிழகத்து ஏற்றுமதிப் பொருட்களில் மிளகும் முத்தும் மிகவும் விலை உயர்ந்தனவாகக் கருதப்பட்டன. தமிழகத்திலிருந்து மிகுதியான அளவிற்குக் கறுப்பு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ரோமானியரும் மிளகை விரும்பி வாங்கிச் சென்றுள்ளனர். கறுப்பு மிளகைப் போன்று வெள்ளை மிளகும் சங்க காலத் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி ஆகியுள்ளது. ரோமானிய நாட்டிற்குச் செல்லும் கலங்களில் மிகுதியான இடத்தை அடைத்துக்கொண்ட வணிகப் பொருள் மிளகே ஆகும்.

இறைச்சி முதலான உணவுப் பண்டங்களைப் பராமரிப்பதற்கும் பசியை அதிகரிப்பதற்கும் ரோமானியர் மிளகைப் பயன்படுத்தினர். ஹிப்போகிரேட்டஸ், கெலன், பிளினி முதலானவர்கள் ரோமானியர் மிளகை மருந்தாகப் பயன்படுத்தியமை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். ரோமாபுரியில் ஒரு இராத்தல் மிளகின் விலை பதினைந்து தெனாறி என்றும் தமிழ்நாட்டில் அவ்விலையில் அரைபங்கு கூட இல்லை என்றும் பிளினி கூறுவர்.[42] அதே போன்று சந்தனம் ரோமாபுரியில் நறுமணத்திற்காக மட்டுமின்றிப் பேதி மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டது.

காவிரிப்பூம்பட்டினத்தைப் போன்றே அரிக்கமேட்டிலிருந்தும் பல பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகியுள்ளன. அரிஸ்டாட்டில் காலத்திற்கு முன்பே கிரேக்க நாட்டிற்கு பட்டுநூல் (Raw silk) ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சீனாவிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதியான பட்டுநூலே தமிழக மஸ்லின் துணிகளோடு கிரேக்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அக்காலக் கிரேக்க-ரோமானியர் பருத்தி, பட்டு ஆகியவற்றை வேறுபாடில்லாமல் பயன்படுத்தியுள்ளனர். இரண்டையுமே அவர்கள் மரக்கம்பளி (Trade Wool) என்று குறிப்பிட்டுள்ளனர்.[43] உறையூரிலிருந்து 'அர்கரு மஸ்லின்' (Argaru Muslin) எனப்படும் துணிகள், பருத்திப் பஞ்சு ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக பி. டி. சீனிவாச ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார் (42. Ibid:200). வண்ணச்சாயம் தோய்க்கப்பட்ட மெல்லிய துணிவகைகள்,

42.சு.வித்தியானந்தன்2006:157 43. P.T. Srinivasa Iyangar 1989:199-200

Tamil Heritage Foundation International (THFi)



கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பொருட்கள், தந்தப் பொருட்கள், ஏலம், இலவங்கம், நறுமணப் பொருட்கள், சந்தன மரங்கள், இரத்தினங்கள், எஃகு ஆகியனவும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

அரிக்கமேட்டில் கி.பி. 100-ஆம் ஆண்டு தயாரான மணிவகைகள் பல (கண்ணாடி மணிகள், கல்மணிகள்) இந்தோனேசியாவிலும் தாய்லாந்திலும் கிடைத்துள்ளன. மணி செய்வதற்குரிய மூலப் பொருட்கள் அரிக்கமேட்டில் நிறைய கிடைப்பதால் அவை ஆப்பிரிக்கா, அரேபியா, தென்கிழக்காசியா ஆகிய பகுதிகளுக்கு ஏற்றுமதி ஆகியுள்ளன. ஆப்பிரிக்க நாடான மொசாம்பிக்கில் இம்மணிகளுக்கு அதிக வரவேற்பு இருந்தமையால் போர்த்துக்கீசியர் இவற்றைப் பெருமளவில் அரிக்கமேட்டிலிருந்து வாங்கிச் சென்றுள்ளனர்.[44] ரோமானியர் பெரிதும் விரும்பும் 'பெரைல்' (Beryl) என்னும் ஒருவகை இரத்தினக் கற்கள் கொங்கு நாட்டுப் பகுதியில் மிகுதியும் கிடைத்துள்ளன. ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள பொருட்களில் இக்கற்களும் இடம் பெற்றிருந்தன. இக்கற்களைக் கொண்டு ரோமானியர் மணிகள் செய்து அணிந்துள்ளனர்.

பண்டைக் காலத்தில் மிக விலைவுயர்ந்த பொருட்களே தமிழகத்திலிருந்து ரோமாபுரிக்கும் எகிப்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. முசிறித் துறைமுகத்திலிருந்து அலெக்சாண்டிரியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தமிழகப் பொருட்களின் மதிப்பினைப் பற்றி அக்கால வணிக ஒப்பந்தம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.[45] ஆயிரத்து எழுநூறு பவுண்டிற்கு மேற்பட்ட வாசனைப் பொருட்கள், நாலாயிரத்து எழுநூற்றுக்கும் மேற்பட்ட தந்தங்கள், எழுநூற்றுத் தொண்ணூறுக்கும் மேற்பட்ட துணிவகைகள் ஆகியவை அடங்கிய ஐந்நூறு டன் எடையுள்ள பொருட்களை ரோமானியக் கப்பல் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றிச்சென்றுள்ளது. இந்தியாவிலிருந்து ரோமானிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரோமானிய நாட்டிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பை விட மிகவும் அதிகமானது என்று[46] குறிப்பிட்டுள்ளமை ஈண்டு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

வெளிநாடுகளிலிருந்து அரிக்கமேட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களாவன அரிட்டைன், ரௌலெட்டெட் வகை மட்கலன்கள்,

44. D. Janaki 2000:8 45. Vimala Begley 1992: 10 46.புதுவைச்செய்திகள் அக்-1968:9

யவன நாட்டு மதுவும் ஆலிவ் எண்ணெயும் அடங்கிய ஆம்.ஃ.போரா சாடிகள், சில வகை மணிகள், ஈயம், கண்ணாடி, வெண்கலம், சில வகைத் துணிகள் முதலியவை. துணியாலும் மரப்பட்டையாலும் அலங்காரப் புனைவுகள் செய்யப்பட்டு இறக்குமதியான ரௌலெட்டெட் வகைக் கலன்கள் அரிக்கமேட்டிலும் அழகன் குளத்திலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. மத்தியத்தரைக்கடல் நாடுகளிலிருந்து அரிக்கமேட்டிற்குக் கொண்டுவரப்பட்ட பொருட்களாவன, கிரேக்க மற்றும் ரோமானிய நாட்டு ஒயின் வகைகள், வட அட்ரியாட்டிக் (Nothern Adriatic) நாட்டிலிருந்து ஆலிவ் எண்ணெய், ஸ்பெயின் நாட்டிலிருந்து கருவாட்டுக் குழம்பு (Garum Sauce) ஆகியனவாகும்.

அரிக்கமேட்டில் விமலா பெக்லி அகழ்வாய்வில் கிடைத்த எட்டு ஆம்.ஃ.போரா சாடி ஓடுகள் மீன்குழம்பு கொண்டுவரப் பயன்பட்டவற்றின் எச்சங்கள் ஆகும்.[47] இவற்றுள் இரண்டு ஓடுகள் ரோமானிய அரசன் அகஸ்டஸ் காலத்தைச் (கி.மு. 100)சேர்ந்தன. இவை இரண்டும் தெற்கு ஸ்பெயின் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். எஞ்சிய ஆறு ஓடுகளும் ஒரே ஆம்.ஃ.போரா சாடியின் ஓடுகளாக இருக்கலாம். இவ்வோடுகளின் உட்புறம் மஞ்சள் நிறமுள்ள பொருள் பூசப்பட்டுள்ளது. இந்த ஆம்.ஃ.போரா சாடி முதலில் பழச்சாறு (ஆப்பிள்) கொண்டுவரப் பயன்படுத்தப்பட்டு, பின்னர் மறுபடியும் இரண்டாவது பயணத்தின்போது மீன்குழம்பு கொண்டுவரப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட இத்தாலிய சிஜிலிட்டா வகைக் கலன்கள் அரிக்கமேட்டில் வெவ்வேறு வடிவங்களில், வகைகளில் கிடைத்துள்ளன. உணவு பரிமாறும் கலன்களாவும், தட்டுக்களாகவும், கோப்பைகளாகவும், சிறுசிறு கிண்ணங்களாகவும் இவை கிடைத்துள்ளன. சிஜிலிட்டா மட்கல வகையில் குடிநீர் பருகும் கலன்கள் எவையும் கிடைத்தில. இத்தாலியத் தீபகற்பத்தில் உள்ள அரேசோ (Aresso), புசோலி (Pozzoli) ஆகிய இடங்களில் இவை வனையப் பட்டிருக்கலாம். இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய கலன்களைக் காட்டிலும் சிஜிலிட்டா வகைக் கலன்கள் பத்து மடங்கு மிகுதியாகக் கிடைத்திருப்பதால் இவற்றைப் பயன்படுத்திய ரோமானியரும் அரிக்கமேட்டில் மிகுதியாக வாழ்ந்திருக்க வேண்டும்.

மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்து அரிக்கமேட்டிற்குக் கொண்டுவரப்பட்ட சிஜிலிட்டா கலன்கள் அனைத்தும் ஒரே மாதிரியாகக் காணப்படுவதால் இவை அனைத்தும் ஒரே கப்பல் பயணத்தின்போதே இங்கே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டின்

47. Vimala Begley 1996 : 319



மத்தியில் நிகழ்ந்த கடல் வணிகத்தின்போது இவை இங்கே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். இவற்றில் ஒரு சில சிஜிலிட்டா மட்டும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. எகிப்து நாட்டின் கிழக்கே உள்ள பாலைவனத்தில் நடைபெற்ற அகழ்வாயில் இத்தகைய சிஜிலிட்டா கலன்கள் கண்டெடுக்கபட்டுள்ளன. அரசக் குடியினர் பயன்படுத்தும் வகையில் மிகவும் வழவழப்பாகச் செய்யப்பட்டுள்ள இவை கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். ஏனைய வணிகப் பொருட்களுடன் முத்திரையில்லாத சிஜிலிட்டா கலன்களும் வணிக நோக்கிற்காகவே அரிக்கமேட்டிற்கு எடுத்துவரப்பட்டவையாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலில் அரிக்கமேட்டில் மட்டும்தான் எகிப்து நாட்டைச் சேர்ந்த நீலக்கல் மணிகள் கிடைத்துள்ளன. ஆனால் இவற்றைப் போன்ற மணிகள் கி.மு. 3000-ஆண்டிற்கு முன்பே எகிப்திலிருந்து மெசபடோமியா, மொகஞ்சதாரோ ஆகிய பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.[48] இவை தவிர யவன மஞ்சிகை, யவனப்பேழை ஆகிய இறக்குமதி பொருட்கள் பற்றியும் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.[49]

ரோமானிய நாட்டிலிருந்து மிகவும் குறைந்த அளவிலான பொருட்களே தமிழகத்திற்கு இறக்குமதி ஆகியுள்ளன. இறக்குமதி அளவு குறைந்ததால் ரோமானியர் தங்கத்தைக் கொடுத்து அதற்கு ஈடான ஏற்றுமதிப் பொருட்களை வாங்கிச் சென்றுள்ளனர். தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களான பாரிகாசா, முசிறி, நெல்சிந்தா, ஆகியவற்றில் ரோமானியர் தங்கம், வெள்ளி ஆகியவற்றை இறக்குமதி செய்துள்ளனர்.

ரோமானியர்கள் தமது சொந்தப் பயன்பாட்டிற்காகப் பாத்திரங்களைக் கொண்டுவந்ததைப் போன்று ரோமானியச் செப்புச் காசுகளையும் தமிழகத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். தங்கம், வெள்ளி நாணயங்களைப் போன்று அவற்றைத் தமிழக அங்காடிகளில் செலாவணி ஆக்கவில்லை. தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களை எடுத்துச்செல்ல பாத்திரங்கள் இல்லாத பட்சத்தில் தாம் கொண்டுவந்த செப்புக் காசுகளை உருக்கிப் பாத்திரமாகச் செய்து அவற்றில் பொருட்களை நிரப்பித் தங்கள் கப்பலில் கொண்டு சென்றுள்ளனர்.

48.Ibid:352 49.பெருங்.1.32: 76,பெருங்3.22:213

Tamil Heritage Foundation International (THFi)

**வணிகக் குடியிருப்புக்கள் (யவன இருக்கைகள்)**

வணிகக் குடியிருப்புக்கள் (யவன இருக்கைகள்) வணிகர்களும் பொதுகே நகரில்
பல்வேறு நாட்டைச் சேர்ந்த வணிகர்களும் அயல்நாட்டு வணிகர்களும் இங்கு
வணிகம் புரிந்து வந்ததோடு சில அயல்நாட்டு வணிகர்களும் அமைத்துக் கொண்டு
நிரந்தரமாகத் தங்கி வணிகக் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டு யவன வணிகர்கள்
வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுள் யவன வணிகர்கள் கி.பி. முதல்
(ரோமானியர்கள்) தென்னிந்தியத் துறைமுகங்களில் கி.பி. முதல் குடியிருப்புகளை
இரண்டாம் நூற்றாண்டுகளில் பல வணிகக் குடியிருப்புகளை வந்துள்ளனர்.
அமைத்துக்கொண்டு வணிகம் புரிந்து வந்துள்ளனர். நூல்கள் இத்தகைய
பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய நூல்கள் இத்தகைய
வணிகக் குடியிருப்புக்களை விவரித்துள்ளன.

*பயனற வறியா யவன இருக்கை*[50]

என்று சிலப்பதிகாரம் யவனக்குடியிருப்புப் பகுதியைப் பாடியுள்ளது.
கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரைப்
பகுதிகளில் பல ஐரோப்பிய வணிகக் குடியிருப்புக்கள் தோற்றம்
பெற்றிருந்தமையை ஐரோப்பிய வரலாறு உணர்த்துகின்றது. கி.பி.
1617 ஆம் ஆண்டு செஞ்சி நாயக்கருக்கும், ழீன் பெப்பேன் (Jean
Pebin) என்னும் பிரெஞ்சு அதிகாரிக்கும் ஏற்பட்ட வணிக ஒப்பந்த
அடிப்படையில் புதுச்சேரி பிரஞ்சியர் வசமானது. இவ்வணிக ஒப்பந்தம்,
'சோழமண்டலக் கரையில் உள்ள புதுச்சேரியில் ஆட்சி புரியும்
செஞ்சிநாயக்கர் தனது பிரதேசத்தில் பிரெஞ்சுக்காரர் வாணிபம்
நடத்தவும் பாதுகாப்புக்காகக் கோட்டை கட்டிக் கொள்ளவும் அதைப்
பராமரித்துக் கொள்ளவும் இவ்வொப்பந்தத்தின் மூலம்
அனுமதியளிக்கின்றார்'[51] என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம்
வணிகக் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்ட பிரஞ்சியர்
பின்னாளில் புதுச்சேரியை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

இதேபோன்ற வணிகக் குடியிருப்புக்களைத்தான் யவனர்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் பொதுக்கே நகரில் ஏற்படுத்தியிருந்தனர் என்பதை அரிக்கமேட்டு அகழ்வாய்வுகள் உணர்த்துகின்றன. சங்ககாலப் பொதுகே நகரில் பலவிதமான தொழிலகங்களும் வர்த்தக நிறுவனங்களும் நிறுவப்பட்டிருந்தன. வணிகக் குடியிருப்புக்களைப் பாதுகாக்கவும் வணிகத்தை ஒழுங்குபடுத்தவும் யவனர்கள் தங்கள் நாட்டுக் காவலர்களை நியமித்திருந்தனர். தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் யவனர்கள் பலர் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வணிகம்

50.சிலப்.5:10 51.சோ.முருகேசன்2000:72-73



புரிந்துவந்த செய்தியை ழுவோ துய்ப்ராய் தம் நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[52]

யவனர்கள் தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகளில் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டு தங்கி வணிகம் செய்து வந்துள்ளனர். இத்தகைய யவனக் குடியிருப்புக்களே-யவன இருக்கைகள் என்று பண்டைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. யவனர்களுடைய நிரந்தரக் குடியிருப்புக்கள் தமிழகத்தில் இருந்தமையினாலேயே ரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் கோயில் முசிறியிலும் மதுரையிலும் இருந்ததாகப் பெண்டின் ஜெரியன் அட்டவணை குறிப்பிட்டுள்ளது.

ரோமாபுரி வணிகம் தமிழகத்தில் செழித்திருந்த சங்ககாலத்தில்தான் அரிக்கமேட்டில் யவனர்களுடைய பண்டசாலைகளும் குடியிருப்புக்களும் இருந்ததாக அகழ்வாய்வுகள் புலப்படுத்துகின்றன. வீலருடைய அகழ்வாய்வில் (1945) வெளிப்படுத்தப்பட்ட பண்டசாலைகள், தொழிலகங்கள், குடியிருப்புக்கள் ஆகியன அரிக்கமேட்டில் யவன இருக்கைகள் இருந்ததை உறுதி செய்கின்றன. அரிக்கமேட்டுத் துறைமுகம் மத்தியத்தரைக்கடல் நாடுகளோடு நேரடியாகத் தொடர்புகொண்ட போதும் உள்நாட்டு நகரங்களோடு தொடர்பு கொண்டபோதும் சரக்குகளை ஏற்றி இறக்கிச் சேமிக்கப் பண்டசாலைகளும் அவற்றை ஒட்டிய குடியிருப்புப் பகுதிகளும் அரிக்கமேட்டில் அமைக்கப்பட்டன. தென்னிந்தியாவிலேயே அரிக்கமேட்டில்தான் செங்கல்லால் கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் முதன்முதலில் கண்டறியப் பட்டுள்ளன.

அரிக்கமேட்டிலும் முசிறித் துறைமுகத்திலும் ரோமானியர்கள் வணிகர்களாக மட்டுமின்றி முகவர்களாகவும் செயல்பட்டு வந்துள்ளனர். இவர்களுள் சிலர் தங்கள் குடும்பத்தினருடன் அரிக்கமேட்டில் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வணிக மேற்பார்வையாளராகவும் பணியாற்றி வந்துள்ளனர்.[53] அரிக்கமேட்டில் தங்கியிருந்த ரோமானிய வணிகர்கள் தென்கிழக்கு ஆசியாவிலிருந்து தமிழகம் வரும் வணிகப் பொருட்களைப் பெற்று அவற்றிற்குப் பதிலாக ரோமானியப் பொருட்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளனர். வணிக நோக்கத்திற்காக அரிக்கமேட்டில் அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் நிரந்தரமானவை அல்ல, தற்காலிகக் குடியிருப்புக்களாகவே அதிகச்

52.புதுவைச் செய்திகள் பிப்-1970:14. 53. Vimala Begley 1996 : 131

Tamil Heritage Foundation International (THFi)

செலவின்றி அமைக்கப் பட்டிருக்கலாம் என்பர்.[54] அதேசமயம் உள்நாட்டில் இருந்த ஏழை வணிகர்கள் மட்டுமே அரிக்கமேட்டில் நிரந்தரக் குடியிருப்பைக் கட்டிக் கொண்டனர். இதனோடு அமைந்த தொழிலகங்கள், கிடங்குகள், ஏற்றுமதி இறக்குமதிக்கான இடங்கள் ஆகியனவும் நிரந்தரக் கட்டடப் பகுதிகளாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**ரோமானிய வணிகம்- பெருக்கமும் சுருக்கமும்**

தமிழ் நாட்டிலிருந்து மேலை நாடுகட்கு ஏற்றுமதியான வணிகப் பொருட்களில் பேரிடம் பெற்றது மிளகேயாகும். ஹிப்போகிரேட்டஸ் (Hippocrates), கலென் (Galen), பிளினி (Pliny) ஆகியோர் மேலை நாடுகளில் மிளகு மருந்தாகப் பயன்பட்டு வந்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அக்காலத்தில் ரோமாபுரியில் ஓர் இராத்தல் மிளகின் விலை பதினைந்து தெனாறி என்றும் தமிழகத்தில் அவ்விலையில் அரைபங்கு கூட இல்லை என்றும் பிளினி கூறியுள்ளார்.[55] யவன மகளிர், தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட முத்துக்களைப் பெரிதும் விரும்பி அணிந்து வந்துள்ளனர். பண்டைக்காலத்தில் கொற்கை முத்துக்களுக்கு மேலை நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்து வந்துள்ளது. 'கயஸ் (Caius) என்னும் அரசனின் மனைவி பௌலினா (Paulina) என்பவள் நான்கு இலட்சம் பொன் பெறுமானமுள்ள இரத்தினங்களாலும் முத்துக்களாலும் தன்னை அழகு செய்து கொண்டாளாம்'[56] தமிழகத்திலிருந்து மிளகும் முத்தும் யவன நாட்டிலிருந்து மட்பாண்டங்களும் மதுச்சாடிகளும் தமிழகத்திற்கு இறக்குமதியாகியுள்ள செய்தியை,

*——— ——— —— யவனர்*
*நன்கலந் தந்த தண்கமழ் தேறல்*
*பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்*
*ஒண்டொடி மகளிர் மடுப்ப* [57]

என்னும் புறப்பாடல் வாயிலாக அறியலாம். ரோமானியப் பேரரசன் அகஸ்டசுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த ரோமானிய நாணயங்கள் இலட்சத்தீவு, கள்ளாகினர், திருப்பூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. எனவே அகஸ்டஸ் காலத்திற்கு முன்பே தமிழரோடு

54.மே.நூல்:110
55.சு.தில்லைவனம்1990:16
56.வரலாற்றுச்சுவடுகள்1980 (தொ.1):34
57.புறம்.56:18-21



ரோமானிய வணிகம் நடைபெற்று வந்தமையை இச்சான்றுகள் உறுதிசெய்கின்றன. அகஸ்டஸ் காலத்திலும் (கி.மு. 29-கி.பி. 14), டைபீரியஸ் காலத்திலும் (கி.பி. 14-37) ரோமானிய வணிகம் தமிழகத்தில் உச்சநிலையை அடைந்திருந்தது. தமிழகத்திலிருந்து ரோமானிய நாட்டிற்கு ஏற்றுமதியான வணிகப் பொருட்களின் அளவும், விலைமதிப்பும் கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கி ஏறிக்கொண்டே போயின. இதனால் ஆண்டுதோறும் ஆறு இலட்சம் பவுன் மதிப்புள்ள ரோமானியத் தங்கம் தமிழ்வணிகர் கைக்கு மாறிக்கொண்டே இருந்தது. தமிழரோடு நடைபெற்று வந்த இவ்வணிகத்தால் தம் நாட்டுச் செல்வம் குறைந்து வருவதைக் கண்ட ரோமானிய அரசவை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.[58] இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில், முசிறித் துறைமுகத்திற்கு வரும் யவன நாட்டு மரக்கலங்கள் பொன்னை ஏற்றி வந்து தமிழகத்தில் இறக்கிவிட்டு இங்கிருந்து மிளகை ஏற்றிச் சென்றுள்ளன, என்று அகப்பாடல்[59] பாடியிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

ரோமானியப் பேரரசன் நீரோ கி.பி.68இல் காலமானான். அவனுக்குப் பின் நிகழ்ந்த அரசுரிமைப் போட்டியினாலும் குழப்பத்தாலும் ரோமானியர்கள் தமிழகத்திலிருந்து நவமணிகளையும் நுண்ணாடைகளையும் இறக்குமதி செய்வது குறையத் தொடங்கியது. நீரோ மன்னனுக்குப் பின் வந்த ரோமானிய அரசன் வெஸ்பேனியன் மேற்கொண்ட வணிக நடவடிக்கைகள் காரணமாக ரோமானியர்கள் தமிழகத்தோடு கொண்டிருந்த வணிகத் தொடர்பு மேலும் குறையலாயிற்று. ரோமாபுரியில் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட தங்க நாணயங்கள் எவையும் தமிழகத்தில் கிடைக்கவில்லை. இந்த ஒரு காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு ரோமானிய வணிகம் அறவே நின்று போய்விட்டது என்று சொல்வதற்கில்லை. அதுமட்டுமன்று, ரோமானிய அரசன் கான்ஸ்டன்டைன் காலத்தில் (கி.பி. 324-337) வெளியிடப்பட்ட ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் மீண்டும் மிகுதியாகக் கிடைக்கின்றன.

அலெக்சாண்டிரியாவில் நடந்த படுகொலைகள் காரணமாகவும் ரோமானியத் தனியரசின் வீழ்ச்சி காரணமாகவும் கி.பி.3ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழரோடு ரோமானிய வணிகம் தடைப்பட்டது. எனவே ரோமானிய நாணயங்கள் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே

58.A.Ramaswamy 1985:6 59.அகம்.149:9-13

Tamil Heritage Foundation International (THFi)

தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும். மேலும் கி.பி.4ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.7ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாகத் தமிழகத்தில் வணிகம் செழித்திருக்கவில்லை. அக்கால கட்டத்தில் (கி.பி.22) ரோமாபுரியை ஆட்சி செய்த ரோமானிய மன்னன் டைபீரியஸ் ரோமாபுரி ஆட்சி மன்றத்திற்கு விடுத்த செய்தி இங்கே குறிப்பிடத்தக்கது. 'வணிகத்தில் திருத்தம் வேண்டுமானால் அது எவ்விடத்தில் தொடங்க வேண்டும். பெண்கள் விரும்பி அணியும் இன்பப் பொருட்களைப் பற்றி நமது கருத்து என்ன. முக்கியமாக எமது நாட்டின் செல்வத்தை அழியச் செய்வனவான இழைகள், மணிகள் பற்றி நாம் செய்ய வேண்டுவன யாவை' என்று கேள்வி கேட்டுள்ளான்.[60] இவ்வணிகம் கிளாடியஸ் நீரோ என்னும் மன்னன் காலத்தில் மிகவும் உச்ச நிலையை அடைந்திருத்தல் வேண்டும். அவர்கள் காலத்தில் வாழ்ந்திருந்த பிளினி, ரோமாபுரியிலுள்ள செல்வம் படைத்த மக்கள் வாசனை திரவியங்களிலும் அணிகளிலும் செல்வத்தை வீணாகச் செலவு செய்யும் முறையைக் கண்டித்துள்ளனர்.

ரோமானிய மன்னன் ஜூலியோ கிளாடியன் (Julio Claudian) காலத்தில் வணிகத்தைக் கட்டுப்படுத்தவும், செல்வ இழப்பைத் தவிர்க்கவும் ரோமாபுரி நாணயச் செலாவணியில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்தியாவுடன் ரோமாபுரி மேற்கொண்ட வணிகத்திற்கென்றே, துளையிடப்பட்ட, மதிப்புக் குறைந்த நாணயங்களாக வெள்ளித் தினாரிகளும், செப்புக் காசுகளும் அச்சடிக்கப்பட்டன. கி.பி.5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியச் செப்புக்காசுகள் குஜராத் கடற்கரைப் பகுதியில் கிடைத்துள்ளன. அதே போன்று தென்தமிழ் நாட்டில் கி.பி. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலக் காசுகள் மதுரை, கரூர், சென்னையை ஒட்டியுள்ள சில பகுதிகள் முதலான இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விசிகாத்து மன்னன் கி.பி.410ஆம் ஆண்டு ரோமாபுரியைக் கைப்பற்றினான். இம்மன்னன் அந்த நகரத்தில் வாழ்ந்த குடிமக்களிடம் தண்டம் ஒன்றை விதித்தான். 'தனக்கு ரோமானியர்கள் மூவாயிரம் பவுண்டு மிளகு திறை செலுத்த வேண்டும் என்றும் தவறினால் தான் ரோமாபுரியை அழித்து விடப் போவதாகவும் மிரட்டினான். அம்மன்னன் கேட்ட அவ்வளவு மிளகையும் ரோமானியர் திறையாகச் செலுத்தி ரோமாபுரியைக் காத்தனர்'[61] ரோமானியர் அவ்வளவு மிளகையும்

60.சு.வித்தியானந்தன் 2006 (2ஆம் பதிப்பு):16 61.கே.கே.பிள்ளை1972:54



தொடர்ந்து தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்து சேமித்து வைத்திருந்ததாலேயே அம்மன்னன் கேட்ட திறையை வழங்க முடிந்தது.

இவ்வரலாற்றுச் செய்தி தமிழகத்துப் பண்டங்கள் கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்து ரோமாபுரிக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன என்பதை உறுதி செய்கின்றது. யவனர்கள் மிளகை விரும்பி வாங்கியதாலேயே வடமொழியாளர் மிளகுக்கு 'யவனப் பிரியா' எனப் பெயரிட்டு வழங்கி வந்துள்ளனா.[62]

கி.பி. 2 ஆம் நூற்றாணடிற்குப் பின்னர் ரோமானியப் பொருளாதாரத்திலும், வணிக முறையிலும் ஏற்பட்ட மாற்றம் காரணமாக ரோமானியர்-தமிழர் வணிகத்தில் தேக்கம் ஏற்பட்டது. அதன் பின் கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டுகளில் மிகக் குறைவான அளவிலேயே வணிகத் தொடர்பு இருந்து வந்துள்ளது.

இதனால் ரோமானியராட்சிக்கு உட்பட்ட அரேபியாவிலிருந்து மறைமுக வணிக உறவுகள் (Indirect trade Route), மற்றும் வணிக வழிகள் இந்தியாவுடன் ஏற்பட்டன. கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மிகக் குறைவான அளவிலேயே இறக்குமதி செய்யப்பட்ட ரோமானிய கலன்கள் அரிக்கமேட்டில் கிடைக்கின்றன. ஆனால் கி.பி. 4 - 7 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மத்தியத்தரைக்கடல் நாடுகளில் தயாரான ஆம்ஃபோரா ஓடுகள் கிடைத்துள்ளதால் இக்காலப் பகுதியில் மீண்டும் ரோமானிய வணிகம் நடைபெற்று வந்துள்ளதை அறியலாம்.

'கி.மு. 100-ஆம் ஆண்டு முதல் கி.பி. 200-ஆம் ஆண்டுவரை அரிக்கமேட்டில் ரோமானியர் வணிகம் உச்சக்கட்டத்தில் இருந்ததாகவும் கி.பி. 200-ஆம் ஆண்டிற்குப் பின் ரோமானியப் பேரரசின் எதேச்சதிகாரப் போக்கால் தமிழக வணிகத்தொடர்பு குறைந்ததாகவும்' வீலர்.[63] கூறுகிறார்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை மிகவும் குறைந்த அளவே நடைபெற்று வந்த தமிழர்-யவனர் வணிகம் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டுகளில் மேலும் குறையலாயிற்று. இதன்பின்பு தமிழர்கள் தங்கள் வணிகத் தொடர்பினைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் வளர்த்துக் கொள்ளத் தொடங்கினர். இதனை மெய்ப்பிக்கும் வகையில்

62.பா.இறையரசன்1983:112 63. D. Janaki 2000:4

Tamil Heritage Foundation International (THFi)

அரிக்கமேடு, அழகன்குளம், வசவசமுத்திரம், காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

**வணிகக்குழுக்கள் / வணிகச்சாத்து**

வணிகர்கள் கூட்டங் கூட்டமாகக் கூடித் தம் பண்டங்களைப் பல ஊர்களுக்கும் விற்பனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இவ்வாறு எடுத்துச் செல்லும் வணிகக் குழுக்களுக்கு வணிகச் சாத்துக்கள் என்று பெயர். ஆறலைக் கள்வருக்கு அஞ்சி அவர்கள் சாத்துக்களாகக் கூடிச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்போது பண்டங்களை வண்டிகளின் மேலும் கழுதைகளின் மேலும் ஏற்றிச் செல்வர். வணிகச் சாத்துக்கள் கழுதையின் மேல் மிளகுப் பொதிகளை ஏற்றிச் செல்லும்போது அவற்றுக்குச் சுங்கம் செலுத்துவதுண்டு.[64]

சரக்குப் பொதிகளின் மேல் அவற்றின் அளவோ எடையோ பொறிக்கப் பட்டிருக்கும். அவற்றை ஏற்றிச் சென்ற வண்டிகளின் மேலும் அளவு முத்திரை பொறிக்கப்பட்டது.[65] உள்நாட்டில் பதிவு செய்யபப்பட்ட வணிகக் குழுக்கள் மூலமாகவே வணிகம் நடைபெற்று வந்துள்ளது. வணிகக் குழுக்களுக்கென்று உருவாக்கப்பட்ட நெறிமுறைகள், செயல்பாடுகள் ஆகியவற்றின் தொகுப்பு 'சிரேனி தர்மா' (Sreni Dharma) என்று வடமொழியில் வழங்கப்பட்டது. சங்ககால வணிகரின் கொள்கை,

*வடுவஞ்சி வாய் மொழிந்து*
*கொள்வதூஉம் மிகை கொளாது*
*கொடுப்பதூஉம் குறைபடாது*
*பல்பண்டம் பகர்ந்து வீசும்*
*தொல் தொண்டித் துவன்றிருக்கை*[66]

என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் வணிகத்தொழில் அறநெறியைப் பின்பற்றி இயங்கி வந்தமை புலனாகின்றது. வளமான வணிகக்குழுக்கள் தங்கள் வணிகப் பணிகளுக்கென்று அடிமைகள், வணிகப் பணியாளர்கள், தொழில்நுட்ப வினைஞர்கள் ஆகியோரை வேலைக்கு அமர்த்திக் கொண்டன. வெவ்வேறு வணிகக் குழுவினர் தங்களுக்கென்று தனிப்பட்ட முத்திரைகள், இலச்சினைகள்,

64.பெரும்.:80-81 65.சிலப்.:136 66.பட்டினப்.:209-213



அடையாளங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கனகராயன் என்பவரால் அரிக்கமேட்டில் சேகரிக்கப்பட்டு இப்போது புதுவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும், களிமண் முத்திரை அக்கால வணிக இலச்சினையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.[67] இம்முத்திரையின் ஒருபுறம் இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு புறத்தில் முத்திரை பொறிக்கும்போது பதிந்த விரல் அடையாளங்கள் காணப்படுகின்றன. வணிக நோக்கிற்காக உள்நாட்டுத் தலைவர்களின் அதிகாரத்தை வெளிப்படுத்தும் முத்திரையாக இது சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஆதன், தத்தன் என்னும் பெயருள்ள தமிழ்ப்பிராமிப் பானை ஓடுகள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[68] பின்னொட்டுப் பெயர்களாக இவை சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பெயர்களுக்குரிய நபர்கள் சங்க காலத்தில் உள்ளூர் தலைவர்களாக விளங்கி, வணிகக் குழுக்களுக்கு வணிகம் செய்வதற்காக அனுமதி முத்திரைகள் வழங்கியிருத்தல் வேண்டும்.

அரசப் பிரதிநிதிகளுள் சிலர் வணிகக் குழுக்களுக்குப் பெருந்தொகை அளித்து அவர்கள் மூலம் வெளிநாட்டு வணிகம் நடத்தி வந்துள்ளனர். வணிகக் குழுக்களுள் தலைசிறந்து விளங்கும் வணிகர்கட்குக் காவிதி, ஏனாதி ஆகிய பட்டங்கள் வழங்கி அரசன் கௌரவப்படுத்தி வந்துள்ளான். வணிகக் குழுக்களுள் வளமான வணிகர்கள் சமண, பௌத்தப் பள்ளிகட்கு நன்கொடைகள், அறக்கொடைகள் வழங்கியுள்ளனர். மூன்றாம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) வெளிநாடு சென்று வணிகம் புரியும் வணிகக் குழுக்களுக்கு மணிக்கிராமம், அனுவண்ணம், வளரியர் என்று பெயரிடப் பட்டிருந்தன. இவற்றுள் 'மணிக்கிராமம்' என்னும் வணிகக்குழு அரிக்கமேட்டிலிருந்து வெளிநாட்டிற்கு மணிகள் விற்பனை செய்வதற்காகச் சென்ற குழுவாகும்.

இவ்வணிகக் குழுவினர் கீழை, மேலை நாடுகட்குக் கப்பல்களில் சென்று அந்நாடுகளில் வணிக இருக்கைகளை அமைத்துக்கொண்டு வணிகம் செய்து வந்துள்ளனர். இவ்வாறு வெளிநாடு சென்ற வணிகக் குழுக்களுடன் சாதுவனும் வணிகம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றான் என்று மணிமேகலை கூறுகின்றது.[69] பாதுகாப்பு, எளிமை, விரைவு, இலாபம் ஆகிய காரணங்களுக்காக வணிகக் குழுக்கள்

67.Vimala Begley 1996:7 68.மே.நூல்:7 69.மணிமே.16:11-12

Tamil Heritage Foundation International (THFi)

வழியாகத் தமிழர் வணிகம் புரிந்து வந்த உண்மை இவற்றால் புலனாகின்றது. மேலும் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார், மதுரை அறுவைவாணிகர் இள்வேட்டனார், உறையூர் இளம்பொன் வாணிகனார் ஆகிய புலவர்களின் வணிகத்தொழில் சங்கஇலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வணிக ஒப்பந்தங்கள்**

பண்டைக்காலத்தில் ரோமானியப் பேரரசர்கட்கும் தமிழக மன்னர்கட்கும் ஒப்பந்த அடிப்படையில் கடல்வழி வணிகம் நடைபெற்று வந்துள்ளது. ரோமானிய வணிகர்கள் தென்னிந்தியக் கடற்கரையில் வணிக இருக்கைகள் அமைத்து வணிகம் புரிவதற்கு உள்நாட்டுத் தலைவர்களின் அனுமதியையும், ஒப்பந்தத்தையும் பெற்றுள்ளனர். இவ்வாறு ஒப்பந்தம் பெற்று அமைத்த வணிக இருக்கைகள் பிற்காலத்தில் பிரெஞ்சு மொழியில் ஃபேக்டோரி (Factorie) என்றும் லோழ் (Loge) என்றும் அழைக்கப்பட்டன. ஆங்கிலத்தில் ஃபேக்டரி (Factory) என்று கூறப்பட்டது.

வணிக இருக்கைகளைப் பற்றியும் அங்கு வணிகர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் பற்றியும் ஸ்காஃப் (W.H. Schoff) என்னும் வரலாற்றறிஞர் குறிப்பிட்டுள்ளார். எம்போரியம் எனப்படும் துறைமுகங்கள் ஸ்தல அரசர்களால் வெளிநாட்டு வணிகர்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் விடப் பட்டவைகளாகும். அந்த இடங்களில் மட்டுமே ரோமானியர்கள் வணிகம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் தங்கும் வீடும் வணிக அலுவலகமும் பண்டசாலையும் அந்தப் பகுதியிலேயே இருக்கும். 'ஸ்தல அரசர்களுடன் ரோமானிய வணிகர்கள் இதற்கான வணிக ஒப்பந்தம் (Firman) செய்து கொண்டிருப்பார்கள். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்தல அரசர்கள் இறக்குமதி, ஏற்றுமதியாகும் சரக்குகளுக்குச் சுங்கவரி பெற்றுக்கொள்வார்கள்'[70]. இத்தகைய வணிக இருக்கையில் ரோமானிய அரசின் வணிக அலுவலர்களும் அதிகாரிகளும் தொடர்ந்து வசித்து வந்துள்ளனர். இவர்கள் தங்கள் நாட்டிலிருந்து வரும் உத்தரவுகளுக்கேற்பப் பணியாற்றி வந்துள்ளனர். தமிழகத்தின் கடற்கரையில் பண்டைக் காலத்தில் இயங்கிவந்த இத்தகைய வணிக இருக்கைகளுள் ஒன்றுதான் பொதுகே எம்போரியம் ஆகும்.

70.சோ.முருகேசன் 2000:15



முசிறி வணிகர்கட்கும், ரோமானிய-எகிப்து வணிகர்கட்கும் இடையே கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட 'வியன்னா பேப்பரைஸ்' என்னும் வணிக ஒப்பந்தம் பற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தி, 1980 ஆம் ஆண்டு எகிப்தில் வெளியிடப்பட்ட அகழ்வாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[71] இவ்வொப்பந்தம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஒப்பந்தம் செய்துகொண்ட இரண்டு வணிகர்களுடைய பெயர்கள் மட்டும் துரதிஷ்டவசமாகக் கிடைக்கவில்லை. முசிறியிலிருந்து அலெக்சாண்டிரியா துறைமுகத்திற்கு ஒரு கப்பல் நிறைய ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களைப் பற்றிய பட்டியல், அவற்றின் விலைகள் ஆகியவை பற்றிய செய்திகளும் ஒப்பந்தத்தில் காணப்படுகின்றன. முசிறியிலிருந்து அலெக்சாண்டிரியா துறைமுகம் வரை வணிகப் பொருட்களை ஏற்றிச்செல்லும் பொறுப்பு மட்டுமல்ல, அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பும் தமிழக வணிகரையே சார்ந்திருந்தன.

முசிறியிலிருந்து கப்பல் மூலமாகச் செங்கடல் துறைமுகத்தை அடைந்த வணிகப்பொருட்கள் அங்கிருந்து ஒட்டகங்கள் மூலம் அலெக்சாண்டிரியா துறைமுகத்தை அடைந்துள்ளன. துணிப்பொதிகள், கங்கைச் சமவெளித் தானியங்கள், தந்தங்கள் ஆகியன ஒப்பந்த அடிப்படையில் ஒரே கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டன. இவற்றை ரோமானிய நாட்டில் விற்றுக் கிடைக்கும் பணத்தில் எகிப்தின் நைல்நதிச் சமவெளியில் இரண்டாயிரத்து நானூறு ஏக்கர் விளை நிலத்தை வாங்கும் அளவிற்கு மதிப்பு இருந்துள்ளது.[72] தமிழக வணிகப் பொருட்களுக்கு ரோமானிய நாட்டில் மிகுந்த வரவேற்பு இருந்தமையினாலேயே இவ்வாறு மிகுதியான இலாபத்தைத் தமிழக வணிகர்கள் ஈட்டியுள்ளனர்.

செங்கடல் துறைமுகத்தை அடைந்த வணிகப்பொருட்கள் அலெக்சாண்டிரியா செல்ல இருபத்தைந்து விழுக்காடு சுங்கவரியை ரோமானிய அதிகாரிகள் வசூலித்துள்ளனர் என்கிற செய்தியையும் ஒப்பந்தத்தின் வாயிலாக அறிகின்றோம். அரிக்கமேட்டிலும் இதேபோன்ற சுங்கவரி ரோமானிய வணிகரிடம் வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். 'உள்நாட்டுத் தலைவர்கள் அரிக்கமேட்டில் இறக்குமதியாகும் பொருட்களுக்குச் சுங்கவரி விதித்து அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு துறைமுகக் கட்டுமானப் பணிகளுக்கும் வணிக வளர்ச்சிக்கும் செலவிட்டுள்ளனர்'[73] இத்தகைய சுங்கவரி முறையே சோழமண்டலக்

71 Vimala Begley 1996 : 30    72.K.Rajan 2000:99    73. Vimala Begley 1996: 111

Tamil Heritage Foundation International (THFi)

கரையில் அக்காலத்தில் இருந்த ஏனைய துறைமுகங்களில் நடைபெற்ற இந்தோ-ரோமானிய வணிகத்தின் இடையே செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். சங்ககாலத் தமிழகத்தில் சுங்கவரி இருந்தமை பற்றிப் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி முதலான இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. தமிழகத்தோடு நடைபெற்ற இவ்வணிகத்தில் ரோமானிய அரசரும் தங்கள் முகவர்கள் மூலமாக ஈடுபட்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு சிந்து நதிக் கணவாயின் வழியாக வட இந்தியாவிலிருந்து பாரசீகத்திற்கும் எகிப்திற்கும் வணிகவழி உறவுகள் இருந்து வந்துள்ளன. கி.பி. முதல் நூற்றாண்டில் தொடங்கிய ரோமானியர் கடல் வழித்தொடர்பு தொண்டி, முசிறி என்று மலபார் கடற்கரையில் ஆரம்பித்துக் கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், பொதுகே முதலாம் கிழக்குத் துறைமுகங்களுக்கும் பரவியது. பொதுகே எம்போரியம் ரோமானியரின் நிரந்தர வணிக மையமாகச் செயல்பட்டதால், அரிக்கமேட்டுத் துறைமுகத்துடன் செங்கடல் துறைமுகங்கள் நேரடித் தொடர்பினைக் கொண்டிருந்தன.

அரிக்கமேட்டை அடைந்த ரோமானிய வணிகப் பொருட்கள் மேல்சாத்தமங்கலம், கோட்டைமேடு, சோரப்பட்டு, சுற்றுக்கேணி, திருவக்கரை ஆகிய ஊர்களுக்கு நில வழியாக உள்ளூர் வணிகர்களால் கொண்டு செல்லப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து ரோமானிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரோமானிய நாட்டிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பைவிடக் கூடுதலானது. சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழர்-ரோமானிய வணிகத் தொடர்பு அரிக்கமேடு அகழ்வாய்வின் மூலம் உறுதிப்படுத்தப் படுவதுடன் வணிக உறவுக்கான காலத்தை வரையறை செய்யவும் துணை புரிந்துள்ளது. மேலை நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத்தொடர்பு கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் குறையத் தொடங்கியபின் தமிழர்கள் கீழை நாடுகளுடன் தம் வணிகவுறவை வலுப்படுத்திக் கொண்டனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை அரிக்கமேடு கீழை, மேலை நாடுகளுடன் தொடர்பு கொண்ட வணிகத் துறைமுகமாகவும் பன்னாட்டு வணிக மையமாகவும் செயல்பட்டு வந்துள்ளது

# 6. அரிக்கமேடு அகழ்வாய்வினால் அறியலாகும் பண்டைத் தமிழ்ச் சமுதாயம்

தமிழரின் வாழ்வு, அவர்கள் பேசிய மொழி, அவர்கள் வாழ்ந்த நிலம் ஆகிய இம்மூன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற உண்மை தமிழர் நாகரிகத்தின் அடிப்படைத் தத்துவமாக அமைந்துள்ளது. இதனைச் சங்க இலக்கியங்களும் தமிழர்கள் விட்டுச் சென்ற தொல்பொருட் சின்னங்களும் விளக்குகின்றன. இவ்விரண்டின் துணையின்றித் தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்துகொள்ள முடியாது.

நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் அமைத்துக் கொண்டதைச் சங்க இலக்கியங்கள் வழிப் புலப்படுத்தி உள்ளனர். அத்துடன், அவ்வக் காலத்திற்கேற்பத் தங்கள் வாழ்வியல் செயல்பாடுகளையும் வகுத்துக் கொண்டுள்ளனர். தமிழ்மொழிக்கு மட்டுமின்றித் தங்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட சிறப்பு பண்டைத் தமிழரையே சாரும். மக்கள் வாழ்க்கைக்கு இலக்கண விதிமுறைகள் வகுப்பதற்கு முன்னர் அவர்கள் வாழ்க்கை, வளமும் நலமும் பெற்றதாக இருந்திருக்க வேண்டும். 'வளர்ச்சி பெற்று நிலைத்து வாழும் சமூகத்திற்குத்தான் ஒழுங்கு விதிகள் தேவைப்படும்'[1] எனவே அவ்வாழ்க்கையை விளக்கிக் காட்டும் அளவிற்குப் பண்டைய தமிழிலக்கியங்கள் இயற்றப்பட்டிருந்தன.

சங்க இலக்கியங்கள் அனைத்தும் இயற்கையோடு இயைந்த வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவனவாகும். மிகைப்படுத்தப்பட்ட கற்பனை அவற்றில் மிகுதியாக இடம் பெறவில்லை என்பதே அவ்விலக்கியங்களின் தனிச்சிறப்பாகும். சங்ககாலச் சமுதாயத்தில் பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்தார்கள் என்ற குறிப்புக்களும் அவர்கள் வாழ்ந்த தெருக்கள் பற்றிய வர்ணனைகளும் சங்க இலக்கியத்திலும் சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவை அகழ்வாய்வில் முழுமையாக அறியப்படவில்லை.

இலக்கியங்கள் கூறும் கருத்துக்கள் உண்மையானவைதாமா என்பதனைச் சோதித்துப் பார்ப்பதற்கு இன்றைக்கு இருக்கும் ஒரே

1. கே.கே.பிள்ளை 1972:124

Tamil Heritage Foundation International (THFi)

கருவி அகழ்வாய்வே ஆகும். அவ்வகையில் இலக்கியம் சுட்டிக் காட்டும் இயல்புகளையும் அவை விட்டுவிட்ட உண்மைகளையும் அகழ்வாய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இவற்றின் அடிப்படையில் சங்க இலக்கியங்கள் பாடியுள்ள பழந்தமிழரின் வாழ்வியல் கூறுகளான உணவு, உடை, உறையுள், அணிமணிகள், வணிகம், தொழில், கலை, விளையாட்டு, பழக்கவழக்கங்கள், அரசியல், மொழி, சமயம், அயல்நாட்டுச் செல்வாக்கு, பண்பாடு முதலானவற்றை அரிக்கமேடு அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் வழிப் புலப்படுத்தப் பட்டுள்ளது.

### தொழில் நுட்ப அறிவு

ஒருநாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்களின் தொழில் முன்னேற்றத்தைக் கொண்டே கணக்கிடப்படும். பண்டைத் தமிழரின் தொழில்நுட்பத் திறன்களைச் சங்க இலக்கியமும் தொல்பொருட் சான்றுகளும் புலப்படுத்துகின்றன. மனிதனின் தேவைகளும் ஆசைகளுமே அவனுடைய தொழில்நுட்ப அறிவுக்கு அடித்தளமாகும். சமுக முன்னேற்றமும் தொழில் நுட்ப முன்னேற்றமும் ஒன்றுக்கொன்று இணைந்தே செயல்படவல்லது. சமுதாயத் தேவையைக் கருத்தில் கொண்டே தொழில்நுட்ப வளர்ச்சி அமையும் என்பது உறுதி. தேவையே அனைத்துக் கண்டுபிடிப்புகளுக்கும் தாய் என்னும் கூற்றும் இதனை மெய்ப்பிக்கும். இன்றைக்குக் காணப்படும் பல தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு அடிப்படை பண்டைத் தமிழரின் தொழில் நுட்பத்திறன்களே என்றால் அது மிகையாகாது. மனிதன் சக்கரத்தின் மூலம் பானை வனையக் கற்றுக் கொண்ட தொழில்நுட்ப அறிவே ஏனைய தொழில் நுட்பங்களுக்கும் உந்துதலாய் அமைந்தது.

### தொழில்நுட்பத் திறன்

கிரேக்க மொழியில் டெக்னோ(Techno) என்னும் சொல்லும் லோகோ(Logos) என்னும் சொல்லும் இணைந்து டெக்னாலஜி என்னும் சொல் தோன்றியது. இன்றைய அறிவியல் யுகத்தில் தொழில்நுட்பம் என்பது அறிவியல் துறைகளுள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை உருவாக்குவதும் அவற்றைப் பயன்படுத்துவதும் என்னும் நிலையிலேயே தொழில்நுட்பம் அமைந்திருந்தது. கருவிகளை உருவாக்கும் போதே அத்தொழிலுக்கான தொழில் நுட்பமும் சேர்ந்தே



வளர்ந்து வந்துள்ளது. இக்காலத்தில் அறிவியல் முறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் அக்காலத்தில் இல்லை என்றாலும் தாம் செய்யும் தொழிலுக்கேற்ற தொழில்நுட்பத் திறன்களைப் பெற்றனராகப் பழந்தமிழர் விளங்கியிருந்த உண்மை சங்க இலக்கியத்தின் வாயிலாகவும் தொல்பொருள் ஆய்வின் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. சங்க இலக்கியத்தின் வாயிலாகப் பெறப்படும் பழந்தமிழரின் தொழில் நுட்பத் திறன்கள் தொல்பொருள் ஆய்வின்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்த உண்மையை அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் மெய்ப்பிக்கவல்லன. பண்டைத் தமிழரின் தொழில் நுட்பத் திறன்களுக்குச் சங்க இலக்கியத்தில் சுட்டப்படும் சான்றுகள் சிலவே. அவையும் எழுத்து வடிவினவே. ஆனால் அரிக்கமேட்டுத் தொல்பொருட் சான்றுகள் பழந்தமிழரின் தொழில்நுட்பத் திறன்களை அறிவியல் முறையில் காட்சிப்படுத்த வல்லன.

### உணவுக்கலன்கள்- உணவு முறை

பண்டைக்கால மக்கள் எத்தகைய உணவுப் பொருட்களைப் பயன்படுத்தினர் என்பதை அகழ்வாய்வு மூலமாக அறிந்து கொள்ளலாம். வடஇந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் கோதுமை, நெல், பார்லி ஆகிய தானியங்களும், தென்னிந்திய அகழ்வாய்வுகளில் நெல்லும் மட்கிப்போன நிலையில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அப்புக்கல்லு, அதியமான் கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் மட்கிய நிலையில் காணப்படும் நெல் அதிகமாகக் கிடைத்துள்ளது.[2] தானியங்கள் மட்டுமின்றி அக்கால மக்கள் விலங்குகளையும் பறவைகளையும், மீன்களையும் உணவாகக் கொண்டிருந்தனர் என்பதை மக்கள் வாழ்ந்த பகுதிகளில் கிடைக்கும் எலும்புகள் ஓரளவிற்கு உணர்த்துகின்றன. அரிக்கமேடு அகழ்வாய்வுகளில் கிடைத்திருக்கும் பல எலும்புகளும், அவற்றால் செய்யப்பட்டுள்ள மணிகளும் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

உணவு உண்பதற்குப் பயன்படுத்திய பல்வேறு வகையான மட்கலன்கள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கறுப்பு-சிவப்பு வண்ணக் கலன்கள், சிவப்பு வண்ணப் பாண்டங்கள், கறுப்பு-சாம்பல் வண்ணக் கலன்கள், குழல் வடிவிலான குடுவை, வட்டில்கள், அகல

2. ஏ.ஏகாம்பரநாதன் 1994:31

Tamil Heritage Foundation International (THFi)

வாயுள்ள பாண்டங்கள், சிறுகுவளைகள், குமிழ் வடிவிலான சிறிய பானைகள், சட்டிகள், கிண்ணிவாய் மூக்குப் பானைகள், கூர்முனைச் சாடிகள் ஆகியவை அரிக்கமேட்டு மக்கள் பயன்படுத்திய உள்நாட்டுக் கலன்களாகும். இவை மட்டுமின்றிச் சோறு வடிக்கும் தட்டுக் கூடைகளும் அடிப்பாகத்தில் நுண்ணிய கண்கள் அமைக்கப்பட்ட சல்லடைகளும் மேல்மூடிகளும் தட்டுக்களும் அன்றாடப் பயன்பாட்டிற்கு உகந்தவையாக வனையப்பட்டுள்ளன. குமுட்டி அடுப்பு ஒன்றும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளது.

இவை அனைத்தும் அரிக்கமேட்டில் வாழ்ந்த உள்நாட்டு வணிகர்கள் தங்கள் குடியிருப்புக்கள், வணிகத் தொழிலகங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தியவை. இவை தவிர அரிக்கமேட்டில் யவன இருக்கைகள் அமைத்து வாழ்ந்து வந்த ரோமானியர்கள் தங்கள் உணவுப் பயன்பாட்டிற்கென்று கொண்டு வந்த சிஜிலிட்டா (அரிட்டைன்), ரௌலெட்டெட், ஆம்போரா ஆகிய கலன்களும் மேலே கூறப்பட்டது போல் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் வெவ்வேறு மண்ணடுக்குகளில் காணப்படுகின்றன. ரோமானியர் பயன்படுத்திய கலன்கள் அனைத்தும் மத்தியத் தரைக்கடல் நாடுகளில் வனையப் பட்டவையாகும்.

ரோமானியர்கள் ஆம்போரா சாடிகளில் ஆலிவ் எண்ணெய், யவன நாட்டு மது, கருவாட்டுக் குழம்பு ஆகியவற்றை அடைத்துக் கொண்டு வந்துள்ளனர். சில சமயங்களில் அச்சாடிகளில் பழச்சாறும் நிரப்பிக் கொண்டு வந்துள்ளனர். யவனர்கள் தங்கள் கப்பலில் கொண்டுவந்த மதுவைத் தமிழர்கள் விரும்பி அருந்தி வந்த தன்மையைப் புறநானூறு மூலம் அறியலாம்.[3] மீனும், ஊனும் பண்டைத் தமிழரின் விருப்பமான உணவாகும். மீனை உணக்கியும் ஊனைக் கண்டமாக்கியும் உணவாகப் பயன்படுத்தியுள்ளனர். 'யவனர் மரக்கலங்களில் இரட்டைப்பிடிச் சாடிகளில் கொணர்ந்த மதுவைத் தமிழர் உண்டு வந்ததற்கான சான்றுகள் அரிக்கமேட்டுப் புதைகுழிகளில் கிடைத்துள்ளன'[4] என்னும் கூற்றும் இதை உறுதிப் படுத்தவல்லது.

முளிதயிர் பிசைவதற்கும், துழந்து அடுவதற்கும், தீம்புளிப்பாகர் இனிதென உண்பதற்கும், நீர் பருகுதற்கும் பல்வகை மட்கலன்களைத் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். இலக்கியங்கள் செல்வச் செழுமையை விளக்கிக் காட்டுவதற்காகத் தங்கக் கிண்ணம், வெள்ளிக் குவளைகள் ஆகியவற்றைப் பற்றிப் பாடியிருக்கின்றன. அரசர்களும் வணிகச்

3.புறம்.56:18-21 4.கே.கே.பிள்ளை1972:137



செல்வந்தர்களும் இவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். பிற்காலத்தில் மட்கலன்களில் வழவழப்பானவை(Fine Ware) செல்வர்களின் பயன்பாட்டிற்கென்றும், சொரசொரப்பானவை (Coarse Ware) ஏழைகளுடைய பயன்பாட்டிற்கென்றும் வனையப் பட்டவையாக இருக்கலாம்.

பண்டைக்காலத்தில் ஒரு பண்பாட்டினைச் சார்ந்த மக்கள் சில குறிப்பிட்ட வகையான மட்கலன்களையும், வேறு பண்பாட்டினையுடைய மக்கள் வேறுவிதமான மட்பாண்டங்களையும் பயன்படுத்தி வந்துள்ளனர். எனவேதான் தமிழ் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான மட்கலன்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் வாழ்ந்த ரோமானியர் நாகரிகம், தமிழருடைய நாகரிகத்தில் கலந்துள்ளதை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் ரோமானிய வகையைப் போலவே தமிழர்களும் பல உள்நாட்டுக் கலன்களை வனைந்துள்ளமைக்கான சான்றுகள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. தமிழர்-ரோமானிய நாகரிகக் கலப்பினால் தோற்றுவிக்கப்பட்ட புதியவகை மட்கலன்களாக இவை விளங்குகின்றன.

**உடைகள்**

நிலவகைப் பாகுபாட்டில் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பண்டைத் தமிழக மக்களில் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்தோர் இலை-தழையாடை அணிந்துள்ளனர். கம்பளி, பருத்தி, பட்டு ஆகியவற்றால் நெய்யப்பட்ட ஆடைகள் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் முப்பத்தாறு வகையான ஆடைகளைக் குறித்துள்ளார்.[5] செக்கர் வானைப் போன்ற செவ்வண்ணம் ஊட்டிய பூவேலை செய்யப்பட்ட மிகமிக நுண்ணிய புடவைகள் மதுரை அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டன.[6] பழந்தமிழர்கள் ஆடை நெய்யும் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆடவரும் பெண்டிரும் மார்பிலும் இடையிலும் ஆடை அணிந்திருந்தனர். நெசவுத் தொழிலும் பண்டைத் தமிழகத்தில் ஏற்றுமதிக்குரிய பொருட்களைத் தரும் வணிகத் தொழிலாகவே விளங்கியது.

ஆடைகளை வடிவமைக்கும் தையல்காரர் அக்காலத்தில் துன்னகாரர் என்று அழைக்கப்பட்டார். யவனர்கள் மெய்ப்பை என்னும்

5.சிலப்.14:106-112. 6.மதுரைக்.:421-433

Tamil Heritage Foundation International (THFi)

பெயரில் ஆடை அணிந்திருந்ததாக சங்க இலக்கியம் கூறுகின்றது. முழந்தாள் வரை அணிந்து கொள்ள வடிவமைக்கப்பட்ட வட்டுடை என்னும் ஆடை பற்றி மணிமேகலை தெரிவிக்கின்றது. நெசவுத் தொழிலில் பெண்களும் ஈடுபட்டிருந்தமை பற்றிப் *பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன* என்னும் பாடல் தொடரால் அறியலாம். பாம்பின் தோலைப் போன்றும் மூங்கிலின் தோலைப் போன்றும் இழையை அறிந்துகொள்ள முடியாத வகையிலும் ஆடைகள் நெய்யப்பட்ட திறத்தை,

*பாம்புரி யன்ன வடிவின காம்பின்*

*கழைபடு சொலியி னிழையணி வாரா*

*ஒண்பூங் கலிங்கம்*[8]

என்னும் பாடலடிகளால் அறியலாம். கலிங்கம், வங்கச்சாதர் போன்ற ஆடைப் பெயர்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகளின் பெயர்களைக் குறிப்பனவாய் அமைகின்றன. கலிங்கப் பெட்டி, யவனப்பேழை என்பன ஆடைகளுடன் வந்த பேழைகளாக அல்லது ஆடைகளை வைத்துக் கொள்ள அயல் நாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட பெட்டிகளாக இருக்கலாம். மஸ்லின் துணி போன்ற மெல்லிய துணிரகங்களைப் பாபிலோனியரும் கிரேக்கரும் இந்தியாவின் வடபகுதியினரும் அரிக்கமேடு, உறையூர் போன்ற தென்னிந்தியப் பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுப் பெற்றுள்ளனர்.[9] தாம் இயற்றிய அர்த்த சாஸ்திரத்தில் சாணக்கியர் பாண்டி நாட்டு முத்துக்களையும் பஞ்சாடைகளையும் போற்றித் தென்னாட்டுடன் வணிகஞ் செய்தலே சிறந்தது என்பார்.[10]

பண்டைக் காலத்தில் நூற்புத் தொழில் புரிந்தோராகப் பெண்களே காணப்படுகின்றனர். கைம்பெண்டிர் இதனைப் பிழைப்பு வாய்ப்பாகவே கருதிச் செய்து வந்துள்ளனர். கொங்கு நாட்டில் கணவன் இறந்தவுடன் விதவைகளுக்கு நூற்புக் கதிரும் பஞ்சும் கொடுக்கும் சடங்கு ஒன்று இன்றும் நிகழ்ந்து வருகின்றது. இதன் அடிப்படையில் நோக்கும்போது கைம்பெண்களின் தொழிலான இது இன்றைய நிலையில் மரபெச்சமாக எஞ்சி நிற்கின்ற உண்மை புரியலாகும். நூற்றல் தொழிலை மகளிர் செய்ய நெசவுத் தொழில் ஆடவர்க்கு உரியதாகக் காணப்படுகின்றது. *திருமலர் அன்ன புதுமடி* " *பாம்பு உரித்தன்ன வான் பூங்கலிங்கம்*[11]" *நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை*[13] என்று துகிலும் படுக்கைகளும்

7.புறம்:125:1 8.புறம்:383:9-11 9.கு.பகவதி 2003:224 10.எஸ்.இராமகிருஷ்ணன் 1991:41

11.புறம்380:15 12.புறம்.397:15 13.அகம்.93:13



வர்ணிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஆடைகளை நேர்த்தியாகவும் மென்மையாகவும் பூத்தொழில் வேலைப்பாடு கொண்டும் நெய்துள்ளனர்.

*இழை மருங்கறியா நுழைநூற் கலிங்கம்*[14] என்னும் தொடர் ஆடையில் இழை அமைந்திருக்கும் இடத்தை ஊடுருவிப் பார்ப்பினும் புலனாகாத் தன்மையில் நெய்யப்பட்டிருந்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது. *காம்பு சொலித்தன்ன அறுவை*[15] என்னும் தொடரும் ஆடையின் மென்மையைக் குறிப்பிடப் பாடப்பட்ட தொடராகும். அக்காலத்திலேயே உறையூர் சேலைகளுக்குப் புகழ்பெற்ற இடமாகும். மிக மெல்லிய நூலால் நெய்யப்பட்ட சேலைகளைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும்போது தேங்காய் மூடியில் வைத்து அடக்கி அயல் நாட்டு அரசிக்கு அனுப்பிய வரலாறும் உண்டு.[16] மென்மையான உறையூர் ஆடைகளை ரோமானியப் பேரரசர்களும் அரசியரும் விரும்பி அணிந்துள்ளனர்.

**ஆடைகளுக்கு வண்ணம் தோய்த்தல்**

இயற்கையின் எழிலைக் கண்ட மனிதன் அவற்றைத் தன் படைப்பிலும் கொண்டு வருதல் மட்டுமின்றி வணிக நோக்கத்திற்காகவும் கவர்ச்சிக்காகவும் ஆடைகளுக்கு நிறமூட்டி அழகு பார்த்தான். சங்கப் பாடல்களில் இத்தகைய வண்ண ஆடைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது குன்றி ஏய்க்கும் உடுக்கை, பொன்புனை உடுக்கை, நீலக் கச்சை, கல் தோய்த்த உடுக்கை, கருந்துவராடை என்னும் தொடர்களில் சிவப்பு, மஞ்சள், நீலம், காவி, கருப்பு ஆகிய நிறங்களில் ஆடைகளுக்குச் சாயம் தோய்த்துள்ள தொழில்நுட்பத்தைக் காண்கிறோம்.

காலப்போக்கில் இந்நிறங்களைத் தவிர எல்லா நிறங்களிலும் துணிகளுக்குச் சாயம் தோய்த்துள்ளனர். சங்ககாலச் சோழர் தலைநகரான உறையூரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட சாயத் தொட்டியின் இடிபாடு கண்டறியப்பட்டுள்ளது. அதன் காலமும் சங்ககாலத்தைச் சேர்ந்ததாகவே கணிக்கப்பட்டுள்ளது. இதே போன்று அரிக்கமேட்டில் வெண் துகில்களுக்குச் சாயம் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட இரண்டு சாயத் தொட்டிகள் அகழ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

14.மலைபடு:52 15.சிறுபாண்:235

16.வி.எஸ்.வி.இராகவன், மெய்யப்பன்.ச,(பதி.ஆ)1977:264

Tamil Heritage Foundation International (THFi)

சங்க காலத்திற்குப் பின்பு தோன்றிய காப்பியங்களில் ஆடைகளுக்கு வண்ணந் தோய்க்கும் தொழில் நுட்பம் தெளிவாகப் புலப்படுத்தப் பட்டுள்ளது.

*வெண்ணூல் பூந்துகில் வண்ணம் கொளீஇ*
*நீலக் கட்டியும் மரகதத் தகவையம்*
*பாசிலைக் கட்டியும் பீதகப் பிண்டமும்*
*பிடித்துருக் கொளீஇக் கொடித் திரியோட்டிக்*
*கையமைத் தியற்றிய கலிங்கத் துணியனர்* [17]

இப்பாடல் தொடர்களில் வண்ணம் ஊட்டலுடன் ஆடைகளுக்கு அழகான உருக்களைக் கொண்ட ஒப்பனைகளையும் செய்துவந்த உண்மை புலனாகின்றது. இதே போன்று சங்ககால மக்களும் ஆடைகளுக்குப் பூ வேலைப்பாடு செய்து அதன் தரத்தையும் அழகையும் கூட்டியிருந்தனர் என்பதைப் பூவிரிக் கச்சை, பூந்துகில், சில் பூங்கலிங்கம் போன்ற தொடர்களால் அறிந்து கொள்ளலாம்.

**துணி சாயத் தொழிற்சாலை**

துணி நெய்யக் கற்றுக்கொண்ட மனிதன் பலதரப்பட்ட பயன்பாட்டிற்கேற்ப பல வடிவங்களிலும் வண்ணங்களிலும் அலங்காரங்களிலும் ஆடைகளை உருவாக்க முனையும்போது தொழில் நுட்பத்திறன் முன்னிலை வகிக்கின்றது. ஆடைகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழில் நுட்பத்தைப் பற்றிக் கூறுகையில் *நீலக் கச்சைப் பூவா ராடை* [18] என்னும் தொடர் குறிப்பிடுகின்றது.

உறையூரில் மிக மிக மெல்லிய மஸ்லின் துணி நெய்யப்பட்டுச் சாயம் தோய்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதே போன்று ஆடைகளில் பலவகை வண்ணங்களைக் கூட்டி அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் அரிக்கமேட்டில் சிறப்பாக நிகழ்ந்துள்ளது.

அரிக்கமேடு, உறையூர், திருகாம்புலியூர் முதலான இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் சாயத்தொட்டிகள் கண்டறியப பட்டுள்ளன. பெரிய செங்கற்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ள இத்தொட்டிகள் தேவையான உள், வெளித் திறப்புகளுடன் கட்டப்பட்டுள்ளன.

17.பெருங்கதை-3.1:95-100 18.புறம்274:1



இவைதவிர, பல்வேறு விதமான ஆடை அலங்காரங்களைக் கொண்ட சுடுமண் உருவங்களும் நால்நூற்கும் தக்களியும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.

அக்காலப் பெண்கள் இடையில் புடவையை அணிந்திருந்தனர். அவர்கள் தம் மார்பகத்தை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததில்லை என்பர்.[19] ஆனால் இன்றைய பெண்கள் சேலை அணியும் பாணியில் மார்பகத்தை மறைத்துச் சேலை அணிந்துள்ள சுடுமண் உருவம் ஒன்று அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. ஆனால் இது ஆரிய பாணியில் சேலை உடுத்திக் கொண்டிருக்கும் உருவபொம்மை என்றும் அப்பொம்மை தமிழகத்தில் ஆரியப் பண்பாட்டின் ஊடுருவலைக் காட்டுகின்றது என்ற கருத்தும் உள்ளது.[20] அக்காலத்தில் எல்லோரும் எப்போதும் மேலாடை அணிந்திருக்கவில்லை.

வாழ்க்கையின் உயர்நிலையில் இருந்தவர்களும் மிகக்குறைந்த உடைகளையே உடுத்தி வந்துள்ளனர். பணியாளரும், அடிமைகளும் வேட்டியும் சட்டையும் அணிந்துள்ளனர். ஊர் ஊராகச் சென்று பண்டங்களை விற்றுவந்த வணிகர்கள் கஞ்சுகத்துடன் காலில் செருப்பும் அணிந்துள்ளனர். *'பட்டு நீக்கித் துகில் உடுத்து'* [21] என்று பட்டினப்பாலை பாடுவதை நோக்கும்போது வாழ்க்கை வசதி, தேவை, சூழல், பணிபுரியும் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அக்கால மக்கள் வெவ்வேறு விதமான ஆடைகளை அணிந்து வந்துள்ளனர் என்னும் முடிவுக்கு வரலாம்.போரில் சிறந்த யவன நாட்டு வீரர்களைத் தமிழ்வேந்தர்கள் தம் படைப்பிரிவில் சேர்த்துக் கொண்டனர். மற்றவர்க்கு அச்சமளிக்கும் விதத்தில் அமைந்திருந்த யவன வீரர்களின் உடையலங்காரத்தைப் பற்றிக் கூறும் முல்லைப்பாட்டு,

*மத்திகை வளைஇய மறித்துவீங்கு செறிவுடை*
*மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து*
*வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்* [22]


என்று காவல் வீரர்கள் அணிந்து கொண்ட மெய்ப்பை என்னும் ஆடை வகையைப் பற்றிப் பாடியுள்ளது. பண்டைத்தமிழர்கள் ஆடைகளுக்கு நறுமணமும் ஊட்டி வந்துள்ளனர்.

19.கே.கே.பிள்ளை1972:139 20.சா.குருமூர்த்தி1974:31
21.பட்டினப்பாலை:107 22.முல்லைப் :59-61

Tamil Heritage Foundation International (THFi)

### குடியிருப்புக்கள்

பண்டைத் தமிழகத்தில் பல்வேறு விதமான குடியிருப்புப் பகுதிகள் அமைந்திருந்தமை அகழ்வாய்வினாலும் அறியப்படுகின்றது. சங்ககாலக் குடியிருப்புகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.




இவற்றுள் அரண்மனை, வணிகம் ஆகியவற்றின் குடியிருப்புப் பகுதிகளை மட்டும் அகழ்வாய்வுகள் புலப்படுத்தியுள்ளன. சில அகழ்வாய்வுகளில் குடிசைப் பகுதியின் தளங்களும் அவற்றைச் சுற்றித் தூண்கள் நடப்பட்டதற்கு அறிகுறியான குச்சி நடுகுழிகளும் ( Post holes) காணப்படுகின்றன. வீட்டின் ஒருபகுதியில் களிமண்ணால் செய்யப்பட்ட அல்லது கற்களால் அமைக்கப்பட்ட அடுப்புகளும் காணப்படுகின்றன. அடுப்புகளைச் சுற்றிலும் மட்பாண்டங்கள் இடம் பெற்றுள்ளன. நாகரிகம் வளர வளர மனிதன் நன்கு வடிவமைக்கப்பட்ட கற்களைக் கொண்டும் சுட்ட செங்கற்களைக் கொண்டும் வீடுகள் கட்டினான். இத்தகைய கட்டடங்கள் கட்டும் முயற்சி, படிப்படியாக வளர்ச்சி அடைந்து பல்வேறு அறைகளையும் கூடங்களையும் கொண்ட பெரிய இல்லங்களாகப் பிற்காலத்தில் உருவெடுத்தன. ஒரு பண்பாட்டின் தோற்றத்தினையும் அதன் படிப்படியான வளர்ச்சியையும் அதன் முடிவினையும் அகழ்வாய்வு வெளிப்படுத்தும் குடியிருப்புக்களால் அறியலாம்.

பெருங்கற் புதைவுக்கால மக்கள் களிமண்ணை மிகுதியாகப் பயன்படுத்தித் தங்கள் வீடுகளைக் கட்டியுள்ளனர். ஆனால் சங்ககால மக்கள் செங்கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்டியுள்ளனர். சுண்ணாம்பு, கெட்டியான களிமண், சிறியதும் பெரியதுமான கூழாங்கற்கள் ஆகியவை சுவர்கள் கட்ட இடையிடையே பயன்படுத்தப்பட்டுள்ளன. மண்சுவர்களின் ஊடே சம இடைவெளி விட்டு மரத் தூண்களை நிறுத்தி அவற்றின் மீது கூரை வேய்ந்துள்ளனர்.



சுவர்களின் அடித்தளத்தில் மரத்தூண்கள் நிறுத்தப்பட்ட குழிகளின் அமைப்பைக் கொண்டு ஆராய்கையில் அக்காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் தரையமைப்பு வட்ட வடிவமாகவோ, சதுரமாகவோ, செவ்வகமாகவோ அமைக்கப் பட்டிருந்தமை புலனாகின்றது.

### அயல்நாட்டுக்குடியிருப்புக்கள்

கிபி. முதல் நூற்றாண்டில் ரோமானியர்கள் மட்டுமின்றிக் கிரேக்கரும் சிரியரும் யூதரும் தமிழகத்துடன் வணிகத் தொடர்பை வளர்த்துக் கொண்டனர். தமிழகத்தில் ரோமாபுரி மக்கள் வாழ்ந்த அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, அழகன்குளம், முசிறி ஆகிய இடங்களில் எல்லாம் அயல் நாட்டவரும் தமிழரோடு இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுள் பலர் வணிகத்தின் காரணமாகவே தமிழகத்தில் தங்கி விட்டனர். அவ்வாறு தங்கியவர்களிடம் இருந்தே தமிழகத்தைப் பற்றிய செய்திகளைத் தாம் கேட்டறிந்தாகப் பிளினி குறிப்பிட்டுள்ளார்.[23]

அயல் நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்து வணிகம் செய்த வணிகர்கள் தற்காலிகக் குடியிருப்புக்களைத் தமிழகத் துறைமுகங்களில் அமைத்துக் கொண்டு வணிகம் செய்து வந்துள்ளனர். இத்தகைய ரோமானிய வணிக நிறுவனங்கள் அரிக்கமேடு, வசவசமுத்திரம், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், உறையூர், கோட்டைமேடு, முசிறி ஆகிய பகுதிகளில் பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன. இப்பகுதிகளில் தங்கள் குடும்பத்தினரோடு தங்கியிருந்த ரோமானிய வணிக அதிகாரிகள் ரோமாபுரியிலிருந்து அவ்வப்போது வரும் ஆணைகட்குக் கீழ்ப்படிந்து, தமிழக அரசர்களின் சம்மதத்தோடு அரிக்கமேட்டில் நீண்டகாலம் தங்கியுள்ளனர்.[24] இவர்கள் தங்கள் வணிகப் பாதுகாப்பிற்காக யவன நாட்டிலிருந்து வீரர்களை அழைத்து வந்துள்ளனர். முசிறித் துறைமுகத்தில் ரோமானிய வணிகப் பாதுகாப்பிற்காக ஆயிரத்து இருநூறு யவன வீரர்கள் நிறுத்தப் பட்டிருந்தனர் என்று பெண்டின் ஜெரியன் அட்டவணை கூறுகின்றது. இவர்கள் வணிகப் பாதுகாப்புக்காக மட்டுமின்றி உள்நாட்டுப் பாதுகாப்புக்காகவும் தமிழக மன்னர்களின் படைப்பிரிவில் பணியாற்றியுள்ளனர்.[25] அரிக்கமேட்டுப் பகுதியில் இருந்த யவன வணிகக் குடியிருப்புக்களின் பாதுகாப்பிற்காக அக்காலத்தில்

23.கே.கே.பிள்ளை,1972:54 24.ச.மதனகல்யாணி 1998:24 25.பா.இறையரசன்1983:113).

Tamil Heritage Foundation International (THFi)

உருவாக்கப்பட்ட வீரப்பட்டினமே, இக்காலத்தில் வீராம்பட்டினம் என்று மருவி அழைக்கப்பட்டு வருகின்றது.

**உள்நாட்டு குடியிருப்புக்கள்**

சங்ககால மக்களின் குடியிருப்புக்கள் பற்றிச் சங்க இலக்கியங்களில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. வீடுகளில் மண்டபம், கூடம், தாயக்கட்டு, அடுக்களை என்று தனித்தனிப் பகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை சுட்ட செங்கற்களால் கட்டப் பட்டவையாகும்.

கைவல் கம்மியர் சிற்பநூல் முறைப்படி மனைகளையும், நகரங்களையும் வடிவமைத்துள்ளனர். கட்டடம் கட்ட நல்லநாள் பார்த்துக் கட்டடக் கலைஞர் திட்டம் இயற்றி மனைவகுத்து வீடு கட்டியுள்ளனர்.

*ஒருதிறம் சாரா அரைநாள் அமயத்து*
*நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்*
*தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்*
*பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து*[26]

கட்டப்பட்டுள்ளமை புலனாகும். பொருளாதார வசதி படைத்த அரண்மனைகளும், செல்வந்தர் மாளிகைகளும், ஏழைகளின் குடியிருப்புக்களும் என்று அவரவர் வசதிக்கேற்பக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

வீட்டின் புறத்தே செய்குன்றுகளையும், அகத்தே பளிக்கறைகளையும் அமைத்திருந்தனர். அரண்மனையைப் போலவே வீடுகட்கும் சாளரங்கள் பொருத்தி இருந்தனர். அரண்மனைகளில் யவனரால் வடிவமைக்கப்பட்ட பாவை விளக்குகள் இரவு முழுவதும் எரிந்து கொண்டேயிருந்தன.

நிலாமுற்றம் அமைக்கப்பட்ட மாடியில் பொழிந்த மழைநீர் திரண்டு உருண்டு வந்து கீழே விழுவதற்கு மீன்வாயைப் போன்ற அம்பணங்கள் அமைக்கப்பட்டிருந்தன.[27] வீட்டின் வெளிவாசலில் மேடைகள் போடப்பட்டிருந்தன.[28] அவற்றிற்கு வேதிகைகள் என்று பெயர். சங்ககால மதுரை நகரமைப்புப் பற்றி மதுரைக்காஞ்சி சிறப்பாக வர்ணித்துள்ளது.

26.நெடுநல்:101-104 27.மதுரைக்.:485 28.குறள்.:720



**கட்டடக்கலை- தொழில்நுட்பம்**

அரிக்கமேட்டின் வடபகுதியில் நடைபெற்ற அகழ்வாய்வில் பண்டசாலையின் அடிப்படையும் வெளிப்புறச் சுவர்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. செவ்வக வடிவம் கொண்ட இச்சுவர்கள் 45மீ. நீளமும் 11மீ. அகலமும் கொண்டவை. இக்கட்டடப் பகுதிகள் மிகவும் அகலமான சுவர்களால் அமைக்கப்பட்டுள்ளன. பழங்காலத்தில் செங்கற்கள் இட்டிகை என்று அழைக்கப்பட்டுள்ளன. வலுவான சதுர வடிவமுள்ள செங்கற்களால் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. செங்கற்களின் இடையே மண்சாந்து இட்டுக் கட்டப்பட்டுள்ளது. வெளிப்புறச் சுவர்களின் மீது சுண்ணாம்புக் காரை பூசப்பட்டுள்ளது. நான்கு பக்கச் சுவர்களும் நன்கு ஆழமான அடித்தளம் அமைத்து எழுப்பப்பட்டுள்ளன. அடித்தளம் அமைப்பதற்கு முன் அங்கே மணல் பரப்பியுள்ளனர். இக்கட்டடத்தின் தரைப்பகுதி அடித்தளத்திலிருந்து ஐந்தடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

அக்காலக் கட்டடத்தின் கட்டுமானத்திற்கும் உறுதித் தன்மைக்கும் ஏற்ப எலுமிச்சை சாறு, வெல்லம், கடுக்காய் ஆகியவை சேற்றுக் கலவையுடன் கலந்து பூசப்பட்டுள்ளது. இதனால் மழைநீர் உட்புகா வண்ணம் கட்டடம் உறுதியாகக் கட்டப் பட்டிருந்தமை புலனாகின்றது. மண்ணை அரைத்துக் கட்டுமான வேலைக்குப் பயன்படுத்திய தொழில்நுட்பம் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. சங்கத்தமிழர் கட்டடங்களின் உறுதிப்பாட்டிற்கு மண்ணை அரைத்துப் பயன்படுத்திய தொழில் நுட்பத்தையும் செம்பை உருக்கி ஊற்றி வலுவான கோட்டைகளை உருவாக்கும் செயல் திறனையும் பெற்றிருந்த தன்மையினை

*சுடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்*
*செம்புறழ் புரிசை செம்மல் மூதூர்*[29]

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. அரண்மனை, கோட்டை போன்ற பெரிய கட்டுமானப் பணியில் மண்ணைக் கையால் அரைத்துக் கட்டுதல் என்பது சாத்தியமாகாது. அதற்கென வடிவமைக்கப்பட்ட அரைவை எந்திரத்தாலேயே அவை செய்யப்பட்டிருக்க வேண்டும். அரைமண் இஞ்சி என்று பதிற்றுப்பத்து[30] குறிப்பிடுவதல் அதன் பயன்பாடு புலனாகும். வீலரின் அகழ்வாய்வில்(1946) பழங்காலம், இடைக்காலம், பிற்காலம் ஆகிய மூன்று காலத்தைச் சேர்ந்த கட்டடப் பகுதிகளும்

29.புறம்37:9-10 30.பதிற்றுப்பத்து 58:6

Tamil Heritage Foundation International (THFi)

ஒரே இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் தொடர்ச்சியான குடியிருப்புக்கள் அரிக்கமேட்டுப் பகுதியில் இருந்திருக்க வேண்டும்.

பண்டைத் தமிழகத்தின் ஏனைய துறைமுகங்களைக் காட்டிலும் அரிக்கமேட்டில் ரோமானியர்கள் பெரிதும் விரும்பி வந்து தங்கி உள்ளனர். தமது சொந்தப் பயன்பாட்டிற்கென்று ரோமானியர் கொண்டு வந்த கலன்கள் அரிக்கமேட்டில் மிகுதியாகக் கிடைத்திருப்பதால் இக்கூற்று உறுதியாகும். அரிக்கமேட்டு அகழ்வாய்வுகள் வெளிப்படுத்திய கட்டடப் பகுதிகளுள் முதன்மையானது பண்டசாலை (Ware house), அடுத்தவை வணிகக் குடியிருப்புக்கள். கட்டடப்பகுதிகள் அனைத்தும் மிகவும் அகலமான சுவர்களால் கட்டப்பட்டுள்ளன. வெளிப்புறச் சுவர்களின் மீது சுண்ணாம்புக்காரை பூசப்பட்டுள்ளது. நான்கு பக்கச் சுவர்களும் நன்கு ஆழமான அடித்தளம் அமைத்து எழுப்பப்பட்டுள்ளன. பண்டசாலையின் வாயிற்புறங்கள் சிதைந்து விட்டதால் அவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள இயலவில்லை.

கசாலின் அகழ்வாய்வில்(1950) கண்டறியப்பட்ட கட்டடப்பகுதிகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அரிக்கமேட்டுக் குடியிருப்புக்களை அவர் வடபகுதி, தென்பகுதி என்று இரண்டாகப் பிரித்துள்ளார்.[31] முதன் முதலில் இப்பகுதியில் பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்த மீனவர் குடியிருப்புக்கள் இருந்தன. அதன் பின்னர் ரோமானியரோடு ஏற்பட்ட வணிகத் தொடர்பு காரணமாக இப்பகுதியில் வணிகக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன. தென்னிந்தியாவின் ஏனைய தொல் பழங்காலக் குடியிருப்புக்களுடன் ஒப்பிடும்போது அரிக்கமேடு, சுற்றுக்கேணி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நாகரிகம் மிக்கவராக வாழ்ந்து வந்துள்ளனர். அயல்நாட்டு வணிகப் போக்குவரத்து பெருகத் தொடங்கிய காலகட்டத்தில் அரிக்கமேட்டின் வடபகுதி, தென்பகுதி ஆகிய இரண்டும் குடியிருப்புக்களாகவும் வணிக வளாகங்களாகவும் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் வகையில் விரிவடையத் தொடங்கின.

அரிக்கமேட்டின் வடபகுதியை விடத் தென்பகுதியே பழைமையான குடியிருப்புப் பகுதியாகும் என்று கசால் கூறுகின்றார்.[32] தென்னிந்தியாவின் பெருங்கற்புதைவுக் காலத்தைச் (கி.மு. 300) சேர்ந்த தொல்பொருட்கள் அரிக்கமேட்டின் தென்பகுதியில் கிடைத்துள்ளன. தென்பகுதிக் குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்களும் அவர்தம்

31. Vimala Begley 1996 : 14. 32.மே.நூல்:39



வாரிசுகளும் மத்தியத் தரைக்கடல் நாட்டினரோடு வணிகத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். வடபகுதியில் இத்தகைய குடியிருப்புக்கள் காணப்படவில்லை. வடபகுதியில் உள்ள கட்டடப் பகுதிகள் வணிக வளாகங்களாகவும் தொழிலகங்களாகவும் பண்ட சாலைகளாகவும் விளங்குகின்றன. இக்கட்டடப் பகுதிக்கென்று உருவாக்கப்பட்ட செங்கற்களும் மட்கலன்களும் தென்பகுதிக்குக் கிழக்கே சற்றுத் தள்ளித் தயாரிக்கப்பட்டு இங்கே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

தென்பகுதியை விட வடபகுதி சற்றுத் தாழ்வாகவும் அரியாங்குப்பத்து ஆற்றங்கரையை ஒட்டியும் அமைந்துள்ளதால் ஏற்றுமதி -இறக்குமதிப் பணிகள் இப்பகுதியில் மிகுதியாக நடைபெற்றிருக்க வேண்டும். வடபகுதி, தென்பகுதி ஆகிய இரண்டிற்கும் இடையே சமூக, பொருளாதார, பண்பாட்டு வேறுபாடுகள் ஓரளவு இருந்துள்ளன. இவற்றை உறுதி செய்யும் வகையில் வடபகுதியில் வன்கலன்களும் தென்பகுதியில் நன்கலன்களும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் கண்டறியப்பட்ட தொல்பொருட் சின்னங்களின் அடிப்படையில் நோக்கும்போது வடபகுதி சாதாரணத் தொழிலாளிகள் வாழ்ந்த குடியிருப்புக்களாகவும் தென்பகுதி நாகரிகம், பண்பாட்டில் வளர்ச்சி பெற்றோர் வாழ்ந்த குடியிருப்புக்களாகவும் காணப்படுகின்றன.

காவிரிப்பூம்பட்டினம் சங்ககாலத்தில் மிகவும் சிறப்புப்பெற்ற பெரிய நகரமாகக் காட்சி அளித்தது. இந்நகர் இரண்டாகப் பிரிக்கப் பட்டிருந்தது. கடற்கரையை ஒட்டிய பகுதி 'பட்டினப்பாக்கம்' எனவும் புறநகர்ப் பகுதி 'மருவூர்ப்பாக்கம்' எனவும் வழங்கப்பட்டிருந்தது.[33] இவ்விரு பாக்கங்களுக்கும் இடையில் உள்ள பகுதியில்தான் நாளங்காடிகளும் அல்லங்காடிகளும் நடைபெற்றன. பண்டைக்கால அரிக்கமேடும் இவ்வாறுதான் பாகுபாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். கடற்கரையை ஒட்டிய பட்டினப் பகுதி *பொதுகே* (பொதுக்கம்) என்றும் புறநகர்ப் பகுதி மருங்கைப் பாக்கம் என்றும் வழங்கி இருக்க வேண்டும். அரிக்கமேட்டின் எதிரே அரியாங்குப்பத்து ஆற்றை ஒட்டி அமைந்துள்ள 'முருங்கப்பாக்கம்' என்னும் ஊர்ப்பெயர் 'மருங்கைப்பாக்கம்' என்பதன் திரிபாக இருக்க வேண்டும்.

சங்ககாலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்த மருவூர்ப்பாக்கம் புகழ்பெற்றிருந்ததைப் போன்று அரிக்கமேட்டுப் பகுதியை ஒட்டி அமைந்திருந்த மருங்கைப்பாக்கம் (முருங்கப்பாக்கம்)

33.சிலப்.5:50-52. 34. A. Ramaswamy 1985: 20

Tamil Heritage Foundation International (THFi)

ஊரும் அங்காடிகள் நிறைந்து சிறப்புற்றிருக்க வேண்டும். இதே போன்று இராமநாதபுரத்தில் இருந்து எட்டுக் கி. மீ. தொலைவில் வைகை ஆற்றங்கரையை ஒட்டி அமைந்துள்ள அழகன்குளம் ஊரும் சங்ககால யவனக் குடியிருப்புக்களை உள்ளடக்கிய பகுதியாகத் திகழ்ந்திருந்தது.[35] பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்ட இப்பகுதி இலங்கையில் இருந்த யவன இருக்கையான மாந்தைத் துறைமுகத்திற்கு மிக அண்மையில் உள்ளது. அழகன் குளத்திற்கு அருகில்தான் முத்து வணிகத்திற்குப் புகழ்பெற்ற கொற்கைத் துறைமுகம் இருந்தது.சங்ககாலப் பாண்டியர் யவன மதுவை விரும்பி அருந்தியதாகப் புறநானூறு கூறும் சான்றுகள்[36] அழகன்குளத் தொல்பொருட் சின்னங்களால் உறுதி செய்யப்பட்டுள்ளன.

கசால் மேற்கொண்ட தென்பகுதி அகழ்வாய்வில் அரியாங்குப்பத்து ஆற்றின் கிழக்குப் பக்கமாக 27 மீட்டர் நீளமுள்ள சுவர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சுவர் செயற்கை நீர்த்தேக்கத்திற்கு நீர் எடுத்துச் செல்லும் வாய்க்காலின் வெளிப்புறச் சுவராகக் கருதப்படுகின்றது. இவ்வாய்க்காலின் சுவர்ப்பகுதி சுடுமண் உறைகிணற்றில் சென்று முடிவடைகின்றது. காவிரிப்பூம்பட்டினத்திலும் இதே போன்ற செயற்கை நீர்த்தேக்கம் ஒன்று ரௌலெட்டெட் பானை ஓடுகளுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு அரிக்கமேட்டில் நடைபெற்ற வெளிநாட்டு வணிகம் பற்றிய தொல்பொருட் சான்றுகள் குறைவாகவே கிடைக்கின்றன. கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை சிறிய அளவிலான வணிகம் கிழக்கு-மேற்குத் துறைமுகங்கள் இடையேயும் அண்டை நாடான இலங்கை இடையேயும் நடைபெற்று வந்திருக்க வேண்டும்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவராட்சிக் காலத்தில் தென்கிழக்கு ஆசியா, சீனா ஆகியவற்றுடனான கீழை வணிகம் வளர்ச்சி பெற்றுள்ளது. கி.பி.9 மற்றும் 10-ஆம் நூற்றாண்டுகளில் பிற்காலச் சோழர் ஆட்சியில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் அரிக்கமேட்டிற்கும் இடையே மட்கலன்கள், துணிவகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வணிகம் நிகழ்ந்துள்ளது. அதன் பின்னர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இப்பகுதி சமயப்பணியில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சுப் பாதிரியார்களின் குடியிருப்பாகவும் கிறித்தவ மடமாகவும் விளங்கியுள்ளது.

35. Vimala Begley 1992 : 129 36.புறம்.:56



## தொழிலகங்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் உலோகத்தை மனிதன் தன் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைச் செய்வதற்குப் பயன்படுத்திய காலம் உலோகக் காலம் ஆகும். இது இரும்புக் காலம் என்றும் செம்புக்காலம் என்றும் பிரிக்கப்பட்டிருந்தது. இரும்பையும் செம்பையும் பயன்படுத்தி உலோகம் தயாரிக்க கற்றுக் கொண்டதால் இக்காலங்கள் அவ்வாறு அழைக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் தருமபுரி, குண்டூர் ஆகிய இடங்களில் கிடைத்த உலைக்கலன்களை ஆய்வு செய்தபோது அங்கு வார்ப்பிரும்பு பயன்பாடு அக்காலத்தில் இருந்தமையை அறிய முடிகின்றது. உலோகத்தொழில் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. இரும்பைப் பயன்படுத்தும் உலோகத் தொழில் நுட்பம் குறித்தும் அத்தொழிலில் ஈடுபட்டிருந்த கொல்லர்கள் பற்றியும்

இரும்புப் பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைத்தெறிக் கூடமொடு பொருஉம்
உலைக்கல் லன்ன வல்லாளன்[37]

என்று குறிப்பிடுவதால் அறியலாம். *கருங்கை கொல்லன் இரும்பு விசைத்தெறிந்த கூடம்*[38] என்னும் தொடரும் சங்ககால உலோகத் தொழிலைப் புலப்படுத்தும். அரிக்கமேடு, ஆரோவில், சுற்றுக்கேணி ஆகிய பகுதிகளில் உலோகத்தாலான பல தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தாமிரத்தால் செய்யப்பட்ட கிலுகிலுப்பை (அரிக்கமேடு), இரும்புத் திரிசூலம், வெண்கலத்தால் ஆன மாட்டுச் சலங்கைகள் (ஆரோவில்), தங்கத்தாலான கழுத்துச் சங்கிலி(சுற்றுகேணி) ஆகிய தொல்பொருட்கள் (பண்டைத்தமிழர் வாழ்ந்த) புதுவைப் பகுதிகளில் உலோகத்தொழில் நுட்பத்தைப் புலப்படுத்தும் வகையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. *கருங்கை கொல்லன்*[39], *உலைக்கூடம்*[40], *உலைக்கல்*[41], *துருத்தி*[42] *குறடு*[43] முதலான சொற்கள் பண்டைத்தமிழரின் உலோகத் தொழில் நுட்பத்தைப் புலப்படுத்த வல்லன. பழந்தமிழ்ச் சொற்களான செம்பு செய்குநர், கஞ்சகாரர் ஆகியன உலோகத் தொழிலில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களைக் குறிப்பனவாகும்.

37.புறம்.170:15-17 38.பெரும்பாண்:437 39.புறம்170:17 40.புறம்.170:17
41.குறுந்12:2 42.நற்124:4 43.குறுந்:4

Tamil Heritage Foundation International (THFi)

## உலோகத் தொழிலகங்கள்

கொடுமணம் அகழ்வாய்வில் இரும்புத் தொழிலகம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. தென்னியந்தியாவில் உருவாக்கப்பட்ட எ∴கு அராபிய வணிகரால் மத்தியத் தரைக்கடல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. எகிப்தில் அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் சுங்கவரி விதிக்கப்பட்ட பொருட்களைப் பற்றிய பட்டியல் பிளினியால் (Historia Naturalis- A.D.77) குறிப்பிடப்பட்டுள்ளது.[44] அப்பட்டியலுள் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உட்ஸ் (Wootz) என்னும் எ∴கும் இடம் பெற்றுள்ளது. இந்த எ∴கு வகையிலிருந்துதான் டமாஸ்கஸ் நகரில் பிளேடுகள் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கொடுமணல் தவிர அண்மையில் நடந்த அகழ்வாய்வில் ஆதிச்சநல்லூர், சூலூர், சிறுமுகை, கணியம்பூண்டி, கன்னார் பாளையம், கள்ளக்குறிச்சிக்கு அருகில் உள்ள மேல்சிறுவளூர் கிராமம் ஆகிய ஊர்களில் இரும்பு உருக்குத் தொழிலகங்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழகத்தில் பல்வேறு பிரிவில் நிகழ்ந்த தொழில்களையும் அகழ்வாய்வுச் சான்றுகள் புலப்படுத்தியுள்ளன. உலோகக் காலத்திலேயே ஆடை நெய்யும் தொழில் இருந்ததென்பதற்குச் சான்றுகளாகச் சுடுமண் தக்களிகளும் எலும்பினால் செய்யப்பட்ட நூல் கோர்க்கும் ஓடங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தங்கம், வெள்ளி முதலியவற்றால் அணிகலன்கள் செய்யும் மக்கள் வாழ்ந்த இடங்களில் இவ்வுலோகங்களை உருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளும் கிடைத்துள்ளன. இரும்பினால் செய்யப்பட்ட பல்வேறு கருவிகளும், இரும்புத்தொழில் செய்தவர்கள் வாழ்ந்த பகுதியில் கிடைத்துள்ளன. அகேட்(Agate), சால்சிடனி (Chalcedony), செவ்வந்திக்கல், பளிங்குக்கல், கண்ணாடி ஆகியவற்றைப் பயன்படுத்தி மணிகள் செய்த மக்கள் வாழ்ந்த அரிக்கமேட்டில் இவற்றின் மூலப்பொருட்களும், முற்றுப்பெறாத மணிகளும் அவற்றின் எச்சங்களும் கிடைத்துள்ளன. இவ்வாறு மூலப்பொருட்களும், முழுமைபெறாத பொருட்களும், எச்சங்களும் ஓரிடத்தில் அதிகமாகக் கிடைக்குமானால் அப்பகுதி பெரிய தொழில்மையமாக இருந்திருக்க வேண்டும்.

அயல்நாட்டினரால் நிறுவப்பட்டிருந்த வணிக நிறுவனங்கள் மட்டுமின்றிப் பல தொழிற் கூடங்களும் அரிக்கமேட்டில் செயல்பட்டு

44.சா.கிருட்டினமூர்த்தி 2004(தொ.2)



வந்துள்ளன. மட்கலன்கள் வனைதலும் மணி உற்பத்தியும், துணிகளுக்கு வண்ணச்சாயம் ஏற்றுதலும் தலையாய தொழில்களாக நடைபெற்று வந்துள்ளன. ரோமானியர்கள் தங்கள் வணிக இருக்கைகளை இங்கு அமைத்துக் கொண்டபோது தங்கள் நாட்டுப் பொருட்களை விற்றதுடன் அப்பொருட்களைப் போல இங்கேயே செய்து விற்பதற்கேற்ற தொழிலகங்களையும் நிறுவியிருந்தனர்.[45] இக்கூற்று ஏற்புடையதா என்பது ஆராய்தற்குரியது. ஏனெனில் பண்டைக்காலத்தில் அயல்நாட்டு வணிகர்கள் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலும் சிறுபான்மை நாணயச் செலாவணி முறையிலும் வணிகம் செய்வதற்காக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அது மட்டுமன்று, தங்கள் நாட்டில் (வணிகப்) பொருட்களைச் செய்வதற்குக் கிடைக்கும் மூலப்பொருட்கள் தாங்கள் செல்லும் நாடுகளில் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. மேலும், மத்தியத்தரைக்கடல் வணிகர்கள் வணிகப்பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து விற்றுச்செல்வதில் ஆர்வம் காட்டினரேயன்றி அப்பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில்நுட்பத்தில் ஆர்வம் காட்டியதில்லை. மேலும் அக்காலக் கடினப் போக்குவரத்துச் சூழலில் தொழிலாளர்களை வெளிநாட்டிற்குக் கூட்டி வந்து பொருட்களை உற்பத்தி செய்து விற்பது அவ்வளவு இலாபகரமாக இருந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே, இவ்வணிகத் தொழிலகங்கள் அனைத்தும் உள்நாட்டுத் தொழில் வல்லுநர்களால் நிறுவப் பட்டவையாகத்தான் இருத்தல் வேண்டும்.

அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட வெவ்வேறு ஆய்வுகளில் சங்குகளும் கிளிஞ்சல்களும் கிடைத்துள்ளன. இவை வளையல் அணியாகச் செய்து முடிக்கப்பட்டவை, அறுக்கப் பட்டவை, வீணான உதிரிகள் என்று பல நிலைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.பி.2 அல்லது 3-ஆம் நூற்றாண்டில் அரிக்கமேட்டில் கிடைத்த சங்கு, கிளிஞ்சல், அணிகளைப் போன்று சோழமண்டலக் கரை நெடுகிலும், மன்னார் வளைகுடாவிலும் மிகுதியாகக் கிடைக்கின்றன. இன்றும் இத்தகைய சங்குகள், கிளிஞ்சல்கள் சேகரிக்கப்பட்டு வளையல்கள், மாலைகள், மணிகள் செய்வதற்காக வங்காளத்திற்கு அனுப்பப் படுகின்றன. அந்தமான் தீவுகளிலும், குஜராத்தின் கத்தியவார் கடற்கரைப் பகுதியிலும் இதே போன்ற சங்கு வகைகள் கிடைத்துள்ளன.

45.புதுவைச் செய்திகள் ஆக-செப்.1969:23

Tamil Heritage Foundation International (THFi)

பண்டைக்கால இந்தியாவில் சங்கு அணித் தொழிலுக்குப் புகழ்பெற்றிருந்த நான்கு இடங்களை ஹார்னெல் (Hornell) என்னும் வரலாற்றறிஞர் குறிப்பிட்டுள்ளார்[46]. அவையாவன,

1. குஜராத் மாநிலத்தில் உள்ள கத்தியவார் பகுதி.
2. தக்காணத்தின் தென்பகுதியில் இராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள மாஸ்கி (Maski) என்னும் பகுதி.
3. சங்ககாலப் பாண்டியர் நகரங்களான கொற்கை, காயல்பட்டினம் மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதி.
4. தக்காணத்தின் வடபகுதியில் உள்ள கௌண்டியபுரம், பிரகாசம், பவுனார், நெவாசா முதலான பகுதிகள் ஆகும்.

இவற்றோடு ஐந்தாவது பகுதியாக சோழமண்டலக் கரையில் உள்ள அரிக்கமேடு, காரைக்காடு ஆகியவற்றையும் சங்கு அணித் தொழிலகமாகச் சேர்த்து, பீட்டர் பிரான்சிஸ்[47] குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் மேற்கு வங்காளத்திலும் பங்களாதேஷிலும் கலைநயம் மிக்க சங்கு அணிகள் மிகுதியாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சிலர் தலைமுறை தலைமுறையாகத் தாம் செய்து வந்த தொழிலை மாற்றிக் கொண்டு வேறு தொழில்களையும் செய்து வந்துள்ளனர். உறையூர் இளம்பொன் வணிகனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், கச்சிப்பேட்டு இளந்தச்சனார், கணக்காயன் தத்தனார், கணியன் பூங்குன்றனார், செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான், மதுரைக் கொல்லன் புல்லன், மதுரைத் தமிழ்க் கூத்தனார் ஆகிய சங்ககாலப் புலவர்கள் அவர்கள் மேற்கொண்டிருந்த தொழில்களை அவர்களுடைய பெயர்களே எடுத்துக்காட்டுகின்றன. பழந்தமிழகத்தில் பல தொழிலைச் செய்யும் மக்கள் ஒருங்கு சேர்ந்து வாழ்ந்தனரெனினும் தொழில்முறையில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு அக்காலத் தமிழரிடையே காணப்படவில்லை.

நாட்டு வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர் அனைவருடைய உழைப்பும் இன்றியமையாததென்ற மேலான உணர்ச்சியே பண்டைத் தமிழரிடம் வளர்ந்திருந்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று பொது நிலையில் குலங்கள் பாகுபாடு செய்யப்பட்டிருந்த போதிலும் துடியன், பாணன், பறையன், கடம்பன்

46.Vimala Begley 1996: 395 47. Peter Francis 1987 : 10



ஆகிய குடிகளை விடச் சிறந்த குடிகள் வேறு இல்லை என்று அவர்களுடைய தொழிலின் சிறப்பைச் சங்க இலக்கியம் பாராட்டியுள்ளது.[48] ஆனால் வள்ளுவர் காலத்தில், செய்தொழில் வேற்றுமையால் மக்களுடைய சிறப்புக் கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்கலத் தொழில் நுட்பங்கள்

தமிழகத்துத் தொழிலாளர்கள் தம் தொழிலில் புதிய நுணுக்கங்கள் பலவற்றை எளிதில் ஏற்றுக் கொள்கின்ற தன்மை படைத்தவராக விளங்கியுள்ளனர். அக்காலத்துக் குயவர்கள் உருவாக்கிய மிக முக்கியமான மட்கல வகையை அகழ்வாய்வாளர்கள் கறுப்பு-சிவப்புப் பானை என்றழைக்கின்றனர். இத்தகைய பானைகளை வனைவதற்கான மூலப்பொருளான களிமண், செஞ்சியாற்றின் வடிகால் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டு அரிக்கமேட்டுப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் பானைகளில் செந்நிறம் கூட்ட, கோரிமேட்டுப் பகுதியிலிருந்து செம்மண் கொண்டு வந்து அதன் கரைசலைக் களிமண்ணுடன் கலந்து பானை வனைந்திருக்கலாம்.

இக்காலக் குயவர்கள் பானைகளுக்குச் செந்நிறம் கூட்ட செம்மண் கரைசலைப் பசுமட் கலன்களில் பூசும் தொழில்நுட்பத்தைக் கையாண்டு வருவது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. இந்த மட்பாண்டங்களைச் சூளையில் வைத்துச் சுடும்போது அவற்றைக் கவிழ்த்து வைத்துச் சுடுவதால் காற்றுப்புகாத உட்பகுதியும் வாய்ப்பகுதியும் கறுப்பு நிறமாகவும் காற்றுப்படுகின்ற வெளிப்பகுதி முழுவதும் சிவப்பு நிறமாகவும் மாறுகின்றன. அரிக்கமேட்டில் கி.மு.200-க்கும் கி.பி.100-க்கும் இடைப்பட்ட காலத்தனவாக இப்பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

சிவப்பு நிற மட்பாண்டங்கள் புதிய கற்காலத்திலேயே இருந்தனவென்றும் அவை பெரும்பாலும் கையினால் வனையப்பெற்று வந்துள்ளன என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[49] அக்காலத்தில் இவை நேர்த்தியாக இல்லாமலும் நன்கு சுடப்படாமலும் இருந்தன. உலோகக் காலத்திலும் வரலாற்றுக் காலத்திலும் அதற்குப் பின்னரும் சக்கரத்தின் உதவியால் சிவப்புநிற மட்கலன்கள் உருவாக்கப் பட்டுள்ளன. பொதுவாக மட்கலன்களை மணல், உமி, மைக்கா, களிமண் ஆகியவற்றைக் கலந்து செய்து வந்துள்ளனர்.

48.புறம்335:7-8. 49.ஏ.ஏகாம்பரநாதன் 1983:129

Tamil Heritage Foundation International (THFi)

அரிக்கமேட்டில் உருவாக்கபபட்ட பெரும்பாலான மட்கலன்கள் சக்கரத்தால் வனையப் பட்டவையாகும். ஆனால் குமிட்டி அடுப்பு, கிணற்றுக்கான உறைகள், பெரிய தொட்டிகள், அடர்த்தியான சாடிகள் போன்றவை கைகளால் செய்யப்பட்டவை. கைகளால் செய்யப்பட்ட மட்கலனில் மண்துகள்கள் செங்குத்தாகவும் சக்கரத்தால் வனையப் பட்டிருந்தால் அதன் மண்துகள்கள் பக்கவாட்டிலும் அமைந்திருக்கும் என்று அகழ்வாய்வாளர்கள் கணித்துள்ளனர்.[50] பழங்காலத்தில் செய்யப்பட்ட அடுப்பு, தாழி ஆகியவை போன்று வடிவிலும் செய்ம்முறையிலும் ஒப்புமை உடையவற்றைக் கிருமாம்பாக்கத்துக் குயவர்கள் இன்றும் செய்துவருகின்றனர்.

அரிக்கமேட்டில் கிடைத்த ரௌலெட்டட் வகைப் பானைகள் அனைத்தும் மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும் என்று வீலர், கசால் ஆகிய இருவரும் கூறுகின்றனர். ஆனால் விமலா பெக்லியோ, 'அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட கறுப்பு நிறமுள்ள வழவழப்பான ரௌலெட்டெட் மட்பாண்டங்கள் உள்நாட்டுக் குயவர்களால் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றிச் செய்யப்பட்டிருக்க வேண்டும்' என்று குறிப்பிடுகின்றார்.[51]

மென்மையான களிமண்ணால் மிகவும் நுட்பமாகச் செய்யப்பட வேண்டிய ரௌலெட்டெட் மட்பாண்டங்களை அயல்நாட்டு வணிகர்கள் அரிக்கமேட்டில் செய்வதற்கு வாய்ப்பில்லை.

யவன நாட்டுத் தொழில்வல்லுநர்கள் பலர் தமிழ்நாட்டில் பணியாற்றி வந்துள்ளனர். இவர்கள் மூலமாகவோ அல்லது வணிகர்கள் மூலமாகவோ இவ்வகை மட்பாண்டத் தொழில்நுட்பங்கள் அரிக்கமேட்டிற்குக் கொண்டுவரப்பட்டு இவை உள்ளூர்க் குயவர்களால் வனையப்பட்டிருக்க வேண்டும். தென்னிந்தியாவில் மட்டுமின்றிக் கங்கைச் சமவெளிப் பகுதியிலும் மேற்கு வங்காளத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதியிலும் இத்தகைய ரௌலெட்டெட் பானைஓடுகள் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டிலும் வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆற்றின் முகத்துவாரப் பகுதிகளிலும்தான் இவை மிகுதியாகக் கிடைக்கின்றன. இவ்வகையில் நோக்கும்போது தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் இவை உருவாக்கப்பட்டு இந்தியா முழுவதும் உள்நாட்டு

50.மே.நூல்:172 51. Vimala Begley 1986 : 54



வணிகத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

## மட்கலத் தொழில்நுட்பப் பரிமாற்றம்

அரிக்கமேடு, காரைக்காடு(கடலூர்), உறையூர்(திருச்சி) ஆகிய இடங்களில் செய்யப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளில் கிடைத்த மட்பாண்டங்கள் சிலவற்றுள் ரௌலெட்டெட் முறையில் உள்நாட்டில் வனையப்பட்ட ஒப்பனைகள் காணப்படுகின்றன. மட்கலன் வனையப்பட்டதும் அவற்றின் மேற்பரப்பில் மெல்லிய உலோகத் தகடுகளால் வட்டவடிவமாகவும் புள்ளிக்கோலங்கள் புனையப்பட்டதுமான அலங்காரங்கள் செய்யப்படும். இவற்றிற்குத்தான் ரௌலெட்டெட் ஒப்பனைகள் என்று பெயரிடப்பட்டன. இவற்றுள் சில ரோமானிய (ரௌலெட்டெட்)மட்பாண்டங்களின் வடிவமைப்பினை ஒத்திருக்கினறன. உள்நாட்டில் செய்யப்பட்ட இத்தகைய மட்பாண்ட ஓடுகள் வழவழப்பின்றியும் வித்தியாசமான களிமண்ணைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. சங்ககாலத்தில் ரோமானிய நாட்டிற்கும் தமிழகத்திற்கும் இடையில் நடைபெற்ற வணிகத்தின் அடிப்படையில் ரோமானியரால் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்ட ரௌலெட்டெட் மட்கலன்களைப் பார்த்த தமிழகக் குயவர்கள் அம்மாதிரியான மட்பாண்டங்களை வனைந்துள்ளனர். இவ்வகையில் வீலரல் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட சில ரௌலெட்டெட் பானை ஓடுகள் (எண் : 10, 18, 148) மேனாட்டாரின் ரௌலெட்டெட் வகை செல்வாக்கால் உள்நாட்டிலேயே வனையப் பட்டவையாகும்.

இந்தியா, இலங்கை(அநுராதபுரம், கந்தரோடை) ஆகிய நாடுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் ரௌலெட்டெட் பானை ஓடுகள் கிடைத்திருப்பினும் அரிக்கமேட்டிலும் வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளின் முகத்துவாரப் பகுதிகளிலும்தான் இவை மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவ்வகையில் நோக்கும்போது தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் இவை உருவாக்கப்பட்டு இந்தியா முழுவதும் உள்நாட்டு வணிகத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. பழங்கால மரபை அடியொற்றி இந்தியாவில் இன்றைக்கும் ரௌலெட்டெட் பானை வகைகள் செய்யப்பட்டு வருகின்றன. உத்திரப் பிரதேசத்திலும் ஒரிசாவிலும் இத்தகைய தொழில்நுட்பங்கள் இன்றும் பானை வனைதலில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

Tamil Heritage Foundation International (THFi)

## பயன்பாட்டுத் தொழில் நுட்பம்

பண்டைத் தமிழகத்துக் குயவர்கள் தம் தொழிலில் புதிய தொழில் நுணுக்கங்களை எளிதில் ஏற்றுக் கொள்கின்ற தன்மை படைத்தவர்களாக விளங்கியுள்ளனர். ரோமானிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதுச்சாடிகளுக்கு ஆம்ஃபோரா என்று பெயர். *யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்* என்று புறப்பாடல்[52] இத்தகைய சாடிகளில் வந்த மதுவைத்தான் புகழ்கின்றது. இவற்றிலிருந்து சற்றே மாறுபட்ட கூர்முனைச் சாடிகளைத்தான் தமிழகக் குயவர்கள் அரிக்கமேட்டில் வனைந்திருக்கின்றனர். இவை கூர்மையான அடிப்பகுதியும் அகன்ற வாய்ப் பகுதியும் உள்ளவை.

மேற்புறத்தில் கைப்பிடியின்றி வனையப்பட்ட இத்தகைய சாடிகள் உள்நாட்டுக் குயவர்களின் தொழில்நுட்பத் திறனுக்குச் சிறந்த சான்றாகும். மதுவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பூமியின் அடியில் புதைத்து வைப்பதற்கு ஏதுவாக அடிப்பகுதி கூர்மையாகவும் மேல்பகுதி அகலமாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளன.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அகழ்வாய்வில் ஆம்ஃபோரா சாடிகளுடன் இத்தகைய உள்நாட்டு மதுச்சாடிகள் வரிசை வரிசையாகப் பூமியில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. ஆம்ஃபோரா சாடியைக் காட்டிலும் மிகவும் தடிமனாக உள்ள இவை நீண்டகாலப் பயன்பாட்டிற்காக உருவாக்கப் பட்டவையாகும். அரிக்கமேட்டிலும் வீலரின் அகழ்வாய்வில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கூர்முனை மதுச்சாடிகள் எட்டு ஒரே இடத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இரும்புக் காலத்தைச் சேர்ந்த பெருங்கற் புதைவுக்காலப் பண்பாடு முழுவீச்சில் இருந்தபோது மட்பாண்டத் தொழில் நுட்பம் மிகவும் உன்னத நிலையில் விளங்கியது. மட்கலன்களைச் செய்யும்போது மணல், உமி, மைக்கா, களிமண் ஆகியவற்றைக் கலந்து செய்து வந்துள்ளனர்.

மென்மையான வழவழப்பான மட்கலன்களைச் சக்கரத்தால் வனைந்துள்ளனர். அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட குமிட்டி அடுப்பு, கிணற்றுக்கான உறைகள், பெரிய தொட்டிகள், அடர்த்தியான சாடிகள் ஆகியவற்றில் மண்துகள்கள் செங்குத்தாகக் காணப்படுவதால் இவை கைகளாலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும்.

52.புறம்:56



## தொழில் நுட்பக் கலைநயம்

மட்பாண்டங்களை அழகுபடுத்த அக்கால மக்கள் விரல் நகங்கள், குச்சி, எலும்பு, உலோகத் தகடு ஆகியவற்றைப் பயன்படுத்தி வந்துள்ளனர். பானைகளின் மேல் வரையப்பட்டுள்ள பூக்கள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள் ஆகியவை அக்கால மக்களின் அழகுணர்ச்சியையும் கலையுணர்ச்சியையும் புலப்படுத்துவனவாய்க் காணப்படுகின்றன. சக்கரத்தில் பானையை வனைகின்ற போதும் வடிவமைத்துவிட்ட பின்பும் (இருநிலைகளிலும்) இத்தகைய புனைவுகள் செய்யப்படுகின்றன. பானைகளின் மேற்புறத்தில் காணப்படும் கீறல் குறிகள் (Graffti Marks) வில், அம்பு, சூலம் போன்ற உருவங்களைக் கொண்டனவாய் விளங்குகின்றன. கீறல் குறிகளைப் பானையின் ஈரப்பதம் காயுமுன் குச்சி அல்லது உலோகத் தகட்டால் வரைந்துள்ளனர். இத்தகைய கீறல் குறிகளுக்கும் எழுத்துக்களின் வரிவடிவங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

### மட்கலப் புனைவுகள்

அரிக்கமேட்டு மட்கலன்கள் சிலவற்றில் அழகான ஓவியங்களும் வண்ண வேலைப்பாடுகளும் பூச்சும் புள்ளிகளும் காணப்படுகின்றன. செடி-கொடி வகைகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்களும் பானைகள் மீது பொறிக்கப் பட்டுள்ளன. அக்காலக் குயவர்கள் தம் விரல் நுனிகளையும் அழுத்தமான அல்லது கரடுமுரடான துணிகளையும் கொண்டு மட்கலன்களில் அலங்காரப் புனைவுகளைச் செய்துள்ளனர். விரல் நுனிகளைப் பானை விளிம்புகளில் அழுத்தியும் கயிறுகளை வனையப்பட்ட ஈரமான பானைகளில் பதியவைத்தும் அலங்காரப் புனைவுகளை அமைத்துள்ளனர்.

கேரள மாநிலம் திருச்சூருக்கு அருகில் உள்ள 'புதுக்காடு' என்னும் கிராமத்தில் மட்கலன்களில் புனைவுகள் செய்வதற்கு இக்காலக் குயவர்கள் 9செ.மீ. நீளமுள்ள மரச்சுத்தி ஒன்றைப் பயன்படுத்துகின்றனர்.[53] இச்சுத்தியின் ஒருபக்கம் நீளமான கோடுகள் பதியக்கூடிய வடிவில் கடையப்பட்டுள்ளது. மறுபக்கம் சீரான துடுப்பு வடிவத்திலும் காணப்படுகின்றது. இத்தகைய மரச்சுத்தியால் புனைவு செய்யப்பட்ட மட்கலன் கூடையின் அடிப்பாகம்போன்று காட்சியளிக்கின்றது. இத்தகைய தொழில் நுட்பத்தோடு செய்யப்பட்ட கிண்ண வடிவிலான

53. Vimala Begley 1996 : 220

Tamil Heritage Foundation International (THFi)

பானை ஒன்று அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டு இன்று புதுவை அருங்காட்சியகத்தில் பேணப்பட்டு வருகின்றது.

மட்கலன்கள் வனையப்பட்டு அவை ஈரமாக இருக்கும்போதே இத்தகைய அலங்காரப் புனைவுகள் செய்யப்படுகின்றன. மரச்சுத்தியின் கடையப்பட்ட பகுதியாலோ, துடுப்புப் பகுதியாலோ மட்கலன்களின் வெளிப்புறத்தில் அழுத்தி அல்லது ஒத்தியெடுத்து அலங்காரப் புனைவுகள் உண்டாக்கப் படுகின்றன. சிலசமயம் கூடையின் அடிப்புறத்தினாலும் இத்தகைய அலங்காரப் புனைவுகள் செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட கூடை அலங்காரப் புனைவுகளுடன் கூடிய மட்கலன்கள் அரிக்கமேட்டில் வனையப்பட்டவை அல்ல. இவை உள்நாட்டில் வனையப்பட்டு அரிக்கமேட்டுப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. காரைக் காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இத்தகைய கலன்கள் கடலூர் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வெளிப்புறம் சிறுசிறு கோடுகள் வடிவில் பானை வனையும் மரச்சுத்தியால் அலங்கரிக்கப்பட்ட கலன்கள் அரிக்கமேட்டில் மட்டுமின்றி ஆந்திராவில் நெல்லூர் அருகில் உள்ள கோதப்பட்டினம் என்னும் ஊரிலும் கிடைத்துள்ளன.[54] இவ்வூரில் கிடைத்துள்ள சாடியின் மேற்புறத்தில் கூடையின் கோடுகள் கொண்ட அலங்காரப் புனைவுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய புனைவுகளுடன் கூடிய கலன்கள் அழகன்குளத்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கேரள மாநிலம் திருச்சூர்ப் பகுதியில் கூடைக் கோட்டுப் புனைவு செய்யப்பட்ட சாடிகள் பூந்தொட்டிகள் ஆகியன இன்றும் வனையப்பட்டும் பயன்படுத்தப் பட்டும் வருகின்றன. அலங்காரப் புனைவுகளுடன் கூடிய இவ்வகைக் கலன்கள் அரிக்கமேட்டில் பழங்காலத்தைச் சேர்ந்தவையாக மட்டுமின்றி இடைக்காலத்தைச் சேர்ந்தவையாகவும் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டைச் சுற்றியுள்ள முருங்கப்பாக்கம், வில்லியனூர், கிருமாம்பாக்கம் ஆகிய பகுதிகளிலும் இவ்வகைக் கலன்கள் இக்காலத்தில் வனையப்பட்டு வருகின்றன.

எனவே தொழில்நுட்பம், வடிவம், செயல் ஒருமைப்பாடு, வனைதல் தொழிலில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், துணைக்கருவிகள் ஆகியவற்றில் எவ்வித மாற்றமும் இன்றிப் பழங்காலம், இடைக்காலம் இக்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் புதுவைப் பகுதிகளில் பானை வனைதல் தொழில் நடைபெற்று வந்துள்ளது.

54. Ibid : 203 55.Ibid : 203



அரிக்கமேட்டின் வடபகுதியைவிடத் தென்பகுதியில் காணப்படும் சில கட்டடச் சிதைவுகள் இடைக்காலத்தைச் சேர்ந்தவையாகக் கணிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பெரிய செங்கல் அடுப்புகள், சுடுவதற்கு வேயப்பட்ட களிமண் கூரை ஓடுகள் ஆகியவற்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. கட்டடப் பகுதிகளிலும் ஓடுகளிலும், கழிகளை இணைப்பதற்காகத் துளைகள் இடப்பட்டிருக்கின்றன. இவை தற்காலிகத் தொழிலகங்களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் நிலையில்லாத மணல் மேடுகளில்தான் உறைகிணறுகளும் கட்டடப்பகுதியின் அடிப்பாகமும் அமைக்கப் பட்டுள்ளன. பனைவாரை, மரக்கம்பம், மூங்கில் கழிகள் ஆகியவற்றால் குறைந்த செலவிலான குடியிருப்புக்களையே அரிக்கமேட்டு மக்கள் கட்டிக் கொண்டனர். சாயத்தொட்டி அமைந்துள்ள கட்டடப் பகுதிகளில் நீர் வெளியேறா வண்ணம் கலவைப்பூச்சு பூசிக் கட்டப்பட்டிருப்பது பண்டைத் தமிழரின் கட்டடத்தொழில் நுட்பத்தைக் காட்டும் சிறந்த சான்று.

மணித்தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட செங்கல் அடுப்பு ஒன்று அரிக்கமேட்டில் பீட்டர் பிரான்சிஸ் அகழ்வாய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இது உலோகங்களை உருக்கி வார்க்கப் பயன்படுத்தப்பட்ட சூளையாகவும் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். பெரிய அடுப்பு வடிவில் செங்கல் அடுக்கிக் கட்டப்பட்டுள்ள இதில் பூசப்பட்டுள்ள வெளிப்புறக் கலவை கரிபடிந்து கறுமையாகக் காணப்படுகின்றது. இதன் உள்ளே அடுக்கப்பட்டுள்ள செங்கற்கள் நெருக்கமின்றி இடைவெளிவிட்டுக் காணப்படுகின்றன. இத்தகைய சூளையடுப்புகள் பளபளப்பான கற்களை (Chalcedony Stones) வெப்பப்படுத்தி, உருக்கி மணிகள் செய்வதற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்[56] என்கிறார் பீட்டர் பிரான்சிஸ். வடபகுதி, தென்பகுதி ஆகிய இரண்டிலும் மணிகள் கிடைத்தாலும் தென் பகுதியில்தான் மணிகள் உருவாக்கும் தொழிற்கூடங்கள் இருந்திருக்க வேண்டும்.

### அணிமணிகள்

சங்ககாலப் பெண்கள் ஆடைகளினால் முழுவதும் மறைக்கப் பெறாத தங்கள் உடலை அணிகலன்கள் பூண்டு மறைத்து வந்துள்ளனர். யவனர் நன்கலம் ஏற்றிவந்த பொன்னும் உள்நாட்டிலேயே மூலப்பொருளாகக் கிடைத்த பொன்னும், முத்தும், பவழமும் பல்வகை மணி வகைகளும் பலவகையான அணிகளாகச் செய்யப்பட்டுள்ளன. சங்ககால மகளிர்

56. Ibid : 86

Tamil Heritage Foundation International (THFi)

அணிந்த அணிகலன்கள் சிலவற்றைப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.[57] இவை தவிரக் குதம்பை, கடிப்பிணை ஆகிய காதணிகள் பற்றிய குறிப்புக்களும் காணக்கிடக்கின்றன. இத்தகைய காதணிகள் சுடுமண்ணால் செய்யப் பட்டவையாக அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் செய்யப்பட்ட அணிகலன்கள் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கொடுமணம், பந்தர் ஆகிய இடங்கள் அக்காலச் சேர நாட்டில் அணிகலன்களுக்குப் புகழ்பெற்ற ஊர்கள். இதனைப் பதிற்றுப்பத்து

*"கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்*
*பந்தர்ப் பயந்த பல்புகழ் முத்தம்"*[58]

என்று பதிவு செய்துள்ளது. இக்கூற்றை மெய்யப்பிக்கும் வகையில் ரோமானியத் தொழில் நுட்பத்துடன் கூடிய தங்கச்சங்கிலி ஒன்று கோவைப் பகுதியில் நடைபெற்ற அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பண்டைக்கால மக்கள் மணிகள், காதணிகள், வளையல்கள், மோதிரங்கள் ஆகியவை சுடுமண், கல், சங்கு, கண்ணாடி, உலோகம், எலும்புகள் ஆகியவற்றால் அணிகலன்கள் செய்துள்ளனர். பண்டைத் தமிழகத்தில் தங்கம், மேற்கு மலையில் காவிரி தோன்றும் இடத்தை அடுத்தும் கொண்கான நாட்டிலும் கிடைத்துள்ளது. அணிகலன் செய்வதற்கு முத்து, மணி ஆகியவற்றுடன் தங்கத்தையும் சேர்த்துச் செய்து வந்துள்ளனர். அணிகலன்கள் செய்யும் தொழில் நுட்பத்தைப் புறநானூறு,

*பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய*
*மாமலை பயந்த காமரு மணியும்*
*இடைப்பட சேய ஆயினும் தொடை புணர்ந்து*
*அருவிலை நன்கலம் அமைக்குங் காலை*
*ஒருவழித் தோன்றி யாங்கு*[59]

என்று குறிப்பிடுகின்றது. தென்னிந்தியாவின் சோழமண்டலக் கரையில் அமைந்துள்ள அரிக்கமேடு கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் அயல்நாட்டவர் பலரைக் கவர்ந்திடும் வகையில் விளங்கியமைக்கு அங்கு உருவாக்கப்பட்டு வந்த மணிகளும் ஒரு காரணமாகும். கி.பி. 1500 - 1850 ஆம் ஆண்டுகளில் உலக

57.சிலப்.16:105-106 58.பதிற்.74:5-6 59.புறம்.218:1-5



நாடுகளிலேயே மணி உற்பத்தியில் சிறந்தவையாக வெனிசு, இத்தாலி, ஆகிய நாடுகள் திகழ்ந்துள்ளன. வெனிசு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மணிவகைகள் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன.[60] இங்கு உருவாக்கப்பட்டு வந்த பாறைப் படிகக்கற்களால் ஆன கழுத்து மணி (Collar Beads) வகைக்கும், பளபளப்பான கல்மணி வகைக்கும் இந்தியாவில் மட்டுமின்றி ஆசியக்கண்டம் முழவதிலும் நல்ல வரவேற்பு இருந்து வந்துள்ளது.

வண்ண மணி வகைகள் பல ரோமானிய நாட்டிற்கு மட்டுமல்லாது தாய்லாந்து நாட்டிற்கும் அரிக்கமேட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்த மணிகளைப் போன்றே தாய்லாந்து நாட்டில் ஓர் அரசனின் கல்லறையில் (கி.பி. 523) பத்தாயிரத்திற்கும் அதிகமான மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தட்டையான பலநிற அடுக்குள்ள கோமேதக மணி (Onyx Beads) வகையில் செய்யப்பட்ட கழுத்துச்சங்கிலி (Necklace) ஒன்று தாய்லாந்து நாட்டு பாங்காக் நகரின் தேசிய அருங்காட்சியகத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தச் சங்கிலியில் உள்ள மணிகள் யாவும் அரிக்கமேட்டில் உருவாக்கப் பட்டவையாகும்[61]. ஏனெனில் அக்காலத்தில் அரிக்கமேட்டைத் தவிர உலகில் வேறெங்கும் இத்தகைய தட்டையான அமைப்புள்ள கோமேதக மணிவகைகள் உருவாக்கப் பெறவில்லை.

தமிழகத்தில் கிடைத்துள்ள ரோமானியக் காசுகள் பெரும்பாலானவற்றில் அவற்றை வெளியிட்ட மன்னனின் தலைப்பகுதி வேண்டுமென்றே சிதைக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றது. ரோமானியர்கள் தங்கள் நாணயங்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் இந்தியாவில் செலாவணியில் இருக்கக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு சிதைத்துள்ளனர். மேலும் இவற்றை அணியாகவோ அல்லது இருப்பாகவோ வைத்துக்கொள்வதற்கு இவை உருவாக்கப் பட்டன என்றும் நாணயவியல் அறிஞர்கள் காரணம் கூறியுள்ளனர்.[62] அது மட்டுமின்றி, அக்காலத் தமிழகத்தை ஆட்சி செய்த தமிழ் வேந்தர்கள் அந்நாணயங்கள் குறிப்பிட்ட காலத்திற்குமேல் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருக்கக்கூடாது என்று தடைசெய்வதற்காகவும் இவ்வாறு சிதைத்திருக்கலாம்.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள மதுரா, உஜ்ஜையினி ஆகிய பகுதிகளில் யவனிக்கானம் (Yavani Kanam), கிளே புள்ளே (Clay

60.சு.தில்லைவனம் 1990:99. 61.மே.நூல்:100 62.கொடுமுடிசண்முகப்பிரகதம்1973:2

Tamil Heritage Foundation International (THFi)

Bullae) எனப்படும் அணிகலன்கள் கிடைத்துள்ளன.[63] துளையிடப்பட்ட ரோமானிய நாணயங்களைக் கழுத்துச் சங்கிலியில் கோர்த்து உருவாக்கப்பட்டுள்ள இவ்வணிகலன்களை வடஇந்தியாவில் வாழ்ந்த யவனப்பெண்கள் அணிந்து வந்துள்ளனர். ரோமானியக் காசுகள் தமிழகத்தில் வணிகப் பொருட்களை வாங்கும் மதிப்புடைய பணமாகப் (Currency) பயன்பட்டனவா அல்லது அணிகலன்கள் செய்யமட்டும் பயன்படுத்தப்பட்டனவா என்பது நாணயவியல் அறிஞர்களிடையே நிலவிவரும் ஐயப்பாடாகும்.

தமிழகத்திலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதியான பொருட்களை வைத்துப் பார்க்கும்போது தமிழகத்தில் ரோமானியக் காசுகள் மதிப்புடைய பணமாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளமை புலனாகும். தலைப்பகுதியில் வெட்டுக் காணப்படும் சில காசுகள் மட்டும் மதிப்புடைய பணமாகப் பயன்படுத்தப்படாமல் அணிகலன்களாகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். இதற்கு ஆதாரமாக ரோமானியக்காசு தயாரிக்கும் பித்தளை அச்சு ஒன்றைக் கரூரிலிருந்து தாம் சேகரித்ததாக இரா. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.[64] அகஸ்டஸ், டைபீரியஸ் காலத்தில் வெளியிடப்பட்ட ரோமானிய நாணயங்கள் தமிழகத்தில் செலாவணியாக மட்டுமின்றித் தங்கம் மற்றும் வெள்ளி அணிகலன்கள், விலையுயர்ந்த பல பொருட்கள் முதலானவற்றை எடைக்கு எடை மாற்றிக் கொள்ளும் பண்டமாற்றாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

முற்றுப்பெறாத சங்கு வளையல்கள் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. பெரிய சங்குகளை அறுத்து வளையல்கள் செய்துள்ளனர். சிறிய சங்குகள், கிளிஞ்சல்கள் ஆகியவற்றை அறுத்துக் காதணிகள் செய்துள்ளனர். பாதியாக அறுக்கப்பட்ட சங்குவளைகள் கைப்பிடிகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அரிக்க மேட்டிற்குத் தெற்கே 30 கி.மீ. தொலைவில் உள்ள உப்பங்கழிப் பகுதியில் (கடலூருக்கு அருகே) காரைக்காடு என்னும் ஊர் இருக்கிறது. 1986 மற்றும் 1989-ஆம் ஆண்டுகளில் இவ்வூரில் மிகக் குறைந்த அளவிலான அகழ்வாய்வுகள் நிகழ்த்தப்பட்டன.[65] அரிக்கமேட்டில் கிடைத்ததைப் போன்று வெவ்வேறு வகையான கண்ணாடி மணிகள், பளபளப்பான கற்களில் செய்யப்பட்ட மணிகள், அறுக்கப்பட்ட சங்குகள், கிளிஞ்சல்கள் ஆகியன இங்குக் கிடைத்துள்ளன. எனவே, அரிக்கமேட்டைப் போலவே இங்கும் சங்குத் தொழிலகங்களும், மணித் தொழிலகங்களும் இருந்திருக்க வேண்டும்.

63. Marie Francoise Boussac 1995 : 85 64.நடனகாசிநாதன் 1995:27 65.Vimala Begley 1996 : 129



## அணிநயத் தொழில்நுட்பம்

அணிகலன்கள் அழகுப் பொருட்களாக மட்டுமின்றி பண்பாட்டுச் சின்னங்களாகவும் மங்கலச் சின்னங்களாகவும் பண்டைத் தமிழகதில் பயன்படுத்தப் பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தோடு திராவிட நாகரிகத்திற்கும் தொடர்பு உண்டு என்பதற்கு இரண்டு இடங்களிலும் கிடைத்த அணிகலன்கள் சான்று பகர்கின்றன. அரிக்கமேடு, சுற்றுக்கேணி ஆதித்த நல்லூரில் கிடைத்த அணிகலன்கள், மொகஞ்சதோரா, அரப்பா அணிகலன்களோடு ஒத்துள்ளன.[66] *அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்கு வளைகளை* (மதுரை :316) மகளிர் அணிர்திருந்தனர். மகளிரின் காதுகளில் அணிந்திருந்த குழைகள் சிறுகுழை[67] என்றும் பூங்குழை[68] என்றும் வர்ணிக்கப்படுகின்றன.

இதே போன்று அரிக்கமேட்டில் கிடைத்த அணிகலன்களும் மணிகளும் பழமையான பண்பாட்டின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன. சங்கு, கண்ணடி, எலும்பு, தங்கம், இரத்தினம், போலி புஷ்பராகக் கற்கள், பளபளப்பான பாறை படிகக் கற்கள், சுடுமண் முதலான பொருட்களில் தயாரான மணிவகைகளும் அணிகலன்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இவைதவிர பளிங்குக்கல், இரவாய்க் கெம்புக்கல்,சூதுபவழம், கோமேதகப் படிகக்கல், செவ்வந்திக்கல் நெருப்புக்கல், குருவிந்தக்கல், பால்நிறப் படிகக்கல் ஆகியவற்றிலும் மணிகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றோடு முற்றுப் பெறாத கலைநயமும் தொழில் நுட்பமும் கொண்ட கற்களும் மணிகளும் கிடைத்திருப்பதால் முற்காலத்தில் மணி உருவாக்கும் தொழிற்சாலைகள் அரிக்கமேட்டில் இயங்கியிருக்க வேண்டும்.

இக்கூற்றை உறுதிசெய்யும் வண்ணம் மணிகளில் துளையிடுவதற்குரிய கருவியும் சாணைக் கல்லும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இரத்தின மணிவகைகளைப் பொறுத்தமட்டில் கோயம்புத்தூர் (கொடுமணல்) பகுதிதான் பழங்காலத்தில் புகழ் பெற்றிருந்தது. ஆனால் அரிக்கமேட்டிலோ இரத்தினங்களைப் போல் தோற்றமளிக்கும் போலி இரத்தின மணிகளும் போலி புஷ்பராக மணிகளும் பளபளப்பான கற்களால் செய்யப்பட்டுள்ளன.

கி.பி. முதல் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிளினி இத்தகைய மணிதயாரிக்கும் தொழில் பற்றிக்

66.சா.கிருட்டினமூர்த்தி 2005(2): 260 67.பெரும்பாண்:161 68.பொருந:30

Tamil Heritage Foundation International (THFi)

குறிப்பிடும்போது, 'இந்திய மக்கள் தம்முடைய மணிதயாரிப்புத் தொழிலின்போது படிகக் கற்களுக்கு வண்ணம் ஏற்றுவதிலும் பளபளப்பான கற்களில் போலி இரத்தினங்களை உருவாக்குவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்'[69] என்று கூறியுள்ளமை ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. அணிகள் செய்ய அரம் பயன்படுத்தப்பட்ட செய்தியைக், *கடற் கோடறுத்த அரம்போழ் அவ்வளை*[70] என்னும் தொடரால் அறியலாம். முத்துக்களுக்கும் மணிகளுக்கும் துளையிடல், சாணை பிடித்தல், மாசு நீங்க கழுவுதல் ஆகிய தொழில்களும் சங்ககாலத்தில் நடைபெற்று வந்துள்ளன.

பழந்தமிழகத்தில் வாழ்ந்த பொற்கொல்லர்கள் பொற்கட்டியை வெங்காயச் சருகு போன்று மெல்லிய தகடுகளாகத் தட்டுவதிலும் அணிகலன்களைச் செதுக்கி அறுப்பு வேலைகள் செய்வதிலும் தகடுகளை ஒட்டிப் பொடி வைத்து ஊதுவதிலும் சங்கிலிகளாகச் சமைப்பதிலும் கொடிகளாகப் பின்னி அப்பால் அதை இறுக்குவதிலும் மெருகிடுவதிலும் சிறு சிறு வளையங்களாகச் செய்து ஒன்றாக இணைத்து ஊதி மாலைகளாகவும் அணிவடங்களாகச் செய்வதிலும் திறமை வாய்ந்தவர்கள்.

அரிக்கமேட்டு அகழ்வாய்வைப் போன்றே குடிகாடு, கொடுமணல், பையம்பள்ளி ஆகிய ஊர்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளிலும் பல்வகை மணிகள் கிடைத்துள்ளன. பையம்பள்ளி அகழ்வாய்வில் கல்லினாலான வார்ப்படம் (Mould) ஒன்றும் கிடைத்துள்ளது. தமிழர்களின் அறுபத்து நான்கு கலைகளில் மணிகளின் தரத்தை அறியும் மணிச்சோதனை என்பதும் ஒன்று.

பழந்தமிழர் இதை நன்கறிந்து மணிகளைத் தரம் பிரித்துச் சோதனை செய்து அவற்றிற்குப் பட்டை தீட்டிப் பளபளப்புச் செய்துள்ளனர். அணிகலன்களுக்கும் தமிழருடைய நம்பிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதன் அடிப்படையிலேயே அக்கால மக்கள் அணிகலன்களை அணிந்து வந்துள்ளனர்.

இன்றும் மக்களிடையே இதுபோன்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. பொன்னால் அணிகலன் செய்பவர் உருக்குத்தட்டார் என்றும் பொன்னையும் மணியையும் சேர்த்து இழைத்து அணிசெய்பவர் பணித்தட்டார் என்றும் அழைக்கப்பட்டனர்.

69. E.H. Warmington, The Commerce between Roman Empire and India – P : 107

70.ஐங்:194:1



## மணி உருவாக்கம்- அன்றும் இன்றும்

நீண்ட கண்ணாடிக் குழாயில் துளையிட்டு மணிகள் செய்த முதல் நாடாக உலகிலேயே இந்தியாதான் சிறந்து விளங்குகின்றது. ஆந்திர மாநிலம் 'பாப்பநாயுடு பேட்டை'என்னும் சிற்றூர் சென்னைக்கு வடமேற்கே 140 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் அன்றைய அரிக்கமேட்டில் உருவாக்கப்பட்ட கண்ணாடி மணிகளைப் போன்று இன்றைக்கும் கண்ணாடி மணிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு பேர் இவ்வூரில் மணிகள் உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

1929-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் முயற்சியால் நடைபெற்ற 'குடிசைத் தொழில் கணக்கெடுப்பு' பற்றிய ஆய்வு அறிக்கையில் டி. நாராயணராவ் என்பவர் பாப்பநாயுடு பேட்டையில் நடைபெற்று வரும் கண்ணாடி மணிகள் தயாரிக்கும் தொழிலையும் குறிப்பிட்டுள்ளார்.[71] இத்தொழிலில் இன்று ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாகவே இதனைச் செய்து வருகின்றனர். தாய் தன் மகளுக்கும் தந்தை தன் மகனுக்கும் மணிகள் தயாரிப்புப் பற்றிய தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்து வருகின்றனர். எனவே முற்காலத்தில் அரிக்கமேட்டிலிருந்து இடம் பெயர்ந்த கண்ணாடி மணித் தயாரிக்கும் தொழில்நுட்ப வினைஞர்களில் சிலர் பாப்பநாயுடு பேட்டைக்கும் இடம் பெயர்ந்திருக்கலாம் என ஊகிக்க இடம் உண்டு. சங்ககாலத்தில் புகார் நகரில் மணிகள், வளையல்கள் செய்யும் வினைஞர்கள் ஒரு வீதி முழுவதும் வசித்து வந்தனர் என்னும் செய்தியைத்

*திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையோடு*
*அணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்*[72]

என இளங்கோவடிகள் கூறும் கருத்து ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. சங்குகளை அறுத்து வளையல் செய்யும் தொழில்பற்றிக் குறிப்பிடும் போது, *வாளரம் பொருத கோணேர் எல்வளை*[73] என்று சங்க இலக்கியப் பாடல் குறிப்பிடுவதும் எண்ணத்தக்கது.

இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் வீலரின் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட முற்றுப்பெறாத கலைநயம் கொண்ட வளையல்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டு

71 E. Marianne Stern 1987 : 347 72.சிலப்.5:46-47 73.நற்றி.77:9

Tamil Heritage Foundation International (THFi)

மணிகளுள் சிலவற்றின் கலைநயம், தொழில்நுட்பம் ஆகியவற்றினை ஆராய்ந்த வீலர் 'அவை அரிக்கமேட்டில் தங்கியிருந்த மத்தியத்தரைக்கடல் நாட்டுக் கைவினைஞரால் (யவனக் கைவினைஞர்) உருவாக்கப் பட்டிருக்கலாம்'[74] என்று கருதுகின்றார்.

மணிகள் தயாரிப்பின்போது வீணான அல்லது எஞ்சிய பொருட்கள் மிகுதியான அளவிற்கு அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்திருப்பதால் முற்காலத்தில் மிகப் பெரிய அளவில் இத்தொழில் இங்கு நடைபெற்று வந்துள்ளது என்பது தெளிவாகின்றது. நீளமான உருளை வடிவத்தில் உருவாக்கப்படும் கண்ணாடிக்குழாய் மணிகளாக அமையும் வண்ணம் சிறுசிறு துண்டுகளாக அறுத்துக்கொள்ளப்படும். பின்னர் இத்தகைய கண்ணாடி மணிகளைக் குடைந்து மிக நுண்ணிய துளையிடுவதிலும் அரிக்கமேட்டு வினைஞர்கள் தம் கைத்திறமையைக் காட்டியுள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரை கி.மு. 1000-ஆவது ஆண்டில் தான் கண்ணாடி மணிகள், கண்ணாடி வளையல்கள் முதலிய பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்றைய காலத்தில் கண்ணாடி மணித் தயாரிப்பதற்குப் பல வேதியியல் பொருட்களைப் பயன்படுத்தி அதைச் செய்வதற்கான வழிமுறைகளை மிகவும் எளிமைப் படுத்திவிட்டனர். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அரிக்கமேட்டில் நடைபெற்று வந்த கண்ணாடி மணி உருவாக்கும் தொழில் நமக்கு வியப்பூட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

கண்ணாடி தயாரிப்பில் முதல் கட்டமாகச் சுத்தமானதும் நுண்மையானதுமான மணல், மரக்கூழ், எலும்புச்சாம்பல் ஆகியவை கலந்த கலவையை ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் சூடேற்றுவர். சில நாட்கள் வரை இவ்வெப்பநிலை ஆறாமலும் மாறாமலும் இருக்கும்படிப் பார்த்துக் கொள்வர். இந்த வெப்பநிலையிலேயே வெவ்வேறு விதமான வேதியியல் பொருட்களைக் கலவையில் கலந்து கண்ணாடி செய்து வந்துள்ளனர். கண்ணாடிகளில் வெவ்வேறு விதமான வண்ணங்களை ஏற்றுவதற்காக இரும்பு, ஈயம், மாங்கனீசு ஆகியவற்றையும் இக்கலவையினூடே பயன்படுத்தியுள்ளனர். நீலம், பச்சை, கறுப்பு, மஞ்சள், சிவப்பு முதலாம் வண்ணங்களில் அரிக்கமேட்டு மணிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

வைரக்கற்களைக் குடைந்து மணிகள் செய்வதிலும் அரிக்கமேடு தலைசிறந்து விளங்கியுள்ளது. அரிக்கமேட்டில் உருவாக்கப்பட்ட புடைப்புவண்ணச் செதுக்கு மணிகள் (Cameos) வெவ்வேறு

74. Wheeler R.E.M. 1946 : 96



வடிவங்களில் குடையப்பட்டு, செதுக்கப்பட்டு, வேலைப்பாடும் கலைநயமும் கொண்டவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. 'இத்தகைய மணிகளைக் கலையார்வத்துடன் செய்யத் தூண்டுவதில் இந்திய மன்னர்கள் மட்டுமன்றிப் பல வெளிநாட்டு மன்னர்களும் ஊக்கமளித்து வந்துள்ளனர்'[75] என்று பிளினி குறிப்பிட்டுள்ளார். சில ரோமானியப் பேரரசர்கள் இத்தகைய புடைப்பு வண்ணச் செதுக்கு மணிகளை நிறைய அளவில் சேமித்து வைத்திருந்தனர் என்னும் செய்தியே இம்மணிகளின் சிறப்பிற்கும் மதிப்பிற்கும் உரிய சான்றாகும். கடலூருக்கு அருகில் உள்ள காரைக்காட்டிலும் இத்தகைய மணிகளும் அவற்றின் எச்சங்களும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. 'அரிக்க மேட்டில் கண்டறியப்பட்ட செங்கல் உருக்கு உலைகள், சூளைகள், உலோக உருக்குகள், ஆணிகள், இரும்புத் தகடுகள், செப்புக் கம்பிகள் ஆகியன அங்கிருந்த உலோகத் தொழிலகங்களைப் பற்றியும் பண்டைத் தொழில்நுட்பத் திறன்களைப் பற்றியும் புலப்படுத்தவல்லன' என்று கசால் குறிப்பிட்டுள்ளார்.[76] முழுமையான செய்ம்முறைப் படிநிலைகளைக் கொண்ட இம்மணிகள் நேர்த்தி மிகு திறனையும் சீரான பருமனையும் கொண்டு அச்சுக்கள் உதவியுடன் உருவாக்கப் பட்டவை போல் காட்சியளிக்கின்றன.

ஆந்திர மாநிலம் பாப்பநாயுடு பேட்டையில் 1980-ஆம் ஆண்டு முதல் கண்ணாடி மணி உருவாக்கும் தொழிற்கூடங்கள் நான்கு செயல்பட்டு வருகின்றன. இவ்வூரில் வசித்து வரும் இருபத்து நான்கு குடும்பங்கள் சொந்தமாகவே கண்ணாடி மணிகள் தயாரிக்கப் பயன்படுத்தும் உலைக்கலன்களை வைத்துள்ளன. இதேபோன்று அரிக்கமேட்டிலும் அக்காலத்தில் கண்ணாடி மணிகள் செய்யும் தொழிலில் பலர் ஈடுபட்டதோடு அம்மணிகளை விற்பதிலும் ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். பாப்பநாயுடு பேட்டையில் கண்ணாடிக் குழாய் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் நீளமான உலோகக் குழாயை 'லடா' (Lada) என்று அழைக்கின்றனர். கண்ணாடி மணித் தயாரிப்பின் போது இச்சிற்றூரில் இக்காலத்தில் பயன்படுத்தப்படும் தொழில் நுணுக்கங்களும் கலைநயமும் அக்காலத்தில் அரிக்கமேட்டிலும் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இரண்டு இடங்களிலும் கிடைக்கும் கண்ணாடிமணித் தயாரிப்பின்போது எஞ்சிய அல்லது வீணான கண்ணாடி முடிச்சுக்கள் அனைத்தும் ஒழுங்கமைப்பிலும் வடிவமைப்பிலும் ஒத்துக் காணப்படுகின்றன. இக்கருத்து

75. Jr Peter Francis 1987 : 9 76. சோ.முருகேசன் 1997:77

Tamil Heritage Foundation International (THFi)

உறுதியாக்கப்பட வேண்டுமெனில் இன்னும் பெரிய அளவில் அரிக்கமேட்டில் அகழ்வாய்வு நடத்தப்பட வேண்டும்.

### தொழில்நுட்பத் தடைகள்

பழந்தமிழகத்தில் தொழிலாளர்களுக்கும் தொழில் நுட்பங்களுக்கும் ஊர் நிர்வாகத்தினர் பல தடைகளை விதித்திருந்தனர். *முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை* என்னும் தொல்காப்பிய நூற்பா மகளிர் கடல் கடந்து வெளிநாடு செல்லும் வழக்கம் பழந்தமிழகத்தில் இல்லை என்பதைப் புலப்படுத்துகின்றது. வணிகம், தொழில் புரிய வெளிநாடு செல்லும் இளைஞர்கள் வெளிநாட்டிலேயே தங்கி விடாதிருக்கும் பொருட்டு அவர்களைத் தாய்நாட்டிற்கு ஈர்க்கும் உந்துதல் சக்தியாகவும் மகளிர் விளங்கியிருந்தனர் என்பதை இந்நூற்பா காட்டுகின்றது. இடைக் காலத்தில், உள்நாட்டில் தொழிலாளர்களும் தொழில் நுட்பங்களும் குறையாதிருக்கும் பொருட்டுப் பண்டைத் தமிழர்கள் சில தடைகளை விதித்திருந்தனர். முதலாம் குலோத்துங்க சோழனின் 43ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட கல்வெட்டு 'பட்டர், உபத்தியாயர், தச்சர், கொல்லர் முதலானோர் தத்தமது தொழிலைத் தங்கள் சொந்த ஊரிலேயே செய்தல் வேண்டும் என்றும் வேற்றூர் சென்று தொழில் செய்தால் சபைக்குக் குற்றம் இழைத்தோராகக் கருதப்படுவர் என்றும் அறிவிக்கின்றது'.[77] உள்ளூரில் தொழிலாளர் பற்றாக்குறையைத் தடுப்பதற்காகவும் தொழில் நுட்பங்கள் வேற்றூருக்குப் பரவாமல் தடுப்பதற்காகவும் இத்தகைய தடைகள் அக்காலத்தில் பிறப்பிக்கப்பட்டு இருந்தன. அழகான கண்ணைக் கவரும் சிற்பங்களைச் செய்யும் சிற்பிகளைத் தன்னாட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு வியத்தகு சிற்பங்களைப் படைக்க வைத்த பின்னர் சிற்பிகளின் கட்டை விரலை வெட்டிவிடும் அவலமும் வரலாற்றில் நிகழ்ந்துள்ளது.

### கூட்டுத் தொழில்நுட்பம்

கூடி வாழ்ந்தால் மட்டுமல்ல, கூடித் தொழில் செய்தாலும் கோடி நன்மை கிடைக்கும் என்னும் உண்மை அக்காலத் தொழிலாளர்களால் புலப்படுத்தப்பட்டுள்ளது. பல நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வரவழைக்கப்பட்ட தொழில்நுட்ப வினைஞர்கள் தமிழக வினைஞர்களுடன் ஒன்றுகூடிக் காவிரிப்பூம் பட்டினத்தில் கவின்மிகு மண்டபம் அமைத்த செய்தியை மணிமேகலை வாயிலாக அறியலாம்.

77.சு.தில்லைவனம் 2004:168



*மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்*
*அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்*
*தண்டமிழ் வினைஞர் தம் மொடுங் கூடி*[78]

இதனால் தொழில் நுட்பப் பரிமாற்றங்கள் அக்காலத்திலேயே நிகழ்ந்தமை புலாகின்றது. யவன நாட்டுப் பொறியியல் அறிஞர்களைக் கொண்டு பண்டைத் தமிழர் தங்கள் அரண்களில் பல்வேறு பொறிகளை அமைத்திருந்ததைச் சிலப்பதிகாரம் அறிவிக்கின்றது. யவனரால் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்ட கலைநயமுள்ள பாவை விளக்குகள் பழந்தமிழரை மிகவும் கவர்ந்தன. அதனாலேயே பிற்காலக் கோயில்களில் இத்தகைய பாவை விளக்குகள் தமிழகக் கோயில்களில் சிலைகளாக வடிவமைக்கப்பட்டன. தொழில் நுட்பத்தை மட்டும் ஏற்றுக் கொண்ட தமிழகச் சிற்பிகள் பாவை விளக்குச் சிற்பங்களை உருவாக்கும்போது தமிழக மகளிரையே பாவைகளின் மாதிரிகளாகப் பயன்படுத்தினர். தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற தொழில் நுட்பங்களையே பண்டைத் தமிழர் உள்வாங்கிக் கொண்டனர் என்பது இதன் மூலம் தெரியவருகின்றது.

நுட்பம் பொருந்திய எத்துறையும் வாழ்கைக்குப் பயன்படுமானால் அது தொழில்நுட்பம் என்று கூறலாம். பண்டைத்தமிழர் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைத் தமக்கிருந்த வசதி, வாய்ப்புக்களைக் கொண்டு செய்து வந்துள்ளனர். பயன்பாட்டுத் தேவைக்கேற்பவும் கால மாற்றத்திற்கேற்பவும் அவ்வப்போது சில புதிய தொழில்நுட்ப முறைகளையும் கையாண்டு பொருட்களைச் செய்துள்ளனர். மட்பாண்டத் தொழில், மணி உருவாக்கும் தொழில், சாயத்தொழில், கப்பல் கட்டுந் தொழில் என்று பல தொழில்களிலும் பயன்படுத்தப்பட்ட முறை இன்றும் பயன்படுத்தப்பட்டு வருவதைப் பார்க்கும்போது பழந்தமிழரின் தொழில்நுட்பத் திறன்கள் பாராட்டுரியனவாகும்.

### உலகச் சந்தை நகரம்

இக்காலத்தில் சிங்கப்பூர் உலகச் சந்தையாகச் சிறப்புப் பெற்றிருப்பதைப் போன்று அக்காலத்தில் அரிக்கமேடு ஒரு பன்னாட்டு வணிகச் சந்தையாக வளர்ச்சி பெற்றிருந்தது. ஒரே சமயத்தில் உள்நாட்டு வணிகத்திற்கும் அயல்நாட்டு வணிகத்திற்கும் சிறப்புப் பெற்ற சந்தை நகரமாகச் சங்ககால அரிக்கமேடு திகழ்ந்திருந்தது. பல்வேறு நாட்டைச்

78.மணி19:107-109

Tamil Heritage Foundation International (THFi)

சேர்ந்த வணிகர்களும் இந்நகரில் வணிகம் புரிந்து வந்தனர். சில அயல்நாட்டு வணிகர்கள் இங்கு நிலையாகத் தங்கி வணிக வளாகங்களையும் குடியிருப்புக்களையும் அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

பண்டைத் தமிழரின் இருபெரும் உற்பத்தித் தொழில்கள் உழவும் வணிகமும் ஆகும். மக்களுக்கு உழவுத் தொழிலின் பெருமையையும் இன்றியமையாமையையும் வலியுறுத்திக் கூறுமளவிற்கு அத்தொழில் சார்ந்த வணிகம் வளர்ந்திருந்தது. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் அங்காடிகளுக்குக் கொண்டுவரப்பட்டு வணிகம் செய்யப்பட்டு வந்துள்ளன. மக்களுடைய இன்றியமையாத் தேவைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் தமிழ்நாட்டுக் கைவினைஞர்களுடன் அயல்நாட்டுத் தொழிலாளரும் ஒருங்கிணைந்து பணியாற்றி வந்துள்ளனர். பழந்தமிழகத்தில் நடைபெற்று வந்த வணிகங்களுள் சிறப்பானவை உடைவணிகம், ஓலைவணிகம், கூலவணிகம், பொன்வணிகம் ஆகியவையாகும். உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்று வந்துள்ளது. அயல்நாட்டு வணிகத்தில் தங்க நாணயங்கள் புழங்கி வந்துள்ளன.

சங்ககால வணிகத்தில் பல வகையான அளவைகள் வழங்கி வந்துள்ளன. எடுத்தல் அளவையுள் சில கழங்கு, கழற்சிக்காய் என்று அழைக்கப்பட்டன. தமிழில் 'எண்' என்ற சொல் எண்ணுகின்ற எண்ணையும் கணிதத்தையும் குறிப்பிட்டது. வெள்ளம், ஆம்பல், தாமரை, பள்ளம் என்பன எண்ணுப் பெயர்களுள் சிலவாகும்.[79] நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை ஆகியவற்றிற்கும் சங்க இலக்கியத்தில் சொற்கள் உள்ளன. அரிக்கமேட்டில் கண்டறியப்பட்டுள்ள சில மட்கலன்கள் கொள்ளளவைக் கணக்கிடுவதற்கு ஏற்ப வனையப்பட்டுள்ளன. சரக்குப் பொதிகளின் மேல் அவற்றின் அளவையோ எடையையோ பொறித்து விற்பனை செய்தனர். தாம் விற்கும் பண்டங்களைப் பற்றி விளக்கம் எழுதிய கொடிகளை வணிகர்கள் தம் கடைகளின் மேல் பறக்க விட்டிருப்பார்கள். பண்டங்கள் வணிகச் சாத்துக்கள் மூலம் வெளியூர்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யப்பட்டன.

காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்த முற்காலச் சோழர்காலச் செப்புக் காசுகள் போன்று அரிக்கமேட்டிலும் கிடைத்திருப்பதால் இரண்டு

79.தொல்.எழுத்.471:1-2.



துறைமுகங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும். மேலும் இத்தகைய செப்புக் காசுகள் தாய்லாந்து நாட்டிலுள்ள 'கிளாங்தோம்' (Khlong Tom) 'கிராபி'(Krabi) ஆகிய பகுதிகளில் கிடைத்திருப்பதால் கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டுகளிலேயே சோழமண்டலத் துறை முகங்களுக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் இடையே வணிகம் நடைபெற்று வந்தமை புலனாகின்றது.

சங்க காலத்தில் மலபார் கடற்கரைப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த கரூர் நகரம் சேரருடைய தலைநகராக இருந்திருக்க வேண்டும் என்பர்.[80] உள்நாட்டில் மிகப் பெரிய வணிகச்சந்தை நகரமாக விளங்கிய கரூரில் மிகுதியான ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன.

முசிறியை வந்தடைந்த மேலை நாட்டு வணிகப் பொருட்கள் பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கரூரை அடைந்துள்ளன. இலங்கையில் தொல்லியல் ஆய்வுக்கு உட்பட்ட பகுதியான மாந்தையும் தமிழ் நாட்டில் உள்ள அழகன்குளமும் எதிரெதிரே அமைந்துள்ள துறைமுகப் பகுதிகள். இவை இரண்டும் இயற்கையாகவே கப்பல்கள் தங்கிச் செல்லும் தன்மை வாய்ந்தவை. இவ்விரு இடங்களிலும் ரோமானியக் காசுகள் கிடைத்திருப்பதால் இவையும் அரிக்கமேட்டைப் போன்று வணிகச்சந்தை நகரங்களாகத் திகழ்ந்திருக்க வேண்டும்.

**பொருளாதார நிலை**

அகழ்வாய்வில் ஒரே அடுக்கில் பொருளாதார வசதி படைத்த மக்களது இல்லங்களும் வசதியற்ற எளிய மக்களின் சிறிய வீடுகளும் காணப்படுமாயின் அதனை அப்பகுதியின் சமகாலப் பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலை எனக் கருத முடியும். அரிக்கமேட்டைப் பொறுத்தவரை வணிகக் குடியிருப்புக்களும் பண்டசாலையும் மிகுதியாகக் காணப்படுவதால் பொருளாதார வசதி படைத்த மக்களே இங்கு வாழ்ந்து வந்திருக்க முடியும்.

சங்ககால வணிகத்தின் அடிப்படை பண்டமாற்று முறையாக இருந்ததால் நெல்லும் உப்பும் பண்டமாற்றுப் பொருள்களாகப் பயன்பட்டன. இன்றும்கூட மதிப்பு மிகுதியாகவுடைய பொன் உலக நாடுகளிடையே பண்டமாற்றத்திற்கு உரிய அடிப்படைப் பொருளாக இருந்து வருவது ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

80. Vimala Begley 1992 : 7

Tamil Heritage Foundation International (THFi)

பழந்தமிழர்கள் நெல், உப்பு ஆகியவற்றிற்குப் பண்டமாற்றாகப் பால், தயிர், கள், மீன், காய்கறி ஆகியவற்றை மாற்றிக் கொண்டனர். இதனால் வணிகத்தை மாற்றுதல் என்றே குறிப்பிட்டுள்ளனர். *உப்பை மாறி வெண்நெல் தரீஇய* [81] என்று சங்க இலக்கியம் கூறுவது இங்கு எடுத்துக்காட்ட தக்கது. சிலம்பு விற்கச் சென்ற கோவலன் *மதுரை சென்று மாறி வருவன்* என்று[82] கூறியதும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

பண்டைத் தமிழகத்தின் பொருளாதாரம், அரசியல், வணிகம் முதலிய சமூகக் கூறுகள் பற்றி நேரடியாக அறிந்து கொள்ள உதவுவன காசுகளாகும். வரலாற்றை மறுஉருவாக்கம் செய்வதற்கும் இவை பயன்படுகின்றன. தமிழகத்தில் சில குறியீடுகளை மட்டும் கொண்ட சதுர மற்றும் நீள் சதுர வடிவிலான செப்புக் காசுகள் கணிசமான அளவில் கிடைத்துள்ளன. பண்டைத் தமிழ் எழுத்துக்களில் சங்ககால மன்னர்களது பெயரும் உருவமும் பொறிக்கப்பட்ட காசுகள் அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[83]

தமிழகத்தில் பல இடங்களில் சிதைக்கப்பட்ட / துளையிடப்பட்ட (Punch Mark) நாணயங்களை உள்நாட்டு வணிகத்திற்காகப் பயன்படுத்தியுள்ளனர். செலாவணி மதிப்பைக் குறைப்பதற்காக நாணயங்களின் தலைப்பகுதியை இவ்வாறு சிதைத்திருக்கலாம். மாற்றுக் குறைந்த காசுகள் பல்லவர் காலத்திலும் (கி.பி. 610-659) தமிழகத்தில் புழக்கத்தில் இருந்துள்ளமை, *வாசி தீரவே காசு நல்குவீர்* என்னும் சம்பந்தர் தேவாரக் கூற்றாலும் அறியலாம்[84] பிற்காலச் சோழர் காலத்திலும் (கி.பி. 1150) *வாசி இல்லாக் காசு* பற்றிய செய்தியைப் பெரியபுராணமும் [85] பதிவு செய்துள்ளது. விக்கிரம சோழன் காலத்தில் (கி.பி. 1118-1135) டிரம்மா(டிராக்மா) என்ற கிரேக்க நாணயம் குடிமக்களிடையே செல்லுபடியாய்க் கொண்டிருந்தது.[86]

மேற்கூறிய சான்றாதாரங்களின் அடிப்படையில் நோக்கும்போது பழங்காலத்தில் பலதரப்பட்ட நாணயச் செலாவணி முறை வழக்கில் இருந்து வந்துள்ளமை புலனாகின்றது. நாணயங்களின் எடை, மதிப்பு, அவற்றின் மீது காணப்படும் அடையாளங்கள் ஆகியவற்றைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களை ஆய்வாளர்கள் கொண்டுள்ளனர். குறைந்த மதிப்புடைய ஒரு சில பித்தளை நாணயங்களை ரோமானியர் ரோமாபுரியிலிருந்து கொண்டுவராமல் இந்தியாவிலேயே அச்சிட்டுப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

81.குறுந்.269:5 82.சிலப்.16:93 83 K.V. Raman & Srinivasan 2000 : 12
84.க.வெள்ளைவாரணன்1950:116 85.பெரியபுரா.திருநா.260:4 86.கே.கே.பிள்ளை1972:297



இந்நாணயங்களின் குறைந்த மதிப்பையும் இந்தியாவிலேயே இவை அச்சிடப் பட்டிருப்பதையும் நோக்கும்போது தங்களால் பணிக்கு அமர்த்தப்பட்ட இந்திய நாட்கூலித் தொழிலாளிகளுக்கு ரோமாபுரியினர் சம்பளம் கொடுத்து வந்துள்ளார்கள் என்று கருத இடமுண்டு.[87] ரோமானியக் காசு தயாரிக்கக் கூடிய பித்தளை அச்சு ஒன்று கரூரில் கிடைத்தமையும் இக்கூற்றை உறுதி செய்யவல்லது.

தமிழரோடு ரோமானியர் கொண்ட வணிகத் தொடர்பின் காரணமாக இந்தியப் பண்டங்களின் இறக்குமதிக்கு ஈடாக அளிக்கப்படும் பெருந்தொகையான தங்கத்திற்காக ரோமாபுரியின் ஆட்சிமன்றம் வருத்தம் தெரிவித்ததுள்ளது. ஸ்டிராபோ என்னும் வரலாற்று அறிஞருக்குப் பின் ஐம்பது ஆண்டுகள் கழித்து வாழ்ந்த பிளினி ரோமானியர் இந்தியாவுடன் கொண்ட வணிகத்தினால் ரோமானியருக்கு ஆண்டுதோறும் 550 மில்லியன் ரோமானிய வெள்ளி நாணயம் இழப்பு ஏற்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.[89] மதிப்புமிக்க அயல் நாட்டு வணிகத்தின் காரணமாகத் தென்னிந்தியாவில் தமிழர்கள் பெருஞ் செல்வத்தைக் குவித்து வளம் பெற்றதுடன் மிக உயர்ந்த நாகரிக வாழ்க்கையையும் வாழ்ந்து வந்துள்ளனர்.

**கலைகள்**

சங்ககாலத்தில் சிற்பக் கலையும் ஓவியக் கலையும் வளர்ச்சி பெற்றிருந்தன. கோயிகள், அரண்மனைகள், மண்டபங்கள் முதலானவற்றைச் சிற்பநூல் வல்லுநர் நாளும் ஓரையும் பார்த்து நேரறி கயிறிட்டுத் திசைகளையும் அத்திசைகளிலுள்ள தெய்வங்களையும் வணங்கி வகுத்தனர்.

செங்கற்களினால் கட்டப்பட்ட கோயில்கள் அரண்மனைகளை உலோகத் தகட்டினாலும் சாந்தினாலும் வேயந்தனர். மாடங்களும் நிலா முற்றங்களும் அழகுற வடிவமைக்கப்பட்டன. *ஓவத் தன்ன உருகெழு நெடுநகரில்* [90] வீடுகளும் வீதிகளும் ஓவியங்களால் அழகு படுத்தப்பட்டிருந்தன. சங்கத் தமிழரின் சமுதாய அமைப்பை நோக்கும்போது அவர்களிடையே சாதிப்பிரிவு இருக்கவில்லை என்பது புலனாகும். ஆனால் அதற்குப் பதிலாக தொழில் வழிப் பிரிவுகளும் அதில் ஏற்றத் தாழ்வுகளும் கற்பிக்கப்பட்டிருந்தன.

87.நடன.காசிநாதன்2003:27 88.இராச.காளிதாஸ்1977:ப.83. 89. Vimala Begley 1996 : 317
90.பதிற் 2:28

Tamil Heritage Foundation International (THFi)

### சுடுமண் பொருட்களில் சிற்பக்கலை

அரிக்கமேட்டில் நடைபெற்ற வெவ்வேறு அகழ்வாய்வில் பல சுடுமண் பொருட்கள் (Terra Cottas) கண்டெடுக்கபட்டுள்ளன. சாதாரண களிமண்ணால் செய்யப்பட்ட இவை கரிபடியாமல் களிமண்ணின் தன்மை தெரியும்படி மிதமான சூட்டில் வேக வைக்கப்பட்டுள்ளன. சுடுமண் கூரை ஓடுகளும் அகல் விளக்குகளும் விளையாட்டுப் பொம்மைகளும் கடவுளர் திருமேனிகளும் இவற்றுள் அடங்கும். இத்தகைய சுடுமண் பொம்மைகளே பிற்காலக் கற்சிலைகளுக்கும் செப்புத் திருமேனிகளுக்கும் முன்மாதிரியாக அமைந்தன. சுடுமண் பொம்மைகள் விளையாட்டுப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்ட போது அவை கைகளாலேயே செய்யப்பட்டன. இவற்றுள் கடவுளர் திருமேனிகள் வழிபாட்டு உருவங்களாக ஆக்கப்பட்டபோது அச்சுக்களின் மூலம் பெருமளவில் உருவாக்கப்பட்டன. இடைக்காலத்தில் உலோக அச்சுக்கள் மூலம் சிலைகளை வார்ப்பதற்கும் கருங்கல்லில் கவின்மிகு சிலைகளை வடிப்பதற்கும் இத்தகைய சுடுமண் பொம்மைகளே மூலங்களாகவும் மாதிரிகளாகவும் அமைந்தன.

சங்ககால மக்கள் இசை, நாட்டியம், நாடகம், கூத்து, ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளில் மிக உயர்நிலையை எட்டியிருந்தனர். கூத்தரும் பாணரும் விறலியும் கலைஞர்களாகக் கருதப்பட்டனர். சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதை பண்டைத் தமிழரின் இசை, கூத்துக் கலையின் ஆவணமாகத் திகழ்ந்து வருகின்றது. நாடக அரங்கில் அழகிய வண்ணங்களில் ஓவியம் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. சுவரின் மீது சுதை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. எளிதில் அழிந்துபோகக் கூடிய வண்ணங்களையும் பொருட்களையும் கையாண்டு பழந்தமிழர் ஓவியம் தீட்டியதால் அவை விரைவில் அழிந்து போயிருக்கலாம். இருப்பினும் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களான தொல்பொருட் சின்னங்கள் மூலமாகப் பழந்தமிழரின் ஓவிய, சிற்பத் திறன்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

மட்பாண்டங்களைச் செய்யும் குயவர்கள் மக்களது வாழ்க்கைக்குத் தேவையான கலன்களைப் பல்வேறு வடிவங்களுடன் கலையழகோடு வனைந்துள்ளனர். எழில் மிக்க ஓவியங்களை மட்பாண்டங்களின் வெளிப்புறத்தில் தீட்டித் தமது ஓவியக் கலையைப் பண்டைத்தமிழர் புலப்படுத்தியுள்ளனர்.



மட்கலன்களின் மேல் வரையப்பட்டுள்ள பூக்கள், கொடிகள், வரிக்கோடுகள், பறவைகள், விலங்குகள் போன்றவை பழந்தமிழரின் அழகுணர்ச்சியையும் கலையுணர்ச்சியையும் புலப்படுத்துவனவாய் உள்ளன. சக்கரத்தினால் பானையை வடிவமைக்கின்ற போதும் வடிவமைத்துவிட்ட பின்பும் (இரு நிலைகளிலும்) இத்தகைய புனைவுகள் செய்யப்பட்டுள்ளன. அரிக்கமேட்டில் வீலர் அகழ்வாய்வில் கிடைத்த பானை ஓடுகளில் வரையப்பட்டுள்ள வில்லேந்திய மனிதன், நின்று கொண்டிருக்கும் மனிதன், மீன் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.[91] இவ்வோவியங்களைப் பானையில் வரைவதற்குக் கூரிய அம்பின் நுனியையோ அல்லது உலோகத்தகட்டையோ பயன்படுத்தியிருக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பழமையான கோவில்களில் பாவை விளக்குகள் இடம் பெற்றுள்ளன. யவனரால் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்ட கலை நயம் உள்ள இப்பாவை விளக்குகள் தமிழரை மிகவும் கவர்ந்தன. அதனாலேயே தமிழகத்துக் கோவில்களில் இத்தகைய பாவை விளக்குகளைத் தமிழர்கள் வடிவமைத்து வைத்து அழகு பார்த்துள்ளனர். அரிக்கமேட்டில் பிற்காலச் சோழர்காலத்தைச் சேர்ந்த குத்துவிளக்கின் சாயலோடு கூடிய கலைநயமுள்ள ஐந்து திரியமைப்புக் கொண்ட சுடுமண் விளக்குகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்திலும் இதே போன்ற சுடுமண் விளக்குகள் மிகுந்த கலைநய வடிவமைப்புகளுடன் கண்டறியப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களிலும் கிடைத்துள்ள விளக்குகள் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவை (கி.பி.10ஆம் நூ.ஆ) என்பது குறிப்பிடத்தக்கது.

அரிக்கமேட்டில் கசால் அகழ்வாய்வில் மீன்முட்கள், எலும்புகள் ஆகியவற்றால் செய்யப்பட்ட கலைப்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.[92] மீன்முட்கள் நன்றாகக் கழுவப்பட்டு முட்களில் உள்ள பிதுக்கங்கள் அகற்றப்பட்டு வேலைப்பாடு அமைந்த, வட்டவடிவமான கலைப்பொருட்களாகச் செய்யப்பட்டுள்ளன. இவை தமிழ்நாட்டுப் பெண்கள் காதில் அணியும் கம்மலை ஒத்திருக்கின்றன. வேலைப்பாடுகளும் கலை நயமும் கூடிய எலும்புகளும் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் இவற்றின் பயன்கள் சரியாகப் புலப்படவில்லை. மாட்டின் மூட்டெலும்புகளால் செய்யப்பட்டுள்ள இவை தட்டையாக்கப்பட்டு நடுவில் ஒரு கீறலுடன் காணப்படுகின்றன.

91.சு.தில்லைவனம் 1990:88 92.சோ.முருகேசன் 1997:79

Tamil Heritage Foundation International (THFi)

இத்தாலி நாட்டிலுள்ள 'பலாந்த்தேன்' (Palantin) என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் இதேமாதிரி மீன் முள்ளாலும் எலும்புகளாலும் செய்யப்பட்ட கலைப்பொருட்களும் அணிகலன்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[93] இவை ரோம் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ரோம் நகரில் உள்ள இக்கலைப் பொருட்கள் சிறந்த வேலைப்பாட்டுடன் நேர்த்தியாகவும் முழுமையாகவும் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் வேலை முற்றுப்பெறாமல் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே இக்கலைப் பொருட்கள் அரிக்கமேட்டில் உருவாக்கப்பட்டு ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும்[94]. இக்கலைப் பொருட்களின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு.

பண்டைத்தமிழர் ஓவியம் வரைதலில் இரண்டு முறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். அவை,

1. புனையா ஓவியம் போன்று வெளிப்புறக் கோடுகளால் வரையப்பட்ட ஓவியம்,
2. பானை ஓடுகளிலும் இரத்தின மணிகளிலும் செதுக்கி வரையப்பட்ட ஓவியம்

என்பனவாகும். அரிக்கமேட்டில் கிடைத்துள்ள வழவழப்பான மற்றும் சாதாரண கலன்களில் பல ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சாதாரண பானைகளில் சுட்டபின்பு வண்ணம் தீட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டிருப்பது மிகச் சிலவேயாகும். ஒரு சில மட்கலன்களில் ரௌலெட்டெட் முறையில் ஓவியம் மற்றும் வட்டப் புனைவுகளைத் தீட்டி அழகுபடுத்தியுள்ளனர். மிக எளிமையான முறையில் கைகளாலேயே குயவர்கள் இவற்றை வரைந்துள்ளனர். ஒருசில குறுக்குக் கோடுகள், பட்டையாக வரையப்பட்ட புனைவுகள் ஆகியன கத்தி அல்லது கூர்மையான குச்சியினால் வரையப்பட்டிருக்க வேண்டும். நூல் கையிற்றினாலும் சில சமயம் இத்தகைய புனைவுகள் செய்யப்பட்டிருக்கலாம். ஆடை அழுத்தப் புனைவுகளால் (Textile Impression) செய்யப்பட்ட ஓவியங்களும் சில பானை ஓடுகளில் காணப்படுகின்றன.[95] அலங்காரப் புனைவுகளும் அவற்றின் தொழில்நுட்பங்களும் மேலை நாட்டினரிடமிருந்து கடன் வாங்கப்பட்டவையாகக் காட்சியளிக்கின்றன.

93.சோ.முருகேசன் 1997:79 94.மே.நூல்:81 95. Vimala Begley 1996 : 200



வட்டப் புனைவுகளுடன் அலங்கார உருவங்கள் தீட்டப்பட்ட ரௌலெட்டெட் பானை ஓடுகள் அரிக்கமேடு, அழகன்குளம், சந்திரகேதுர்க் (ஆந்திர மாநிலம்) ஆகிய இடங்களில் ஒரே மாதிரியாகக் கிடைப்பதால் இம்மூன்றிடங்களுக்கும் நேரடித் தொடர்பு இருந்திருக்க வேண்டும். இவற்றுள் மிகவும் பழமையான குடியிருப்புப்பகுதி என்று கருதப்படும் அரிக்கமேட்டில் கிடைத்த வட்டப் புனைவுகளுடன் கூடிய வட்டிலின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும். ஏனைய இரண்டு இடங்களிலும் கிடைத்த வட்டிலின் காலத்தைத் தெளிவாக வரையறுக்க இயலவில்லை.

கசால் அகழ்வாய்வில் கிடைத்த வழவழப்பான பானை ஓட்டில் நீள்வட்ட வடிவப் பின்புலத்தில் அழகிய பெண் உருவம் கிரா∴பிடி முறையில் செதுக்கி வரையப்பட்டுள்ளது.[96] இவ்வுருவம் கரூரில் கிடைத்த தங்க மோதிரத்தில் உள்ள ஆண்-பெண் இணையில் உள்ள பெண் உருவத்தை ஒத்துள்ளது. மற்றொரு பானை ஓவியத்தில் நீள் வட்ட வடிவப் பின்புலத்தில் சிங்கத்தின் உருவமும் வலப்புறத்தில் நின்று கொண்டிருக்கும் மனிதனின் உருவமும் கீறப்பட்டுள்ளன. இதே போன்று வெள்ளலூரில் (Vellalore) கிடைத்த தங்க மோதிரத்தில் நீள் வட்ட வடிவப் பின்புலத்தில் சிங்கத்தின் உருவம் செதுக்கப் பட்டுள்ளது. இவையனைத்தும் ஒரே மாதிரியான கலையுணர்வு கொண்ட சமகாலக் கலைஞர்களால் வடிவமைக்கப் பட்டுள்ளன என்பது தெரியவருகின்றது.

கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சுடுமண் உருவ பொம்மை (பெண்) ஒன்று அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கூடை சுமந்த தோற்றத்தோடு இக்காலப் பெண்கள் சேலைகட்டும் பாணியில் அப்பெண்ணின் உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கொசுவம் வைத்துச் சேலைகட்டிய பாணியில் காணப்படும் இப்பொம்மை பண்டைத் தமிழ்ப் பெண்டிரின் நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

கிரேக்க ரோமானியத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பளபளப்பாகச் செதுக்கிச் செய்யப்பட்ட மணிகள், இரத்தினக் கற்கள் ஆகியன அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. ரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் தலை செதுக்கப்பட்ட இரத்தினக் கற்களும் கிடைத்துள்ளன ரோமானியத் தொழில்நுட்ப வினைஞர்களால் செய்யப்பட்ட இத்தகைய

96.மே.நூல்:28. 97.மே.நூல்:29

Tamil Heritage Foundation International (THFi)

இரத்தின மணிகள் மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டவையாகும்.

**விளையாட்டு**

சங்ககால மக்களின் விளையாட்டுப் பற்றிச் சங்க இலக்கியங்கள் மிகுதியாகப் பாடியுள்ளன. குழந்தைகள் பொம்மை வைத்துக்கொண்டு விளையாடுவதைக் கலித்தொகை (80, 86, 183), பெரும்பாணாற்றுப்படை (249), குறுந்தொகை (61), ஐங்குறுநூறு (66) ஆகிய இலக்கியங்கள் பாடியுள்ளன. இப்பொருட்கள் பெரும்பாலும் மரத்தால் செய்யப் பட்டவையாகும். தாமிரத்தால் ஆன கிலுகிலுப்பையைக் குழந்தைகள் வைத்துக்கொண்டு விளையாடியதைச் சிறுபாணாற்றுப்படை (61) சித்திரிக்கின்றது.

பண்டைக் காலத்தில் சுடுமண் பொம்மைகளும் உருவங்களும் விளையாட்டுப் பொருட்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுடுமண்ணால் செய்யப்பட்ட குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் பல அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. புதிய கற்காலத்திலேயே சுடுமண் கலையைப் பண்டைத்தமிழர் அறிந்திருந்தாலும் தமிழகத்தில் இக்கலை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் முழுமையான வளர்ச்சி பெற்றது எனலாம். மனிதனின் அன்றாட வாழ்க்கைத் தேவைகள், சமயச் சடங்குகள் ஆகியவற்றை முன்னிட்டுக் களிமண் பாத்திரங்களும் உருவ பொம்மைகளும் நிறைய செய்யப்பட்டுப் பக்குமாய்ச் சுடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சாதாரணக் களிமண்ணால் செய்யப்பட்ட இவை கரிபடியாமல் களிமண்ணின் தன்மை தெரியும்படி மிதமான சூட்டில் வேக வைக்கப்பட்டுள்ளன. *சுடுமண் ஓங்கிய நெடுநிலை மாடம்* என்று சிலப்பதிகாரம்[98] சுடுமண்ணின் பயன்பாடு குறித்துப் பாடியுள்ள கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

அரிக்கமேட்டில் கிடைத்துள்ள சுடுமண் பொம்மைகள் விளையாட்டுப் பொருட்களாக மட்டுமின்றி வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப் பொருட்களாவும் திகழ்கின்றன. அக்கால மகளிர் சேலை உடுத்தும் முறை, முடி ஒப்பனை செய்து கொள்ளும் பாணி, காதணிகள் மற்றும் கைவளையல்கள் அணிகின்ற அழகு எனக் கலைச்சுவை மிகுந்த கூறுகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவனவாக இச்சுடுமண் உருவங்கள் காணப்படுகின்றன. சுடுமண்ணால் செய்யப்பட்ட அகல்

98.சிலப்.5:105



விளக்குகள், தொங்கு அணிகள், மோதிரம் ஆகியன தவிரச் சிறுவர்கள் விளையாடி மகிழும் வண்டிச் சக்கரங்கள், பகடைக் காய்கள் ஆகியனவும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. சிறார்கள் விளையாடுவதற்கேற்ற சிறிய வடிவிலான சட்டிகள், பானைகள், தட்டுக்கள், மேல்மூடிகள், யானை குதிரை உருவங்கள் முதலியனவும் கிடைத்துள்ளன. சுடுமண் பொம்மைகள் விளையாட்டுப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டபோது கைகளாலேயே செய்யப்பட்டுள்ளன. சில பொம்மைகள் நீளப் பகுதியில் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உட்பக்கமாக வெற்றிடம் விடப்பட்டுச் செய்யப்பட்டுள்ளன. சிற்சில சுடுமண் பொம்மைகள் மேலை நாட்டு நாகரிகத்தால் ஈர்க்கப்பட்ட புறப்புனைவுகளால் சித்திரிக்கப்பட்டுள்ளன.

**பழக்க வழக்கங்கள்**

சங்ககால மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ள சங்க இலக்கியங்களில் ஏராளமான குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் பண்டைய அரிக்கமேட்டு மக்களின் பழக்க வழக்கங்களை அங்குக் கிடைக்கும் தொல்பொருட் சின்னங்களால் ஓரளவு அறியலாம். அரிக்கமேட்டில் கிடைக்கும் பலதரப்பட்ட மட்கலன்களும் முதுமக்கள் தாழிகளும் பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகளைப் பொதிந்து வைத்துள்ளன. பண்டைய மக்களிடம் இறந்தவர்களது உடல்களைப் புதைக்கும் வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. இறந்தோரது உடல்களைத் தாழியினுள் வைத்தும் தரையில் குழிதோண்டி அதற்குள் புதைத்து வைக்கும் முறையும் இருந்து வந்துள்ளமை பற்றி,

*____________ ____________ நெடுமா வளவன்*

*அன்னோர் கவிக்கும் கண்ணகன் தாழி*

*வனைதல் வேட்டனை யாயின்* [99]

என்று புறநானூறு கூறுகின்றது. அரிக்கமேடு தவிரப் பாகூர், சுற்றுக்கேணி, முத்தரையர் பாளையம், ஊசுட்டேரி, கிருமாம்பாக்கம் ஆகிய ஊர்களில் இறந்தவரைப் புதைக்கும் ஈமத்தாழிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இறந்தவர்கள் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய பொருட்களையும் தாழிக்குள் அல்லது சவக்குழிக்குள் இடும் வழக்கம் இருந்திருக்கின்றது. சுற்றுக்கேணி முதலான இடங்களில் கிடைத்த சவக்குழிகளில் ஒன்றிற்கு

99.புறம் 228:10-13

Tamil Heritage Foundation International (THFi)

மேற்பட்ட சடலங்கள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.[100] பெருங்கற்புதைவுக் காலத்தில் கற்கிடை(Cairn Circles), தாழிகள்(Urns), கல்லறை (Cist Burial), குடைவரை (Rock Cut Burials), பதுக்கை ஆகியவற்றுக்குள் இறந்தவர்களைப் புதைத்து வந்துள்ளனர். பழந்தமிழ்க் காப்பியமான மணிமேகலை இவற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது,

*———— இடுவோர், தொடுகுழிப் படுப்போர்,*

*தாழ்வயின் அடைப்போர், தாழியிற் கவிப்போர்* [101]

என்று பதிவு செய்துள்ளது. பொதுவாக இத்தகைய சவக்குழிகள் அல்லது தாழிகள் மக்கள் வாழ்ந்த பகுதியிலிருந்து சற்றுத் தொலைவில் காணப்படுகின்றன. சில இடங்களில் வீட்டிற்கு அருகிலும் வீட்டுத் தளத்தின் கீழும் இறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ளனர். சவக்குழிகளுக்குக் கற்கள் தேவைப்பட்டதால் மலைச் சரிவுகளிலும் இவை காணப்படுகின்றன.

சங்ககால மக்களிடையே ஊன் உண்ணும் வழக்கம் இருந்து வந்துள்ளமையைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். அரிக்கமேட்டில் வாழ்ந்த மக்களும் அயல்நாட்டு வணிகர்களும் கருவாடு, மீன் (Garum Sauce) ஆகியவற்றை விரும்பி உண்டு வந்துள்ளதை அகழ்வாய்வில் கிடைத்த ஆம்ஃபோரா சாடிகள் உறுதிப் படுத்த வல்லன. யவனர்கள் கப்பலில் கொண்டுவந்த மதுவைத் தமிழர்கள் விரும்பி அருந்தியுள்ளனர். மதுவின் சுவையையும் அது கொடுக்கும் வெறியையும் மிகுதிப் படுத்துவதற்காக மதுவகைகளைக் கூர்முனைச் சாடிகளில் நிரப்பி நெடுநாள் மண்ணில் புதைத்து வைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இத்தகைய கூர்முனைச் சாடிகள் எட்டு ஒரே (தொகுதியாக) இடத்தில் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சங்ககாலத்தின் இறுதியில் தமிழ் மக்களிடையே குடிப்பழக்கம் அளவுக்கு மீறிக் காணப்பட்டது. யவனர்கள் தங்கள் நாட்டிலிருந்து இரட்டைக் கைப்பிடிகளுடன் கூடிய சாடிகளில் கொணர்ந்த மதுவைத் தமிழர் உண்டு மகிழ்ந்ததற்கான சான்றுகள் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற பெரிய நகரங்களில் வாழ்ந்திருந்த மக்கள் இத்தீய பழக்கத்தில் முழ்கிக் கிடந்தனர்.[102] தமிழர்களிடையே இத்தீய பழக்கம் வேரூன்றி வளர்ந்திருந்தமை பற்றிக் 'கள்ளுண்ணாமை' என்னும் அதிகாரத்தின் வழி திருவள்ளுவர் பெரிதும் கவன்றுள்ளார்.

100.சோ.முருகேசன் 2000:145 101.மணிமே.6:66-67 102.கே.கே.பிள்ளை1972:137



**வானியல் அறிவு**

நாள் நட்சத்திரம் பார்த்தல் என்பது இன்று நேற்றல்ல, தொன்று தொட்டே தமிழகத்தில் வழக்கில் இருந்து வந்துள்ளது. நாள், கோள்கள் மனிதர்க்கு ஏற்படும் நன்மை, தீமைகளையும் தோன்றுவதால் அவற்றின் இயக்கங்கள், அவற்றை அளந்தறியும் ஆற்றலையும் அறிவையும் சங்ககால மக்கள் பெற்றிருந்தனர்.

நட்சத்திரங்களில் சில வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியனவாகக் கருதப்பட்டன. சந்திரனோடு உரோகிணியும் சேர்ந்த நாள் நன்னாள் என்று கருதப்பட்டது. ஓணமும் ஆதிரையும் முறையே மாயோன், முக்கண்ணன் ஆகியோர்க்கு உகந்த நாட்களாகக் கொண்டாடப்பட்டன. இந்நாட்களில் இத்தெய்வங்கட்கு விழா எடுத்துள்ளனர்.[103] அறுமீன் எனப்படும் கார்திகைத் திருநாள் விழாவும் எழுமீன் எனப்படும் சப்தரிஷி மண்டலமும் வணக்கத்திற்கு உரியதாகவும் வழிபாட்டிற்கு உரியதாகவும் விளங்கின. வானத்தின் வடதிசையில் தோன்றும் வடமீன் கற்பினுக்கு அணிகலனாகப் போற்றப்பட்டது.

*இரு முந்நீர்க் குட்டமும்*
*வியல் ஞாலத்து அகலமும்*
*வளி வழங்கு திசையும்*
*வறிது நிலைஇய காயமும் என்றாங்கு*
*அவை அளந்து அறியினும் அளத்தற்கு அரியை*[104]

என்னும் புறப்பாடல் பழந்தமிழரின் வானவியல் அறிவுக்கு ஒரு சான்று.

சிவபெருமானைப் பற்றிய வர்ணனையாக பரிபாடலும் கலித்தொகையும் ஆதிரை முதல்வன் [105], அரும்பெறல் ஆதிரையான் [106] என்று குறிப்பிடுகின்றது. முத்தொள்ளாயிரம்,

*ஆதிரையான் ஆதிரையான் என்றே அறையுமால்*
*ஊர்திரைநீர் வேலி உலகு*

என்று சிவபெருமானை வாழ்த்துகின்றது. சங்ககாலத்தில் நாள் கோள்களின் பெயர்களை இறைவனுக்கும் அவ்விறை சார்ந்த சமயத்தார்க்கும் வழங்கி வந்துள்ளனர். இதனை உறுதி செய்யும்

103.மதுரைக்:590-599.பரி.8:6 104.புறம்20:1-5 105.பரிபாட்ல்:8:6 106.கலி-150:20-21

Tamil Heritage Foundation International (THFi)

வண்ணம் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டில் (attirāya - ஆத்திரேயே) ஆதிரையன் என்னும் பெயர் காணப்படுகின்றது.

**அரசியல்**

சங்க இலக்கியத்தில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட மன்னர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் அவர்களுடைய அரசியல் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதுவதற்கான குறிப்புக்கள் சங்கஇலக்கியத்தில் கிடைக்கவில்லை. பண்டைத் தமிழகத்தில் மன்னன் நாட்டின் தலைவனாகவும் அரசியல் தலைமை சான்றவனாகவும் ஒரு தனியிடத்தைப் பெற்றிருந்தான். தமிழகத்தின் மூன்று பகுதிகளான சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூவேந்தர் ஆட்சியின் கீழ் இருந்து வந்துள்ளன. அவர்களின் கீழ்ப் பல்வேறு குறுநில மன்னர்கள் ஆங்காங்கு அரசாண்டு வந்துள்ளனர்.

அரசாங்கம் மன்னரின் பரம்பரை உரிமையாகவும் உடைமையாகவும் இருந்து வந்துள்ளது. சங்ககாலத்தில் மகளிர் ஆட்சி நடத்தியதாக இலக்கியச் சான்றுகள் இல்லை.[107] ஆனால் இதற்கு மாறாக 'மதுரையில் மகளிர் ஆட்சி நடந்ததாகவும், வரிப்பணத்தை முறை வைத்துக்கொண்டு வணிகர்களும் பிறரும் பொருளாக அரண்மனையில் செலுத்தி வந்தனர்' என்றும் மெகஸ்தனிசு குறிப்பிட்டுள்ளார்.[108]

அசோகர் கல்வெட்டுக்களில்தான் தமிழகத்தைப் பற்றிய முதல் கல்வெட்டுக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. பிந்துசாரர் தக்காணத்தை வென்றபோது தமிழ்நாட்டின் வடவெல்லை வரையில் மௌரியப் படைகள் வந்துள்ளன. தமிழகப் படைகள் ஒன்றுசேர்ந்து தடுத்ததால் மௌரியப் படைகளும் அவற்றிற்குப் பிறகு சாதவாகனப் படைகளும் மைசூரின் தென் பகுதியிலேயே தடுத்து நிறுத்தப்பட்டன. அசோகர் படையெடுத்து வென்றது கலிங்கத்தை மட்டுமே. காரவேலரது ஹாதிகும்பா கல்வெட்டும் தமிழரது கூட்டுப்போர் முயற்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.[109] பண்டைத் தமிழக அரசுகள் போர்ப்படை கொண்டு வடஇந்திய வல்லரசுகளைத் தடுத்து நிறுத்தும் அளவிற்கு வலுப்பெற்றிருந்தன. அன்றியும் அவ்வரசர்கள் ஆண்ட நாடு செழிப்புற்று நாகரிக வளர்ச்சியில் மிக்கு விளங்கிற்று. அவர்களுடைய சமுதாயம் நாகரிகம், வணிகம், தொழில், வேளாண்மை ஆகிய துறைகளில் மேம்பட்டிருந்தது.

107.கே.கே.பிள்ளை1972:159 108.ந.சுப்ரமணியன்1991:25 109.மே.நூல்:25



வடமொழியிலுள்ள இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் மெகஸ்தனிசு என்னும் கிரேக்க ஆசிரியரின் குறிப்புக்களிலும் பாண்டிய நாட்டைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பதிற்றுப்பத்து மூலமாகச் சேரர் பரம்பரையைப் பற்றி அறிய முடிகின்றது. கரூருக்குப் பதினாறு கி.மீ. தொலைவில் வடமேற்கே புகழூர் உள்ளது. இவ்வூரிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் வேலாயுதப்பாளையம் என்னும் ஊருக்கு அருகே ஆறுநாட்டார் மலை என்னும் பெயரில் தாழ்வான குன்றுகள் உள்ளன. இம்மலைக் குன்றுகளில் வெட்டப்பட்டுள்ள தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்களில்தான் சேரர் பரம்பரை கூறும் வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் காணப்படும். கருவூர் பொன் வாணிகன் பொத்தி அதிட்டானம் என்னும் தொடர் கருவூர் கதப்பிள்ளை சாத்தனாரைக் குறிப்பதாக வரலாற்றிஞர் கூறுகின்றார்.[110]

கருவூர் கதப்பிள்ளை சாத்தனார் என்னும் சங்ககாலப் புலவர் கருவூரில் குடியேறிய கோப்பெருஞ்சேரல் இரும்பொறையின் படைத்தலைவன் பிட்டன் கொற்றனைப் புறநானூற்றில்[111] புகழ்ந்து பாடியுள்ளார். கோப்பெருஞ்சேரல் இரும்பொறை கருவூரில் குடியேறியபோது அவனுடன் வந்த வணிகர்களுள் கருவூர் கதப்பிள்ளை சாத்தனாரும் ஒருவராவார். 'சாத்தன்' என்னும் பண்டைத் தமிழ்ச் சொல் வணிகரைக் (வணிகச்சாத்து) குறிக்கும் சொல்லாகும். அரிக்கமேட்டில் கிடைத்த பல பானை ஓடுகளில் 'சாத்தன்' என்னும் பெயர் தமிழ்ப்பிராமி எழுத்துக்களில் காணப்படுகின்றது.

சங்க இலக்கியங்களுள் மிகவும் பழைமையான தொகுப்பு என்று கருதப்படும் புறநானூற்றில் சங்ககாலச் சேர, சோழ மன்னர்கள் பற்றிய வரலாறு எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகியவற்றுக்குப் பாட்டுடைத் தலைவனாக விளங்குபவன் கரிகால் பெருவளத்தான். சங்ககாலத்தில் சோழ இளவரசர்கள் தொண்டை மண்டலப் பகுதிக்கு ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் முற்காலச் சோழர் காலத்திய காசுகள் அரிக்கமேட்டில் கிடைத்திருப்பதாலும் காவிரிப் பூம்பட்டினத் துறைமுகத்தின் அருகே 'பொதுகே' துறைமுகம் இருப்பதாலும் பண்டைக் காலத்தில் அரிக்கமேடு சோழரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாய் இருத்தல் வேண்டும் என்பது உறுதி.

110.ப.பசவலிங்கம் 1984:108 111.புறம்.168:15-22

Tamil Heritage Foundation International (THFi)

அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சில பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயர்களைச் சங்ககாலக் குறுநில மன்னருடைய பெயர்களாகவோ குலப்பெயர்களாகவோ கொள்ள இடமுண்டு. Munaya[r] – 'முனையர்' என்னும் பின்னொட்டு, தென்னார்க்காட்டுப் பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர்களின் குலப்பெயராக இருக்கலாம். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பண்ருட்டி, திருவெண்ணெய் நல்லூர் ஆகிய ஊர்கள் அடங்கிய பகுதியே திருமுனைப்பாடி நாடாகும். திருமுனைப்பாடி நாட்டின் ஆட்சியாளர்கள் முனையர் என்றழைக்கப்பட்டனர். மற்றொரு பானை ஓட்டில் காணப்பெறும் வரிவடிவத்தில் —I a tan - ஆதன் என்னும் பெயர் காணப்படுகின்றது. இதனை Vel A tan என்று மறுஉருவாக்கம் செய்யலாம். 'Vel'- என்னும் பெயர் பழந்தமிழ் எழுத்துக்களில் காணப்படுகின்றது.[112]

'வேளிர்' என்னும் பெயர் குறுநில மன்னர்களுள் ஒரு பிரிவினருக்கு உரித்தாக வரலாறு குறிப்பிட்டுள்ளது. (வேள்)ஆதன் என்னும் பெயர் சங்க இலக்கியப் பின்னொட்டாகும். பல்லவருக்கு முந்தைய காலச் சிற்றரசர்களான 'வேளிர்' குலத்தவர், தென்னார்க்காட்டுப் பகுதியில் ஆட்சி செய்த 'வேளிர்' என்னும் குடியைச் சேர்ந்தவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகக் குறிப்பிடப்படும் ஆய்அண்டிரன் என்னும் சிற்றரசன் வேளிர் குலத்தைச் சார்ந்தவனே. புறநானூற்றில் இவனைப் பல புலவர்கள்[113] பாடியுள்ளனர். கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த அரிக்கமேடு பானை ஓட்டில் 'முனைய' (முனையர்) என்னும் பெயர் காணப்படுகின்றது. தமிழகத்தின் தென்னார்க்காட்டுப் பகுதியான திருமுனைப்பாடி நாட்டை ஆட்சி செய்தவர்களாக இவர்களை வரலாறு சுட்டுகின்றது.

பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்த இரண்டு பானை ஓடுகள் கசாலின் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. ஆண்பால் பெயரின் பின்னொட்டுக்கள் என்று கருதப்படும் இவற்றின் தமிழ்ப்பிராமி ஒலி வடிவங்கள்... t tan-த்தன் (சாத்தன் / தித்தன்) yata ... யாத(ன்) (வேளியாதன், வாழியாதன்) என்பனவாகும்.[114] இப்பானை ஓடுகள் தமிழர்-ரோமானியர் வணிகத்திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தனவாகும். ஆனால் விமலா பெக்லியோ இவ்வோடுகளைக் கி.மு 3-ஆம் நூற்றாண்டின், மத்தியக் காலத்தைச் சேர்ந்தவையாகக் கணித்துள்ளார்.[115] அரிக்கமேட்டில் கிடைத்த தமிழ்ப்பிராமி எழுத்துக்கள்

112 Vimala Begley 1996 : 296
113 புறம்:127,139,240,241,275
114 Vimala Begley 1996 : 305
115 Ibid 305



பொறிக்கப்பட்ட பானை ஓடுகளில் இவையே காலத்தால் முற்பட்டவையாகும்.

## மொழி

தமிழ் எழுத்துக்களின் தோற்றத்தைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடு உண்டு. வட இந்தியாவில் பிராமி எழுத்துக்கள் தோன்றினவென்றும் அவற்றிலிருந்து தமிழ் வட்டெழுத்துக்கள் தோன்றின என்றும் அவற்றிலிருந்தே இக்காலத் தமிழ் எழுத்துக்கள் பிறந்தனவென்றும் கல்வெட்டு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[116] கி. மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் தென்னிந்தியாவில் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, வசவசமுத்திரம், அழகன்குளம் ஆகிய பகுதிகளில் தமிழ்ப்பிராமி பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சங்ககாலச் சேரர் பரம்பரையைக் குறிப்பிடும் புகழூர்க் கல்வெட்டும் தமிழ்ப்பிராமியில் பொறிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர, சங்ககாலத்திற்கு முற்பட்டனவாக எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பல நடுகற்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. இக்கூற்றை உறுதிப் படுத்தும் வண்ணம் சங்க இலக்கியங்களும் நடுகற்களைப் பற்றிய சான்றாதாரங்களை,

*எழுத்துடை நடுகல்*[117]
*பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்*
*பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்*
*வேல்ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்*[118]

என்று பதிவு செய்துள்ளன.

சங்ககாலத்தில் காணப்படும் தமிழ் இலக்கிய நடைக்கும் கல்வெட்டு உரைகளின் தமிழ் நடைக்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகின்றது. கல்வெட்டுக்கென்றே ஒரு தமிழ் எழுத்து முறையைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தி வந்துள்ளனர். எனவே கல்வெட்டு நடையையும் எழுத்து வடிவத்தையும் வைத்துக்கொண்டு பண்டைய தமிழ் எழுத்தின் வரலாற்றைக் கணித்தறிவது பொருந்தாது. சிந்துசமவெளி அகழ்வாய்வுகளில் அக்கால எழுத்துக்களின் வரிவடிவங்களைக் கொண்ட முத்திரைகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவற்றை

116 கே.கே.பிள்ளை, 1972:156 117.ஐங்குறு-352:2 118.அகம்.67:9-11

Tamil Heritage Foundation International (THFi)

அடிப்படையாகக் கொண்டு சிந்துசமவெளி மக்களது மொழி எதுவென்று உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் அது திராவிட மொழிகளுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[119] சிந்து சமவெளியில் காணப்படும் சில சித்திர (எழுத்து) அமைப்புக்களிலிருந்து பிராமி எழுத்துக்கள் தோன்றியிருக்க வேண்டும் என்றும் கருதுவதற்கு இடமுண்டு[120] தமிழகத்தில் அரிக்கமேடு உறையூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் பிராமி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவை கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தைச் சேர்ந்தவையாகக் கணிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் எழுதப்பட்டு வந்த மிகப் பழைய எழுத்து முறை தமிழ்ப்பிராமி எனக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மதுரைப் பகுதியில் காணப்படும் பல குகைக் கல்வெட்டுக்கள் யாவும் தமிழ்ப்பிராமி எழுத்துக்களில் வெட்டப்பட்டவையே. இவ்வெழுத்து மரபில் தமிழுக்கே உரிய *ழ, ற* போன்ற எழுத்துக்களைக் குறிக்கும் குறியீடுகளும் பிராமி எழுத்துக்களும் கலந்து பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆதலால் இதற்குத் தமிழ்ப்பிராமி எனும் பெயர் இடப்பட்டது. இவ்வெழுத்திற்குத் 'தாமிழி' என்றும் 'திராவிடி' என்றும் வேறு பெயர்கள் உள்ளன. தமிழ் எழுத்துக்களும் பிராமி எழுத்துக்களும் ஒரே மூலத்திலிருந்து பெறப்பட்டவையாக இருத்தல் கூடும். தமிழில் அம்மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ள *ழ. ள. ற. ன. ஃ* ஆகிய எழுத்துக்கள் ஒரு பண்டைத் தனித்தமிழ் எழுத்து முறையின் பகுதியாகவோ அல்லது பிராமி எழுத்து முறையில் காணப்படாத ஆனாலும் தங்கள் பழைய மொழிக்கு இன்றியமையாத சில எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டதால் எழுந்தவையாகவோ இருக்கலாம்.

அசோகர் காலத்தில் தமிழகம் முழுவதும் பரவியிருந்த பிராமி எழுத்தின் செல்வாக்கு அரிக்கமேட்டிலும் பரவியிருந்தது. ஆந்திர மாநிலம் சாலிகுண்டத்திலும் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் குன்றுகளில் உள்ள பல குகைகளில் அசோகர் காலப் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தமிழில் உள்ள பெரும்பான்மையான எழுத்துக்கள் பிராமி எழுத்துக்களின் வரி வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்

119.ஏ.ஏகாம்பரநாதன் 1994:35 120.மே.நூல்:35



பட்டவையாகும். இதன் அடிப்படையில் தமிழ் எழுத்து முறையே பிராமி வடிவத்தினின்றும் பெறப்பட்டதென்று சிலர் கூறுவர்.[121] இக்கூற்று மேலும் ஆராய்தற்குரியது. ஏனெனில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழில் தனிப்பட்ட வரிவடிவம், ஒலிவடிவம் இருந்து வந்துள்ளமை தொல்காப்பிய நூன்மரபு நூற்பாக்களால் புலனாகும். சங்க காலத்தில் சேர நாட்டிலும், சோழ மண்டலத்திலும் வழங்கி வந்த தமிழ் எழுத்துக்கள் கண்ணெழுத்துக்கள் என்னும் பெயருடையனவாய்த் திகழ்ந்தன. இவ்வுண்மையைக்

*கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்*

*மண்ணுடை முடங்கல் அம்மன்னவர்க் களித்து*[122]


என்னும் செய்யுளடிகளால் அறியலாம். இவ்வெழுத்துக்கள் வட்ட வடிவமாய்த் திகழ்ந்ததால் பிற்காலத்தில் இவை வட்டெழுத்துக்கள் என்றழைக்கப்பட்டன. 'இவ்வட்டெழுத்துக்கள் அசோகரின் பிராமி எழுத்திலிருந்து தோன்றி வளர்ச்சியடைந்தன' என்று பூலர் குறிப்பிட்டுள்ளார்.[123] ஆனால் இக்கூற்று ஆராயத்தக்கது. ஏனெனில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம் வழக்கில் இருந்து வந்துள்ளமையைத் தொல்காப்பிய நூற்பாக்கள் கூறுகின்றன.

அசோகர் காலத்தில் இந்தியா முழுவதும் பௌத்த சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் பிராமி வரிவடிவ எழுத்து முறையில் பல கல்வெட்டுக்களும் பானை எழுத்துக்களும் பொறிக்கப்பட்டன. தமிழ் ஒலியன்களின் தகவமைப்பிற்கு ஏற்பத் தமிழ்மொழியில் பிராமி எழுத்து வடிவம் ஏற்கப்பட்டது. ஆந்திர மாநிலம் பட்டிப்புரோலுவில் கிடைத்த பிராமி எழுத்து வகையுடன் தமிழ்ப்பிராமி எழுத்து வகை ஓரளவு ஒப்புமை உடையதாகக் காணப்படுகின்றது. அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்களில் ஓரளவு பிராமி வரிவடிவத்தின் சாயல் இருப்பினும் பழந்தமிழ் எழுத்துக்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்களை ஆராய்ந்த அகழ்வாய்வாளர்கள் அவை பழந்தமிழ் எழுத்துக்களின் மூலவடிவமான 'திராவிடி' எனும் எழுத்து வகையைச் சேர்ந்தன என்று கணித்துள்ளனர்.[124] அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்களில் திராவிடி வரிவடிவ முறையைப் பின்பற்றி வந்த அரிக்கமேட்டு மக்கள் அப்பகுதியில் பரவிய சமண, பௌத்த சமய ஆக்கிரமிப்பின் காரணமாகப் பிராமி வரிவடிவத்தையும் ஓரளவு பின்பற்ற நேர்ந்தது.


121.ந.சுப்ரமண்யன் 1991:19 122.சிலப்.26:170,171

123. A.H.Dani 1963: 73 124. Wheeler R.E.M 1946: 17

Tamil Heritage Foundation International (THFi)




தமிழ்ப்பிராமியின் வரிவடிவம் எவ்வாறு படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது என்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.






### எழுத்தாணியும் எழுது முறையும்

பொதுவாக மட்பாண்டங்களில் உள்ள எழுத்துக்கள் இரண்டு விதமான முறைகளில் எழுதப்பட்டு வந்துள்ளன. மட்பாண்டங்கள் வனையப்பட்ட பின்னர் அவை ஈரமாக இருக்கும்போதே எழுத்துக்களைப் பொறிப்பது முதலாவது முறையாகும். இம்முறையில் பானைகள் சூளையில் இட்டுச் சுடப்படுவதற்கு முன்னர் எழுத்துக்கள் பொறிக்கப் படுகின்றன. இரண்டாவது முறையில் சூளையில் இட்டுச் சுடப்பட்ட பின்னர் அம்மட்கலன்களின் வெளிப்பகுதியில் கூர்மையான உலோகத் தகட்டால் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள் பெரும்பாலும் மட்கலன்கள் சுடப்படுவதற்கு முன்பு பொறிக்கப் பட்டவையாகவே காணப்படுகின்றன.

அரிக்கமேட்டில் கசால் அகழ்வாய்வில் எலும்பினால் செய்யப்பட்டுள்ள ஒரு எழுத்தாணி கிடைத்துள்ளது. இதன் ஒரு முனையில் திருகு (மரை) அமைந்துள்ளது. அதை ஒரு கைப்பிடியில் இணைத்து வைத்து எழுதுகின்ற முறையில் எழுத்தாணி உருவாக்கப்பட்டுள்ளது.[125] இவ்வகை எழுத்தாணி இந்திய எழுத்து முறைக்கு முற்றிலும் மாறானதாகக் காணப்படுகின்றது. இந்தியர்கள் இரும்பினால் செய்யப்பட்ட எழுத்தாணியைப் பயன்படுத்தி வந்துள்ளமையால் இந்த எலும்பு எழுத்தாணி வணிகக்கணக்கு, வணிக ஒப்பந்தம், வரவு செலவு ஆகியவற்றை எழுதுவதற்காக மேலைநாட்டு வணிகர்களால் இங்கே கொண்டுவரப் பட்டிருத்தல் வேண்டும்.

### அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள்

வீலரின் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் (1945) எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இருபத்திரண்டு பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பத்தொன்பது பானை ஓடுகள் தமிழ்ப் பிராமியிலும் இரண்டு பானை ஓடுகள் பிராகிருத மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஒரு பானை ஓட்டின் வரிவடிவத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளில் காலத்தால் முற்பட்ட பிராமி வடிவமுள்ள பானை ஓடுகள் கசால் அகழ்வாய்வில்தான் (1947-48) காணப்படுகின்றன.

125.சோ.முருகேசன் 1997:78

Tamil Heritage Foundation International (THFi)

கசால் அகழ்வாய்வில் கிடைத்த பானை எழுத்து ஓடுகளை ஆராய்ந்த ழான் ஃபிலியோசா (M. J. Filliozat) 'இப்பானை ஓடுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.மு. முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப் பட்டவையாகும்' என்று கூறியுள்ளார்.[126] அரிக்கமேட்டுப் பானை எழுத்தின் வரிவடிவத்தை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன், 'குசானர் காலத்தில் (Kushana Period) உள்நாட்டில் தயாரான பானைகள் வணிக நோக்கத்திற்காக அரிக்கமேட்டுப் பகுதியில் இறக்குமதி ஆகியிருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.[127] அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள் வாயிலாகப் பண்டைத் தமிழரின் பெயரிடுகின்ற முறை பற்றியும் அதன் தன்மை பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது.

அக்காலச் சமுதாயத்தில் சாதாரண குடிமக்களிடையே நிலவி வந்த கல்வி மற்றும் எழுத்தறிவினை அறிந்து கொள்ளவும் பானை எழுத்துக்கள் உதவுகின்றன. இப்பானை எழுத்துக்களின் வரிவடிவம் பிராமியாக இருந்தாலும் அவை உணர்த்தும் மொழி (ஒலிவடிவம்) தமிழேயாகும். தமிழ் எழுத்துக்கள் தோன்றிய காலத்தில் அவற்றின் வடிவம் எவ்வாறு இருந்திருத்தல் வேண்டும் என்பதை இப்பானை ஓடுகளில் காணப்படும் பிராமி எழுத்துக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

பழந்தமிழரின் மொழியறிவைப் பற்றி அறிந்துகொள்ள பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கல்வெட்டுக்கள் ஆகியன உதவுகின்றன. அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள் அழகன் குளம், பெர்னிகே, குவாசிர் அல் காதிம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள பானை எழுத்துக்களோடு ஒத்துள்ளன. இவற்றின் மூலமாக அறியப்படும் தமிழ்ப் பெயர்கள் சங்க இலக்கியத்தோடு தொடர்பு உள்ள பெயர்களாகக் காணப்படுகின்றன. 'பேச்சு வழக்கில் இருந்து வந்த தமிழ்மொழி சாதாரண மக்களிடையே பானை எழுத்துக்களாகப் பொறிக்கப்படும் பொழுது தமிழ்ப்பிராமியாக இருந்திருக்க வேண்டும்.'[128]

தமிழ் எழுத்துக்கள் காலத்திற்குக் காலம் மாறி மாறி வந்துள்ளன. எழுத்துக்களின் வரிவடிவம் மாறிக்கொண்டே இருந்தமையால் பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்தின் வரிவடிவத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள இயலவில்லை. தென்னிந்தியாவிற்கு இடம் பெயர்ந்த சமண, பௌத்தத் துறவிகள் தமிழகத்தில் சமயப் பணியில்

126. Vimala Begley 1983 : 467 127 Ibid 477

128.சா.குருமூர்த்தி 1974:49



ஈடுபட்டபோது வடபிராமி எழுத்துக்களையும் பரவச் செய்தனர். சமண, பௌத்தச் சமயங்களோடு பிராமி மொழியும் தமிழ்நாட்டில் காலூன்றியது. வடஇந்தியா முழுவதும் பரவியிருந்த வடபிராமி கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் புகுந்தது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் மௌரியப் பேரரசு வளர்ச்சியடையத் தொடங்கியபோது தென்னிந்தியாவில் சமணமும் பௌத்தமும் பரவத் தொடங்கின. சமயப் பரவலோடு வடபிராமி வரிவடிவமும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில்தான் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவத் தொடங்கியது.

அசோகருடைய பிராமி எழுத்துக்களுக்கும் பழந்தமிழகத்துக் குகைக் கல்வெட்டு எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதால் அசோகர் காலத்தில்தான் தமிழகம், ஆந்திரா, இலங்கை ஆகிய இடங்களுக்கு வடபிராமி வரிவடிவ அமைப்பு பரவியிருக்க வேண்டும்.

புதிதாக வந்த வடபிராமி எழுத்து தமிழக எழுத்துக்களோடு இரண்டறக் கலந்து பரவுவதற்கு ஒரு நூற்றாண்டுக் காலமாவது ஆகி இருக்கவேண்டும். வடபிராமி எழுத்து தமிழகத்தில் வருவதற்கு முன்னே புழங்கி வந்த பழந்தமிழ் வரிவடிவம் சிறிதுசிறிதாக மாற்றம் அடைந்துவிட்டது.

அசோகர் காலத்தில் அல்லது அவருடைய காலத்திற்குச் சற்றுப் பிறகு கி.மு. 2-ஆம் நூற்றாண்டு அளவில் தமிழ்மொழிக்குத் தமிழ்ப்பிராமி எழுத்து வரிவடிவம் அமைத்துக் கொள்ளப்பட்டது. பழந்தமிழ் எழுத்துக்களில் காணப்படும் தமிழுக்கே சிறப்பாக உரிய ழ, ற, ன ஆகிய எழுத்துக்களைப் பிராமி எழுத்துக்களோடு கலந்து தமிழ்ப்பிராமி வரிவடிவத்தைப் பௌத்தத் துறவிகள் அமைத்துக்கொண்டனர்.[129] இவ்வாறு அமைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப்பிராமிக்குப் பிற்காலத்தில் 'திராவிடி' என்று பெயரிட்டு அழைத்து வந்துள்ளனர்.தொல்பொருள் ஆய்வில் ஈடுபட்டிருந்த 'பிரின்ஸிப்' என்பவர் பழங்காசுகளையும் அவற்றில் உள்ள எழுத்துக்களையும் பற்றி ஆராயும் முயற்சியில் ஈடுபட்டார். பழங்காசுகள் சிலவற்றில் அசோகர் காலத்துப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தார்.[130] அக்காசுகளின் மறுபக்கத்தில் பழைய கிரேக்க எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. கிரேக்க எழுத்துச் சொற்களே பிராமி எழுத்தின் வடிவத்தில் எழுதப்பட்டிருந்தது என்பதை அறிந்த பிரின்ஸிப், கிரேக்க எழுத்தின் ஒலியைக் கொண்டு பிராமி எழுத்துக்களின் ஒலியைக் கண்டுபிடித்தார்.

129.மயிலை சீனி.வேங்கடசாமி 1981:3 130.மே.நூல்:11-12

Tamil Heritage Foundation International (THFi)

வடபிராமி எழுத்து வருவதற்கு முன்பு பழந்தமிழ் எழுத்து நடைமுறையில் இருந்து வந்துள்ளது. தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் ஆகியன பழந்தமிழ் எழுத்தினால் எழுதப்பட்டுள்ளன. பிராமி எழுத்து தமிழகத்தில் நுழைந்தபிறகு பழைய தமிழ் எழுத்து வடிவம் மெல்ல மெல்ல ஒதுக்கப்பட்டுப் புதிய பிராமி வடிவம் மெல்ல மெல்ல முதன்மை பெறத் தொடங்கியது. தமிழ்ச் சமுதாயத்தில் இச்சீர்திருத்தம் நடைபெற இரண்டு நூற்றாண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும்.[131] ஏனெனில் ஆனைமலை, குன்றக்குடி, அழகர்மலை ஆகிய இடங்களில் கண்டறிப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கொச்சைத் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளன. அதே காலகட்டத்தில் சங்கத்தமிழ் இலக்கியங்களும் மக்களிடையே வழங்கி வந்துள்ளன. இவ்வாறு ஒரே சமயத்தில் பழந்தமிழ் எழுத்துக்களும் புதிய தமிழ்ப்பிராமி வரிவடிவமும் பயின்று வந்துள்ளன.

மெசபடோமியாவில் பழங்காலத்தில் இருந்த கால்டியா நாட்டில் ஒரே சமயத்தில் இரண்டு வகையான எழுத்து முறைகள் வழங்கி வந்தமையை வரலாற்றால் அறியலாம்.[132] கால்டியா நாட்டு மதகுருமார்கள் தங்களுக்கென்று ஒரு வகை எழுத்தையும் எழுத்தறிவில்லாக் குடிமக்களுக்கென்று மற்றொரு வகை எழுத்தையும் எழுதினார்கள்.

இதே போன்று தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் சங்கப்புலவர்கள் பயன்படுத்திய தமிழ் எழுத்து ஒரு வகையாகவும் சமண, பௌத்தச் சமயத்தினர் எழுதிய தமிழ்ப்பிராமி எழுத்து வேறு வகையாகவும் இருந்துள்ளன.

பிராமி எழுத்துக்களின் தாக்கம் தமிழகத்தில் மிகுதியாகப் பரவி வளர்ந்ததனால் பழைய தமிழ் வரிவடிவம் மாற்றம் அடைந்திருக்க வேண்டும். பிராமி வரிவடிவத்திலிருந்து தமிழ்ப்பிராமி ஏற்றுக் கொண்டுள்ள மொழியமைப்பில் சில முக்கியக் கருத்துக்கள் நினைவில் கொள்ளத்தக்கன. அவையாவன,

1. தமிழ் மொழியமைப்புக்குத் தேவையில்லாத பிராமி எழுத்துக்களைத் தவிர்த்தல் - குறிப்பாக ஒலிப்புடைய மெய்யெழுத்து, மூக்கொலிகள் (Aspirates), இரட்டைஒலிகள் (Sibilants).

2. தமிழில் உள்ள சிறப்பு ஒலிகளைக் கொண்ட ழ், ள், ற், ந் (l, l, r, n) ஆகியவற்றுக்குப் புதிய வடிவங்களைச் சேர்த்துக்கொள்ளல்.

131.மே.நூல்:25-26 132.மே.நூல்:26



3. சில எழுத்துக்களுக்குச் சில புதுமைகளையும் மாற்றங்களையும் செய்துகொள்ளல். (Use of i symbol for i sound, and a special tubler form m)

அரிக்கமேட்டுப் பானைகளில் மட்டுமின்றிப் பழந்தமிழகத்தின் குகைக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், முத்திரைகள், மோதிரங்கள் ஆகியவற்றிலும் தமிழ்ப்பிராமி எழுத்துக்களே பொறிக்கப்பட்டுள்ளன. பழைய சிங்களபிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு ஒன்றும் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அரிக்கமேட்டில் விமலா பெக்லியின் அகழ்வாய்வில் பானை எழுத்துக்களுடன் கூடிய 31 ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் ஒன்பது ஓடுகள் முற்றிலும் சிதைந்து படிப்பதற்குத் தெளிவில்லாமல் உள்ளன. பத்து ஓடுகளில் சில எழுத்துக்கள் தெளிவின்றி இருப்பதால் முழுமையாகப் படித்துணர இயலவில்லை. எஞ்சிய பனிரெண்டு ஓடுகள் மட்டுமே முழுமையான வார்த்தைகளுடன் படித்துணரும்படிக் கிடைத்துள்ளன.[133] அழகன்குளத்திலும் அரிக்கமேட்டில் காணப்பட்டதைப் போன்று பழைய சிங்களபிராமியில் எழுதப்பட்ட பானை ஓடுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

பெருங்கற்புதைவுக் காலத்திலிருந்து யவன வணிகம் நடைபெற்ற காலகட்டம் வரை பண்டைத் தமிழர் பயன்படுத்திய மொழி, எழுதுமுறை ஆகியவற்றை அரிக்கமேட்டுப் பானை எழுத்துக்கள் புலப்படுத்துகின்றன. திராவிடி வரிவடிவ முறையைப் பயன்படுத்தி வந்த அரிக்கமேட்டு மக்கள் அப்பகுதியில் பரவிய சமண, பௌத்தச் சமய ஆக்கிரமிப்பின் காரணமாகப் பிராமி வரிவடிவத்தையும் ஓரளவு பின்பற்ற நேர்ந்தது.

## ஆண் பால் பெயர்கள்

அரிக்கமேட்டில் கிடைத்த சில ஓடுகளின் மீது காணப்படும் சொற்கள் பானையை வனைந்தவருடைய பெயராக இருக்கலாம். ஏனெனில் அவை நீண்ட வாக்கியமாகக் காணப்படவில்லை. மட்பாண்டங்கள் ஈரமாக இருந்தபோதே அவற்றில் எழுத்தாணி போன்ற கருவியினால் கீறிப் பிறகு சூளையில் இட்டுக் கொளுத்தப் பட்டவையாகத் தெரிகிறது. அரிக்கமேட்டில் கிடைத்த பெரும்பாலான பானை எழுத்து ஓடுகளின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும். பானை ஓடுகளில் காணப்படும் பெயர்ச்சொற்கள் பெரும்பாலும் ஆண்பால் பெயர்ச்சொற்கள் ஆகும்.

133. Vimala Begley 1996 : 297

Tamil Heritage Foundation International (THFi)

ஒரு சில சொற்கள் ஆண்பால் பெயரின் பின்னொட்டுக்களாகக் (tàn), (—a tan) காணப்படுகின்றன.

இரண்டு ரௌலெட்டெட் பானை ஓடுகளில் அவற்றைச் செய்தவரின் பெயர்கள் தமிழ்ப் பிராமியிலும் பிராகிருதத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. அவையாவன, முதிகுஊரன் அகல் (தமிழ்ப்பிராமி), யதுவல பூதி பதி (பிராகிருதம்) என்பனவாகும். இவை உடைந்த அகல் விளக்கின் ஓடுகளில் காணப்படுகின்றன. ஆந்திர மாநிலம் - ஸ்ரீகாகுளம் மாவட்டம் சாலிகுண்டம் என்னும் இடத்தில் அரிக்கமேட்டில் கிடைத்ததைப் போன்ற ரௌலெட்டெட் வட்டிலில் தமிழ்ப்பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட நகுலன் (nakulàn) என்னும் வாசகம் காணப்படுகின்றது.[134] பாண்டவ சகோதரர்களுள் ஒருவனான நகுலனின் பெயரைச் சங்ககால மக்கள் (கி.பி. முதல் நூற்றாண்டு) தங்களுக்குச் சூட்டிக் கொண்டதை நோக்கும்போது மகாபாரத இதிகாசத்தின் செல்வாக்கு பண்டைத் தமிழகத்தில் மேலோங்கி இருந்தமை உறுதியாகின்றது. கீழ்க்காணும் சொற்கள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் ஆண்பால் பெயர்களாகவும் பின்னொட்டுக்களாகவும் காணப்படுகின்றன.

1. Vayan – வாயன் / வயன்

சிதைந்த எழுத்துக்களை உடைய ஓட்டின் முதல் எழுத்து ந அல்லது ய ஆக இருக்கலாம். கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியதாகக் கருதப்படும் பானை ஓட்டில் காணப்படும் இச்சொல் ஆண்பால் பெயரின் பின்னொட்டாகும்.

2. atan makan - ஆதன் மகன்

வாழியாதன், சேரலாதன் ஆகிய சங்க இலக்கியச் சொற்களில் காணப்படும் பின்னொட்டு இங்கு முழுப்பெயராகப் - பெயரடையாக வந்துள்ளது. இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டுக்கும் இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகும்.

3. …nakal - [சாத்த] ன் அகல்

முதற்பெயர் விடுபட்ட நிலையில் இப்பானை ஓட்டின் பெயர் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டு ஆகும்.

134.மே.நூல்:290



## குல-கோத்திரப் பெயர்கள்

அரிக்கமேட்டில் விமலா பெக்லி ஆய்வில் கண்டறியப்பட்ட மற்றொரு பானை ஓட்டில் 'சாத்தன் ஆவி ஈநிகொதி ஈசன ஆதிதை வணிக' எனும் தமிழ்ப்பிராமி வாசகம் காணப்படுகின்றது. இவ்வாசகத்தினைத் தொல்பொருள் ஆய்வாளர்கள், 'சாத்தன் ஆவி இன் கோதி ஈசன் ஆதி தைவன்' என்று படித்துள்ளனர்.[135] இதிலுள்ள கோதி என்பது கோத்திரத்தைக் குறிக்கும் சொல்லாகும். இத்தொடரைச் சாத்தன் ஆவி, நிதோதி ஈசன், ஆதிதை வணிகன் என்று மூன்று பெயர்களாகவோ அல்லது ஒரே ஆளைக் குறிப்பதாகவோ கொள்ளலாம். அழகரை உறையூர் ஆகிய இடங்களிலும் பிராமி எழுத்துக்களை உடைய இத்தகைய பானை ஓடுகள் சிதைந்த நிலையில் கிடைத்திருப்பதால் அவற்றை முழுமையாகப் படித்துணர இயலவில்லை.

1. n Kulàvày(a)- பழந்தமிழ் எழுத்தும் பிராமியும் கலந்து காணப்படும் இப்பெயர் Kulava[n] 'குலவன்' என்னும் பெயராக இருக்கலாம். நன்குலத்தைச் சார்ந்தவன் என்னும் குடிப்பெயராகப் பானை ஓட்டில் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் காலம் கி. மு. 2-ஆம் நூற்றாண்டு.

2. . . nakkan 855 ya < [Ka] nakkan - கணக்கன்

இப்பெயரின் இடையிலுள்ள எண் 855 அல்லது 558 ஆக இருக்கலாம். அரிக்கமேட்டுப் பானை எழுத்தில் காணப்படும் இப்பெயர் தமிழ்ப்பிராமியில் பொறிக்கப்பட்ட அழகர்மலைக் குகைக் கல்வெட்டில் [Ka] nakkan என்று காணப்படுகின்றது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும்.

3. Uttiran - உத்திரன் (தமிழ்ப்பிராமி)

வடமொழியில் உத்திரம் Uttiram என்றும் தமிழில் உத்திராடம் என்றும் வழங்கப் பெறும் நட்சத்திரப் பெயரான இது பண்டைத் தமிழகத்தில் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதன் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு ஆகும். அரச்சலூர் குகைக் கல்வெட்டில் இத்தமிழ்ப் பிராமிப் பெயர் பிற்கால n வடிவத்துடன் காணப்படுகின்றது.

4. attiràya - ஆத்திரேயே (ஆதிரையன்)

135. Ibid : 122

Tamil Heritage Foundation International (THFi)

இப்பெயர் கோத்திரப் பெயராகவோ சோதிடவியல் சார்ந்த ஆண்பால் பெயராகவோ பயன்படுத்தப்பட்டு இருக்கலாம். மணிமேகலையில் சாதுவன் மனைவி 'ஆதிரை' நட்சத்திரப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளாள். 'ஆதிரையன்' (atiraiyan) என்னும் சொல் முற்காலப் பல்லவர் காலத்தில் கோத்திரப் பெயராக வழங்கப்பட்டு வந்துள்ளது.[136] ஆதிரையன் என்னும் சொல் சிவனைக் குறிக்கும் சொல்லாகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

### பெண் பால் பெயர்

அரிக்கமேட்டில் பிரெஞ்சியர் நடத்திய அகழ்வாய்வில் முதலும் இறுதியும் குறையுடைய நிலையில் தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட பெண்பால் பெயர் ஒன்று (பி. இசட். பட்டாபிராமன் அகழ்வாய்வு வெளியீட்டில்) காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| n(a)Kuttai | -yperu | -தமிழ்ப்பிராமி |
| குத்தை | பெரு | -தமிழ் |
| Gupta | (குப்தா) | -வடமொழி |
| Gutta | (குத்தா) | -பிராகிருதம் |

இலங்கையில் பழங்காலக் குகைக்கல்வெட்டில் 'Guta' (Gutta) என்னும் பெண்பால் பெயர் பெண்ணடியார்களைக் குறிப்பிடுவதற்காக வழங்கப்பட்டுள்ளது. விமலா பெக்லிக்கு முந்தைய அரிக்கமேட்டு அகழ்வாய்வில் 'தெவ்வை தத்தை' tevvai tattai என்னும் பெண்பால் பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓடு கிடைத்துள்ளது.[137] வடமொழியில் வழங்கப்படும் 'தேவதத்தா' (Devatatta) என்னும் பெண்பால் பெயராகவே வழங்கப்பட்டுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. சங்க இலக்கியத்தில் 'தெவ்'[138] 'தெவ்வர்'[139] என்னும் சொற்கள் வழங்கப் பட்டுள்ளனவே தவிர 'தெவ்வை' என்னும் சொல் இடம்பெறவில்லை. ஒருவேளை 'தவ்வை' என்னும் சொல்லைத் 'தெவ்வை' என்று திரித்துப் பானையில் எழுதியிருக்கலாம். சங்க இலக்கியத்தில் தவ்வை[140], தத்தை[141] போன்ற சொற்கள் பெண்பாலைக் குறிக்கும் சொற்களாகவே கையாளப்பட்டுள்ளன.

136. Ibid . 315 137. மே.நூல்:296 138. பதிற்.152:8 139. முல்லைப்:18
140. தொல்.பொருள்.613:3, திணைமாலை.73:3 141. குறள்.167:2, சிலப்.15:80



### அகராதிப் பெயர்கள்

makan - மகன் என்று தமிழ்ப்பிராமியில் பொறிக்கப்பட்ட பானை ஓடும் elá catán - ஏள சாத்தன் என்று பொறிக்கப்பட்ட பானை ஓடும் அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. ila - இள என்னும் அடைமொழிப் பெயரின் பேச்சு வடிவமே elá ஏள(சு) என்பதாகும். பெயருக்கு முன்னொட்டாக வழங்கப்பெறும் இவ்வடைமொழி சகோதரருள் இளையவரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பானை எழுத்துக்களில் பயின்று வரும் கண்ணன், சாத்தன் ஆகிய பெயர்கள் சங்க காலத்தில் பரவலாக இருந்துள்ளமையைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறியலாம்.

வாயகன்ற பாத்திரம் அல்லது (அகல்) விளக்கு என்னும் பொருள் தரும் akal -அகல் என்னும் சொல் ஒரு பானை ஓட்டில் காணப்படுகின்றது. அகலுக்குச் சொந்தக்காரரின் பெயருக்குப் பின்னே இப்பெயர் (akal) பொறிக்கப்பட்டுள்ளது. இதே போன்று கொடுமணல் என்னும் ஊரில் கிடைத்த இரண்டு பானை ஓடுகளில் அகல் என்னும் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. கரூரில் கிடைத்த ஒரு பானை ஓட்டில் கு[ற்]றகல் Ku [r] rakal என்னும் பெயருடன் காணப்படுகின்றது. குறுகிய அல்லது சிறிய அகல் என்பதே இச்சொல்லின் பொருளாகும்.

Kuyiran - குயிரன் என்னும் எழுத்துடைய ஓடு ஒன்று அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. இது தமிழில் வழங்கப்படும் 'குபேரன்' என்னும் சொல்லாக இருக்கலாம். வடமொழியில் குபேரா என்று வழங்கப்படுகின்றது. இப்பானை ஓட்டின் காலம் கி.மு. 200-க்கும் கி.மு. 100-க்கும் இடைப்பட்ட காலத்ததாகும்.

பழந்தமிழகக் குகைக் கல்வெட்டில் Kuviran - குவிரன் என்று இப்பெயர் காணப்படுகின்றது. இலங்கையில் சிங்கள பிராமியில் எழுதப்பட்ட பானை ஓட்டில் இப்பெயர் Kubira ha - குபிரஹ என்று காணப்படுகின்றது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும்.

Kanan - க[ண்]ணன் என்னும் பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓடும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது. அரிக்கமேடு தவிர உறையூர், அழகன்குளம், கொடுமணல் ஆகிய இடங்களில் சங்க இலக்கியத் தொடர்புடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.[142] அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள பெயர்களாவன,

142. Vimala Begley 1996 : 295

Tamil Heritage Foundation International (THFi)

Mulán - மூலன் - (உறையூர்)

Tica- an - திச்சன் (தித்தன்) - (அழகன்குளம்)

Visaki - விசாகி - (கொடுமணல்)

என்பனவாகும். இப்பெயர்களுள் மூலன், விசாகி என்பன சோதிடவியல் பெயர்களாகும். திச்சன் என்பது தித்தன் என்ற அரசகுடியைச் சேர்ந்த ஆண்பால் பெயராகும்.

**எண்ணுப் பெயர்கள்**

சங்ககாலத்தில் 'எண்' என்ற சொல் எண்ணுகின்ற எண்ணையும் கணிதத்தையும் குறிப்பிட்டது. இலட்சம் என்ற பேரெண்ணை நூறாயிரம் என்றே குறிப்பிட்டனர்.[143] திருவள்ளுவர் காலத்தில் 'கோடி' என்ற இலக்கமும் தமிழில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.[144] கோடிக்கு மேற்பட்ட எண்களைக் குறிக்கவும் தமிழில் சொற்கள் உள்ளன. வெள்ளம், ஆம்பல், தாமரை, பள்ளம் என்பன அவ்வெண்ணுப் பெயர்களுள் சிலவாகும். அரிக்கமேட்டில் எண்ணுப் பெயர்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் சில கிடைத்துள்ளன.

கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பானை ஓடு ஒன்றில் 8 மற்றும் 5 ஆகிய எண்ணுப்பெயரின் வடிவங்கள் கிடைத்துள்ளன. மற்றொரு பானை ஓட்டில் எழுதப்பட்டுள்ள பெயரின் இரண்டு பக்கங்களிலும் 5 என்னும் எண்ணுப்பெயர் தெளிவில்லாமல் காணப்படுகின்றது. பிரெஞ்சு அகழ்வாய்வில் கிடைத்ததும் பி. இசட். பட்டாபிராமனால் வெளியிடப்பட்டதுமான ஒரு பானை ஓட்டில் (+) கூட்டல் போன்ற குறியீடு காணப்படுகின்றது.[145] இதே ஓட்டில் காணப்படும் இயற்பெயர் ஒன்றின் அருகே 4 என்ற எண்ணுப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இயற்பெயருக்கு அருகே இந்த எண்ணுப் பெயர் எழுதப் பட்டிருப்பதால் கணக்கிடுவதற்காக இக்கலன் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். தென்னார்க்காடு மாவட்டம் 'தொண்டூர்' என்னுமிடத்தில் கிடைத்த குகைக் கல்வெட்டில் 3 என்னும் எண்ணைக் குறிக்கும் எண்ணுப்பெயர் மட்டுமே கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு ஆகும்.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில்தான் தமிழ்ப்பிராமியில் எழுதப்பட்ட

143. தொல்-எழுத்.471:1 144. குறள்.377:1 145. Vimala Begley 1996 : 296



பானை எழுத்துக்கள் கண்டறியப்பட்டன. பிரெஞ்சு அகழ்வாய்வின்போது(1949) தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் கொண்ட ஐந்து ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. விமலா பெக்லியால் 1989-92ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் 14 ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த பத்தாண்டுகளாகத் தமிழகத்தில் நடந்த அகழ்வாய்வுகளில் அரிக்கமேடு தவிரக் காஞ்சிபுரம், அழகரை, உறையூர், கரூர், கொற்கை, வல்லம், கொடுமணல், அழகன்குளம், சாலிகுண்டம் (ஆந்திரா), கந்தரோடை, அனுராதபுரம் (இலங்கை) ஆகிய இடங்களிலும் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. வடபிராமி, தமிழ்ப்பிராமி, சிங்களபிராமி, தமிழ், பிராகிருதம் ஆகிய வடிவங்களில் பெயர்ச்சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வணிகர் பெயர், மட்கல உரிமையாளர் பெயர், குலப்பெயர், கோத்திரப்பெயர், பெண்பால்பெயர், பெயரடைகள், முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்கள் ஆகியன பானை ஓடுகளில் காணப்படுகின்றன.

அந்நியரின் மொழிபெயர் தேயமாக அரிக்கமேடு இருந்தமைக்கு இப்பெயர்களும் சாட்சிகளாக உள்ளன. பெருங்கற்புதைவுக் காலத்திலிருந்து யவன வணிகம் நடைபெற்ற காலகட்டம் வரை தமிழக மக்கள் பயன்படுத்திய மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பானை எழுத்துக்களால் அறிய முடிகின்றது.

**கீறல் குறியீடுகள் (Graffiti)**

பெருங்கற்புதைவுக் காலத்தைச் சேர்ந்த பானை ஓடுகள் பலவற்றில் கிராஃபிடி (Graffiti) என்றழைக்கப்படும் கீறல் குறியீடுகள் காணப்படுகின்றன. பாத்திரங்களின் வெளிப் பக்கத்திலோ உள் பக்கத்திலோ பல்வேறு கோடுகளைக் கொண்டு வரையப்பட்ட குறிகள் காணப்படுகின்றன. பானை ஈரமாக இருக்கும்போது வரையப்பட்ட குறிகள் சற்று ஆழமாகவும் நேர்த்தியாகவும் காணப்படுகின்றன. சுடப்பட்ட பின்பு வரையப்பட்ட குறிகள் மெல்லியதாகவும் மங்கலாகவும் காணப்படுகின்றன. இக்குறிகள் பழந்தமிழக மக்கள் பயன்படுத்திய உருவங்களைப் புலப்படுத்துகின்றன. இவற்றைப் பற்றி ஆய்வாளரிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

Tamil Heritage Foundation International (THFi)

இன்ன உருவம் என்று அறிந்துகொள்ள இயலாத சில கீறல் குறிகள் வரையப்பட்ட பானை ஓடுகளும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இவை பலவிதமான அடையாளக் குறிகள், வில், அம்பு, சூலம், செடி, மரம், ஏணி போன்ற உருவங்களைக் கொண்டவையாக விளங்குகின்றன.[146] இவற்றுள் ஒழுங்கற்ற நேர்க்கோடுகளும் அடுக்கடுக்கான கோடுகளும் காணப்படுகின்றன. இத்தகைய கீறல் குறிகளுள் சில பிராமி எழுத்தின் வரிவடிவத்தோடு ஒப்புமை உடையனவாய்க் காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு கீறல் குறிகளுக்கும் பண்டைய எழுத்துக்களின் வரிவடிவங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்குமோ என்று ஆய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஹரப்பா பானை ஓடுகளின்மேல் காணப்படும் சில கீறல் குறிகள் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளின் மேலும் காணப்படுகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட இத்தகைய கீறல் குறிகளைக் கொண்ட பானை ஓடுகள் தமிழகத்தில் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை முறைப்படி வரிசைப்படுத்தி நுட்பமாக ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிப்படும். ஹரப்பா முத்திரைகளில் காணப்படும் எழுத்துக்களில் சில தமிழகத்தில் கீறல் குறிகளாகக் காட்சியளிக்கின்றன. இன்னும் சில, தமிழ்ப்பிராமி எழுத்துக்களை ஒத்திருக்கின்றன.

தொல்பொருள் ஆய்வாளர்கள் கீறல் குறியீடுகளைப் பற்றி வெவ்வேறு விதமான விளக்கங்கள் அளித்துள்ளனர். ஹண்ட் (E.H. Hunt) என்னும் ஆய்வாளர் கீறல் குறிகளைப் பெருங்கற்புதைவுக் காலக் கல்வட்டங்களுடன் இணைத்துப் பேசுகின்றார்.[147] அதற்குக் காரணம் பெருங்கற்புதைவுக் காலச் சவக்குழிகளில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மேல்தான் இக்குறிகள் முதன்முதலில் கண்டறியப்பட்டன என்பதேயாகும். பி.பி. லால் (B.B.Lal) என்னும் ஆய்வாளர் இக்கீறல் குறிகள் பெருங்கற்புதைவுச் சவக்குழிகளில் புதைக்கப்பட்டிருக்கும் மக்களைக் குறிக்கும் என்று கூறுகின்றார். ஆனால் யஸ்தானி (Yazdani) என்னும் அறிஞரோ இக்குறிகள் ஒருவகை எழுத்துவடிவம் என்று கூறியுள்ளார்.[148] தமிழகத்தில் பெருங்கற்புதைவுக் காலச் சவக்குழிகளில் மட்டுமின்றி அம்மக்கள் வசித்த இடங்களிலும் இக்குறிகள் காணப்படுகின்றன. ஆதலால் இவை இடுகாட்டில் புதைக்கப்பட்டிருக்கும் 'சவக்குழிக் குறிகள்' என்ற கருத்து ஏற்புடையதாகாது. இக்குறிகளில்

146 சோ.முருகேசன் 1997:94) 147.சா.குருமூர்த்தி 1974:64). 148 மே.நூல் :66



இருந்து சற்றே வேறுபட்டு அரிக்கமேடு, உறையூர், அழகன்குளம் ஆகிய இடங்களில் பிராமி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. எனவே கிரா∴பிடி வடிவம் எனப்படும் கீறல் குறிகள் ஒருவகையான எழுத்து வடிவம் என்ற கூற்றும் ஏற்புடையதாகாது. பானைகளில் காணப்படும் கீறல் குறிகள் பானை வனைந்தவரின் பெயர் அல்லது கையெழுத்தைக் குறிப்பனவாக இருக்கலாம்.

### வீரைப்புலவர்கள்

சங்க இலக்கியத்தில் வீரை என்னும் ஊரைப் பற்றி மூன்று குறிப்புக்கள் காணப்படுகின்றன. புறநானூற்றில் 320-ஆவது பாடலைப் பாடியவராக 'வீரை வெளியனார்' என்னும் புலவர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவருடைய மகனான 'வீரை வெளியன் தித்தனார்' என்னும் புலவர் அகநானூற்றில் 108-ஆவது பாடலைப் பாடியுள்ளார். இவர்கள் இருவரும் வாழ்ந்த ஊர், 'அடுபோர் வேளிர் வீரை முன்றுறை'[149] என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பாடலடியில் உள்ள வேளிர் என்னும் பெயர் சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர் மரபினருள் ஒரு பிரிவினரைக் குறிக்கும். எனவே அரிக்கமேடு, வீராம்பட்டினம் ஆகிய பகுதிகள் சங்க காலத்தில் வேளிர் மரபினரின் ஆட்சியின் கீழ் இருந்திருத்தல் வேண்டும்.

சங்ககாலம் தொடங்கிப் பிற்காலச் சோழர்காலம் வரையிலும் வீரை என்னும் பெயர் வழக்கில் இருந்து வந்துள்ளதை வரலாற்றின் மூலம் அறியலாம். திருப்பாதிரிப் புலியூர் பாடலீசுவரர் கோயிலில் உள்ள முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள் 'வீரைத் தலைவன் பரசமயக் கோளரி மாமுனி' என்னும் புலவர் பற்றியும் அவர் இயற்றிய நூல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளன.[150] கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புலவர் அஷ்டாதசப் புராணம், கன்னிவனப் புராணம், பூம்புலியூர் நாடகம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இப்புலவர் வீரை என்றழைக்கப்பட்ட வீராம்பட்டினத்தைச் சார்ந்தவராவார்.

### சமயம்

வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில் எழுந்த சமயம் அச்சத்தில் பிறந்து நம்பிக்கையில் வளர்ந்து வந்தது. இயற்கை வழிபாடும் நடுகல் வழிபாடும் பழந்தமிழரின் சமய நம்பிக்கையை வெளிப்படுத்துவனவாய்

149. அகம் 206:13 150. Revue Historique de Pondicherry Vol.10. 1972 : 42

Tamil Heritage Foundation International (THFi)

உள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்திற்கேற்பச் சேயோன், மாயோன், வேந்தன், வருணன், கொற்றவை ஆகியோர் வழிபடு தெய்வங்களாகக் கருதப்பட்டனர். ஹரப்பா, மொகஞ்சதாரோ மக்கள் சிவலிங்க வழிபாடு செய்தனர் என்பதை அங்குக் கிடைத்த சான்றுகளால் அறியலாம். தமிழர்கள் சிவனையும் முருகனையும் தமது சிறப்புக் கடவுளராகப் போற்றி வழிபட்டுள்ளனர். செங்கற்களாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட தெய்வத் திருக்கோயில்கள் முச்சந்திகளிலும் ஊர்ப் பொதுவிடங்களிலும் காணப்பட்டன. கோயில்களில் மக்கள் நித்திய வழிபாடு செய்தலோடு திருவிழாக்களும் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். தெய்வக் கோயில்களில் சித்திரங்களைத் தீட்டிய மண்டபங்கள் அழகுறக் காட்சியளித்தன. இதனை எழுத்துநிலை மண்டபம்[151] என்பர். திருப்பரங் குன்றத்தில் அமைந்திருந்த எழுத்துநிலை மண்டபத்தில் உள்ள சித்திரக் காட்சிகளைக் கண்டு களித்து வியப்படைந்த மக்கள் ஒருவருக்கொருவர் உரையாடி மகிழ்ந்த செய்தி[152] பரிபாடலில் விளக்கமாகப் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் சமயப் பொறை மிகுந்திருந்தமைக்கு அப்போது தமிழகத்தில் பரவிய சமண, பௌத்தச் சமயங்களே சான்றுகளாகும். பத்ரபாகு என்னும் சமண முனிவர் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வடக்கே இருந்து சிரவணபெலகோலாவில் வந்து தங்கினார். அவருடைய சீடர் விசாக முனிவர் என்பவர் சமண சமயத்தைப் பரப்ப வேண்டித் தமிழகத்திற்கு வருகை புரிந்தார். விசாக முனிவர் தமிழகத்திற்கு வருவதற்கு முன்பே சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் உள்ள மலைப்பகுதிகளில் அமைந்திருந்த பாழிகளில் பல சமண முனிவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். புதிய கற்காலம் முதற் கொண்டே கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குப் (சமணசமயப் பரவல் உட்பட) பல பண்பாடுகள் தொண்டை மண்டலத்தின் வழியாகப் பரவின. தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியாகப் புதுச்சேரி (அரிக்கமேடு) விளங்கியதால் சமண சமயத்தின் பாதிப்பு இங்கு மிகுதியாகவே காணப்பட்டது.

பௌத்தச் சமயம் தென்னிந்தியாவில் பரவுவதற்கு முன்னமே சமண சமயம் பரவியிருக்க வேண்டும். சமண முனிவர்கள் தாம் செல்லும் இடங்களில் உள்ள மொழிகளைக் கற்று அம்மொழிகளிலேயே தமது சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பும் வழக்கம் உடையோராய் இருந்துள்ளனர். சமண சமய வழிபாட்டைத் தமிழகத்தில் நிலைநிறுத்தும்

151.பரி.19:53 152.மே.நூல் 19:46-53



வகையில் சமணசமயக் கடவுளான அருகனின் சிலையைப் பல இடங்களில் சமண முனிவர்கள் நிறுவத்தொடங்கினர். இவ்வகையில் பழந்தமிழகத்தில் முகிழ்த்த அருகன் வழிபாட்டுத் தலங்களுள் அருகன்மேடு (அரிக்கமேடு) தலைசிறந்து விளங்கிய இடமாகத் திகழ்ந்தமை முன்பே கூறப்பட்டது.

தமிழகத்தில் அசோகர் காலத்தில் நிகழ்ந்து வந்த சமண-பௌத்தப் பூசல்களின் பாதிப்பு அரிக்கமேட்டிலும் எதிரொலிக்கவே செய்தது. அரிக்கமேட்டுப் பகுதியில் கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் சமண, பௌத்தச் சமயங்களின் செல்வாக்கு நிலைபெற்று இருந்தமையினை அங்கு நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வு முடிவுகள் தெளிவு படுத்துகின்றன.

அரிக்கமேட்டுப் பகுதியில் சமணத் தீர்த்தங்கரரின் சிலைகள் பல கண்டெடுக்கப் பட்டுள்ளன. அரிக்கமேட்டிற்கு அருகில் உள்ள காக்காயந்தோப்பு என்னும் சிற்றூரில் சமணத் தீர்த்தங்கரரின் சிலையைப் பிரமன் சிலையாகவே கருதி அப்பகுதி மக்கள் இன்றளவும் வழிபட்டு வருகின்றனர்.

புதுவை அரசின் பொதுப்பணித்துறை தலைமை அலுவலக வளாகம், கருவடிக்குப்பம், கிருமாம்பாக்கம் ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் கிடைத்துள்ளன. கிருமாம்பாக்கத்தில் 40 செ.மீ. உயரமுள்ள புத்தர் சிலையின் தலை மட்டும் கிடைத்துள்ளது. இச்சிலையின் சதுர வடிவ முகம், எடுப்பான நாசி மற்றும் உதடுகள் ஆகியவற்றை நோக்கும்போது இச்சிலை முற்காலச் சோழர்காலத்தைச் சேர்ந்தது என்று கருதலாம்.[153]

அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட சமணத் தீர்த்தங்கரர் ஒருவருடைய சிலையைக் காக்காயந்தோப்பில் நிறுவி அதன்மேல் கீற்றுக்கொட்டகை வேய்ந்து இந்து சமயக் கலப்புடன், 'பிரமன் கோயில்' என்று கூறி வழிபட்டு வருகின்றனர் (பிரமன் என்பதற்குச் சமணசமயக் கடவுளான அருகன் என்னும் பொருளும் உண்டு).

ஆனால் அப்பகுதியில் வாழும் மக்களில் சிலர் இக்கோயிலைக், 'கடன்கொடுத்த சாமி கோயில்' என்றும் கூறிவருகின்றனர். சமணத் தீர்த்தங்கரரின் சிலைக்கு எதிரே அப்பகுதியில் கிடைத்துள்ள வேறு இரண்டு சிலைகளையும் (சாவடி மணியம் அழகப்ப முதலியார், அவருடைய மனைவி) நிறுவியுள்ளனர்.

153.வரலாற்றுச்சுவடுகள்(தொ-1)1979:95

Tamil Heritage Foundation International (THFi)

கடன்கொடுத்தவர் சமணத் தீர்த்தங்கரர் என்றும் கடன் பெற்றவர்கள் எதிரே சிலைகளாக உள்ள சாவடி மணியம் அழகப்ப முதலியாரும் அவருடைய மனைவியும் என்று கூறிவருகின்றனர்.[154] கடன் கொடுத்தவர் வீட்டில் இருந்துகொண்டு அவர்கள் இருவரையும் பணம் கேட்பதாகவும் அதற்கு எதிரிலிருக்கும் இருவரும் பணம் செலுத்தத் தவணை கேட்பதாகவும் அப்பகுதி மக்கள் கற்பனைச் சுவை கலந்து கதையாகக் கூறி மகிழ்ந்து வருகின்றனர். அருகன்மேடு என்று அப்பகுதிக்குப் பெயர் வழங்கப்பட்டு வந்தமைக்குரிய நிலைத்த சான்றாக இன்றளவும் இக்கோயில் ஒன்றுதான் இருந்து வருகின்றது.

சிந்து சமவெளியில் கிடைத்துள்ள இலிங்க வடிவங்கள், யோக நிலையில் அமர்ந்தவண்ணம் விலங்குகளால் சூழப்பட்டுள்ள இறைவன் திருவுருவம் கொண்ட முத்திரை முதலியவற்றால் சைவ சமயத்தின் தோற்றம் பற்றி அறிய முடிகின்றது. மேலும் சிந்து சமவெளியில் தாய்த்தெய்வ வழிபாடு சிறந்திருந்தது என்பதை விளக்கப் போதிய அளவில் சுடுமண் பொம்மைகளும் கிடைத்துள்ளன. வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த தட்சசீலம், அகிச்சத்திரா, மதுரா ஆகிய இடங்களில் பௌத்த, சைவ, வைணவச் சமயங்களைச் சார்ந்த சிற்பங்களும் சுடுமண் பாவைகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன.[155] அரிக்கமேட்டிலும் சைவசமயச் சார்புடைய சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன.

முற்கால மனிதன் தனது சந்ததி இயற்கைச் சக்தி அல்லது இயற்கைப் பொருட்களின் வாயிலாகத்தான் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும் எனக் கருதி அவற்றைத் தொழுது வழிபட்டு வந்துள்ளான். விலங்குகள், தாவர வகைகள், பூச்சிகள், கற்கருவிகள், அணிகலன்கள், பாத்திரங்கள் போன்றவையும் இவற்றுள் அடங்கும். இவை மானிடவியலில் குலமரபுச் சின்னங்கள் (Totemi symbols) என்று அழைக்கப்படுகின்றன.[156] இவற்றின் உருவங்களைப் பண்டைய மக்கள் தாங்கள் வசித்து வந்த வீடுகள், பயன்படுத்திய பாத்திரங்கள் ஆகியவற்றின் மீதும் தங்கள் உடம்புகளின் சில பகுதிகளிலும் பொறித்துப் போற்றி வந்துள்ளனர்.

இந்தக் குலமரபுச் சின்னங்கள் இனத்தைக் காப்பாற்றும் கடவுள் என்று கருதப்பட்டுள்ளன. கீறல் குறிகளும் இவற்றைப் போன்றிருப்பதால் இவற்றைக் குலமரபுச் சின்னங்கள் எனக் கருத இடமுண்டு. உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் இக்காலப் பழங்குடி மக்களிடம்

154.புதுவைச்செய்திகள் ஏப்-1969:10 155.J. Marshal 1970-71: 137
156.சா.குருமூர்த்தி 1974:67



இப்பழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. இவ்வடிப்படையில் நோக்கும்போது கீறல் குறிகள் பழங்கால மக்களின் சமூக அமைப்பையும் பண்பாட்டுச் சிறப்பையும் சிறந்த முறையில் விளக்குகின்றன.

மக்கள் இயற்கைச் சக்தியினைப் போற்றி வழிபட்டு வந்துள்ளனர். அவர்கள் ஞாயிறு, நிலவு, கடல், வானம், ஆறு, மலை, மரம், செடி-கொடிகள் போன்ற இயற்கைப் படைப்புக்களில் பெரிதும் நம்பிக்கை வைத்து அவற்றை வழிபட்டு வந்துள்ளனர். கீறல் குறிகள் அக்கால மக்கள் பின்பற்றி வந்த சமயநெறிகள், அவர்கள் வணங்கிய கடவுளர் ஆகியவை பற்றிய சில மறைமுகமான செய்திகளைத் தருகின்றன. பண்டைக்கால மக்கள் பின்பற்றி வந்த இயற்கை வழிபாடு இன்றும் நம்மில் பலராலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. இவை தவிரச் சைவ, வைணவக் கடவுளர்களை ஆண்வடிவிலும் பெண்வடிவிலும் வழிபட்டு வந்துள்ளனர். பௌத்த, சமணத் துறவிகளையும் உருவங்களாகச் சமைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

பண்டைத் தமிழர் தங்கள் கற்பனைக் காட்சிப்படி தெய்வங்களுக்குக் களிமண்ணில் உருவ அமைப்புக் கொடுத்து, தீயிலிட்டுச் சுட்டு (சுடுமண் உருவங்கள் ஆக்கி), பின்னர் அவற்றை வணங்கி வழிபட்டுள்ளனர். சிவன், புத்தர், அருகன் போன்ற திருவுருவங்களும் சுவஸ்திகம் போன்ற சமயச் சின்னங்களும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. அழகரையில் ஸ்ரீவத்ஸ (இலக்குமி) உருவம் பொறிக்கப்பட்ட சமயச் சின்னமும் திருக்காம்புலியூரில் நாகலிங்கமும் கிடைத்துள்ளன. கொங்கு நாட்டில் கிடைத்துள்ள தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்களில் சைவ, வைணவக் கடவுளர்க்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது.[157] மேலும் அனுமனின் உருவம் கொண்ட 33 வகை நாணயங்களும் களப்பிரர் கால நாணயங்களும் கொங்கு நாட்டில் கிடைத்துள்ளன. இவை யாவும் கொங்கு நாட்டின் சமய ஒற்றுமையை வலியுறுத்தும் சான்றுகளாகக் காட்சியளிக்கின்றன.

அரிக்கமேட்டுப் பானை எழுத்தில் காணப்படும் குயிரன் என்னும் சொல் தமிழ்ப் பிராமியில் காணப்படுகின்றது (குபேரா-வடமொழி, குபிரா- பழைய சிங்களம், குபிரஹோ-பட்டிப்புரோலு). பழந்தமிழ்க் குகைக் கல்வெட்டில் 'குவிரன்' என்று காணப்படுகின்றது. இவை சங்க காலத்தில் குபேரத் தெய்வ வழிபாடு இருந்தமைக்கான சான்றுகளை உறுதிப்படுத்துகின்றன. அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட

157.தினமலர் 29-12-2000:12

Tamil Heritage Foundation International (THFi)

பானை ஓட்டில் களிமண் முத்திரை அச்சால் பிராகிருத மொழியில் பதிக்கப்பட்ட, 'தரசா கோதச' (Dharasa gotasa) என்னும் கோத்திரப் பெயர் உள்ளது. மற்றொரு ஓட்டில், 'கோதிரசன்' (Kotiracan) என்னும் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இது வடமொழியில் உள்ள 'கோத்ரஜ' (Kotraja) என்பதன் வடிவமாகும். பிரிதொரு பானை ஓட்டில் 'கோத்திரா-யள்' (Kottira-al) என்னும் பெண்பால் பெயர் (God-dess) பொறிக்கப் பட்டுள்ளது. இப்பெயர்களை நோக்கும்போது பண்டைத் தமிழர்களிடையே ஆரியர்களின் கோத்திரப் பெயரும் அவர்தம் சமயச் செல்வாக்கும் பரவலாக இருந்தமை புலனாகின்றது.

ஒவ்வொரு கால கட்டத்திலும் மனிதன் வாழும் சமுதாயத்தின் தாக்கமோ அல்லது அவன் பின்பற்றும் சமயத்தின் தாக்கமோ அவனது அணிவகைகளில் ஆக்கிரமிப்புச் செலுத்துவது தவிர்க்க இயலாத ஒன்றாகும். இன்றைய காலத்தில் மக்கள் அணிந்து கொள்ளும் மணிகளிலும் அணிகலன்களிலும் கடவுளின் திருமேனியோ அல்லது சமயக் குறியீட்டுச் சின்னமோ பொறிக்கப்பட்டிருப்பது போன்று அரிக்கமேட்டில் அக்காலத்தில் உருவாக்கப்பட்ட மணிகளிலும் சமயத் தாக்கம் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்துமதக் கடவுள் வழிபாடு தொடங்கியே சங்குகள் அல்லது சங்கு அணிகள் சமயச் சடங்குகளில் இடம்பிடித்தன. அரிக்கமேட்டில் கிடைத்த சங்குகளில் சில, சமய வழிபாட்டிற்கும் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும். மிக விலைவுயர்ந்த செவ்வந்திக் கல்லினால் (Amethyst bead) செய்யப்பட்ட கிளிஞ்சல் வடிவிலான இரண்டு மணிகள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன.

புதுவை ஏம்பலத்தில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த துர்க்கையம்மன் சிலை ஒன்று கிடைத்துள்ளது.[158] இச்சிலை மன்னார் வளைகுடாவில் கிடைக்கும் கிளிஞ்சல்களால் ஆன மாலையைக் கழுத்தில் அணிந்துள்ள நிலையில் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1930-ஆம் ஆண்டில் டுவோ துய்ப்ராய் அரிக்கமேட்டில் சேகரித்த மணிவகைகளுள் நீள் கோள வடிவமுள்ள இரண்டு மணிகள் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளன.[159] அவற்றுள் ஒரு மணியில் சைவ சமயக் கடவுளான சிவனின் முத்திரையும் ('S' Curve and rings) மற்றொரு மணியில் புத்தச் சமயக் குறியீடும் (Buddhist tri-ratra) இருக்கும்படி உருவாக்கப் பட்டுள்ளதால் அக்காலத்தில் மணிசெய்யும் தொழிலில் கூடச் சமயத் தாக்கம் இருந்துள்ளமை புலனாகின்றது.

158. Vimala Begley 1996 : 395     159. Jr. Peter Francis 1987 : 9



தமிழ்நாட்டுத் திருவிழாக் காலங்களில் இந்துசமயச் சடங்குகளிலும் முளைப்பாரி வளர்த்து நீர் நிலைகளில் விடுவது வழக்கம். இத்தகைய முளைப்பாரியை உருவாக்க அழகிய புனைவுகளுடன் கூடிய சாடிகள் பண்டைக் காலத்தில் உருவாக்கப் பட்டுள்ளன. அரிக்கமேட்டுடன் சமகாலத் தொடர்புடைய அழகன் குளத்தில் (இராமநாதபுரம்) களிமண்ணால் செய்யப்பட்ட புனைவுகளுடன் கூடிய முளைப்பாரிச் சாடி (Clay vessel for Ceremonial sprouting of grain) ஒன்று கிடைத்துள்ளது.[160] சாடியின் மேல் விளிம்பிலும் இடையிலும் அழகிய புனைவுகள் செய்யப்பட்டு மேல் விளிம்பில் இரண்டு பக்கங்களிலும் கைப்பிடிகளுடன் இது காணப்படுகின்றது.

## கீழை நாடுகளில் அரிக்கமேட்டின் செல்வாக்கு

வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தமிழக வணிகர்கள் வணிகத்தின் பொருட்டுத் தென்கிழக்கு ஆசியாவின் பல இடங்களில் குடியேறி இருந்தனர். தென்னிந்தியர் கடல் கடந்து பர்மா, கெடா, மலைநாடு, சிங்கபுரம், தாய்லாந்து, கம்போடியா, சாவகம், சுமத்ரா, சம்பா, போர்னியோ ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று வணிகம் புரிந்ததோடு அங்குக் குடியேறவும் செய்துள்ளனர். கி.மு. 600-க்கும் கி.மு. 325-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் கிழக்கு ஆசியாவில் தென்னிந்தியர்கள் தீவிரமாகக் குடியேறி உள்ளனர். கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் உள்ள பாண்டிய நாட்டுத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கப்பல்கள் சாவகம், சுமத்ரா ஆகிய நாடுகட்கு யாழ்ப்பாணத் துறைமுகத்தின் வழியாகச் சென்றுள்ளன என்று சி. இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார்.[161] கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலேயே சீனாவிலிருந்து வெடிகள், சீனி, பட்டு ஆகியன வந்துள்ளன. தமிழகத்திலிருந்து மிளகு, மணப்பொருட்கள் முதலியன சீனாவிற்குச் சென்றுள்ளன.

தொடக்கத்தில் இக்குடியேற்றங்கள் சிறியனவாக இருந்தன. வணிகம் பெருகப் பெருகத் தமிழருடைய குடியேற்றங்களும் வளர்ந்து பெருகின. தமிழக அரசர்கள் (முதலாம் இராசேந்திர சோழன் நீங்கலாக) யாரும் படையெடுத்துச் சென்று தென்கிழக்கு ஆசிய மக்கள் மீது அதிகாரம் செலுத்தவில்லை. பல்லவர்களின் கிளைக் குடியினர் கம்போடியாவில் குடியேறிய பிறகு தமக்கென்று ஓர் ஆட்சிப்பரப்பை அங்கு அமைத்துக் கொண்டனர். ஏனைய குடியேறிகள் எல்லாம் வணிகர்களாகவும் சமயச்

160.Vimala Begley 1996 : 282     161.பா.இறையரசன் 1983:116

Tamil Heritage Foundation International (THFi)

சான்றோர்களாகவும் இருந்தனர். இவ்வாறு குடியேறிய தமிழர்களின் வாயிலாகவே தமிழ்ப் பண்பாடும் சமயமும் எழுத்தும் பல தலைமுறைகளாகத் தென்கிழக்கு ஆசிய நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஊடுருவிப் பரவியிருக்க வேண்டும்.[162]

சங்க காலத்தில் தமிழகம், ஈழம், சீனா, காழகம் ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தமையைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், புறநானூறு ஆகிய நூல்களின் வாயிலாக அறியலாம். மார்க்கோபோலோ என்னும் கடற்பயணி சீனாவிலிருந்து கப்பல்கள் மலபார் துறைமுகங்களுக்கு வருகை தந்த வழியைப் பற்றிக் குறிப்பிடுகையில் சீனத் துறைமுகம் 'சௌ சௌ' (Chou Chou) விலிருந்து புறப்படும் மரக்கலங்கள் முதலில் கொச்சின்சீனா, சுமத்திரா வழியாகப் பர்மாவின் மார்டபன் துறைமுகத்தை வந்தடையும். பின்னர் இங்கே சரக்குகள் வேறு மரக்கலங்களுக்கு மாற்றப்பட்டு அந்தமான் நிக்கோபர் தீவுகள், இலங்கை வழியாகக் கொல்லம் (மலபார்) துறைமுகத்தை வந்தடையும்.[163] மலபார் துறைமுகத்திற்கு வரும்முன்பே சீனக்கலங்கள் சோழமண்டலக் கரையில் உள்ள பொதுக்கே (அரிக்கமேடு) துறைமுகத்திற்கும் வருகை புரிந்திருக்க வேண்டும். இக்கருத்தை அரண்செய்யும் வகையில் சீன நாட்டுச் செலெடன் மட்கலன்கள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடங்கி நிகழ்ந்து வந்த இவ்வணிகத் தொடர்பின் அடிப்படையில் இந்தியாவிலிருந்து ஐந்நூறு வணிகக் குடும்பங்கள் ஃபியூனான் (Funan) நாட்டிற்குச் சென்று குடியேறியதாகச் சீன நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.[164] அகத்தியரைப் பற்றிய குறிப்புகளும் அவரை வழிபாட்டிற்குரிய ஒரு கடவுளாகக் கொண்டமை பற்றிய செய்திகளும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் (குறிப்பாக இந்தோனேசியாவில்) காணப்படுகின்றன.

வியட்நாமில் உள்ள வோ-கேன் (Vo-canh) என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டுக்களின் வாயிலாகப் பழந்தமிழகத்திற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையே நிலவிய தொடர்பினை அறிய முடிகின்றது. தென்கிழக்கு ஆசியநாடுகளில் கி.பி.4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தியக் (செராமிக்) கலன்கள் கிடைத்துள்ளன. வடமேற்கு ஜாவாவில் உள்ள சிபுடக் (Cibutak), கோபக் கேனல் (Kobak kenal) ஆகிய இடங்களிலும் பர்மாவில் உள்ள பெய்க்தனோ (Beikthano) என்னும் இடத்திலும் ரௌலெட்டெட் கலன்கள் கிடைத்துள்ளன. மத்தியத்

162.க.த.திருநாவுக்கரசு 1987:22 163. Wheeler R.E.M. 1946: 92 164. John F.Cady 1960 : 81



தாய்லாந்தில் இந்தியாவில் செய்யப்பட்ட தந்தச் சீப்புக் கிடைத்துள்ளது. வடக்கு மலேசியாவில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடு அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட 18c வகையினை ஒத்துக் காணப்படுகின்றது.[165]

பாலித் தீவில் உள்ள கடற்கரைக் கிராமங்களான செம்பிரான் (Sembiran), பாகூங் (Pacung), ஜூலா (Julah) ஆகிய இடங்களில் 1987 முதல் 1989-ஆம் ஆண்டுவரை அர்டிகா(I. W. Ardika) என்பவர் மூன்று வெவ்வேறு ஆய்வுக் குழிகளில் எழுபத்தொன்பது இந்திய மட்கல ஓடுகளைக் கண்டறிந்துள்ளார்.[166] இவற்றுள் செம்பிரானில் கிடைத்த ரௌலெட்டெட் கலன்கள் சிலவற்றையும் அரிக்கமேடு ரௌலெட்டெட் கலன்களையும் எக்ஸ்ரே பகுப்பாய்வு (X-ray Diffraction XRD) முறையில் ஆய்வுசெய்து பார்த்தபோது அவை ஒரேவகை நிலத்திலிருந்து எடுத்துச் செய்யப்பட்ட மண்ணால் ஆனவை என்று தெரியவந்தது. குறிப்பாக அவை சொர சொரப்பான பானை வகையான அரிக்கமேட்டுப் பானை வகைகளையே ஒத்துள்ளன.

அர்டிகா ஆய்வுக்குழிகளில் ரோமானிய மட்கலன்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தாய்லாந்தின் தெற்குப் பகுதியில் உள்ள 'போங் துக்' (P'ong tuk) என்னுமிடத்தில் ரோமானியச் சுடுமண் விளக்கு(Roman terra - cotta Lamp) மட்டும் கிடைத்துள்ளது.

ரோமானியர்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் நேரடி வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு இது ஒன்றே போதுமான சான்று ஆகாது.

எனவே அரிக்கமேடு உள்ளிட்ட ஏனைய சோழமண்டலத் துறைமுகங்கள் அனைத்தும் கிழக்கு நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்துள்ளமை புலனாகும்.

அயல்நாட்டு வணிகர்கள் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் வணிகக் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டதைப் போன்று தமிழக வணிகர்களும் கிழக்கு ஆசிய நாடுகளில் பல வணிகக் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வணிகம் செய்து வந்துள்ளனர். பிற்காலப் பல்லவ மன்னனான மூன்றாம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் (கி.பி. 846-869) தாய்லாந்து நாட்டில் தகுவா-பா (Takuva-Pa) என்னும் இடத்தில் தமிழக வணிகர்கள் வணிகக் குடியிருப்புக்களை

165. P. Ravichandirane 2001: 4 166.Ibid 2001 : 4

Tamil Heritage Foundation International (THFi)

நிறுவி வாழ்ந்து வந்துள்ளனர் என்று அங்குக் கிடைத்த கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அக்கல்வெட்டின் வாசகம்

*(5) வர்மன் கு(ணா) மாந்தன் ---------*

*நாங்கூருள (யா)ன் தொட்ட குளம்பேர்சிரி*

*அவனி நாரணம் மணிக்கிரா மத்தார்க் (கும்)*

*சேனாமுகத் தார்க்கும் பதார்க்கம் அடைக்கலம்*

என்பதாகும்.[167] கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு வணிகக் குழுக்கள் தாய்லாந்தில் தங்கியிருந்தபோது அங்குத் திருமாலுக்குக் கோயிலமைத்து, குளம்தொட்டு, விழா எடுத்தமை புலனாகின்றது. இக்கல்வெட்டுக் குறிப்பிடும் 'மணிக்கிராமம்' என்னும் வணிகக்குழு, சிறப்பாக மணிகள் விற்பனை செய்வதற்கென்று தமிழ் நாட்டிலிருந்து தாய்லாந்திற்குச் சென்றிருக்கலாம். ஏனெனில் அரிக்கமேட்டில் உருவாக்கப்பட்ட மணி வகைகளைப் போன்று தாய்லாந்து நாட்டுக் கல்லறை ஒன்றில் ஏராளமாக மணிவகைகள் கிடைத்துள்ளன.[168]

தொழில்நுட்பம், வடிவம், வண்ணம் ஆகிய அனைத்திலும் இம்மணிகள் ஒரே மாதிரியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வணிகக் குழுக்களின் பாதுகாப்பிற்காகச் சென்ற படைவீரர்களின் குழுவே, 'சேனாமுகம்' என்றழைக்கப்பட்டது. இதனால் மூன்றாம் நந்திவர்ம பல்லவனின் அரசியல் ஆதிக்கம் சிறிது காலமேனும் மலேயாத் தீபகற்பத்தின் மேலைக் கடற்கரைப் பகுதிகள் சிலவற்றிலாகினும் சென்று பரவியிருக்க வேண்டும் என்று கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.[169] பிற்காலச் சோழர் காலத்திலும் தமிழகம் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் நேரடித்தொடர்பு கொண்டிருந்தது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசேந்திர சோழனுடைய கடாரப் படையெடுப்பைப் பற்றி அவனுடைய மெய்க்கீர்த்தி குறிப்பிட்டுள்ளது.

*அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி*

*சங்கிராம விசயோத் துங்க வர்மன்*

*ஆகிய கடாரத்(து) அரசனை வாகையும்*[170]

என்பதே அம்மெய்க்கீர்த்தி வாசகமாகும். கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை தாய்லாந்து நாட்டுக் கடற்கரைப் பட்டினமாக விளங்கிய 'கெட்டா'வே பிற்காலச் சோழர் காலத்தில் கடாரம் என்று

167.க.த.திருநாவுக்கரசு 1987:263. 168. D.Janaki 2000:7
169.க.த.திருநாவுக்கரசு 1987:264 170.மே.நூல்:295



அழைக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் கடாரம் என்பது காழகம் என்று அழைக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர் காலத்தில் தமிழகத்திலிருந்து வெளிநாடு சென்று வணிகம் புரிந்துவந்த வணிகக் குழுக்களின் பெயர்களாவன, மணிக்கிராமம், அனுவண்ணம், வளரியர், ஆயிரத்து நூற்றுவர் என்பனவாகும். இவை தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் பயணம் செய்த வணிகக் குழுக்களாகும். சுமத்திராவில் கிடைத்துள்ள முதலாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு (கி.பி.1088) 'திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' எனும் வணிகக்குழுவைக் குறிக்கின்றது.[171]

வீலருடைய அரிக்கமேட்டு (தென்பகுதி) அகழ்வாய்வில் பிற்காலச் சோழப் பேரரசன் முதலாம் இராசராச சோழனின் (கி. பி. 985-1017) செப்பு நாணயம் கிடைத்துள்ளது. விமலா பெக்லியின் அகழ்வாய்வில் பிற்காலச் சோழப் பேரரசு வெளியிட்ட நான்கு காசுகள் கிடைத்துள்ளன. இவை தவிரக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனப் பேரரசர்களான ஷான் அரசர்கள் (Shan Dynasity) வெளியிட்ட சீனக்காசு ஒன்று காக்காயந் தோப்பின் மேற்குப் பகுதியில் கிடைத்ததாகப் புதுவை அரசின் அகழ்வாய்வுக் குறிப்பு கூறுகின்றது.[172] வழவழப்பான சீனக் களிமண் சாடிகளும் செராமிக் ஓடுகளும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இவற்றின் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டாகும். இதேபோன்று கங்கை கொண்ட சோழபுரத்திலும் சீன நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செராமிக் ஓடுகளும் சாடிகளும் கிடைத்துள்ளன. மேற்கூறிய சான்றுகளின் அடிப்படையில் நோக்கும்போது அரிக்கமேடு கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரையில் சீனா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வணிகச் செல்வாக்குச் செலுத்தி வந்தமை புலனாகும்.

### மேலைநாடுகளில் அரிக்கமேட்டின் செல்வாக்கு

மேலை நாடுகட்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்ட வணிகம் ரோமானியர் காலத்தில் ஏற்பட்ட திடீர் நிகழ்வு அன்று. அவ் வணிகத் தொடர்பு சங்க காலத்திற்கு முன்பே உருவானது.

செல்வச் செழிப்பில் இருந்த கிரேக்க மன்னர்கள், அரேபியர்கள், இந்தியர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து வணிகம் புரிந்தபோது இந்தியாவுடனான மேனாட்டு வணிகம் வளர்ச்சி அடையத் தொடங்கியது. அக்காலத்தில் இந்தியாவின் மேலைக் கடற்கரைக்கும், செங்கடல்

171.பா இறையரசன் 1983:223 172. Vimala Begley 1996 : 31

Tamil Heritage Foundation International (THFi)

துறைமுகங்களுக்கும் இடையே மூன்று வெவ்வேறு விதமான பாதைகள் போக்குவரத்திற்குப் பயன்பட்டன.[173]

முதல்வழி, போனிசிய நகரங்களில் இருந்து கிரேக்கத்தில் உள்ள ரோட்ஸ் நகருக்குக் கப்பல் மூலம் அடைந்து, பின்பு டைகிரீஸ் நதி முகத்துவாரத்தில் உள்ள செலுசியா வரை வந்து, பின்பு கப்பல் மூலம் தற்போதைய குவைத் வழியாக ஓமன் வளைகுடாவைக் கடந்து, பின்பு சிந்துநதி முகத்துவாரத்திற்கு வந்திருக்கவேண்டும். அங்கிருந்து 'காம்பே' வளைகுடா வழியாகத் இப்போதுள்ள கொடுங்களூர் அல்லது முசிறித் துறைமுகத்திற்கு வந்திருக்கவேண்டும். பின்னர் அங்கிருந்து நிலவழியாகப் பாலக்காட்டுக் கணவாயைக் கடந்து கரூருக்கு வந்தமை.

இரண்டாவது வழி, கிரேக்க மற்றும் போனிசிய நகரங்கட்கு இடையேயான கடல் பாதையைக் கடந்து வந்து, அரேபியா தீபகற்பத்தில் அமைந்துள்ள பெட்ரா நகரில் இருந்து தெற்கு அரேபியாவில் உள்ள 'எடுமான்' துறைமுகத்திற்கு வந்து, அங்கிருந்து சிந்து நதி முகத்துவாரத்தைக் கடந்து, பின்பு கொடுங்களூருக்கு வந்தமை.

மூன்றாவது வழி, மத்தியக் கிழக்குக் கடல் பகுதியில் நைல் நதியின் பழைய கால்வாய் வழியாகச் செங்கடலை அடைந்து அங்கிருந்து கடல்வழியாகப் பயணம் செய்து 'அடுலீஸ்' துறைமுகத்தை அடைந்து, பின்னர் தமிழகத்தின் மேற்குக் கடற்கரையை அடைந்துள்ளமை.

இந்த மூன்று வழிகளும் வெவ்வேறு காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. செங்கடலிலிருந்து புறப்பட்டு, ஒரேயடியாக முசிறிக்கு வரும்வரை கடல் பயணத்திற்குத் தேவையான பொருட்களைச் சேமித்துச் செல்லும் வகையில் பெரிய மரக்கலங்களை உருவாக்கிய பின்பு மூன்றாவது வழி, கடல் வணிகர்களுக்குச் சுலபமாகியிருக்கும்.

கிரேக்கப் பண்பாடு பரவிய காலம் 'ஹெலனிஸ்டிக் காலம்' (Helenistic Period) என்றழைக்கப் படுகின்றது. இக்கால கட்டத்தில்தான் கப்பல் வணிகத்தில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டன. பண்டைய தமிழர், மேலை நாடுகளோடு கொண்ட தொடர்பிற்கு ஆதாரங்களாகக் கிரேக்க நாணயங்களும் சிரியர், போனிசியர், யூதர், பார்த்தியர் ஆகியோர் நாணயங்களும் கரூரில் கிடைத்துள்ளன.[174] கிரேக்க,

173. தினமலர் 7-2-1999:12 174. தினமலர் 5-11-2000:13



ரோமானியக் குடியிருப்புக்கள் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் இருந்ததைப் போன்று தமிழக வணிகர்களும் மாலுமிகளும் செங்கடல் துறைமுகப் பகுதிகளில் குடியிருப்புக்கள் அமைத்துத் தங்கியுள்ளனர்.

தமிழக வணிகர்கள் தங்கள் கப்பலில் அரிக்கமேட்டிலிருந்தும் முசிறியிலிருந்தும் ஏற்றிச் சென்ற பொருட்களைச் செங்கடல் துறைமுகங்களான 'மியோஸ் ஹார்மஸ்' (Myos Hormos), 'லெகோஸ் லைமென்' (Lekos Limen) 'பெர்னிகே' (Bernike) ஆகியவற்றிற்குக் கொண்டு செல்வர். பின்னர் அங்கிருந்து நிலவழியாகவும் நைல்நதி வழியாகவும் அலெக்சாண்டிரியா துறைமுகத்தை அடைந்துள்ளனர். செங்கடல் துறைமுகங்களிலிருந்து அலெக்சாண்டிரியா துறைமுகத்தை அடையும் வரை பாலைவனத்தில் பல இடங்களில் தங்கிச் சென்றுள்ளனர். வணிகர்களின் வசதிக்காக எகிப்தின் நைல் சமவெளிப் பகுதியில் எட்டு இடங்களில் ஓய்வில்லங்களும் அறுபத்தைந்து இடங்களில் காவல் கண்காணிப்பு நிலையங்களும் (Watch Towers) அமைக்கப்பட்டிருந்தன.[175] லெகோஸ் லைமென் பகுதியில் 1982-ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் அப்பகுதியில் தமிழக வணிகர்கள் தங்கியிருந்தமைக்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழ்ப்பிராமி வாசகம் அடங்கிய இரண்டு பானை ஓடுகளும் பிராகிருதமொழி எழுதப்பட்ட பானை ஓடு ஒன்றும் கிடைத்துள்ளன.[176]

1993-ஆம் ஆண்டு பெர்னிகேவில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் கண்டெடுத்த இந்திய மட்கலன்கள் அரிக்கமேட்டில் கண்டெடுத்த மட்கலன்களை ஒத்துள்ளன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட பதினாறு விளிம்பு ஓடுகளில் (Rim Sherds) பெரும்பாலானவை, அரிக்கமேட்டு ரௌலெட்டெட் ஓடுகளையும் வீலருடைய அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட கோப்பைகளையும் ஒத்துக் காணப்படுகின்றன.[177] இவற்றின் காலம் கி. மு. 100-க்கும் கி.பி. 100-க்கும் இடைப்பட்டது. செங்கடல் துறைமுகப் பகுதியில் கிடைக்கும் அரிக்கமேட்டுத் தொல்பொருட்கள் அனைத்தும் அரிக்கமேட்டிலிருந்து மத்தியத் தரைக்கடல் நாடுகட்குச் சென்ற தமிழக வணிகர்கள் அல்லது மாலுமிகள் எடுத்துச் சென்றவையாக இருக்கவேண்டும். அமெரிக்காவில் உள்ள ஓரியண்டல் நிறுவனத்தின் (Oriental Institute) சார்பாக லெகோஸ் லைமென், குவாசிர் அல் காதிம், பெர்னிகே ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட அகழ்வாய்வின் போது தமிழ்ப்பிராமி பொறிக்கப்பட்ட

175 P Ravichandirane 2001 5 176 Ibid 2001 5 177 Ibid 2001 : 6

Tamil Heritage Foundation International (THFi)

பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அரிக்கமேடு, அழகன்குளம் பானை எழுத்துக்களை ஒத்துக் காணப்படும் இவை சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தமிழ்ப் பெயர்களோடும் தொடர்புடையனவாய்க் காணப்படுகின்றன.

பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கல்வெட்டுக்கள் ஆகியன பழந்தமிழருடைய மொழி பற்றிய குறிப்புக்களை நல்குகின்றன. சாதாரண மக்களின் வழக்கில் இருந்து வந்த தமிழ் வரிவடிவமே பண்டைய தமிழ் மக்களால் பானைகளில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ்ப்பிராமியில் 'சாத்தன்' (Catan) என்னும் பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓடு செங்கடல் துறைமுகமான லெகோஸ் லைமெனில் கிடைத்துள்ளது.[178] எகிப்தை ஒட்டியுள்ள செங்கடலின் பழைய துறைமுகமான குவாசிர் அல் காதிம் என்னும் இடத்தில் தமிழ்ப்பிராமி எழுத்தில் எழுதப்பட்ட இரண்டு பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அவையாவன.

(†Iſ) - கனன் (கண்ணன் - Kanan)

(Jλſ) - சாத்தன் (Catan)

என்பனவாகும்.[179] இவற்றின் காலம் கி. பி. முதல் நூற்றாண்டு. அரிக்கமேட்டிலும் தமிழ்ப்பிராமியில் 'கனன்' (கண்ணன்) எனும் பெயர் பொறிக்கப்பட்ட சாடி ஓட்டின் விளிம்பு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் காலமும் கி. பி. முதல் நூற்றாண்டு. இப்பெயர்கள் சங்க காலத் தமிழகத்தில் கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்த வணிகரின் பெயராக இருந்திருக்க வேண்டும். இவர்கள் தங்கள் உண்கலப் பயன்பாட்டிற்காகச் செங்கடல் துறைமுகங்களுக்கு எடுத்துச் சென்ற பாத்திரங்களின் எச்சங்கள்தான் இவை என்பது உறுதியாகின்றது.

முசே கெய்மெட் (Musee Guimet) என்பவர், 'இந்தியாவின் இரும்புக்காலத்தைச் சேர்ந்த பானை ஓடுகளில் உள்ள குறியீடுகள் பானையை வனைந்த வினைஞர்களின் பெயராகவோ கப்பல் வணிகர்களின் பெயராகவோ இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.[180]

எனவே, அரிக்கமேட்டிலும் செங்கடல் துறைமுகங்களிலும் கிடைத்த பானை ஓடுகளில் உள்ள தமிழ்ப்பிராமியில் பொறிக்கப்பட்ட பெயர்கள் வணிகப் பொருட்களைக் கப்பலில் ஏற்றிச்சென்ற தமிழக வணிகர்களின் பெயர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

178. Vimala Begley 1992 : 33 179. Vimala Begley 1996: 290 180. Ibid : 23



எகிப்தில் செங்கடலின் தென்பகுதியில் உள்ள துறைமுகமான பெர்னிகேயில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நிலையில், உடைந்த சாடி (ஆம்ஃபோரா) ஓடு ஒன்று கிடைத்துள்ளது. அதில் காணப்படும் எழுத்துக்களால் ஆகிய வாசகம்,

Kor puman - கொற் பூமான்

Ko[r]ra puman - கொ(ற்)ற பூமான்

என்பதாகும்.[181] இது கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஆம்ஃபோரா சாடி ஓடு. வசவசமுத்திரம், அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள ஆம்ஃபோரா ஓடுகள் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆனால் இந்தியாவிலேயே அரிக்கமேட்டில்தான் காலத்தால் மிகவும் பழைமையான (கி.மு. 100) ஆம்போரா சாடி ஓடுகள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்த அரிட்டைன் ஓடுகள் கி.மு.10-க்கும் கி.பி.50-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தனவாகும். இதே காலகட்டத்தைச் சேர்ந்த அரிக்கமேட்டுப் பானை வகைகள் பெர்னிகேயில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. பெர்னிகேயில் நடைபெற்ற அகழ்வாய்வில் சேமித்து வைக்கப்பட்ட நிலைகளில் அரிக்கமேட்டு மட்கலன்கள் பல வகைகளில் காணப்படுகின்றன. இவை கி.மு. 10-க்கும் கி.பி. 50-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அரிக்கமேட்டிலிருந்து செங்கடல் பகுதிகட்கு ஏற்றுமதி ஆகியிருக்க வேண்டும்.

பெர்னிகேயில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் அரிக்கமேட்டு வகையைச் சேர்ந்த பதினாறு பானை ஓடுகள் மிக மெல்லியனவாகவும் வழவழப்பான தன்மை கொண்டவையுமாகக் காணப்படுகின்றன. ஒருவேளை இவை அரிக்கமேட்டு வகையைச் சார்ந்தவை இல்லையெனில் தமிழ் வணிகர்கள் தம் உண்கலப் பயன்பாட்டிற்காக அங்கேயே இவற்றைச் செய்திருக்கவேண்டும். ஏனெனில் இத்தகைய மட்கலன்கள் எகிப்தின் கிழக்குப் பாலைவனம் உட்பட (பெர்னிகே, குவாசிர் அல் காதிம் தவிர) வேறெந்தப் பகுதியிலும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[182] மேற்கூறிய சான்றுகளின் அடிப்படையில் நோக்கும்போது செங்கடல் துறைமுகப் பகுதிகளில் தமிழ் வணிகர்கள் தங்கி வணிகம் புரிந்து வந்துள்ளனர் என்பது உறுதியாகின்றது. இவற்றை உறுதிப்படுத்தும் வலுவான ஆதாரமாக விளங்குவது 'வியன்னா பேப்பரைஸ்'[183] எனப்படும் முசிறி - அலெக்சாண்டிரியா வணிக ஒப்பந்தமாகும்.

181. K. Rajan 2000 : 96 182. Vimala Begley 1997 : 170 183. K. Rajan 2000 : 98

Tamil Heritage Foundation International (THFi)

சுடப்படாத களிமண்ணில் குதிரைத்தேர் முத்திரை பதிக்கப்பட்ட சிற்பம் (Chariot Seal Impression) ஒன்று அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.[184] இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட தேரை ஒருவன் ஓட்டிச் செல்வதுபோன்று முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. இதே போன்று வடஇந்தியாவில் ஹரப்பா காலத்தைச் சேர்ந்த சிற்பம் ஒன்றில் வெண்கலப் பதக்கத்தில் மாடு அல்லது குதிரைகள் பூட்டிய தேர்ச்சிற்பம் காணப்படுகின்றது. சங்க காலச் சோழ மன்னர் வெளியிட்ட காசுகளிலும் இத்தகைய சிற்பங்கள் காணப்படுகின்றன.

மத்தியத் தரைக்கடல் நாடுகளில் இத்தகைய தேர் முத்திரைச் சிற்பங்கள் மிகுதியாகக் காணப்படுவதால் இத்தொழில் நுணுக்கத்தின் மூலம் மத்தியத்தரைக்கடல் நாடுகளாகத்தான் இருக்கவேண்டும். ஆதலால் இவை மத்தியத் தரைக்கடல் நாடுகளிலிருந்து இங்கே வந்தவர்களால் கொண்டுவரப் பட்டிருக்க வேண்டும். அல்லது உள்நாட்டுத் தொழில் வினைஞர்களால் அயல்நாட்டுத் தொழில் நுட்பத்தோடு உள்நாட்டிலேயே செய்யப் பட்டிருக்கலாம். கி.பி. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் அயல்நாட்டு வணிகர்கள் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் வணிகக் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டதைப் போன்றே தமிழக வணிகர்களும் எகிப்தின் செங்கடல் துறைமுகப் பகுதிகளில் வணிகக் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு வணிகம் புரிந்து வந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

### வணிகவழிப் பரவும் பண்பாடு

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வணிகம்புரியச் செல்லும் வணிகர்கள் தம்மை அறியாமலேயே பண்பாட்டுப் பரவலுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றனர். மலேசிய நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் சீன வணிகக் குழுக்கள் உள்நாட்டுத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் தனியரசு புரிந்துவந்துள்ளன.[185] இவ்வாறு வணிகர்கள் மூலமாகப் பரவும் பண்பாட்டை விட அரசியல் அடைப்படையில் பரவும் பண்பாடே சிறந்ததாகவும் நிலைபேறு உடையதாகவும் கருதப்படுகின்றது. ஏனெனில் 'வணிக வழியில் பரவிய நாகரிகமும் பண்பாடும் தற்காலிகமானது மட்டுமன்று. தரக்குறைவானதாகவும் மதிப்பிடப்பட்டு வந்திருக்கின்றது'.[186] மேலும் வணிகர்கள் எந்த நாட்டில் வணிகம்

184. Vimala Begley 1996 : 389 185. Revue Histrique de Pondicherry Vol-11 1973 : 84.
186. D.G.E. Hall 1968 :20



புரிகின்றனரோ அந்த நாட்டு மொழியையும் பண்பாட்டினையும் தம் வணிக நோக்கிற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு இருந்து வந்திருக்கின்றது. ரோமானிய வணிகரும் இதற்கு விதிவிலக்கு அல்லர். ரோமானிய நாட்டுப் பண்பாடு எதுவும் தமிழகத்தில் ஆழமாக வேரூன்றாமையே இதனை மெய்ப்பிக்கின்றது. எனவே இரு நாடுகளிடையே நிலவும் பண்பாட்டுப் பரவலையோ அல்லது நாகரிகப் பரிமாற்றத்தினையோ வணிகவழி உறவுகளை அடிப்படையாக வைத்து அளவிட முடியாது.

பண்டைக் காலத்தில் கீழை மேலை நாடுகளிடையே நடைபெற்று வந்த வணிகப் பயணங்களில் தென்னிந்தியத் துறைமுகங்கள் இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு வந்துள்ளன. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அரசியலிலும் வாழ்வியலிலும் பண்பாட்டிலும் கலைத் துறைகளிலும் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் நாற்பது விழுக்காட்டு அளவிற்குக் குறையாமல் இடம்பெற்றுள்ளது.[187] சீனா, மலேசியா, தாய்லாந்து, சுமத்ரா, சாவகம் ஆகிய கீழ்த்திசை நாடுகளுடன் தென்னிந்தியா கொண்ட உறவுகள் பெரும்பாலும் சமயப்பரவலுக்கும் பண்பாட்டுப் பரவலுக்கும் வித்திட்டன. ஆனால் மேற்றிசை நாடுகளுடன் (மத்தியத் தரைக்கடல் நாடுகள்) தென்னிந்தியா ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் வணிகவழி வளர்ச்சிக்கும் செல்வ வளமைக்கும் மட்டுமே வித்திட்டன.

### பண்டைத் தமிழர் பண்பாட்டுச் செல்வாக்கு

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பிற நாடுகளோடு கடல் கடந்து வணிகம் செய்து வந்த தமிழர்கள், தம் பண்பாட்டுச் செல்வாக்கு அந்நாடுகளில் பரவுவதற்கும் காரணமாக அமைந்துள்ளனர். சமயம், மொழி, சமுதாயப் பழக்க வழக்கங்கள் முதலிய பண்பாட்டுச் சின்னங்களைத் தமிழர் கடல்கடந்து கொண்டு போனதோடு வெளிநாட்டு வணிகத்தினால் கிடைத்த பொருளுதவி கொண்டு கோயில்களை நிர்மாணித்துள்ளனர். படையெடுத்துச் சென்று வெற்றிகண்டு அயல்நாடுகளில் அரசியல் ஆதிக்கமும் செலுத்தி வந்துள்ளனர். தமிழருடைய பண்பாட்டுச் செல்வாக்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றது. கம்போடியாவில் பரவிய தமிழருடைய கோயில் கட்டடக் கலையும் தாய்லாந்தில் பரவிய திருப்பாவை-திருவெம்பாவை வழிபாடுகளும் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

187. க.த.திருநாவுக்கரசு 1987:609

Tamil Heritage Foundation International (THFi)

இந்தியப் பண்பாடு கடல் கடந்து சென்று பிற நாகரிகங்களுக்கு இடையே செல்வாக்கோடு விளங்குமேயன்றி நாடுபிடித்தல், பிற நாட்டவரை அடக்கி அரசாளுதல் என்பன இந்தியப் பண்பாட்டிற்குப் பொருந்தாத செயல்பாடுகள் ஆகும் என்று கருதுவர்.[188] இக்கருத்து தமிழர் வரலாற்று அளவிற்குப் பொருத்தமானதன்று. தமிழர் பண்பாடு சிங்களம், தென்கிழக்கு ஆசியா முதலிய இடங்களில் பரவியுள்ளமை உண்மையேயாயினும் அவர்கள் கடல் கடந்து சென்று போரிட்டுப் பேரரசுகளை வென்று தங்கள் ஆட்சியை நாட்டி அரசியல் செயல்பாடுகளில் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர்.

சங்க காலத் தமிழர் பண்பாட்டிற்கும் பல்லவர் காலத்திற்கும் அதனைத் தொடர்ந்துவந்த இடைக்காலத் தமிழர் பண்பாட்டிற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு காணப்படுகின்றது. இவ்வேறுபாடு பிற நாடுகளில் (எக்காலத்திலும்) காணமுடியாத வேறுபாடு. பரந்த உலகியல் நோக்கும் சமயப் பொறையும் வணிகத் திறமையும் கொண்ட சங்ககாலத் தமிழருக்கும் மறுமையைப் பற்றிய கவலை, சமயப் பூசலில் ஆர்வம், கோயில் கட்டி அங்குக் கடவுளை நிறுவி வழிபடுதலில் ஈடுபாடு ஆகியவற்றை ஒருங்கே கொண்ட இடைக்காலத் தமிழருக்கும் உள்ள வேறுபாடு சாதாரணமானதன்று. களப்பிரர் ஆட்சி முடிவுற்ற பின்பு தோன்றும் தமிழகம் புதியதொரு தமிழகமாக வரலாற்றில் பூத்தது. களப்பிரர் ஆட்சி என்னும் இடையீட்டின் இருபுறத்திலும் வெவ்வேறு வகை வாழ்க்கை நெறிகள், கோட்பாடுகள், இலக்கிய மரபுகள், ஆட்சி முறைகள் என்பன தமிழக வரலாற்றில் காணப்படுகின்றன.

'கி.பி.5-ஆம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு வட ஐரோப்பாவின் படையெடுப்பிற்கு ஆளாகி நலிந்து போனதற்கு, நாகரிகமின்மையும் சமயமுமே காரணங்களாகும்' என்று எட்வர்ட் கிப்பன் என்னும் வரலாற்றாய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.[189] சங்க காலத்தின் இறுதியில் தமிழகத்தில் ஏற்பட்ட நலிவிற்கு இவை மட்டுமே காரணங்களாகா. தமிழ் வேந்தர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் ஒரு முக்கியமான காரணமாகும். கீழ்த்திசை நாடுகளுடன் தமிழர் கொண்ட உறவுகள் சமயப்பரவலுக்கும் பண்பாட்டுப் பரவலுக்கும் வித்திட்டன. ஆனால் மேற்றிசை நாடுகளுடன் தமிழர் கொண்ட தொடர்பு வணிக வளர்ச்சிக்கும் செல்வச் செழுமைக்கும் மட்டுமே காரணங்களாக அமைந்தன.

188.ந.சுப்ரமண்யன் 1991:164. 189.மே.நூல்:74

# 7. அரிக்கமேடு - சிதைவும் பாதுகாப்பும்

தென்னிந்தியாவின் 'தட்சசீலம்' என்று புகழப்பெறும் அரிக்கமேடு பழந்தமிழரின் வாழ்வியலுக்குச் சான்று பகரும் ஒரு வரலாற்றுப் பெட்டகம். தொல்வரலாற்றுப் பதிவேடான அரிக்கமேட்டின் இன்றைய நிலை குறித்தும் அதன் எதிர்காலப் பாதுகாப்புப் பற்றியும் விழிப்புணர்வு வேண்டப்படுவது இன்றியமையாததாகும். மேற் குறிப்பிட்டவாறு ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் எந்தக்காலம் முதல் மக்கள் வாழத் தொடங்கினர் என்பதையும் அப்பகுதியில் மக்கள் தொடர்ந்து குடியேறி வாழ்ந்தனரா அல்லது இயற்கைச் சீற்றத்ததால் அவர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டனரா என்பதையும் அகழ்வாய்வினால் அறிய இயலும்.

பட்டினப்பாலை புகழ்ந்து பாராட்டும் காவிரிப்பூம்பட்டினம் இன்று இல்லை. காவிரிப்பூம் பட்டினத்தை ரோமானிய நாட்டுடன் தொடர்பு கொண்ட நகரமாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் பாராட்டிப் பேசினாலும் அக்கூற்றை நிறுவுவதற்கான தொல்பொருட் சான்றுகள் அங்குக் கிடைக்கவில்லை. ஆனால் அத்தகைய தொல்பொருட் சின்னங்கள் யாவும் அரிக்கமேட்டில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினக் கடற்கரைப் பகுதியில் ஓரளவு அகழ்வாய்வு செய்ததோடு இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை தனது பணியை நிறுத்திக்கொண்டது. ஆனால் அரிக்கமேட்டிலோ ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும் அமெரிக்கரும் மட்டுமின்றிச் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரும் மாணவர்களும் தொடர்ந்து அகழ்வாய்வுப் பணியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### வரலாற்றில் வடக்கும் தெற்கும்

'வடவரின் வெற்றி முடிந்துவிட்டது போலக் காணப்படினும் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் தென்னகத் திராவிடருக்கும் வடக்கின் இந்தோ-ஆரியருக்கும் இடையிலான போராட்டம் இன்னும் தொடர்கிறது' என்று வின்செண்ட் ஏ. சுமித் (Vincent A. simth) என்பார் கூறுவார்.[1] 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது'

1.பா.இறையரசன் 1983:52

Tamil Heritage Foundation International (THFi)

என்னும் கருத்து வரலாற்று நோக்கிலும் நடைமுறைப் படுத்தப் படுகின்றதோ என்னும் ஐயம் எழுகின்றது. சிந்துசமவெளி நாகரிகத்தைப் புலப்படுத்தும் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களை மத்திய அரசு தன் பொறுப்பில் ஏற்றுப் பாதுகாத்து வருகின்றது. அதேபோன்று தென்னிந்தியாவில் உள்ள சில பழைய கோயில்கள், மாமல்லபுரம், காவிரிப்பூம்பட்டினம் ஆகியவற்றை மட்டுமே இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் அரிக்கமேடு உட்படத் தமிழகத்தில் அகழ்வாய்வுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல இடங்கள் நிதிப்பற்றாக்குறை காரணமாகவும் தனியார்வசம் இருப்பதனாலும் அனுமதி கிடைக்கப் பெறாமையினாலும் முழுமையாக அகழ்வாய்வு செய்யப்படாமலே அழிந்துகொண்டு வருகின்றன. அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்களும் முழுமையடையாமல் அரை குறையாகவே செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரிக்கமேட்டில் ஆய்வு செய்யப்பட வேண்டிய பகுதிகள் இன்னும் ஏராளமாக உள்ளன. இருபத்தைந்து விழுக்காட்டுப் பகுதியில்தான் கடந்தகால அகழ்வாய்வுகள் அனைத்தும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதிலேயே இவ்வளவு அரிய வராலற்றுச் சின்னங்களும் உண்மைகளும் கிடைத்துள்ளன வென்றால் அரிக்கமேட்டுப் பகுதி முழுமையும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டால் இன்னும் ஏராளமான வரலாற்று உண்மைகள் வெளிப்படும் என்பது உறுதி. எதிர்காலத்தில் அரியாங்குப்பத்து ஆற்றுக்கும் சுண்ணாம்பாற்றுக்கும் இடைப்பட்ட கடற்கரைப் பகுதிகளிலும் சமவெளிப் பகுதியிலும் அகழ்வாய்வுப் பணி நடைபெற அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**தொடர்ச்சியான குடியிருப்புக்கள்**

அரிக்கமேட்டில் முற்காலம், இடைக்காலம், பிற்காலம் ஆகிய மூன்று காலகட்டக் குடியிருப்புப் பகுதிகளும் அகழ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளதால் இப்பகுதி தொடர்ச்சியான குடியிருப்புக்கு உட்பட்ட பகுதியாக இருந்திருக்க வேண்டும். 'ரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் மற்றும் கிளாடியன் (Claudian) காலகட்டத்தில்தான் மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கும் அரிக்கமேட்டிற்கும் இடையே வணிகம் செழிப்புடன் நடைபெற்றிருக்க வேண்டும். பின்னர் இப்பகுதி களப்பிரர் இடையீட்டின் காரணமாகச் சிதைவுற்றிருக்க வேண்டும்.



அதன்பின்னர் பிற்காலச் சோழராட்சிக்கு உட்பட்டபோது இப்பகுதியில் மீண்டும் குடியிருப்புக்கள் உருவாகியிருக்க வேண்டும்' என்று வீலர் கருதுகின்றார்.[2] ஆனால் வீலருக்குப் பின்னர் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் ரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் காலமுதல் அரேபிய அரசன் ட்ராஜன் (Trajan) காலம்வரை செங்கடல் வழியாக ரோமானியரும் அரேபியரும் தமிழகத்துடன் தொடர்ச்சியாகக் கடல் வணிகத்தில் ஈடுபட்டு வந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

'கி.பி. 2-ஆம் நூற்றாண்டுத் தொடங்கி கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை அரியாங்குப்பம் ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரப் பகுதி, செயல்பாடும் திறனும் கொண்ட சிறந்த துறைமுகமாகச் செயல்பட்டு வந்துள்ளது'[3]. ஆனால் வரலாற்றுக் காலத்திற்கு(கி.பி-1)முன்பிருந்தே அரிக்கமேடு மேலைநாடுகளுடன் கொண்டிருந்த வணிகத்தொடர்பு அகழ்வாய்வுச் சான்றுகளால் புலப்படுத்தப் பட்டுள்ளது. அரியாங்குப்பம் ஆற்றில் முகத்துவாரம், கடல் இறக்கம் ஏற்படும் காலங்களில் மண்ணால் மூடப்பட்டு ஆண்டின் பெரும்பாலான நாட்களில் உப்பங்கழியாகவே இருந்து வருகின்றது. முகத்துவாரப் பகுதியில் ஏற்பட்ட மண்மேடு மிகப் பிற்காலத்தே (300 ஆண்டுகளுக்குள்) ஏற்பட்டிருக்க வேண்டும். இதற்குப்பின்பு இப்பகுதி துறைமுகமாகச் செயல்பட வாய்ப்பு இல்லாததால் பிரெஞ்சியர்கள் இன்றைய காந்தி சிலைக்குப் பின்னால் ஒரு துறைமுகத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

அரிக்கமேட்டின் வடபகுதியிலிருந்த கட்டடப்பகுதி சரக்குகளை ஏற்றி இறக்கும் துறைமுகப் பகுதியாகவும் தென்பகுதியில் உள்ள கட்டடப் பகுதிகள் தொழிலகங்களாகவும் குடியிருப்புக்களாகவும் செயல்பட்டிருக்க வேண்டும். சங்ககாலத்தைச் சேர்ந்த இக்கட்டடக் குடியிருப்புக்கள் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. இந்தோ-ரோமானிய காலத்திய நாகரிகத்தைப் புலப்படுத்தும் இக்கட்டடப் பகுதி இடைக்காலத்தில் (பிற்காலச் சோழர்காலம்) புதுப்பிக்கப்பட்டு மீண்டும் குடியிருப்புக்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரிக்கமேட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிற்காலச் சோழர்காலத்தில் செதுக்கப்பட்ட கருங்கல் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டிற்கு அருகில் காக்காயந்தோப்புக் கிராமத்தில் கிடைத்துள்ள உட்கார்ந்த நிலையில் காணப்படும் சிவனின் சிற்பமும் கிருமாம்பாக்கம் ஊரில் கிடைத்துள்ள புத்தரின் தலைப்பகுதிச் சிற்பமும் பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்தவை. அரிக்கமேட்டுக் குடியிருப்புக்களில்

2 Vimala Begley 1996: 368 3.ச.மதனகல்யாணி,1998:20

Tamil Heritage Foundation International (THFi)

இடைக்காலத்தில் உருவாக்கப்பட்ட குடியிருப்புக்களில் பெரிய சதுர வடிவிலான செங்கற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இத்தகைய பெரிய செங்கற்களைச் 'சோழராசா கற்கள்' என்று அரிக்கமேட்டுப் பகுதி மக்கள் அழைக்கின்றனர். இவை முதலாம் இராசேந்திர சோழனால் கட்டப்பட்ட(கங்கைகொண்ட சோழபுர) அரண்மனையில் காணப்படும் செங்கற்களை ஒத்துள்ளன.

சங்ககாலத்தின் இறுதியில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு பல்லவர் காலத்திய (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) சான்றாதாரங்களும் பிற்காலச்சோழர் காலத்திய (கி.பி. 9-12ஆம் நூற்றாண்டு) சான்றாதாரங்களும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. இடைக்காலத்தில் இப்பகுதியில் கிடைத்த பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது அரிக்கமேடு கைப்பற்றப் படவில்லை என்றும் மாறாகச் சூறையாடப் பட்டிருக்க வேண்டும் என்றும் வீலர் குறிப்பிட்டுள்ளார்.[4] தமிழகத்தில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த இசுலாமியரின் படையெடுப்பால் பல தமிழக நகரங்களும் கோயில்களும் சூறையாடப்பட்டுள்ளமையைத் தமிழக வரலாறு புலப்படுத்தியுள்ளது.[5] இசுலாமியரால் சூறையாடப்பட்ட நகரங்களுள் அரிக்கமேடும் ஒன்றாய் இருத்தல் வேண்டும்.

### கிறிஸ்தவ மடம்

பின்னர் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரிக்கமேட்டுப் பகுதி பிரெஞ்சியரால் சமயப் பணிகளுக்கு ஆக்கிரமிக்கப்பட்டது. அரிக்கமேட்டில் மாந்தோப்பை ஒட்டியுள்ள நிலப் பகுதியில் சிதைந்து போன நிலையில் ஒரு கட்டடத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன. கிறித்தவ சமய வளர்ச்சிக்காவும் சமயப் பணிகளுக்காகவும் பிரெஞ்சிந்தியாவைச் சேர்ந்த கிறித்தவ சமயப் பாதிரியார்களால் நடத்தப்பட்ட கிறித்தவ மடம் ஒன்று கி.பி. 1770-ஆம் ஆண்டு முதல் இக்கட்டடத்தில் இயங்கி வரலாயிற்று. அயல்நாட்டாரின் ஆக்கிரமிப்பு உள்நாட்டில் சமய ஆக்கிரமிப்புக்கும் வழிவகுத்தது என்பது வெள்ளிடை மலை.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறித்தவ சமயத்தை பரப்பும் நோக்கத்துடன் பிரான்சு நாட்டிலிருந்து புதுவைக்கு வந்த சேசு சபைப் பாதிரியார்களில் சிலர் சமயப் பணிகளுக்காகச் சிற்றூர்களை நோக்கிச் செல்லத் தொடங்கினர். இவ்வாறு சென்ற

4 Vimala Begley 1996 : 30-31 5.பா.இறையரசன் 1983:248-249



சமயப் பணியாளர்களுள் ஒருவர்தான் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரிக்கமேட்டுக் கிறித்தவ மடத்தில் வாழ்ந்து வந்த 'பிஞ்ஞோ தெ பெயேன்' (Pigneau de Be'haine) என்பவராவார். அக்காலத்தில் அரிக்கமேட்டுப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் இவரை 'அந்த்ரான் பாதிரியார்' என்று அழைத்து வந்துள்ளனர். அந்த்ரான் பாதிரியார் வாழ்ந்த (கட்டடச் சிதைவுகள் உள்ள பகுதி) கிறித்துவ மடத்தைக் காண வந்தபோதுதான் ழுவோ துய்ப்ராய் அரிக்கமேட்டுப் பகுதியைக் கண்டார். அதுவே பிற்காலத்தில் உலகளாவிய நிலையில் அரிக்கமேடு பற்றிய அகழ்வாய்வுகளுக்கு வித்திட்டது எனலாம்.

### ஆக்கிரமிப்பும் புறக்கணிப்பும்

தொன்மைச் சிறப்பும் வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்த அரிக்கமேட்டுப் பகுதியை இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை 2004ஆம் ஆண்டு கையகப்படுத்தியது. கையகப் படுத்திய பின் அரிக்கமேட்டில் உள்ள மாந்தோப்பைச் சுற்றிலும் தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பகுதியில் இரும்பு முள் வேலியிட்டு ஒரு பெயர்ப்பலகை அமைத்து அதில், 'தொல்பொருள் ஆய்வுக்குட்பட்ட பகுதி, யாரும் அத்துமீறித் தோண்டக்கூடாது' என்று எழுதி வைத்துவிட்டு இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை தன் பணியை முடித்துக் கொண்டது.

நெடுஞ்சாலை அமைப்பதற்கும் நினைவகங்கள் நிறுவுவதற்கும் பல்கலைக்கழகம் அமைப்பதற்கும் ஓராண்டுத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று திட்டம் தீட்டிச் செயல்படும் அரசாங்கம் புராதனச் சின்னங்களை மீட்பதற்கும் மீண்டும் அகழ்வாய்வு செய்வதற்கும் தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை.

மத்தியஅரசு, மாநிலஅரசு ஆகிவற்றின் மெத்தனப் போக்கால் அரிக்கமேட்டு ஆய்வுமூலங்கள் சிதைவுக்கு உட்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் மெல்லமெல்ல அழிந்துகொண்டு வருகின்றன. 1989-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அரிக்கமேட்டுப் பகுதியில் அகழ்வாய்வுப் பணி மேற்கொள்ள வந்த அமெரிக்க ஆய்வாளர் விமலா பெக்லி, நிலச் சொந்தக்காரரின் எதிர்ப்புக்கு ஆளாக நேர்ந்தது் மாவட்ட ஆட்சித்தலைவர், காவலர் ஆகியோரின் துணையுடன் நில உரிமையாளரைக் கட்டுப்படுத்திய பின்னரே அகழ்வாய்வுப் பணியில் ஈடுபட முடிந்தது. வெளிநாட்டிலிருந்து நம்நாட்டிற்கு வருகை புரியும்

Tamil Heritage Foundation International (THFi)

அகழ்வாய்வாளர்கள் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு ஆளாகிய பின்னரே அகழ்வாய்வுப் பணியை மேற்கொள்ள முடிகின்றது.

**அரிக்கமேடு சிதைவுகள்**

பண்டைய தமிழகம் பல்றேு பேரிடர்களால் ஏற்பட்ட சிதைவுகளுக்குப் பின்பே இன்றைய நிலையில் அமைந்துள்ளது என்னும் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் 'குமரி முனைக்குத் தென்பால் இருந்த லெமூரியா எனப்படும் நாட்டில் தோன்றிய மக்கள் அந்நாடு கடல் வாய்ப்பட்டபோது சிதறுண்டு பல்வேறு திசைகளில் சென்று ஆங்காங்கே தங்கினர். ஆப்பிரிக்காவில் சிதறுண்டு தங்கியவர் ஆப்பிரிக்கர் என்றும் இந்தியாவைச் சேர்ந்தவர் திராவிடர் என்றும் சாவகம், சுமத்ரா வழியாகச் சீனா போன்ற பகுதிகட்குச் சென்றவர் மங்கோலியர் என்றும் பலவகை மக்களாக வாழ நேரிட்டது' என்று ஈராசு பாதிரியார் (Fr.Heras) கூறியுள்ளார்.[6] இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் அண்மைக்கால ஆய்வு ஒன்று வெளியாகியுள்ளது. அந்தமான் நிக்கோபர் தீவில் வாழும் பழங்குடியின மக்களுள் ஒரு பிரிவினர் ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்தவர்கள்.[7] ஆவர்.

பொதுவாக ஒரு இடத்தின் சிதைவுக்கு இயற்கைப் பேரழிவோ அல்லது செயற்கைச் சீரழிவோ காரணமாக இருந்து வந்துள்ளது. வரலாற்றின் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு காரணங்களால் புதுச்சேரி சிதைவுற்று மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

புதுவை வரலாற்றின் மூன்று கால கட்டங்களிலும் (சங்க காலம், பிற்காலச் சோழர்காலம், ஐரோப்பியர் காலம்) இதற்குரிய சான்றாதாரங்களைப் புதுச்சேரி தன்னகத்தே கொண்டுள்ளது. சங்ககாலத்தில் ரோமானியப் புதுச்சேரியாக இருந்த அரிக்கமேடு களப்பிரர் ஆக்கிரமிப்பினாலும் இயற்கைப் பேரழிவினாலும் சிதைக்கப்பட்டது.

காவிரிப்பூம் பட்டினத்தைப் போன்று அரிக்கமேடு ஒரு நாட்டின் தலைநகராக இருந்ததில்லை. அரிக்கமேடு வெறும் வணிகத்தலமாக மட்டுமே இருந்தமையால் அழிவுக்குப் பின்னர் அங்கிருந்த வணிகர்கள் வசதி கருதி வேறு இடங்களுக்கு மாறிவிட்டனர். எனவே இப்பகுதியில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுக் காலப்போக்கில் இங்கிருந்த வணிகக் குடியிருப்புக்கள் அழிந்தன எனக் கருதலாம்.[8]

6.பா.இறையரசன் 1983:41 7.தினமலர் 6-1-2002:10 8.ந.வேங்கடேசன் 1990:29.



இயற்கைப் பேரழிவினால் முதலாவது புதுச்சேரி எனப்படும் அரிக்கமேடு சிதைக்கப்பட்ட பின் இடைக்காலப் புதுச்சேரி கி.பி. 10-12 ஆம் நூற்றாண்டுகளில் பிற்காலச்சோழர் காலத்தில் செழிப்பானதொரு நகராக மீண்டும் திகழ்ந்துள்ளது. இன்றைய ஒழுகரைக்கும் கதீட்ரல் மாதாக் கோவிலுக்கும் இடையில் உள்ள மேட்டுப் பகுதியே இரண்டாவது புதுச்சேரி என்று கப்ரியேல் துய்வால் கணித்துள்ளார்.[9]

பிற்காலச் சோழர்காலக் காசுகள் அரிக்கமேட்டுப் பகுதியில் கண்டறியப் பட்டுள்ளமை இங்கே சுட்டிக்காட்டத் தக்கது. இசுலாமியர் ஊடுருவலால் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் இடைக்காலப் புதுச்சேரி சிதைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஐரோப்பியர் வருகையின் போது (கி.பி. 1673) இன்றைய புதுச்சேரியில் எந்த ஊரும் இருந்ததாகக் குறிப்புக்கள் கிட்டவில்லை. ஆனால் பழைய ஈசுவரன் கோவில் ஒன்று பாழடைந்த நிலையில் இருந்துள்ளது. இதனருகில்தான் கி. பி. 1692-ஆம் ஆண்டு கதீட்ரல் மாதாக் கோவில் கட்டப்பட்டது.

இந்த மூன்றாவது புதுச்சேரியே இந்தியாவில் பிரெஞ்சியரின் முதல் குடியேற்ற நகரமாகப் பின்னாளில் விளங்கியது. பிரெஞ்சியர் ஆட்சிக் காலத்தில் கிறித்தவ சமயப் பாதிரியார்களால் கி. பி. 1770-ஆம் ஆண்டு கட்டப்பட்ட மடத்தின் சிதைவுகள்தான் இன்றைய அரிக்கமேட்டின் மேற்பரப்பில் காணப்படுகின்றன. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளாக அரிக்கமேட்டில் நிகழ்ந்துவரும் சிதைவுகளை இயற்கைச் சிதைவுகள், செயற்கைச் சிதைவுகள் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**இயற்கைச் சிதைவுகள்**

சங்க காலத்திலும் அதற்கு முன்பும் தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவுகளைச் சிலப்பதிகாரமும் கலித்தொகையும் பதிவு செய்துள்ளன. சிலப்பதிகாரம் கடல்கோளைப்,

*பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள*[10]

என விவரிக்கின்றது. பஃறுளி ஆற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்ட நாற்பத்தொன்பது நாடுகள் கடலுக்குள் மறைந்தன என

9.ச.மதனகல்யாணி, 1998:20 10.சிலப்.மதுரை.11:19-22

Tamil Heritage Foundation International (THFi)

உரையாசிரியர்கள் அடியார்க்கு நல்லார், இளம்பூரணர் ஆகியோர் உரைத்துள்ளனர்.[11] கலித்தொகை

*மலிதிரை யூர்ந்து தன்மண்கடல் வெளவலின்*
*மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்பட*
*புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை*
*வலியினால் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்*[12]

என்று பாண்டிய நாட்டில் ஏற்பட்ட கடல்கோளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. குமரிப்பகுதியில் ஏற்பட்ட இக் கடல்கோள் அரிக்கமேட்டுப் பகுதியையும் ஆக்கிரமித்துள்ளது. கடல்கோளால் அழிவுற்ற அரிக்கமேடு களப்பிரர் படையெடுப்பால்(கி.பி. 3-ஆம் நூற்றாண்டு) மேலும் சிதைவுற்றது. பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட பாகூர் சிவன் கோவில் கல்வெட்டு, கடல்கோளால் ஏற்பட்ட அழிவினை உறுதி செய்கின்றது. அவ்வூர் கடலிலிருந்து நான்கு காவதம் தொலைவில் உள்ளதாகக் கல்வெட்டுக் கூறுகின்றது.[13] ஆனால் இன்று கடலிலிருந்து பாகூர் ஒரு காவதம் தொலைவில் உள்ளது. மூன்று காவதம் நிலத்தைக் கடல் கொண்டுவிட்டது.

### மண்ணரிப்பும் வெள்ளப்பெருக்கும்

அரிக்கமேட்டை ஒட்டியுள்ள அரியாங்குப்பத்தாறு கடலில் கலப்பதற்கு முன்பு மூன்று இடங்களில் இரு கிளைகளாகப் பிரிந்து மறுபடியும் இணைகின்றது. இவ்வாற்றின் பிரிவுகளும் கிளைகளும் பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள். நீரோட்டம் இல்லாத அரியாங்குப்பத்து ஆற்றின் தன்மையும் ஆற்றங்கரையை ஒட்டி அமைந்துள்ள சதுப்புநிலத் தாவரங்களின் இயற்கையமைப்பும் இக்கூற்றை உறுதி செய்ய வல்லன. மழைக்காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாகத்தான் அரியாங்குப்பத்தாற்றில் இவ்வகைப் பிரிவுகள் ஏற்பட்டன. ஆற்றில் ஏற்பட்ட இப்பிரிவுகள் நானூறு ஆண்டுக்கால வளர்ச்சிக்கு உட்பட்டவை. தேங்காய்த்திட்டை ஒட்டி இன்றைக்கு இரு பிரிவுகளாக ஓடிக் கொண்டிருக்கும் நதிப்பிரிவுகள் பிரெஞ்சியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டவையே.

பல ஆண்டுகளுக்கு முன்பு அரியாங்குப்பத்தாறு பிரிவுகளை ஏற்படுத்தாமல் வம்பாக் கீரைப்பாளையத்தருகில் கடலோடு கலந்துள்ளது. இன்றைய உப்பளம் விளையாட்டுத் திடல் அக்காலத்தில்

11.பா.இறையரசன்1983:37 12.முல்லைக்:பா.4:1-4 13.பா.இறையரசன்,1983:38.



ஆற்றில் முகத்துவாரத்தைக் காக்கும் மேடான இடமாகத்தான் இருந்தது. இக்காலத்தில் பழைய முகத்துவாரமும் துறைமுகப் பகுதியும் மறைந்து விட்டன. வீராம்பட்டினத்திற்கு அருகே ஆற்றின் நீர் கடலோடு கலக்கும் வழி ஏற்பட்டிருக்கின்றது.

அரியாங்குப்பத்து ஆறு இரண்டு கிளைகளாகப் பிரியாமல் இருந்த காலத்தில் தேங்காய்த்திட்டு என்னும் பெயர் ஏற்படவில்லை. அரிக்கமேட்டின் இடப்புறத்தில் இந்த ஆறு ஒரே பிரிவாகத்தான் ஓடிக் கடலில் கலந்துள்ளது. பின்னர் அரியாங்குப்பத்துக்கு அருகில் உள்ள ஆற்றின் கரையோரம் காலப்போக்கில் மண்மேட்டால் உயர்ந்திடவே மழைக் காலத்தில் திடீர் என்று ஏற்பட்ட வெள்ள நீர் ஆற்றின் போக்கைத் திசைமாற்றி விட்டது. வெள்ளப்பெருக்கின் காரணமாக ஆற்றிலிருந்து புதிதாகத் தோன்றிய இத்திட்டைத்தான் தேங்காய்த்திட்டு என்றழைக்கின்றோம். இத்திட்டுக்கு இடப்புறமுள்ள பழைய கிளைநதி ஆழமின்றி நீர் தேங்கி நிற்கும் கழிமுகப் பகுதியாகவே காட்சியளிக்கின்றது.

அரியாங்குப்பத்து ஆறு எப்போதும் நீர் ஓடிக்கொண்டிருக்கும் ஆறு அன்று. வடகிழக்குப் பருவமழை ஏற்படும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மட்டுமே மழைநீர் மூலம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுக் கடலில் கலக்கும். ஏனைய காலத்தில் நீர் தேங்கி நிற்கும் சதுப்பு நிலப் பகுதியாகவே அரிக்கமேடு காட்சியளிக்கும். மழைக்கால வெள்ளநீர் அரிக்கமேட்டுக் கரைப் பகுதியில் ஆற்று நீரோடு கலக்கும்போது மண்ணரிப்பு ஏற்பட்டு, கரைப்பகுதி பாதிப்புக்குள்ளாகின்றது. ஒவ்வோர் ஆண்டும் இத்தகைய மண்ணரிப்பு ஏற்பட்டு அரிக்கமேட்டின் கரைப்பகுதி சிதைக்கப்படுவதால் பல தொல்பொருள் சின்னங்கள் மழைநீருடன் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றில் அமிழ்ந்து விடுகின்றன.

### செயற்கைச் சிதைவுகள்

மழைக்கால வேளைகளில் காக்காயந்தோப்பைச் சேர்ந்த சிறுவர்கள் கையில் சிறிய கடப்பாரை, களைக்கொட்டு ஆகிய கருவிகளுடன் அரிக்கமேட்டுப் பகுதிக்கு வந்து தேடல் வேலையைத் தொடங்கி விடுகின்றனர். இச்சிறுவர்கள் பிற்காலச் சோழர்காலத்தவை என்று கருதப்படும் கோழிக்காசுகளை மிகுதியான எண்ணிக்கையில் சேமித்து வைத்துள்ளனர். அரிக்கமேட்டிற்கு வரும் அயல்நாட்டுப் பயணிகளிடம்

Tamil Heritage Foundation International (THFi)

இச்சிறுவர்கள் தங்களுக்குக் கிடைத்த நாணயங்கள், கண்ணாடி மணிகள், கோமேதகக் கற்கள் ஆகியவற்றை அதிகப் பணத்திற்கு விற்று வருகின்றனர். அரிக்கமேடு அகழ்வாய்வில் கிடைத்திராத பல அரிய தொல்பொருட்கள் இவர்களிடம் சிக்கியுள்ளன.

சிறியவர்கள் மட்டுமின்றி இப்பகுதியில் வாழும் பெரியவர்களும் அரிக்கமேட்டுப் பகுதியிலிருக்கும் பழங்காலச் சுவர்களில் உள்ள செங்கற்களைப் பெயர்த்தெடுத்துச் சென்று விடுகின்றனர். தொல்பொருள் ஆய்வுக்கு உட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாமையால்தான் இத்தகைய களவுச்செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முறைகேடாக நடைபெறும் இச்செயல்களால் அரிக்கமேட்டுப் பகுதியின் மண்ணடுக்குகள் சிதைக்கப் பெறுவதோடு தொல்பொருட் சின்னங்களும் இடம்மாறி விடுகின்றன. இதனால் முறையான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளும்போது தொல்பொருட் சின்னங்களின் காலத்தை வரையறை செய்வதில் பல முரண்பாடுகள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

விமலா பெக்லி நடத்திய ஆய்வில் உடைந்தும் சிதைந்தும் உதிரிகளாகவும் உள்ள ஓடுகளே அரிக்கமேட்டுப் பகுதியில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. ஆனால் வீலர், கசால் ஆகியோர் நடத்திய அகழ்வாய்வுகளில் முழுமையான பல மட்கலன்கள் கிடைத்துள்ளன. கி.பி. 1950-ஆம் ஆண்டிற்கும் 1985-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இப்பகுதி, உள்ளூர் மக்களாலும் நிலச் சொந்தக்காராலும் அடிக்கடி சிதைவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

மழைக்கால வேளைகளில் புஞ்சைப் பயிர் செய்வதற்கு இப்பகுதி பலமுறை ஏரால் உழப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் களிமண்ணுக்காகவும் வேறு சில காரணங்களுக்காவும் இங்கே தோண்டி வைத்த பள்ளங்கள் மழைக்கால நீரோட்டத்தால் இணைந்து ஒரு சிறிய வாய்க்கால் போன்று தோற்றம் அளிக்கின்றது. மழைக்கால வேளைகளில் இவை அனைத்தும் சிறுசிறு வாய்க்காலாக உருவெடுத்து அரியாங்குப்பத்து ஆற்றில் சென்று கலக்கின்றன. அவ்வாறு கலக்கும்போது அரிக்கமேட்டின் மேற்பரப்பில் உள்ள அனைத்துப் பொருட்களும் இந்த வாய்க்கால்கள் மூலம் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றின் அடிப்பகுதியில் சென்று தங்கி விடுகின்றன. வடபகுதியில் இருந்த செங்கல்லால் ஆன உலையடுப்பு, களிமண் கூரைஓடுகள், பல தொல்பொருட் சின்னங்கள் இயற்கைப் பேரழிவினாலும்



மக்களுடைய செயற்கைச் சிதைவுகளாலும் ஆண்டுதோறும் அழிந்து வருகின்றன.

விமலா பெக்லி கி.பி. 1992-ஆம் ஆண்டு அகழ்வாய்வு செய்யப் பள்ளம் தோண்டியபோது அப்பள்ளம் அண்மைக் காலத்தில் தோண்டப்பட்ட பள்ளமாகத் தென்பட்டது மேலும் ஆழப்படுத்தப்பட்டபோது அதில் மேல்மட்ட மண்ணடுக்களில் காணப்படும் செங்கற்கள், மணிகள், பழங்காலப் பொருட்கள் ஆகியன ஒரே குவியலாகக் கிடைத்துள்ளன. நில உரிமையாளரிடம் இது குறித்து விசாரித்தபோது, 'தமது தந்தையார் இப்பகுதியில் உள்ள நிலத்தை ஏர் உழுவதற்காகச் சமன்செய்து பண்படுத்தும் போது கிடைத்த செங்கற்கள் பானை ஓடுகள், மணிகள் போன்றவற்றை ஆற்றோரமாகக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு உழுதார்'[14] என்று பதில் கூறினார். இத்தகைய செயல்பாடு, சிதைந்த நிலையில் உள்ள கிறித்தவ மடத்திற்கு அருகில் உள்ள இடத்தில் கடந்த ஐந்தாண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

அரிக்கமேட்டில் பிஞ்ஞோ தெ பெயேன் கட்டிய கிறித்தவ மடத்தின் சில பகுதிகள் இங்குக் கிடைத்த பழமையான செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட உண்மை பொஷே பாதிரியார் வெளியிட்ட பிரெஞ்சிந்திய அரசின் குறிப்புக்களில் காணப்படுகின்றது.[15] கி.பி. 1779-ஆம் ஆண்டு அரிக்கமேட்டிற்கு வருகை புரிந்த லெழாந்தீய் இப்பகுதியின் தொன்மைச் சிறப்பைக் கண்டுணர்ந்து முதன் முதலில் இதன் பழைமைச் சிறப்பை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் 1783-ஆம் ஆண்டு இங்கிருந்த கிறித்தவ மடத்தின் செயல்பாடு தடைபட்டது.

அரிக்கமேட்டின் வடபகுதியில் உள்ள பல இடங்களில் கி.பி. 1940-ஆம் ஆண்டில் நில உரிமையாளர் இரண்டு மீட்டர் ஆழத்திற்குத் தென்னங் கன்றுகள் நடுவதற்காகப் பல குழிகள் தோண்டியுள்ளார். உள்ளூர் மக்களும் விவசாயிகளும் இப்பகுதியில் உள்ள நிலத்தைப் பலமுறை உழுதுள்ளனர்.

கி.பி. 1976-ஆம் ஆண்டு புதுவையில் வீசிய புயல் மற்றும் வெள்ளப் பெருக்கினால் இப்பகுதியின் மேற்பரப்பு பெரும் சிதைவுக்குள்ளாகியது. புதிய குடியிருப்புக்கள் கட்டுதல் இப்பகுதியில் தடைசெய்யப் பட்டிருந்தாலும் நாளுக்கு நாள் இப்பகுதி சிதைந்து வருவதை யாராலும் தடுக்க இயலவில்லை.

14. Vimala Begley 1996 : 93    15. Ibid : 37

Tamil Heritage Foundation International (THFi)

**மீன்பிடி துறைமுகம்**

அரியாங்குப்பத்தாறு கடலில் கலக்கும் தேங்காய்த்திட்டுப் பகுதியில் நான்கு கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. 4 ச.கி.மீ. பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கும் இத்துறைமுகம் அரிக்கமேட்டை ஒட்டிய பகுதியில் அமைந்துள்ளது. பின்னாளில் இத்துறைமுகம் அரிக்கமேட்டை ஒட்டி மேலும் விரிவுபடுத்தப்படாமல் அரசு கவனித்துக் கொள்ளவேண்டும். ஒருவேளை விரிவு படுத்தப்பட்டால் அங்குவரும் மீன்பிடிப் படகுகளால் ஏற்படும் அலைகளால் அரிக்கமேட்டின் கரைப்பகுதி பாதிப்புக்கு உள்ளாகலாம். படகுகள் கரையோரமாக நிறுத்தப்படும்போது கரைப்பகுதி சிதைக்கப்படலாம். ஏற்கெனவே சிதைவுக்குள்ளான கரைப்பகுதி மேலும் சிதைவுறாமல் தடுக்க அரிக்மேட்டைய ஒட்டிய கரைப்பகுதியில் கருங்கற்களைக் கொண்டு கரைச்சுவர் அமைக்கப்பட வேண்டும்.

**இயற்கைப் பாதுகாப்பு**

அரிக்கமேட்டை இயற்கைப் பேரழிவிலிருந்தும் செயற்கைச் சீரழிவிலிருந்தும் காப்பாற்றும் இயற்கை அரணாக விளங்கி வருவன சதுப்பு நிலத்தாவரங்களே. அரியாங்குப்பத்து ஆற்றை ஒட்டிய இருபக்கக் கரைகளிலும் சதுப்பு நிலத் தாவரங்கள் பல செழித்து வளர்ந்து வருகின்றன. தமிழகத்தில் கோடியக்கரை, பட்டுக்கோட்டை, பிச்சாவரம், கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் இத்தகைய சதுப்பு நிலக் காடுகள் காணப்படுகின்றன. பிச்சாவரத்தில் வளர்கின்ற தாவர இனங்களைப் போலவே அரியாங்குப்பத்து ஆற்றின் கழிமுகப்பகுதிகளில் பல சதுப்பு நிலத் தாவர இனங்கள் இயற்கையாகவே வளர்ந்து வருகின்றன. ஆனால் இப்போது மக்களின் நுழைவால் இப்பகுதிகளில் சதுப்பு நிலத் தாவர இனங்கள் விறகுக்காகவும் வேறு சில காரணங்களுக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இக்காலத்தில் அரிக்கமேட்டை ஒட்டிய ஆற்றங்கரைப் பகுதியில், 'அவிசென்னியா' (Avicennia Marina) என்னும் அலையாத்தியும் 'புரகீரியா' (Brugiera Cylindrica) என்னும் பண்ணுக்குச்சி மரமும் 'அக்கந்தசு' (Acanthusillcifolius) என்னும் கழிமுள்ளிச் செடியும் 'சுவேடா' (Suveda martima) என்னும் அமரிச்செடியும் காணப்படுகின்றன.[16] இவைதவிர அரியாங்குப்பத்தாற்றின் இருமருங்கிலும் தாழை, பூவரசு, புங்கன், தென்னை, புன்னை, நாட்டு வாதுமை, பனை முதலிய மரங்களும் உயரமான சில புற்களும் வளர்ந்து காட்சியளிக்கின்றன.

16.வா.கிருட்டிணன் 1990:7



புதுவைப் பிரெஞ்சிந்தியக் கலைக்கழகத்தில் பணியாற்றிய உயிரியல் அறிஞர் தணிகைமணி அரிக்கமேட்டு அகழ்வாய்வுப் பகுதியில் புதைந்து கிடந்த பல துகள்களை ஆய்வு செய்து அவை அரிக்கமேட்டுப் பகுதியில் வளர்ந்திருந்த சதுப்பு நிலத்தாவரமாகிய அலையாத்தியின் மகரந்தத் தூள்களே என்று குறிப்பிட்டுள்ளார்.[17] இதனால் இப்பகுதியில் முற்காலத்தில் அடர்ந்த சதுப்பு நிலக்காடுகள் இருந்தமை புலனாகின்றது. இப்போது இத்தாவரங்கள் ஆற்றின் தென்கரைப் பகுதியில் மட்டும் செழித்து வளர்ந்து வருகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு அரியாங்குப்பம் பாலத்தின் கிழக்குப் பகுதியில் பல தாவரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. ஆனால் அத்தாவரங்கள் எல்லாம் கடந்த சில ஆண்டுகளாக இங்கு வசிக்கும் மக்களால் அழிக்கப்பட்டு வருவதால் இப்பகுதியின் இயற்கைத் தகவமைப்பும் பாதுகாப்பும் மெல்லமெல்லச் சிதைந்து கொண்டே வருகின்றன.

சதுப்பு நிலத் தாவரங்கள் நிறைந்த அரியாங்குப்பத்து ஆற்றின் கழிமுகப் பகுதிகளில் மீனவர்கள் எல்லாப் பருவ காலங்களிலும் மீன் பிடித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. அரியாங்குப்பம் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள அரிக்கமேட்டுச் சதுப்பு நிலத் தாவரங்கள் அடர்த்தியாக வளர்ந்துள்ளதால் மனிதர்களின் தேவைக்கும் மீன்களின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவி வருகின்றன. சதுப்பு நிலப்பகுதியில் அதிகமான ஈரப்பதமும் (உள்நாட்டு மண் அரிமானத்தால் கொணரப்பட்ட) ஊட்டச் சத்துக்களும் அதிகமான சூரிய வெளிச்சமும் உள்ளன. பல்வேறு உயிரினங்கள் வாழும் விந்தையான சூழல் தொகுப்பாக (Ecosystem) இது கருதப்படுகின்றது. இக்காடுகளில் உள்ள மரங்களின் அடர்ந்த நிழலிலும் பல கிளைகளையுடைய தாங்கு வேர்களினூடேயும் மூச்சு வேர்களினூடேயும் பல்வேறு உயிரினங்களும் வாழுகின்றன. மேலும் இத்தாவரங்கள் இளக்கமான வண்டல் மண் கடலினுள் சென்றுவிடாமல் தடுக்கின்றன. கடலிலிருந்து உருவாகும் புயல், சூறாவளிக் காற்றினால் உள்நாட்டில் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகளையும் இவை தடுக்கின்றன.

பொருளாதார அடிப்படையிலும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் வரலாற்றுத் தொல்பொருட் சின்னங்களைப்

17.மே.நூல்:8

Tamil Heritage Foundation International (THFi)

பாதுகாப்பதிலும் அரிக்கமேட்டுப் பகுதியில் வளரும் சதுப்பு நிலத்தாவரங்கள் பெரும்பங்காற்றி வருவது மறுக்க முடியாத உண்மையாகும். இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் 1986-ஆம் ஆண்டிலிருந்து சதுப்புநிலக் காடுகளைப் பேணுவதிலும் ஆய்வுகள் செய்வதிலும் இவற்றை அழிவிலிருந்து காப்பாற்றி விரிவு படுத்துவதிலும் முனைப்பாகச் செயலாற்றி வருகின்றது.[18]

பிச்சாவரம், கோடியக்கரை ஆகிய இடங்களில் உள்ள சதுப்பு நிலத் தாவரங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதைப் போன்று அரியாங்குப்பம் ஆற்றுக் கழிமுகப் பகுதியில் வளரும் சதுப்பு நிலத் தாவரங்களை வளர்க்கவும் பேணிப் பாதுகாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். இதற்கான செயல் திட்டங்களைத் தொண்டு நிறுவனங்களோ மாநில அரசோ உருவாக்கி இந்திய அரசின் சுற்றுச் சூழல் வனத்துறை அமைச்சகத்திற்குத் தெரிவித்து இசைவும் பொருளுதவியும் பெற்று, அழிந்து வரும் இத்தாவரங்களை அழியாமல் காத்து, விரிவு படுத்தினால் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்த நற்பெயரும் கிட்டும்.

**செயற்கைப் பாதுகாப்பு**

அரியாங்குப்பத்து ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைப் புதுவை அரசு அமைத்துள்ளது. அரிக்கமேட்டின் எதிரே உள்ள உப்பளம் பகுதியில் இத்துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளதால் அரிக்கமேட்டிற்கு எவ்விதப் பாதிப்பும் தற்போது ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் எதிர்காலத்தில் இத்துறைமுகம் விரிவுபடுத்தப்பட்டால் அரிக்கமேட்டுப் பகுதி பாதிப்புக்குள்ளாக நேரிடும். இங்கு நடமாடக்கூடிய பல படகுகளின் நீர் அலைவினால் அரிக்கமேட்டின் கரையோரப் பகுதிகள் பாதிப்புக்கு உள்ளாகும். மீன்பிடி துறைமுகத்தை ஒட்டிப் பல மீன் வளர்ப்பு மையங்களும் இப்பகுதியில் செயல்படும் வாய்ப்புக்கள் உள்ளன. இதன் தொடர்ச்சியாக மீன் பதனிடும் தொழிற்சாலை முதலாம் பல தொழிற்கூடங்களை நிறுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படக் கூடும்.

பத்தாண்டுகளுக்கு முன்பு சுண்ணாம்பாற்றை ஒட்டியுள்ள சின்ன வீராம்பட்டினம் பகுதியில் இறால்மீன் வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வந்ததால் தொல் பொருள் ஆய்வுக்கு உட்பட்ட இப்பகுதி தொழில் காரணங்களுக்காகச் சிதைக்கப்பட்டுள்ளது. மீன்பிடி துறைமுகத்திற்கும்

18.மே.நூல்:19



இறால்மீன் வளர்ப்பு மையங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகப் புதுவை இயற்கைக் கழகம் மனிதச்சங்கிலிப் போராட்டத்தை நிகழ்த்தியுள்ளது. இதற்கு ஆதரவாக, இந்தியக்கலை மற்றும் பண்பாட்டிற்கான தேசிய அறக்கட்டளையின் புதுவை மைய அமைப்பாளர் பி. சிரில் அந்தோணி, 'பொதுகேவைக் காப்போம்' (Save Poduke) என்னும் தலைப்பில் விழிப்புணர்வுக் கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.[19]

மழைக்காலங்களில் அரிக்கமேட்டின் கரைப்பகுதிகள் சிதைக்கப்பட்டு, பல தொல்பொருள் சின்னங்கள் மழைநீரினால் அடித்துச் செல்லப்பட்டு, ஆற்றில் அமிழ்ந்து விடுவதைத் தடுக்கும் வகையில் மண்ணரிப்பு நிகழாவண்ணம் அரிக்கமேட்டின் கரையோரப் பகுதியில் உயரமான தடுப்புச்சுவர் எழுப்புவது உடனடித் தேவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக 13.99 ஹெக்டேர் அளவுள்ள அரிக்கமேட்டு நிலப்பகுதியை, எல்லை வரையறை செய்து சுற்றுச்சுவர் எழுப்பி பொதுமக்களின் சிதைவுகளிலிருந்து தடுத்திட வேண்டும். இப்பகுதியில் ஏற்படும் கள்ள அகழ்வுகளைத் தடுத்திடும் வகையில் நிரந்தரமாகக் காவலர்களை நியமித்தல் வேண்டும்.

**நீருக்கடியில் அகழ்வாய்வு**

கடற்கரையோர நகரங்களும் துறைமுகப் பட்டினங்களும் ஆற்றங்கரை நகரங்களும் இயற்கைச் சீற்றங்களாலும் கடல்கோள்களாலும் அழிந்திருக்கின்றன. தமிழகத்தில் நாகப்பட்டினமும் காவிரிப்பூம்பட்டினமும் மாமல்லபுரமும் கடல்கோளுக்கு இலக்காகியுள்ளன. கடலில் மூழ்கிய பகுதிகளில் நன்கு ஆராய்ந்து மறைந்து போன நகரங்களின் எச்சங்களை நீருக்கடி அகழ்வாய்வு மூலம் வெளிக்கொணர முடியும். இத்தகைய ஆய்வுகளின் மூலம் அயல்நாட்டு வணிகம் நடைபெற்றமையையும் மறைந்த நகரங்களின் அமைப்பினையும் ஓரளவு அறிந்துகொள்ள முடியும். தமிழ்நாட்டில் குமரி முனைக்குத் தெற்கிலிருந்த மிகப் பெரும் நிலப்பரப்பு (இலெமூரியாக் கண்டம்) கடல்கோளால் மூழ்கிவிட்ட செய்தியைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

அரிக்கமேட்டு அகழ்வாய்வில் கண்டறியப்பட்ட யவனக் குடியிருப்புச் சுவர்களின் தொடர்ச்சி, ஆற்றின் கரையோரம் இருப்பதால் இதன்

19. F. Cyril Antony 1985 : 1

Tamil Heritage Foundation International (THFi)

பெரும்பகுதி அரியாங்குப்பத்து ஆற்றின் அடியில் அமிழ்ந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது. மேலும் இப்பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்கள் தங்கள் மீன் வலையில் பானை ஓடுகள் தட்டுப்படுவதாகக் கூறுகின்றனர். எனவே அரிக்கமேட்டை ஒட்டியுள்ள அரியாங்குப்பத்து ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டிவிட்டுத் தேங்கி நிற்கும் நீரை இறைத்துவிட்டு அகழ்வாய்வு நிகழ்த்தினால் மேலும் பல அரிய தொல்பொருட் சின்னங்களை வெளிக்கொண்டு வரலாம்.

நீரில் மூழ்கிய பழங்கால இடங்களில் புதிய அறிவியல் கருவிகளின் துணைகொண்டு மேற்பரப்பாய்வு செய்து தொல்பொருட்கள் மூழ்கியதற்கான தடயங்கள் இருப்பின் அரியாங்குப்பத்து ஆற்றில் அகழ்வாய்வு செய்யலாம்.

மேலைநாடுகள் சிலவற்றில் இவ்வாய்வுகளினால் கடலில் மூழ்கிய கப்பல்களின் சிதைந்த பகுதிகள், மட்கலன்கள், அணிகலன்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் அகழ்வாய்வாளரின் அரிய முயற்சியினால் அந்திகிய தேரா (Antikya thera), மகதியா (Mahadia), ஜெலிடோனியா (Gelidonya), அல்பெங்கா (Albenga) ஆகிய இடங்களில் கடலுக்கடியில் அகழ்வாய்வு நிகழ்த்தி உடைந்துபோன கப்பல்களின் பாகங்கள், ரோமானிய மட்கலன்கள் உலோகத் திருவுருவங்கள் ஆகியவற்றை வெளிக் கொணர்ந்துள்ளனர்.[20]

அரியாங்குப்பத்து ஆற்றிலும் இத்தகைய முறையில் நீருக்கடியில் அகழ்வாய்வு (Under Water Archaeology) மேற்கொள்ள இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும். நீருக்கடியில் அகழ்வாய்வு செய்வதற்கு மிகுந்த பொருட்செலவு ஏற்படுவதாலும் தனிப்பயிற்சி பெற்ற பல்வேறு துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தேவைப்படுவதாலும் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இத்தகைய ஆய்வுமுறைகள் மிகுதியாகச் செயல்படுத்தப் படவில்லை.

## அகழ்வாய்வில் பல்துறைப் பங்கு

அகழ்வாய்வுப் பணி என்பது தொல்லியல் துறையினருக்கு மட்டுமே சொந்தமானது என்று நினைத்து விடலாகாது. இதில் பல்துறைகளின் பங்கும் கூட்டுச் செயல்பாடும் அமைந்துள்ளது. அறிவியல், நிலவியல்,

20.க.தில்லைவனம் 1990:138



புள்ளியியல், கடலியல், சுற்றுச் சூழலியல், தொல்லியல் முதலாம் பல்துறை அறிஞர்களின் கூட்டு முயற்சியால் நடைபெறும் ஆய்வே முழுமையான அகழ்வாய்வாகும். மேலை நாடுகளில் இத்தகைய கூட்டு முயற்சியின் அடிப்படையில் அகழ்வாய்வுப்பணி மேற்கொள்ளப்படுவதால் தொல்பொருட்களின் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட முடிகின்றது.

இந்தியாவில் கடந்த அறுபது ஆண்டுகளில் அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்கள் மிகவும் குறைவு. அதற்குப் பணப்பற்றாக் குறையும், அகழ்வாய்வாளர்கள் பற்றாக் குறையும் காரணங்களாக உள்ளன. தொல்லியல் ஆய்வுத் துறையைப் பொறுத்தவரையில் மேலை நாடுகளில் உள்ள வசதிகள் இந்தியாவில் இல்லை. 'மேலை நாடுகளில் அகழ்வாய்வு நடத்தும்போது நிலத்தை ஊடுருவி நோக்கும் எஸ்.ஐ.ஆர் (Sub Interface Radar) என்ற கருவியைப் பயன் படுத்துகின்றார்கள்'.[21] இந்தக் கருவி வெளிப்படுத்தும் மின்னோட்டம் நிலத்தை ஊடுருவிச் செல்லும்போது நிலத்திற்கடியில் புதைந்துள்ள கட்டடங்கள், நாணயங்கள் போன்ற பொருட்களை ரேடார் கருவி மேலே உள்ள கணிப்பொறித் திரையில் (Monitor) காட்டும். அதைக்கொண்டு வரைபடம் (Map) தயாரித்துப் பின்னர் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் அகழ்வாய்வைத் துல்லிமாக நிகழ்த்துகிறார்கள். இதனால் அரிய தொல்பொருட்களை அவர்கள் கண்டெடுக்கின்றனர். பூமியின் மேற்பரப்பில் கிடைப்பதை மட்டுமே வைத்துக்கொண்டு இந்தியாவில் ஆய்வு செய்யப்படுவதால் தொன்மையான பொருட்கள் அவ்வளவாகக் கிடைப்பதில்லை.

இந்திய நாடு பொருளாதாரத் துறையில் முழுமையான மேம்பாடு அடையாமையினாலும் அறிவியல் முறைகளைச் செயல்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மிகுந்த பொருட்செலவுகள் ஏற்படுவதாலும் அகழ்வாய்வுப் பணிகளைப் பல்துறை அறிஞர்களின் கூட்டு முயற்சியால் செய்வதென்பது கடினமான பணியாக இருக்கின்றது. மேலும் அறிவியல் முறைப்படி ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய விலையுயர்ந்த கருவிகளை அயல்நாட்டிலிருந்து பெறவேண்டிய நிலையில் இருப்பதாலும் இந்தியா தொல்லியல் துறையில் பின்தங்கியுள்ளது. இதுபோன்று பல்வேறு இடர்ப்பாடுகளும் நடைமுறைச் சிக்கல்களும் இருப்பதால்தான் இந்தியாவில் தொல்லியல் துறையினரால் மாபெரும் சாதனைகளை நிகழ்த்திக் காட்ட இயலவில்லை. இருப்பினும் 1981-ஆம் ஆண்டு முதல் 1992-ஆம்

21.தினமலர் 18-8-1999:9

Tamil Heritage Foundation International (THFi)

ஆண்டுவரை அமெரிக்க ஆய்வாளர் விமலாபெக்லி இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை உதவியுடனும் பல்துறை அறிஞர்களின் கூட்டு முயற்சியுடனும் ஆய்வுகள் நிகழ்த்திப் பல அரிய தொல்பொருள் சின்னங்களை வெளிக் கொணர்ந்துள்ளார்.

அகழ்வாய்வு நடைபெறும் இடத்தில் உள்ள உலோகத் தாதுக்கள், மண்ணின் தன்மை, தாவர வகைகள், விலங்கினங்கள் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ள இயலுவதால் அவை அகழ்வாய்வில் கிடைக்கும் பொருட்களைப் பற்றிய கூடுதலான தகவல்களைத் தருவதோடு பிற ஆய்வுகட்கும் ஏதுவாகத் திகழ்தல் திண்ணம். நீருக்கடியில் அகழ்வாய்வுப் பணியை மேற்கொள்வதற்கு இயற்பியல், வேதியியல், கடலியல் முதலிய துறைகளின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். நிலப்பகுதியில் தொல்லியல் வல்லுநர்கள் தனியாகவே அகழ்வாய்வினை மேற்கொள்ள முடியும். ஆனால் நீருக்கடியில் ஆய்வு செய்து அகழ்ந்து பார்ப்பதற்கும் கிடைத்த பொருட்களைப் பாதுகாப்பதற்கும் அறிவியல் துறைகளின் கூட்டு முயற்சிதான் மிகுந்த பயன்களைத் தரும்.

### அரிக்கமேடு-விழிப்புணர்ச்சி

மத்திய-மாநில அரசுகள் மட்டுமின்றிப் புதுச்சேரி வாழ் மக்களும் அரிக்கமேட்டை இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளிலிருந்து காப்பாற்றுவதில் ஆர்வம் காட்டுபவர்களாக இருத்தல் வேண்டும். இதற்காக முதலில் அரிக்கமேட்டுப் பகுதியில் வாழும் மக்களுக்கு அப்பகுதியின் இன்றியமையாமையை விளக்கவேண்டும். அது மட்டுமன்றி அரிக்கமேடு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி என்பதையும் புரியவைக்க வேண்டும். மேலும் அரிக்கமேட்டில் வளர்ந்துவரும் சதுப்புநிலத் தாவரங்களை உள்ளூர் மக்கள் விறகுக்காக அழிக்கவிடாமல் காக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

அரிக்கமேடு பற்றிய விழிப்புணர்ச்சியைப் புதுவை மாநிலத்தில் கல்வி பயிலும் மாணவர்களிடையே பரவச் செய்யும் முயற்சியில் புதுவையரசின் கல்வித்துறை-சுற்றுச்சூழல் பிரிவு இரண்டு நூலேடுகளை 1990-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.[22] இவை தவிர உயர்நிலைப்பள்ளி அளவில் அரிக்கமேடு பற்றிய வரலாற்றுக் கல்வியைப் பாடத்திட்டத்திலும் சேர்ப்பதற்குப் புதுவை அரசு ஆவன

22.சிரில் அந்தோணி, சு. தில்லைவனம்990 வா. கிருட்டிணன் 1990.



செய்யவேண்டும். அரிக்கமேட்டின் பழஞ்சிறப்பை உணர்ந்து புதுவையரசு உடனடியாகத் தன் பொறுப்பில் ஏற்றுச் சுற்றுலாமையமாக அறிவித்து அழகுபடுத்த வேண்டும். அகழ்வாய்வுக் காட்சிகளையும் படங்களையும் தொல்பொருட் சின்னங்களையும் ஒளிநாடாக் (Video) காட்சிகளாகப் பதிவுசெய்து அப்பகுதி மக்களிடையே அவற்றை ஒளிபரப்பி உள்ளூர் மக்களின் கள்ளஅகழ்வுக்கு உட்படாமல் அரிக்கமேட்டைப் பாதுகாத்திட வேண்டும். இயற்கைப் பேரழிவினாலும் களப்பிரர் ஆக்கிரமிப்பினாலும் இசுலாமியர் ஊடுருவலாலும் ஐரோப்பியர் படையெடுப்பினாலும் வரலாற்றின் வெவ்வேறு காலகட்டத்தில் அரிக்கமேடு உள்ளிட்ட புதுவைப் பகுதிகள் சிதைக்கப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப் பட்டுள்ளன. அரிக்கமேட்டின் இயற்கைஅரணாக விளங்கும் சதுப்புநிலத் தாவரங்களைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் அரசு ஈடுபடவேண்டும்.

மழைக்காலத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினாலும் மண்ணரிப்பினாலும் அகழ்வாய்வுக்கு உட்பட்ட பகுதிகள் சிதைக்கப்படாமல் இருக்க அரிக்கமேட்டிற்கும் அரியாங்குப்பத்து ஆற்றுக்கும் இடையே தடுப்புச்சுவர் எழுப்பப்பட வேண்டும். அரிக்கமேட்டுப் பகுதியைக் கையகப் படுத்தியதோடு அமையாமல் அகழ்வாய்வு செய்த நிலையில் அங்குள்ள தொல்பொருட் சின்னங்களைக் காட்சிப் படுத்தி நினைவுச் சின்னமாகவும் சுற்றுலா மையமாகவும் அமைக்கும் பணியில் அரசு மற்றும் தன்னார்வலத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட முன்வரவேண்டும்.

கி.மு. 200-முதல் கி.பி. 200-வரையிலான காலப்பகுதியில் 'மொழி பல பெருகிய தேயமாகவும் புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும் துறைமுமாகவும் பல்பண்டம் பகர்ந்து வீசும் பட்டினமாகவும்' விளங்கிய பொதுகே நகரம் என்று அழைக்கப்பட்ட அரிக்கமேடு இன்று சிதைவுற்றுப் பொலிவிழந்து 'அணிலாடு முன்றில்' போன்று காட்சியளிப்பது காலத்தின் கோலமாகும்.

Tamil Heritage Foundation International (THFi)

# 8. அரிக்கமேடு - சுற்றுலா மேம்பாடு

பழமைச் சின்னங்கள் நாகரிக வளர்ச்சியின் குழந்தைகள் என்னும் கூற்று சுற்றுலா வளர்ச்சியில் வரலாற்றின் மகத்துவத்தை உணர்த்துகின்றன. புதுவையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமையப் பெற்றுள்ள அருங்காட்சியகங்கள், ஆன்ம நேய வழிபாட்டுத் தலங்கள், ஆலயங்கள், ஆசிரமங்கள், கண்களுக்கு விருந்தளிக்கும் இயற்கைக் காட்சிகள், புதுவையின் நீராதாரத்தைப் பாதுகாக்கும் ஏரிகள், அணைகள், செயற்கையாக வடிவமைக்கப்பட்ட பூங்காக்கள் எனப் பல சுற்றுலாத் தலங்கள் பல்கிப் பெருகியுள்ளன. இவை அனைத்திற்கும் தலைமை வகிக்கும் வண்ணம் அரிக்கமேட்டைச் சுற்றுலாத் தலமாக்கினால் தொன்மையைப் பராமரிப்பதோடு அந்நியச் செலாவணிக்கும் அது வழிவகுக்கும்.

மனிதநேயத்தை வளர்ப்பதில் சுற்றுலாவின் பங்கு மகத்தானது. எனவேதான் இக்காலத்தில் சுற்றுலாவை வளர்ப்பதிலும் மேம்படச் செய்வதிலும் அரசும் தனியார் நிறுவனங்களும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இந்தியச் சுற்றுலாவின் ஆணிவேர்கள் இந்தியாவில் உள்ள பழமையான பண்பாட்டுச் சின்னங்கள்தாம். அவற்றைப் போற்றிக் காப்பது நம்முடைய பாரம்பரியத்தைப் போற்றிக் காப்பதற்குச் சமமாகும். அவ்வகையில் பழந்தமிழரின் நாகரிகச் சின்னங்களை மட்டுமின்றி ரோமானியரின் தொல்பொருட்களையும் பொதிந்து வைத்துள்ள அரிக்கமேடு உலகப் பாரம்பரியச் சின்னங்களுள் ஒன்றாகக் கருதப்பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.

**சுற்றுலாத் தலம்**

விடுலைக்குப்(1954) பின்பு சாதாரண சுற்றுலா இடமாக விளங்கிய புதுவை அண்மைக் காலத்தில் வளர்ந்து வரும் சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாக விளங்கி வருகின்றது. இதற்குத் தொன்மைச் சிறப்பு வாய்ந்த அரிக்கமேடும் ஒரு முக்கியக் காரணமாகும். சுற்றுலாவுக்கான எல்லா அம்சங்களும் அரிக்மேட்டில் நிறைந்திருந்தும் அது இன்னும் சுற்றுலாத் தலமாக ஆக்கப்படவில்லை என்பது வருத்தப்பட வேண்டிய ஒன்று. புதுவை நகரில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான ஆரோவில், அரவிந்தர் ஆசிரமம், மணக்குள விநாயகர் கோயில்,



சுண்ணாம்பாறு படகு குழாம் முதலான வற்றோடு அரிக்கமேடும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் புதுவைச் சுற்றுலாக் கழகத்தினர் புதுவைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை அரிக்கமேட்டிற்கு அழைத்துச் செல்லாமல் புதுவை அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் சென்று அரிக்கமேட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தொல்பொருட் சின்னங்களைக் காட்டிவிட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்து விடுகின்றனர். இதனால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைவதோடு அரிக்கமேட்டைப் பார்க்கும் வாய்ப்பையும் இழந்து விடுகின்றனர். இது மட்டுமின்றி அரிக்கமேடு சுற்றுலாத் தலமாக வளர்ச்சி அடையும் வாய்ப்பு தள்ளி போடப்பட்டுக் கொண்டே வருகின்றது.

எதிர்காலத்தில் புதுவை தனி மாநிலமாக உருவாகும் வாய்ப்பு ஏற்படும்போது புதுவையின் நிதி ஆதாரமாகத் திகழ்வது சுற்றுலாவே. அதில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவது அரிக்கமேட்டுச் சுற்றுலாத் தலமே. அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியர் பெரும்பாலும் விமானப் பயணத்தையே நாடுவர். இதைக் கருத்தில் கொண்டே இப்போது புதுவையில் விமானதள விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் புதுவைக் கடற்கரை அழகு படுத்தப்பட்டுள்ளது. மேலும் கடற்கரையின் தென்பகுதி சுற்றுலாப் பயணிகளுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய துறைமுக வளாகப் பகுதிக்குள் சூரியக் குளியலுக்கும் கடற் குளியலுக்கும் வசதிகள் செய்ப்பட்டுள்ளன.

சுண்ணாம்பாற்றுப் படகுக் குழாம் போன்று அரியாங்குப்பத்து ஆற்றிலும் படகுக் குழாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. புதுவைக்கு மிக அருகிலேயே இப்பகுதி இருப்பதால் விரைவிலேயே சுற்றுலா மேம்பாடு அடைவதற்கான வாய்ப்புகள் இங்கு அதிகம். அரியாங்குப்பம் பாலத்துக்கு அருகில் அமைக்கப்படும் இப்படகுக் குழாமிலிருந்து அரிக்கமேட்டிற்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் வகையில் படகுப் போக்குவரத்து ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும். இத்தகு சுற்றுலாத் திட்டம் அயல்நாட்டுப் பயணிகளை மட்டுமல்லாமல் உள்நாட்டுப் பயணிகளையும் வெகுவாகக் கவரும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு அரியாங்குப்பத்து ஆற்றில் படகுப் போக்குவரத்து தொடங்குமுன் ஆற்றங்கரை ஓரமாக உள்ள அரிக்கமேட்டின் கரைப்பகுதியில் மண்ணரிப்பைத் தடுக்கு முகத்தான் கருங்கற்களைப் பதித்துக் கரையைப் பலப்படுத்த வேண்டும். அரிக்கமேட்டுப் பகுதி சிதைவுறா வண்ணம் அவ்விடங்களில் சிறிய படகுத் துறையை அமைத்து அழகு படுத்தலாம்.

Tamil Heritage Foundation International (THFi)

### இயற்கை, சுற்றுச்சூழல் பராமரிப்பு

சில ஆண்டுகளுக்கு முன்பு அரியாங்குப்பம் கடற்கரைப் பகுதியை ஒட்டி இறால் பண்ணைகள் வளர்க்கப்பட்டன. அவை மீண்டும் இங்கே உருப்பெறாமல் இருக்க அரசு தடைவிதிப்பதோடு அரிக்கமேட்டின் பராமரிப்பிலும் தனிக்கவனம் செலுத்திட வேண்டும். அதுமட்டுமின்றி அரிக்க மேட்டை ஒட்டிய பகுதியில் எங்கும் இரசாயனத் தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்கக் கூடாது.

அண்மையில் துறைமுக விரிவக்கத்திற்காகத் தேங்காய்த்திட்டுக் கடற்கரைப் பகுதியை அரசு தனியார் வசம் ஒப்படைத்தபோது அதற்குத் தேங்காய்த்திட்டு மக்களிடையே கடும் எதிர்ப்பு தோன்றியது. அத்திட்டத்திற்கென அரசு தேங்காயத்திட்டு நிலங்களை ஆக்கிரமித்தபோது மிகப்பெரிய போராட்டம் அப்பகுதி மக்களிடையே வெடித்தது.

சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் விவசாயிகளும் கலந்துகொண்ட இப்போராட்டத்திற்கு மக்களும் ஆதரவு தந்தமையால் அரசு துறைமுக விரிவாக்கத் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது.

### புதிய துறைமுகம்

பிரெஞ்சியர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட துறைமுகம் 1954இல் வீசிய புயலால் சேதமடைந்தது. பழைய துறைமுகத்திற்காக உருவாக்கப்பட்ட கலங்கரை விளக்கம் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. பழைய துறைமுகப் பாலத்தின் எச்சங்களான இரும்புத் தூண்கள் மட்டும் பிரெஞ்சியரின் ஆட்சியதிகாரத்தை நினைவுறுத்தும் பொருட்டு இன்றும் கடற்கரை காந்தி சிலைக்குப் பின்புறம் கடற்பரப்புக்கு மேலே நீட்டிக் கொண்டு நிற்கின்றன. அதன்பின் மத்திய அரசின் உதவியுடன் ரூ42 லட்சம் செலவில் புதிய துறைமுகம் கட்டப்பட்டது. 1963ஆம் ஆண்டு ஜனவரி முதல் புதிய துறைமுகம் வம்பா கீரைப்பாளையம் கடற்கரைப் பகுதியில் செயல்பட்டு வருகின்றது. கடற்கரைப் பகுதியிலிருந்து ஒரு கி.மீ. தூரத்திற்குள் கப்பல்கள் நங்கூரமிட்டு நிறுத்தும் வசதியைப் புதுவைத் துறைமுகம் பெற்றுள்ளது. அயல்நாட்டிலிருந்து கப்பல்கள் மூலம் கொண்டுவரப்படும் சரக்குகள் கிரேன்கள் மூலம் மிக எளிதில் இறக்கப்பட்டுத் துறைமுகம் அருகில் உள்ள கிடங்குகளில் சேமிக்கப்படுகின்றன.



### சுற்றுலா மேம்பாடு

பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணியரைக் கவரும் விதத்தில் புதுவைப் பகுதியில் பல இடங்களில் சுற்றுலா மேம்பாட்டை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க அரிக்கமேட்டைச் சுற்றுலாத் தலமாக்க அரசு விரும்பினால் கீழ்க் காணும் ஆலோசனைகளை பரிசீலனை செய்யலாம்.

1. அரிக்கமேட்டில் ஆற்றின் எதிரே உள்ள தென்னந்தோப்புத் திட்டு இயற்கை அம்சங்கள் நிறைந்த இடமாக விளங்குகின்றது. அவ்விடத்தைப் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த இடமாக மாற்றினால் அரசுக்கு வருவாய்ப் பெருக்கம் ஏற்படுவதோடு சுற்றுலா மேம்பாடு அடைவதற்கும் அத்திட்டம் வழிவகுக்கும்.

2. அரிக்கமேட்டின் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தை அரசு தனியாரிடம் ஒப்படைக்கும் யோசனையையும் அரசு பரிசீலிக்கலாம். அவர்கள் சிறப்பாக பராமரித்து வருவதோடு இப்பகுதியைச் சேதமடையாமலும் பாதுகாத்து வருவர். ஆர்வமுள்ள சில தொண்டு நிறுவனங்களையும் இப்பணியில் அரசு ஈடுபடுத்தலாம்.

3. ஒருவேளை அரசே இதை ஏற்று நடத்தும் பட்சத்தில் நுழைவுக் கட்டணமாக சிறு தொகையை வசூலித்து அதைக்கொண்டு இப்பகுதியைப் பராமரிக்கும் பணியையும் செய்து வரலாம்.

4. இப்பகுதியின் தூய்மையைப் பராமரிக்கும் பணியை நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களிடம் ஒப்படைக்கலாம். மாதந்தோறும் ஒவ்வொரு பள்ளியிலிருந்து இப்பகுதியைப் பார்வையிட வரும் மாணவர்களிடையே அரிக்கமேடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருங்காலச் சந்ததியினரிடையே வரலாற்றுணர்வை விதைக்கலாம்.

5. அரிக்கமேடு அகழ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பழங்காலத் தொல்பொருட் சின்னங்களின் நிழற்படங்களையும் தொழிலகங்களையும் ஒலி, ஒளிக் காட்சிகளாக அமைத்துச் சுற்றுலாப் பயணிகளைக் கவரலாம்.

### சதுப்பு நிலக்காடுகள்

சதுப்பு நிலக் காடுகள் இயற்கையாகவே ஆறு கடலுடன் கலக்கும் கழிமுகங்களிலோ கடற்கரைப் பகுதிகளிலோ வளர்ந்துவரும் தன்மை

Tamil Heritage Foundation International (THFi)

கொண்டவை. நாள்தோறும் இருமுறை நிகழும் ஏற்ற வற்ற (Tides) காலங்களில் சதுப்பு நிலத்தாவரங்களும் அங்கு வாழும் விலங்குகளும் பல்வேறு தகவமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்து வருகின்றன. கடலில் வாழும் பெரும்பாலான மீன், இறால் இனங்கள் தங்களின் இனவிருத்தியைக் கருத்தில் கொண்டு உவர்நீர்ச் சதுப்பு நிலக் காடுகளைத் தேடிவருகின்றன. இவை தவிர ஆற்றோரம் ஏற்படும் மண்ணரிப்பையும் இத்தகைய சதுப்புநிலக் காடுகள் பாதுகாத்து மண்ணரிமானத்தைத் தடைசெய்கின்றன. எனவே இவற்றின் முக்கியத்துவம் கருதி முகத்துவாரத்திலிருந்து இருசாம்பாளையம் வரை அரியாங்குப்பம் ஆற்றங் கரையின் இருபக்கங்களிலும் சதுப்புநில காடுகளை வளர்க்கும் திட்டத்தை அரசு நடைமுறைப் படுத்தலாம்.

புதுவை ஆற்றங்கரையின் பலபகுதிகளிலும் சதுப்புநிலக் காடுகள் வளர ஏற்ற சூழல் இருப்பினும் அதன் மீது போதிய கவனம் இன்மையால் அவை செழித்து வளர வாய்ப்பின்றி இருக்கிறது. சமுதாய வனவளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் புதுவைப் பகுதியில் சதுப்புநிலத் தாவரக் கன்றுகளைச் சேகரித்து நடுவதன் மூலம் இக்காடுகளை எளிதில் இப்பகுதியில் உருவாக்கலாம். இதனால் காடுகளே இல்லாத புதுவைப் பகுதியில் காடுகளை உண்டாக்கிக் கரையோரங்களைப் பாதுகாப்பதோடு இயற்கைச் சூழலையும் ஏற்படுத்திக் கொள்ளலம். இதனால் மீன்வளம் பெருகும். பலருக்கு வேலைவாய்ப்பு உண்டாகும். சுற்றுச்சூழல் மேம்பாடு அடையும். அனைத்திற்கும் மேலாக அரிக்கமேட்டுத் தொல்பொருட் சின்னங்கள் இயற்கையாகவே பாதுகாக்கப்படும். எனவே அரியாங்குப்பம் ஆற்றின் கரைகளில் சதுப்புநிலக் காடுகளை வளர்ப்பதில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

### புதுவைப் பிச்சாவரம்

பரங்கிப்பேட்டைக்கு அருகில் உள்ள பிச்சாவரம் சதுப்பு நிலக்காடுகளில் உள்ள பல தாவரங்கள் அரியாங்குப்பம் ஆற்றின் கரை ஓரமாகக் காணப்படுகின்றன. அரியாங்குப்பம் ஆற்றின் கரை ஓரமாக உள்ள சதுப்புநிலத் தாவரங்களை வளர்த்துப் பாதுகாத்தால் அரியாங்குப்பம் ஆற்றங்கரைப் பகுதியையும் மற்றொரு பிச்சாவரமாக மாற்றிடச் செய்யலாம். இத்தாவரங்கள் இளக்கமான வண்டல்மண் கடலினுள் சென்று விடாமல் தடுக்கின்றன. கடலிலிருந்து உருவாகும் புயல், சூறாவளிக் காற்றினால் உள்நாட்டில் உண்டாகும் தீய விளைவுகளைத் தடுக்கின்றன. இக்காடுகள் அடர்ந்து காணப்படுவதாலும் எப்போதும் பசுமை மாறாமல் இருப்பதாலும் தரையில் காய்ந்த சருகுகள் விழாமல் இருப்பதாலும் இங்குக் காட்டுத் தீயே ஏற்படுவதில்லை. சுற்றுலாவிற்கும் சுற்றுச் சுழலுக்கும் முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த இத்தகைய சதுப்புநிலக் காடுகளை அரியாங்குப்பம் ஆற்றின் கரைகளில் வளர்த்திடும் பணியில் அரசு முழுக்கவனம் செலுத்த வேண்டும். இதற்கான செயல் திட்டங்களைத் தொண்டு நிறுவனங்களோ மாநில அரசோ உருவாக்கி மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி இசைவும் பொருளுதவியும் பெற்று அழிந்துவரும் இத்தாவரங்களை அழியாமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.



### புதுவை அருங்காட்சியகம்

எகிப்து, அசிரியா, கிரேக்கம், இத்தாலி ஆகிய நாடுகளின் தொன்மையை உறுதிப்படுத்தும் சான்றுகளைப் போலத் தமிழகத்தில் பழைமையான தொல்பொருட் சின்னங்கள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. வறுமையும் அறியாமையும் உள்ள நாட்டில் தொல்பொருட் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மிகுதியாக இராது. அகழ்வாய்வுகளில் கிடைக்கின்ற ஒரு சில தொன்மையான பொருட்களைப் போற்றிப் பாதுகாத்திடும் எண்ணத்தை முதலில் மக்கள் மனத்தில் விதைக்க வேண்டும். இதன் அடிப்படையில்தான் அருங்காட்சியகம், ஆவணக் காப்பகம் முதலியன தோற்றுவிக்கப்பட்டன. புதுவை மாநிலத்தில் கிடைத்த அனைத்துத் தொல்பொருட் சின்னங்களும் புதுவை ரோமன்ரோலண்ட் நூலகத்தின் பின்புறத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்கு, அரிக்கமேட்டில் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் மட்டும் அவற்றின் சிறப்புக்கருதித் தனிப்பிரிவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1937-ஆம் ஆண்டு மூவோ துய்ப்ராய் அவர்களால் அரிக்கமேட்டுப் பகுதியிலிருந்து மணிகள், பழங்கால மட்கல ஓடுகள், சங்கு வளைகள் ஆகியவை சேகரிக்கப்பட்டன. பின்னர் 1940-ஆம் ஆண்டு பிரெஞ்சிந்திய அரசு அரிக்கமேட்டில் அகழ்வாய்வு நிகழ்த்தி, அரிய தொல்பொருட்களைக் கண்டெடுத்தது. அப்போதைய பிரெஞ்சிந்திய அரசு 1940-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புதுவை நகர நூலகத்தில் (The Bibliotheque Pondiche'ry) அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை முறைப்படுத்திக் 'காட்சிக் கூடம்' ஒன்றைத் தொடங்கியது

Tamil Heritage Foundation International (THFi)

(புதுவை ரோமன்ரோலண்ட் வீதியில் பழைய அருங்காட்சியகம் இயங்கி வந்த அதே கட்டடத்தில்தான் அப்போதைய நகர நூலகமும் செயல்பட்டு வந்தது). பின்னர் இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் பிரெஞ்சிந்திய அரசின் பொதுப்பணித்துறை (Service des Travaux Publique of the Pondiche'ry Government) அரிக்கமேட்டில் செய்த அகழ்வாய்வில் மேலும் பல தொல்பொருட் சின்னங்கள் கிடைத்தன. இப்பொருட்கள் எல்லாம் முறையாக ஒழுங்கு படுத்தப்பட்டன. அவை 1943-ஆம் ஆண்டு ஏப்பிரல் 1-ஆம் தேதி புதுவை நகர நூலகத்தில் தொடங்கப்பட்ட அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டன. ரோமன் ரோலண்ட் நூலகம் ஆளுநர் மாளிகைக்கு அருகில் உள்ள புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட பின்பு பழைய நகர நூலகக் கட்டடம் முழுமையும் அருங்காட்சியகமாகச் செயல்படத் தொடங்கியது.

அரிக்கமேட்டுத் தொல்பொருட் சின்னங்களைத் தவிரக் கடந்த அறுபதாண்டுக் காலத்தில் முத்திரையர்பாளையம், சுற்றுக்கேணி, பாகூர், கிருமாம்பாக்கம், ஊசுட்டேரி, காரைக்கால் ஆகிய புதுவைப் பகுதிகளில் கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்களும் அருங்காட்சியகத்தை அழகு செய்கின்றன. மேலும் பிரெஞ்சியர் பயன்படுத்திய பல கலைப்பொருட்களும் அருங்காட்சியகத்தில் சிறப்பிடம் வகிக்கின்றன. இவை தவிர மார்ட்டிமர் வீலர் (1945), ஜே. எம். கசால் (1948-50), பீட்டர் பிரான்சிஸ்(1986), விமலா பெக்லி (1989-92) ஆகியோரால் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த தொல்பொருட் சின்னங்களும் இங்கு உள்ளன.

புதுவை அருங்காட்சியகத்தில் இன்றைக்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருட் சின்னங்கள் மிகவும் குறைவுதான். இங்குக் கிடைத்த பெரும்பாலான பொருட்கள் புதுவை விடுதலை அடைவதற்கு முன்பே பிரெஞ்சியராலும் ஆங்கிலேயராலும் முறையே பாரிசுக்கும் லண்டனுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. மூவோ துய்ப்ராய் புதுவையில் பணியாற்றியபோது சேகரித்த தென்னிந்தியக் கலைப்பொருட்கள், அரிக்கமேட்டு அகழ்வாய்வுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டே 'முசே தெ குய்மே' என்பவர் காட்சிக்கூடம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.[1] கலைப்பொருட்களிலும் வரலாற்றுத் தொல்பொருட் சின்னங்களிலும் இனியும் போதிய கவனம் செலுத்தப்படாமல் போனால் எதிர்காலத்தில் இந்தியாவில் நடத்தப்பெறும் அகழ்வாய்வுகளில் வெறும் எலும்புக்கூடுகளே மிஞ்சும்.

1.சு.குப்புசாமி 1980:26



## நினைவுச்சின்னம்- சுற்றுலா மையம்

அகழ்ந்தெடுக்கின்ற தொல்பொருட் சின்னங்களை வெறும் காட்சிப் பொருட்களாகக் கருதி அவற்றைப் பொருட் களஞ்சியத்தில் வைத்துப் போற்றிப் புரந்தால் மட்டும் போதாது. அவைவெறும் காட்சிப்பொருட்கள் மட்டுமல்ல் பழங்கால மக்களின் ஏற்றமிகு வாழ்வியல் நுணுக்கங்களை ரகசியங்களைப் பொதிந்து வைத்துள்ள பண்பாட்டுச் சின்னங்களாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அரிக்கமேட்டில் ஆய்வு மேற்கொள்ளவரும் ஆய்வாளர்கள் சாயத்தொட்டிகள், உறைக்கிணறுகள், பண்டசாலைச் சுவர்ப்பகுதிகள் ஆகியவற்றை அகழ்ந்து பார்த்து நிழற்படம் எடுத்துவிட்டு மறுபடியும் அவற்றை மண்ணால் மூடிவிடுகின்றனர். மட்பாண்ட ஓடுகள், மணிகள், சுடுமண்பொருட்கள் ஆகியவற்றை மாத்திரமே சேகரித்து எடுத்துச் செல்கின்றனர். ஏனைய தொல்பொருட் சின்னங்கள் அனைத்தையும் ஒவ்வொரு முறையும் அகழ்ந்து பார்த்துவிட்டுப் பின்னர் மூடிவிடுகின்றனர். இதனால் இப்பகுதியில் உள்ள மண்ணடுக்குகளில் சிதைவு ஏற்பட்டு இயற்கைத் தகவமைப்பு மாறிவரும் சூழல் உண்டாகி வருகின்றது.

## வாழும் அருங்காட்சியகம்

அரிக்கமேட்டுப் பகுதியில் உள்ள மாந்தோப்பு தென்னந்தோப்புப் பகுதிகளை இப்போதிருக்கும் நிலையில் பராமரிப்பதோடு ஆற்றங்கரைப் பகுதியில் சதுப்புநிலத் தாவரங்களைப் பயிரிட்டு வரலாம். சங்ககாலத் தமிழரின் வாழ்வியல் நெறிகளை அறிந்து கொள்ளுமுகத்தான் தொல்பொருள் ஆய்வாளர்களின் துணையோடு பழங்காலத் தொழிலகங்களின் மாதிரிகளை வரைபடமாகவோ காட்சிப்படமாகவோ வரைந்து இப்பகுதியில் வைக்கலாம். கிறித்தவ மடம் இருந்த பகுதியைப் புனர் நிர்மாணம் செய்து அப்பகுதியில் இக்காட்சிப் படங்களை வைத்துப் பராமரிக்கலாம். அரியாங்குப்பத்திலிருந்து வீராம்பட்டினம் சாலை வழியாக அரிக்கமேட்டிற்கு வரும்போது காக்காயந் தோப்பிலிருந்து மிகக் குறுகலான பாதை வழியாகவே இங்கு வரவேண்டியுள்ளது. காக்காயந் தோப்பிலிருந்து இங்குவரும் சாலையை அகலப்படுத்துவதோடு பன்னாட்டுத் தரத்திற்கு ஏற்பச் சாலைகள் அமைத்திட அரசு ஆவன செய்யவேண்டும். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் அயல்நாட்டுப் பயணியர் பெரும்பாலும் தங்கிச் செல்ல விரும்புவர். அதற்காகவும் உள்நாட்டுப்

Tamil Heritage Foundation International (THFi)

பயணியரைக் கவரும் விதத்திலும் இங்கு உணவு விடுதியையும் ஓய்வில்லங்களையும் அரசு அமைக்கலாம்.

எகிப்து, இத்தாலி, கிரேக்கம் முதலாம் நாடுகளில் அகழ்வாய்வு செய்யப்பட்ட நிலையிலேயே தொல்பொருட் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அகழ்வாய்வுக்கு உட்பட்ட பகுதிகளில் வானூர்தி பறப்பதைக் கூட மேனாட்டில் தடைசெய்து வைத்துள்ளனர். மேலும் அகழ்வாய்வில் கிடைத்த சிறிய, அரிய பொருட்களைச் சேகரித்து அப்பகுதியிலேயே அருங்காட்சியகம் ஒன்றை நிறுவிப் பார்வைக்கு வைத்துள்ளனர். வெளிநாட்டவரைக் கவரும் விதத்தில் இத்தகைய அருங்காட்சியகங்கள் சிறந்த சுற்றுலா மையங்களாகவும் அமைக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் பிரெஞ்சு நாகரிகத்தின் நிலைக்களனாகத் திகழ்ந்துவரும் புதுவையில் பல சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. பழந்தமிழரின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் புலப்படுத்தும் வகையில் அரிக்கமேட்டுப் பகுதியை முழுமையாக அகழ்வாய்வு செய்து அதில் கிடைத்த பொருட்களை எல்லாம் அங்கேயே வரிசைப்படுத்தி வாழும் அருங்காட்சியகமாகவும் சுற்றுலாமையமாகவும் மாற்றியமைத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அப்பகுதியைப் பாதுகாத்து, எதிர்கால அகழ்வாய்விற்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளும் பணியிலும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை மேற்கொள்ள வேண்டும்.

### கலைப்பொருட்கள் - பேணுதல்

ஒவ்வொரு முறையும் அரிக்கமேட்டில் அயல்நாட்டினர்தான் அகழ்வாய்வுப் பணியை மேற்கொள்கின்றனர். இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அவர்கட்குத் துணைபுரியும் அளவிலேயே தம் கடமையை முடித்துக் கொள்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை தானே முன்வந்து நிலத்தடி அகழ்வாய்வு, நீருக்கடி அகழ்வாய்வு ஆகிய இரண்டின் வாயிலாகவும் அரிக்கமேட்டில் புதைந்து கிடக்கும் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இந்தியாவில் பொதுவாகத் தொல்பொருட் சின்னங்களையும் கலைப் பொருட்களையும் வெளிநாட்டிற்குக் கடத்துவதிலும் விற்பதிலும் உள்ள ஆர்வம் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் காட்டப்படுவது இல்லை. இந்திய மக்களிடையே தொல்பொருட் சின்னங்களைப் பற்றிய விழிப்புணர்வு இன்மையும்



பண்டைய நாகரிகப் பண்பாட்டுச் சிறப்பில் அக்கறை காட்டாத நிலையும்தான் இதற்குரிய காரணங்களாகும்.


இந்தியாவைப் பொறுத்தவரை எத்தனையோ (செயல்படாத) திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் தொகையில் ஒரு சிறுபகுதியை அரிக்கமேட்டுப் பாதுகாப்புக்கும் அகழ்வாய்வுப் பணிக்கும் ஒதுக்கினாலேயே போதும். இந்தியத் தொல்பொருளாய்வுத் துறையினருக்குப் போதுமான நிதிவசதியைச் செய்து கொடுத்தாலேயே கூடப்போதும். அவர்கள் இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைத் தொல்பொருள் ஆய்வின் மூலம் வெளிக்கொணர்வதில் அயல்நாட்டினரை விடத் திறமைசாலிகள் என்பதை மெய்ப்பித்துக் காட்டுவார்கள்.

Tamil Heritage Foundation International (THFi)

பின்னிணைப்பு-I

## அகழ்வாய்வுப் படங்கள்

### அரிக்கமேடு அகழ்வாய்விடம்






## அரிக்கமேடு
## வடக்கு தெற்குப் பகுதிகள்




Tamil Heritage Foundation International (THFi)

## சிதைந்த யவனக் குடியிருப்புக்கள்



(கி.மு.200-கி.பி.200)



கழிவுநீர் வாய்க்கால் சந்திப்பு



## நாணயங்கள்



முதலாம் இராசராசன் காசு (கி.பி.10ஆம் நூற்றாண்டு)






ரோமானியப் பேரரசன் முதலாம் கான்ஸ்டன்டைன் காலச் செப்புக்காசு (கி.பி.306-323) அரியாங்குப்பம் அங்காடியில் அசோக்குமார் என்பவரால் வாங்கப்பட்டது.


Tamil Heritage Foundation International (THFi)

## சுடுமண் விளக்குகள்


(கி.பி.11ஆம் நூற்றாண்டு)



நான்கு திரி விளக்கு - அரிக்கமேடு மேற்பரப்பில் கிடைத்தது.



நான்கு திரி விளக்கு
கங்கைகொண்ட சோழபுரம்




ஏழு திரி விளக்கு




## முற்றுப்பெறாத சங்கு வளையல்கள்

(கி.பி.100)



அரிக்கமேடு
முதுமக்கள் தாழி
(கி.மு.200)



Tamil Heritage Foundation International (THFi)


கூர்முனைச்சாடி
(கி.பி.100)



ஒப்பனை செய்யப்பெற்ற
பானை ஓடுகள் (கி.மு.200-கி.பி.200)



ஆற்றங்கரையை நோக்கியுள்ள சுவர்ப்பகுதிகள்






தந்தக்
கலைப் பொருட்கள்
(கி.பி.100)




ஓவிய
சிற்பக்கலை
நுணுக்கங்கள்
(கி.மு.200 - கி.பி.100)



Tamil Heritage Foundation International (THFi)

## உறை கிணறு





பானை ஓவியங்கள்



## அரிட்டைன் முத்திரைகள்

(கி.பி.50)




ITTA




VIBIE or VIBIF

CAMVRI



Tamil Heritage Foundation International (THFi)

## கிராஃபிடி குறியீடுகள்



பின்னிணைப்பு-II

# துணை நூற்பட்டியல்


### பழந்தமிழ் இலக்கியங்கள்

1. அகநானூறு மூலமும் உரையும் (பொ.வே. சோமசுந்தரனார் உரை), 1977, (மறுபதிப்பு), சென்னை, கழக வெளியீடு
2. கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் 1967 ( ஏழாம்பதிப்பு) சென்னை, கழக வெளியீடு
3. சிலப்பதிகாரம் உ.வே. சாமிநாதய்யர் (பதிப்பு) 1950 சென்னை உ.வே.சாமிநாதய்யர் நூல்நிலையம்.
5. சிறுபாணாற்றுப்படை, பொ.வே. மோசுந்தரனார் உரை 1972, சென்னை, கழக வெளியீடு.
6. பட்டினப்பாலை மூலமும் உரையும் பொ.வே.சோமசுந்தரனார் (உரை) 1968 (நான்காம் பதிப்பு) சென்னை: கழக வெளியீடு.
7. பதிற்றுப்பத்து மூலமும் உரையும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 1973 (மறுபதிப்பு) சென்னை, கழக வெளியீடு.
8. புறநானூறு, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை 1973 (மறுபதிப்பு) சென்னை: கழக வெளியீடு.
9. பெரிய புராணம், தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதிப்பு) 1950 திருப்பனந்தாள் காசிமட வெளியீடு.
10. பெருங்கதை, பொ.வே.சோமசுந்தரனார் (உரை) 1962 (மறுபதிப்பு), சென்னை: கழக வெளியீடு
11. மணிமேகலை, உ.வே.சாமிநாதய்யர் 1965 (ஆறாம்பதிப்பு) சென்னை, உ.வே.சா.நூல் நிலையம்.
12. முல்லைப்பாட்டு, பொ.வே.சோமசுந்தரனார் (உரை) 1973 (மறுபதிப்பு) சென்னை, கழக வெளியீடு
13. நற்றிணை, பொ .வே.சோமசுந்தரனார் (உரை) 1968 (நான்காம் பதிப்பு) சென்னை, கழக வெளியீடு.
14. நெடுநல்வாடை பொ.வே.சோமசுந்தரனார் (உரை) 1966 (மறுபதிப்பு), சென்னை, கழக வெளியீடு

### (ஆ) நூல்கள்

15. அப்பாத்துரை, கா.1941 குமரிக்கண்டம் (அல்லது) கடல் கொண்ட தென்னாடு, சென்னை, கழக வெளியீடு
16. ஆரோக்கியநாதன் , எஸ்.1990, காரைக்கால் புதுச்சேரி தெருப்பெயர்கள் ஆய்வு, விழுப்புரம்,முத்துப்பதிப்பகம்.
17 ஆனந்தரங்கப்பிள்ளை, 1954 ஆனந்தரங்கப்பிள்ளை தினப்படி சேதிக் குறிப்பு (ஐந்தாம் புத்தகம்), புதுச்சேரி, அரசாங்கப் புத்தகசாலை.
18 இராகவன், அ. 1967, தமிழர் சாவகக் கலைத் தொடர்புகள், சென்னை, கழக வெளியீடு
19. இராகவன், அ. 1980, ஆதித்த நல்லூரும் பொருநை வெளி நாகரிகமும், சென்னை,


Tamil Heritage Foundation International (THFi)

கழக வெளியீடு
20. இராகவன் வி.எஸ்.வி, 1977 பெரிப்ளுசு, மெய்யப்பன்சு.(பதி.ஆ),மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
21. இராமநாதன், க.சீ.1999, புதுவையின் சுற்றுச்சூழல், புதுவை.
22. இரா.லீலாவதி, இராமன், கே.வி. 1977, தொல்லியல் ஆய்வுகள், சென்னை, சேகர் பதிப்பகம்.
23. இராஜு காளிதாஸ், 1977, தமிழர் வரலாறும் பண்பாடும், திண்டுக்கல் இரா.இராசகோபாலன், விஜய் பப்ளிகேஷன்ஸ்
24. இறையரசன், பா. 1982, தமிழ்நாட்டு வரலாறு, சென்னை,பூம்புகார் பிரசுரம்.
25. எங்கெல்ஸ், 1891, குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம்.மொ.ப 1989 (மூன்றாம் பதிப்பு)
26. ஏகாம்பர நாதன் ஏ. 1994பொன்னுசாமி அரங்க. தொல்லியல் அகழாய்வு நெறிமுறைகள், சென்னை: சேகர் பதிப்பகம்.
27 கனகசபை வே.அப்பாதுரை கா (மொ.பெ.ஆ) 1956, ஆயிரத்து தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், சென்னை,கழக வெளியீடு
28. காசிநாதன், நடன. 1977 தொல்லியல் கட்டுரைகள், சென்னை, தொல்பொருள் ஆய்வு துறை
29. கிருட்டிணன், வா. 1990, அரிக்கமேடு சதுப்பு நிலத்தாவரங்கள், புதுவை, அரசு கல்வித்துறை சுற்றுச்சூழல் வெளியீடு
30. கிருட்டினமூர்த்தி சா. 2005, தமிழரின் மரபுச் செல்வங்கள் (தொ-1, 2) உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை .
31 குப்பண்ண சாஸ்திரி, டி.எஸ். அசோகர் சாசனங்கள், புது டில்லி (மொ.பெ.ஆ) 1967, நேஷனல் புக் டிரஸ்ட்
32. குப்புசாமி சு. 1974, கல்வெட்டுக்களில் புதுவைப்பகுதிகள், புதுவை வரலாற்றுச் சங்கம்.
33. குப்புசாமி சு. 1980, வரலாற்றுக் களஞ்சியம், சென்னை, சேகர் பதிப்பகம்
34. குருமூர்த்தி, சா. 1974, தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம்
35. கைலாசபதி, க. 1978, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை: மக்கள் வெளியீடு
36. சன்முகப் பிரகதம் கொடுமுடி (பதி.ஆ), 1973, ஆய்வுத்தேன், சென்னை, கொங்குப் பதிப்பகம்
37. சசிவல்லி வி.சி.1989 பண்டைத் தமிழர் தொழில்கள், உலக தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
38. சண்முகம் பிள்ளை மு.2004(2ஆம் பதிப்பு) சங்கத் தமிழர் வாழ்வியல், உலக தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை
39. சிரில் அந்தோணி எஃப், சு.தில்லைவனம், 1990, அரிக்கமேடு, புதுவை அரசு, கல்வித்துறை சுற்றுச்சூழல் வெளியீடு
40. சுப்பிரமணிய அய்யர், ஏ.வி.பண்டைத் தமிழ்நாடு, 1970, திருநெல்வேலி, எஸ்.ஆ.சுப்பிரமணியப்பிள்ளை பப்ளிசர்ஸ்
41. சுப்பரமணியன், ந.1986, சங்க கால வாழ்வியல், சென்னை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
42. ----------- 1991, சமூகப் பண்பாட்டு தமிழக வரலாறு, உடுமலை, என்னெஸ் பப்ளிகேஷன்ஸ்,
43. ஜகதீசன் ந. 1980, வரலாறு வரைவியல், மதுரை, என்னெஸ் பப்ளிகேஷன்ஸ்
44. ஜெயக்குமார் பா. 2001, தமிழகத் துறைமுகங்கள், தஞ்சாவூர், அன்பு வெளீட்டகம்.



45 ஞானதியாகு முதலியார், 1965, புதுச்சேரியின் சரித்திரம் (1673-1728), புதுவை, ஜகனு தியாகு முதலியார்.
46. திருநாவுக்கரசு, க.த.1987, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு, சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.
47. திருமுருகன், இரா. 1994, புதுச்சேரி - பாண்டிச்சேரியுடன் போராடுகிறது, புதுச்சேரி , தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழு.
48. தில்லைவனம், சு. 1980, புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி, சென்னை, பாரிநிலையம்.
49. ---------------- 1990, (இரண்டாம் பதிப்பு), புதுச்சேரி மாநில வரலாறு, புதுச்சேரி, நன்மொழி பதிப்பகம்.
50. ---------------- 1990, அரிக்கமேடு அகழ்வாய்வு, புதுச்சேரி, நன்மொழிப் பதிப்பகம்
51. தேசிகம் பிள்ளை.இரா, 1974, வரலாற்றில் புதுவை, புதுவை, புதுவை வரலாற்றுச் சங்கம்.
52. நாராயணசாமி, க. 1994, வீராம்பட்டினம், புதுச்சேரி, பிருந்தா பதிப்பகம்.
53. பகவதி கு. 2003, தமிழர் ஆடைகள், உலக தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை
54. பசவலிங்கம், ப. 1984, சங்க கால வஞ்சி, சென்னை, சேகர் பதிப்பகம்
55. பாரதியார் கவிதைகள், 1981, சென்னை, பூம்புகார் பிரசுரம்.
56. பிள்ளை கே.கே. 1972, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், சென்னை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்.
57. பூவராகமூர்த்தி, வி. 1966 அலைகடலுக்கு அப்பால் இந்தியப் பண்பாடு, சென்னை, எஸ்.ஐ.டீ.யூ, வெளியீடு
58. மங்களமுருகேசன், ந.க. 1988, தமிழ்நாட்டுச் சமுதாயப் பண்பாட்டு வரலாறு, சென்னை, எம்.எஸ்.பப்ளிகேஷன்ஸ்
59. மதனகல்யாணி, ச. 1998, புதுச்சேரி ஒரு வணிகத்தள ஊரின் வரலாறு, (மொ.பெ.ஆ), புதுச்சேரி, பிரெஞ்சுக் கல்லூரி பதிப்பகம்.
60. மன்னர் மன்னன், 1981, (இரண்டாம் பதிப்பு), புதுச்சேரியைப் பாருங்கள், புதுச்சேரி புரட்சிக்கவிஞர் பதிப்பகம்.
61. முருகேசன், சி.எஸ். 1991, புதுவை வரலாறு (3 தொகுதிகள்), சென்னை அசோகன் பதிப்பகம்.
62. முருகேசன், சோ. 1997, கசாலின் பார்வையில் அரிக்கமேடு, புதுச்சேரி, அம்மா முத்துப்பதிப்பகம்.
63. -----------------2000, மூவோ துய்ப்ராய் நோக்கில் புதுச்சேரி, புதுச்சேரி, அம்மா முத்துப் பதிப்பகம்.
64. ராஜன் கா. 2004, தொல்லியல் நோக்கில் சங்க காலம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
65. லேனா தமிழ்வாணன், (ப.ஆ) 1987, பாண்டிச்சேரி மாநிலம், சென்னை, மணிமேகலைப் பிரசுரம்.
66. வானமாமலை, நா. 1966, தமிழர் வரலாறும் பண்பாடும், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
67. வித்தியானந்தன் சு. தமிழர் சால்பு (2ஆம் பதிப்பு - 2006), சென்னை, குமரன் பதிப்பகம்.
68. வெள்ளைவாரணன், க. 1972, பன்னிரு திருமுறை வரலாறு (முதற்பகுதி), அண்ணாமலை நகர்: அண்ணாமலைப்பல்கலைக்கழகம்
69. வேங்கடசாமி, சீனி. 1981, சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டு எழுத்துக்கள், சென்னை கழக வெளியீடு.

Tamil Heritage Foundation International (THFi)

70. வேங்கடேசன், ந. 1990, வரலாற்றில் அரிக்கமேடு, வில்லியனூர், திருமுடிப்பதிப்பகம்.

71. வேலாயுதனார், மு.த. 1972, வையம், புகழ் புதுவை, புதுவை, நற்றமிழ்ப் பதிப்பகம்.

72. ............................ 1978, புதுவையும், மணற்குள விநாயகரும், புதுவை, நற்றமிழ்ப் பதிப்பகம்.

**(இ) இதழ்கள்:**

**நாளிதழ்கள்**

தினமணி சிறப்பிதழ் (உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்புக் கட்டுரைகள்) நவம். 15, 27 1987 ....... 29.11.2000

தினமலர், 7-2-1999, 18-8-1999, 16-10-2000 5,6-11-2000, 22, 29-12-2000

**திங்கள் இதழ்கள்**

புதுவைச் செய்திகள் அக். 1968, நவம்.1968,பிப்-மார்ச், ஏப்பிரல், மே, ஜூன் 1969, ஆக. டிசம். 1969, பிப்.1970, ஜூலை 1970

**மலர்கள், பருவ இதழ்கள்**

கையேடு, இரண்டாவது உலகத்தமிழ் கருத்தரங்கு: மாநாட்டு மலர், சென்னை 1968.

செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு: வரலாறுப்பேரவை, சென்னை: 1968.

வரலாற்றுச் சுவடுகள் (தொகுதி-1), புதுவை வரலாற்றுச் சங்கம், புதுவை : 1979.

தமிழகம், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை ஆண்டிதழ், சென்னை: 1970

**ஈ. கலைக்களஞ்சியங்கள்**

கலைக்களஞ்சியம் (தொகுதி1-7), 1954, தமிழ் வளர்ச்சிக் கழகம்

வாழ்வியல் கலைக்களஞ்சியம், 1986 (தொகுதி-1) தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

**கருத்தரங்கக் கட்டுரைகள்** (வெளியிடப்படாதவை)

தில்லைவனம், சு. 'வரலாற்று இலக்கியக் கள ஆய்வு நோக்கில் அரிக்கமேடு' (20-8-1999) புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன ஆய்வாளர் வட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரை)

----------------'பண்டைத்தமிழர் யவனர் பன்முகத் தொடர்புகள்' (15.8.2000, புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவன ஆய்வாளர் வட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரை)

............................ 'ஆனந்தரங்கப்பிள்ளை காலத்தில் புதுவையில் நிகழ்ந்த குடியேற்றமும் வெளியேற்றமும்' (30.3.2001 புதுவைப் பல்கலைக்கழகம். ஆனந்தரங்கப்பிள்ளை அறக்கட்டளைக் கருத்தரங்கம்)

**ஆங்கிலம், பிரெஞ்சு நூல்கள்**

1. BOUSSAC, MARIE - FRANCOIS & JEAN FRANCOIS SALLES (1995): Athens Adans Arikamedu, New Delhi, Centre de Science Humanies.

2. BUDHA PRAKASH, 1964, India and the world. Hoshiarapur: Vishveshvaram and Vedic Research Institute.

3. CANDY J.F. 1960. South East Asia: Its Historical Development. New York: Macgrow Hill.





4. CASAL, J.M. 1949. Fouilles de Virampatnam - Arikamedu. Paris, Imprimetie Nationale.

5. CHANDRA, MOTI. 1977. Trade and Trade Routes in Ancient India. New Delhi: Abinav Publications.

6. CYRIL ANTONY, F (Edr). 1982. The Gazetteer of India, Union Territory of Pondicherry 2 volumes, Pondicherry, Administration of Union Territory of Pondicherry.

7. DANI. A.H. 1963. Indian Palaceography. London: Oxford University Press.

8. FAUCHEUX, L 1945 Une Ville cite's Indienne pre's de Pondicher'ry Virampatnam. Pondicherry: Impreimerie de le mission.

9. FRANCIS PETER, Jr. 1987. Bead Emporium (A Guide to the Beads from Arikamedu in the Pondicherry Museum) Pondicherry Musuem.

10. HALL, D.G.E. 1968. A History of South East Asia. London: Macmillan.

11. JAIRAZBHOY, R.A. 1963. Foreign Influence in Ancient India: Madras: Asin Publishing House.

12. JANAKI,D.2000. Pondicherry - The Glory of its Past and Pride- Pondicherry, Pondicherry History Congress.

13. KAILASPATHY, K. 1968. Tamil Heroic Poetry. London: Oxford at the Clarendon Press.

14. MAHALINGAM, T.V. (1940) Administration and Social Life under Vijayanagar, Madras.

15. NAGASWAMY, R (Edr). 1979, South Indian Studies- II. Madras: Society for Archaeology Historical and Epigrapical Research.

16. NILAKANTA SASTRI, K.A. 1971 (Second Edn) A History of South India, Bombay. Oxford University Press

17. ---------------------------------1972 Foreign Notices of South India. Madras (Reprint) University of Madras.

18. PATTABIRAMAN, P.Z., 1946. Les Fouilles d' Arikame'du (Puduke), Pondichery/ Paris: Bibliotheque coloniale Presses Universitare.

19. PRAKASH, CHARAN PRASAD. Foreign Trade and Commerce in 1977. Ancient India. New Delhi: Abinave Publications.

20. RAJA,P.1987. A Concise History of Pondicherry, Pondicherry: AllIndiaBooks.

21. ------------------------2005, Glimpses of Pondicherry, Busy Bee Books, Pondicherry.

22. RAMAN, K.V., SRINIVASAN Studies in South Indian Coins- Vol: XL (Eds). 2000 Chennai: New Era Publications

23. RAMASAMY, A 1986. History of Pondicherry. Madras, Sterling Publishers

24. SCHOFF W.H. (Ed) 1912, The Periplus of Erythraean Sea, New York.

25. SIVARAJA PILLAI, K.N.1932, The Chronology of Early Tamils, Madras: University of Madras.

26. SRINIVASA IYENGAR, P.T. 1989. History of Tamils- From Earliest Times to 600 A.D. (IIIrd Edition) Madras: Asian Education Services.

27. VENKATRAMAN, P.1985. Indian Archaeology -A Servey Madurai,Ennes Publications University Press.

28. VIMALA BEGLEY, 1996 , The Ancient Port of Arikamedu. New Excavations and Researches 1989-1992 Vol-I Pondichery, Ecole Francaise de Extreame Orient.

29. VIMALA, BEGLEY & DE.PUMA 1992, Rome and India- The Ancient Sea Trade. Delhi, Oxford


Tamil Heritage Foundation International (THFi)

30. WHEELER, R.E.M. ,GHOSHA and KRISHNA DEVA, 1946. Arikamedu An Indo-Roman Trading Station On the East Coast of India. New Delhi, Ancient India-2

31. ----------------------1954 .Rome beyond the Imperial Frontiers. London, George Bell and Sons.

(ஆ) கட்டுரைகள்

1. AIYAPPAN,A 1941. 'A Dakshina Taxila Historic Relics from Arikamedu' The Hindu (March 23).

2. CYRIL ANTONY, F.1987. 'SAVE PODUKE'- The Unique Indo-Roman TradingPort at Arikamedu Near Pondichery. INTAC Article Pondichery University.

3. CHERIAN P.J. SELVAKUMAR V. SHAJAN. K.P. ' Evidennce For The Ancient Port of Mucri At Pattinam- Kerala' Chemmozhi, Vol.2. No.1 Oct-Dec 2007

4. FRANCISE,PETER. Jr. 1976-80 'Some Obsenrations on the Glass Beads of Arikamedu' Revue Historique de Pondichery. Vol: 13.

5. MOSES, GEORGE 1970. 'The Greek.Roman Link With Pondicherry'. Mother India, March-1970.

6. MAHADEVAN, I, 1970. 'The Ancient Name of Arikamedu' N. Subramanian (Edr). V.K Surya Narayan Sastri Centenary Volume. Madurai .

7. ...............................1973, Arikamedu Graffiti, A Second Look. Dept. of State Archaeology DAMALICA: 2-3. Madras.

8. MARSHAL, J. 1970-71, Ancient India. No:4 Vol:III. Pl.XV

9. RAJAN, K 2000, Muciri-Alexandria Trade Contract: An Archaeological Approach'. PUSH Pondicheuy University. Vol: 1 No: 1& 2.Jan & July.

10. RAVICHANDIRANE, P.200 1. 'Archaeological Remains of Arikamedu- From East and West', ICHR- Seminar on 29-30 March' Pondichery. Dept. of History. Pondichery.

11. STERN MAIANNE, E. 1987, ' The Secet of Pappanaidu Pet' International Journal of Glass Science and Technology. Volume: 60 Frank furt.

12. VIMALA BEGLEY. 1983 Arikamedu reconcidered. American Journal of Archaeology -87

---------------------- 1986 ' Rouletted Ware at Arikamedu - A New Approach', American Journal of Archaeology -92.

---------------------- 1993, ' New Investigations at the port of Arikamedu' Journal of Roman Archaeology. Vo:6

13. VIMALA BEGLEY. & R.TOMBER & SIDE BOTHAM & W.Z. WENDRICH. 1999 (Eds), 'Indian Potery Sherds'- Bernike- 1997 Netharlands. CNWS.S.

Tamil Heritage Foundation International (THFi)

பழந்தமிழர் நாகரிகச் சின்னம்

# அரிக்கமேடு





முனைவர் சு.தில்லைவனம்

Tamil Heritage Foundation International (THFi)